141

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXIII (Nos. 1 to 4)

8th to 11th February 1982.

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

D
V211,32 1N82
N83.183
122051

D 1
Y 211,32 N82
N83. 183

122051

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXIII (Nos. 1 to 4).

*8th to 11th February, 1982.*

TABLE OF CONTENTS.

*Monday, 8th February 1982.*

| | Pages. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | vi |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | vii—ix |
| 1. Questions and Answers .. .. .. | 1—22 |
| 2. Call Attention Notice— Non-grant of increased special pay to Inducted Teachers in Higher Secondary Schools ... | 23 |
| 3. Discussion on the Governor's Address ... | 24—105 |

*Tuesday, 9th February 1982.*

| | |
|---|---|
| 1. Government Motion— | |
| Dispension with Question Hour on 9th February 1982 ... ... ... ... ... | 109 |
| Dispensation with Question Hour on 10th February 1982 ... ... ... ... ... | 176 |
| 2. Call Attention Notice— Rise in the prices of food articles like coffee and iddli in hotels in Madras ... ... ... ... | 109—112 |
| 3. Discussion on the Governor's Address—*cont.* .. | 113—176 |

*Wednesday, 10th February* 1982.

Page

1. Call Attention Notice—

Hardship caused to weavers in silk due to scarcity of raw-silk .. .. .. .. 179—180

2. Information *re*—

Call Attention Notices and Adjournment Motions given notice of ... ... ... ... ... 181

3. Discussion on the Governor's Address—*cont.* .. 181—221

*Thursday, 11th February* 1982.

1. Questions and Answers .. .. 225—247

2. Announcement *re*—

Decision of the Business Advisory Committee ... 247

3. Call Attention Notice—

Scarcity of cement and agitation of Construction Workers to scrap the permit system for distribution of cement .. .. .. .. 248—251

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NERUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised, Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi. Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்
### திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

## தமிழ்நாடு சட்டமன்றப் மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம.பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. ரா. இலட்சுமிகாந்தன்
2. திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. சி. ராமலிங்கம்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி. எஸ். சி.பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி.எல்.பி. எல.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)-வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்; பூமி தானம், கிராம தானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12, மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசானத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்பு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவு சீட்டு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி–கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி இருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**திங்கட்கிழமை, 1982 பிப்ரவரி 8.**

**(தை 26, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.)**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 41 முதல் 44 வரை கடைசியில் எடுத்துக்கொள்ளப்படும்.

### *Reservation of Seats for Arts Graduates in Medical Colleges.*

*** 45.** *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether a certain percentage of seats will be reserved for Arts Graduates in admissions to the Government Medical Colleges of the State, during the coming academic year 1981-82; and

(*b*) if so, the number of such seats ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (இ) : கலைப் பட்டதாரிகளுக்கு (Arts Graduates) அடிப்படை விஞ்ஞான பாடங்களான பௌதிகம், வேதியியல், உயிரியல் மற்றும் தாவரவியல் ஆகிய பாடங்களில் போதுமான அறிவு இல்லாத காரணத்தினால், அவர்களுக்குத் தனியாக இடங்களை ஒதுக்க இயலாது.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஏ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம். திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் – திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. ஆ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளி முத்து, திரு. ஈ.வெ.அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| | | நியமனம். |
| 40 | வெங்கடேசன், திரு. ஈ.எஸ். | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 41 | ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 | ஜேப்பியார், திரு. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 43 | வெற்றிடம் .. | டி |
| 44 | டி | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45 | டி .. | டி |
| 46 | டி .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 | டி .. | டி |
| 48 | டி .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 | டி .. | |
| 50 | டி .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 | டி .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| | | டி |
| 52 | டி .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 | டி .. | டி |
| 54 | டி .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 | டி .. | டி |
| 56 | டி .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 | டி .. | டி |
| 58 | டி .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 | டி .. | டி |
| 60 | டி .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 | டி .. | டி |
| 62 | டி .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 | டி .. | |

### Diploma Courses for Physiotherapy.

*46. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) the number of Medical Colleges in the State, where Diploma Courses are being offered for Physiotherapy;

(b) the number of admissions made in a year in these Colleges; and

(c) whether there is any proposal to start this course in other teaching hospitals in the State?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவ மனை மற்றும் சென்னை பொது மருத்துவ மனையைச் சேர்ந்த கே. கே. நகர் அரசு செயற்கை புனர் வாழ்வு நிலையம் ஆகியவை.

(இ) அரசு செயற்கை புனர்வாழ்வு நிலையத்தில்—17.

(உ) இல்லை.

### Pallavan, Thiruvalluvar Transport Corporation Buses involved in Accidents.

* 47. Q.—THIRU K. ARUNACHALAM (on behalf of THIRU K. RAMAMOORTHY). Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the number of accidents in which the Pallavan Transport Corporation ordinary and express buses were involved in the years 1978, 1979 and in 1980, up to 15th August;

(b) the number of accidents in which the Thiruvalluvar Transport Corporation buses were involved, from the date of its inception till 15th August 1980; and

(c) the action proposed to be taken to minimise the number of accidents?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (இ) :**

| | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) .. | 2446 | 2957 | 2048 |
| பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்] .. | 396 | 500 | 324 |
| பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவு) (15—1—80 வரை) .. | 237 | 329 | 15 |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் (16—i—80 முதல் அமைக்கப் பட்டது) .. | .. | .. | 254 |

(உ) விபத்துக்களைக் குறைப்பதற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) விபத்தின்றி பணி புரியும் ஓட்டுநர்களுக்குப் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது.

(2) விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பு அறிவுரை வகுப்புகள் (Safety Clinic Instructional Classes) நடத்தப்படுகின்றன.

(3) விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்கள் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு மறு பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர்.

(4) போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

(5) அதி வேகத்தைக் கட்டுப்படுத்த "டைசிகான்" என்ற வேகக் கட்டுப்பாடு கருவிகள் பேருந்துகளில் பொருத்தப்பட்டு வருகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** விபத்துக்களைக் குறைக்க அரசு சார்பிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அமைச்சரவர்களால் தெரிவிக்கப் பட்டன. அதிலே மிக முக்கியமான அம்சம், பேருந்து டெப்போவிலிருந்து கிளம்புவதற்கு முன்பாக, அதனுடைய இயந்திர பாகங்கள் சரியாக இருக்கின்றனவா என்று சரி பார்க்கப்படாமல் அனுப்பப்படுவதாலும், தேய்ந்த

[1982 பிப்ரவரி 8

டயர்களோடு அனுப்புவதாலும் சில விபத்துக்கள் நடக்கின்றனவென்று டிரைவர்களும், கண்டக்டர்களும் கூறுகிறார்கள். அமைச்சரவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அப்படி விபத்துக்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் தேவையான அளவிற்கு பேருந்துகளைப் பழுது பார்ப்பதற்காக நாம் தொழிலாளர்களை அமர்த்தியிருக்கிறோம். அவர்கள் சரியாகச் செய்யாவிட்டால், இதுபோன்ற பிரச்சினைகள் வரக்கூடும். ஓட்டுநர்களும், நடத்துநர்களும் எந்தப் பேருந்தில் அல்லது எந்த நேரத்திலே இப்படி இருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னால், கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இரவு நேரங்களில் லாரிகளிலே அதிக 'லோட்' ஏற்றிக்கொண்டு வருகிறார்கள். அப்போது எதிரே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகள் வரும்போது, லாரிகளின் இரண்டு பக்கங்களிலும் சிவப்பு விளக்குகள் பொருத்தாததால், லாரிக்கு அருகாமையில் வரும்போதுதான் லாரியின் பக்கவாட்டிலே உள்ள 'லோட்' தெரிகிறது. மேலும் அவர்கள் விளக்கை 'டிம்' செய்வதில்லை. இதன் காரணமாக எதிரே வரும் பேருந்து ஓட்டுநர் வண்டியை ஒடித்துத் திருப்ப வேண்டியிருப்பதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. நானே அப்படி வேலூரில் ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டேன். எனவே லாரிகளில் அதிகமான அளவிற்கு 'லோட்' ஏற்றாமலிருக்கவும், இரண்டு பக்கங்களிலும் சிவப்பு விளக்குகள் பொருத்தவும், விளக்கை 'டிம்-பிரைட்' செய்து வண்டிகளை ஓட்டவும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** வண்டிகளில் மிகவும் உயரமாக அல்லது அகலமாகப் பொருள்களை ஏற்றக்கூடாதென்பது அரசினுடைய உத்தரவு. இவ்வளவு அகலம், உயரம்தான் ஏற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது. கட்டாயமாக அகலமாக ஏற்ற வேண்டுமென்றால், இரண்டு பக்கமும் விளக்கு வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவு இருக்கிறது. அதைக் கடைப்பிடிக்கவில்லை என்றால், கடுமையான நடவடிக்கைகள் மூலம் அரசு அதைக் கட்டுப்படுத்தும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அண்மையில் விபத்துக்கள் குறைந்திருப்பதாகப் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. விபத்துக்களைத் தடுக்க எடுத்திருக்கிற நடவடிக்கைகள் எல்லாம் பல்லவன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர்



1982 பிப்ரவரி 8]

போக்குவரத்துக் கழகம் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் ஓட்டுநர்களுக்குத்தான் இருக்கிறது. எதிரே வரும் வாகனங்கள் இந்த ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படாமல் இருந்தால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அவர்களுக்குரிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ? மேலும் அதிகமான அளவிற்கு 'லோட்' ஏற்றிவரும் லாரிகளின் மூலமாகத்தான் அதிகமான அளவிற்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவர்கள் சரக்கு ஏற்றிவர உயரம், அகலம் போன்றவற்றை நிர்ணயித்து விளக்குகளை இரண்டு புறத்திலும் பொருத்த வேண்டுமென்று சொல்லி, அவர்கள் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால், போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த ஓட்டுநர்கள் ரிப்போர்ட் செய்தால், அதைக் கொண்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க தக்க விதி முறைகளை அமைச்சரவர்கள் ஏற்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி:** பல்லவன் போக்குவரத்துக் கழகம் அல்லது மற்ற போக்குவரத்துக் கழகங்களிலே இதற்காகப் பரிசுத் தொகை கொடுக்கிறோம். ஆனால் விதிகள் என்பது எல்லோருக்கும்தான். வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை எல்லா வண்டிகளிலும் பொருத்த வேண்டுமென்று முடிவெடுத்து, அதைப் படிப்படியாகச் செயல்படுத்த வேண்டியிருப்பதால், அதில் காலதாமதம் ஏற்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் சொல்வதை வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அது சரியாக இராது எல்லோரும் சரியாகச் சொல்லுவார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. இவர்கள் நடு ரோட்டில் வண்டியை நிற்க வைத்து விட்டு, அவர்கள் ஓரமாகப் போகவில்லை என்று சொன்னால், அது சரியாக இராது. அதிகாரிகளை வைத்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** விபத்துக்குள்ளான பேருந்துகளை ஓட்டிய ஓட்டுநர்களுள் எவ்வளவு பேர் நிரந்தரமாக்கப்படாதவர்கள், எவ்வளவு பேர் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இதிலே நிரந்தரமாக்கப்பட்டவர்கள், ஆக்கப்படாதவர்கள் என்ற குறிப்பில்லை. அவர்களுக்குப் பயிற்சி கொடுத்த பின்புதான் நிரந்தரமாகப் போடுகிறோம். அவர்கள் சரியாக 240 நாட்கள் ஓட்டிய பின்புதான் நிரந்தரமாக்கப்படுவார்கள். அதற்குள் அவர்கள் தவறு செய்தால், அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

[1982 பிப்ரவரி 8

**திரு க. இராமமூர்த்தி:** எனக்குக் கிடைத்துள்ள செய்திப்படி, பெரும் பாலான விபத்திற்குள்ளான பெருந்துகளை ஓட்டியவர்கள் நிரந்தரமாக்கப் படாதவர்கள் என்றும் மேலும் சென்னையிலே ஓட்டிக்கொண்டிருந்தவர்கள் திடீர் திடீரென்று நெடுந்தூரப் பெருந்துகளை, எக்ஸ்பிரஸ் பேருந்துகளை ஓட்டுகிறார்கள் என்றும், அவர்களின் அனுபவமின்மை இந்த விபத்துகளுக்கு ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறதென்றும் தெரிகிறது. இது உண்மையா? எவ்வளவு பேர் சென்னையிலே பெருந்து ஓட்டியவர்கள் தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை ஓட்டுகிறார்கள்?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துரிதப் பேருந்து என்று சொன்னால், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து பிரிந்த ஒன்றுதான் அது. அதிலே யுள்ள தொழிலாளர்கள்தான் இதிலே வந்திருக்கிறார்கள். சரியான முறையில் பயிற்சி கொடுத்த பின்புதான், நாம் அவர்களை துரிதப் பேருந்து ஓட்டுவதற்கு அனுமதிக்கிறோம். இதிலுள்ள சங்கடம் என்னவென்றால், நன்றாகப் பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் நமக்குக் கிடைப்பதில்லை. அதன் காரணத்தால் நாங்கள இப்போது வேலை வாய்ப்பகத்தின் மூலமாக எடுப்பதை விட நேரடியாக எடுப்பதுபற்றிக் கூடக் கேட்டிருக்கிறோம். ஓட்டுநர்கள் சரியாகக் கிடைக்காத காரணத்தால், சில நேரங்களில் இளைஞர்களை எடுத்து சரியாகப் பயிற்சி கொடுத்து ஓட்ட வைக்கிறோம். ஆனால், சரியான முறையில் பயிற்சி இல்லாத வர்களை நாங்கள் பயன்படுத்துவதே இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விமானிகளை வருடத்திற்கு ஒரு முறை பரிசோதனைக்கு அனுப்புவதுமாதிரி, நம்முடைய ஓட்டுநர்களையும் வருடத் திற்கு ஒரு முறை பரிசோதனைக்கு அனுப்பி கண்பார்வை சரியாக இருக்கிறதா என்பது போன்ற பரிசோதனை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அதுமாதிரி ஆண்டுதோறும் இல்லை யென்றாலும் கூட, சந்தேகம் வரும்போது, 6 மாதத்திற்கு ஒரு முறை கூட பரிசோதித்து விட்டுத்தான் பேருந்துகளை ஓட்டுவதற்கு அனுமதிக்கிறோம்.

**திரு க. இராமமூர்த்தி:** நன்றாகப் பயிற்சி கொடுத்த பிறகுதான் பேருந்துகளை ஓட்டுவதற்கு அனுமதிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் பயிற்சிக்கான சான்றிதழ்களை எங்கேயிருந்தும் எளிதில் பெற முடியும். இரைவுப் பேருந்து ஓட்டுகின்ற ஓட்டுநர்களைப் பொறுத்த வரை தனித் திறமை வேண்டும். சென்னை நகரில் ஓடும் பேருந்துகளை



1982 பிப்ரவரி 8]

ஓட்டுவது மாதிரி அல்ல எக்ஸ்பிரஸ் பஸ்களை ஓட்டுவது. அதற்காக தனிப் பயிற்சி தேவை. தொலைவுப் பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்குச் சரியாகப் பயிற்சி தராததன் காரணமாகத்தான் பேருந்துகளுக்குப் பெரும் பாலான விபத்துக்கள் ஏற்படுகின்றன. பெரும் முதலீடு செய்து வாங்கப் பட்ட விரைவுப் பேருந்துகள், ஒரு வாரத்திற்குள், 10 நாட்களுக்குள் விபத் துக்கு உள்ளாகின்றன. அவர்களுக்கு முழுமையாகப் பயிற்சி அளிக்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அவர்களுக்குப் பயிற்சி சரியாக இல்லாத தால்தான் இவ்வாறு ஏராளமான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதுபற்றிப் பரிசீலனை செய்து, விபத்துக் களைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** விரைவுப் பேருந்துகளால் ஏற்பட்ட விபத்துகள் 254 என்கிற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் இங்கே சொன்னதைப் போல, பயிற்சி இல்லாதவர்களை நாங்கள் ஓட்டுவதற்கு அனுமதிப்பதேயில்லை. காரணம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை ஓட்டுகிற ஓட்டுநர்கள் சில சந்தர்ப்பங்களில் தொடர்ந்து 24 மணி நேரம் ஓட்ட வேண்டிய சூழ்நிலை கூட ஏற்படும். மேலும் ஆங்காங்கே இடையிலே ஓட்டுநர்களை மாற்றிக்கூட ஓட்ட வைக்கிறோம். நல்ல பயிற்சி உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுத்து விரைவுப் பேருந்துகளை ஓட்ட வைக்கிறோம். மற்ற பேருந்துகளை விட இதிலே அக்கறையும், கவனத்தையும் காட்டுகிறோம். உறுப்பினருடைய யோசனையையும் கருத்திலே வைத்து நல்ல முறையில் விபத்து ஏற்படாமல் நடைமுறைப்படுத்துவோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது விரைவுப் பேருந்துகளில் கட்டுப்பாடு இயந்திரத்தை உபயோகப்படுத்துகிறோம். சாதாரணமாக பஸ் ஓடிக் கொண்டிருக்கும்போதே அந்தக் கருவியிலிருந்து ஒலி வருகிறது. இதுபற்றி நான் காரணம் கேட்டேன். உடனே ஓட்டுநர் ஒரு சுவிச்-ஐப் போட்டார். உடனே அதன் ஒலி நின்றுவிட்டது. அது சாதாரண வேகத்தில் ஓடிக்கொண் டிருந்த பேருந்து. அப்படி என்றால், கோளாறின் காரணமாகத்தான் அது ஒலி எழுப்பியிருக்கிறது என்று பொருள். ஆகவே இம்மாதிரி கோளாறுடன் இருக்கின்ற கருவிகளை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** வேகம் குறைவாக இருக்கும்போது அந்தக் கருவி ஒலி எழுப்பாது. சாதாரணமாக 60 கிலோமீட்டருக்கு அதிக மாகச் சென்றால்தான் ஒலியை எழுப்பும். உறுப்பினர் சொன்ன பேருந்தின்

வேகம் 60 கிலோ மீட்டரைத் தொட்டவுடன் அவ்வாறு ஒலியை எழுப்பி யிருக்கலாம். ஆனால் அந்த ஒலி 1 நிமிட நேரம் வரை இருக்கும். பிறகு தானாக நின்று விடும். பொதுவாக, கருவிகள் எல்லாம் சரியாக இருப்பதாகத் தான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், கோளாறு இல்லாத கருவிகள் இருக்கும் வகையில் அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் சொன்னது தவறான தகவல் இல்லை. சில நேரத்தில் இப்படி ஒரு ஒலி அந்தக் கருவிகளிலிருந்து வருகிறது. இதை நானே பார்த்திருக்கிறேன். அவ்வாறு ஒலி வராமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஆங்காங்கே ஒன்றிரண்டில் இப்படி ஏற்படுவதும் ஒன்றும் ஆச்சரியமில்லை. காரணம் அது ஒரு கருவிதான்.

**திரு. செ. முத்துசாமி :** இந்தக் கருவிகள் அரசாங்க உந்து வண்டிகளில் தான் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தனியார் பஸ்களில் மற்றும் லாரி களில் வைக்கப்படவில்லை. ஒரு விபத்து என்பது அரசாங்க உந்து வண்டிகளால் மட்டும் வருவதில்லை. இப்படி அரசு பேருந்துகளில் மட்டும் வைத்து விட்டு மற்ற தனியார் வண்டிகளில் வைக்காமல் இருந்தால், நாம் எப்படி ஆபத்துக்களைத் தடுக்க முடியும்? இதுபற்றியும் பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர்களும் இதிலே அக்கறை கொண்டிருப்பதால் தான் தனியார் பஸ்களிலும், லாரிகளிலும் கூட வைக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அரசுப் பேருந்து களுக்கு நாம் முதலில் பொருத்தியது, அரசே முன்மாதிரியாக இருக்க வேண்டு மென்ற நல்லெண்ணத்தோடுதான்.

## *High Speed Diesel Oil.*

* 48. *Q.*—THIRU K. RAMAMOORTHY (on behalf THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Transport be pleased be state—

(*a*) whether, in Maduranthakam Taluk, Chengalpattu District any weekly quota of High Speed Diesel Oil has been fixed by the Collector of Chengalpattu District, for agricultural tractors; and

(*b*) if so, the quota so fixed ?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) 1980-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கை இருப்பைக் கருத்தில் கொண்டு 20 லிட்டர் டீசல் வாரம் ஒரு முறை அல்லது இரண்டு முறை வழங்க வட்டாட்சியாளர்களைக் கேட்டுக் கொண்டார்

டீசல் எண்ணெய் விநியோகம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் தற்போது நீக்கப்பட்டுவிட்டன.

**திரு. க. இராமமூர்த்தி :** வினியோகம் தொடர்பாக யார் மீதாவது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா அல்லது தொடரப்பட்ட வழக்கு ஏதாவது திரும்பப் பெறப்பட்டிருக்கிறதா ? அல்லது திரும்பப் பெறுவதற்கான முயற்சி ஏதாவது செய்யப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மூலக் கேள்வி இது சம்பந்தமாக இல்லை. வழக்கு சம்பந்தமாக தனிக் கேள்வி கேட்டால், அதுபற்றிய முழு விவரமும் தருகிறேன்.

## *Assistant Engineers.*

* 49. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state—

(*a*) the number of Assistant Engineers, who were recruited under Rule 10 (*a*) (i) by the Public Works Department from 1977 directly; and

(*b*) the ratio of the recruitment on the basis of the community?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் .** (அ) பொதுப்பணித் துறையில் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 வரையில் விதி எண். 10 (a) (i)ன் கீழ் நேரடி நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர் 776 பேர். அவர்களுள் பணியேற்றவர்கள் 476 பேர்.

(இ) வகுப்பு வாரி அடிப்படையில் நியமனம் பெற்றவர் விகிதாசாரம் பின்வருமாறு.—

| | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் | மற்றவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நியமனம் பபற்றவர் | 73 | 538 | 165 | 776 |
| ணி ஏற்றோர் | 37 | 363 | 76 | 476 |

[1982 பிப்ரவரி 8

திரு. க. இராமமூர்த்தி : தேர்வாணைக் குழுவின் மூலமாக அல்லாமல், இப்படி நேரடியாக வேலைக்கு அமர்த்தப்பட வேண்டிய நிலை ஏன் ஏற் பட்டது ? அதற்கான அவசியம் என்ன ? இப்படி ஏற்படுத்தியதால், சில பேர் செல்வாக்கின் காரணமாகத் தேர்வு பெற்றும்கூட, வேறு நல்ல வேலை கிடைக்கும்போது, அந்தப் பணிக்குச் சென்று விடுகிறார்கள். தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற முயற்சி ஏன் கைவிடப்பட்டது ? அது திரும்பவும் பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: தேர்வாணைக்குழு வழி யாகத் தேர்ந்தெடுக்காமல் 10 (ஏ) (1) ன் கீழ் எடுக்கும்போது, தேர்ந்தெடுக் கப்படுபவர்கள் அத்தனை பேரும் சரியாக வருவதில்லையாதலால் அவசரத் தேவைக்கேற்ப, உடனடியாக நேரடியாக வேலைக்கமர்த்தப்படுகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த முறை பின்பற்றப்படுவதால் பின்தங்கிய வர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மலைவாழ் வகுப்பைச் சார்ந்தவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. இதன் காரணமாக செல்வாக்குள்ளவர்கள் செல்வாக்கின் மூலமாக அல்லது வேறு வழிகளின் மூலமாக இந்த வேலைக்கு வர முடியும். இதன் விளைவு, முறை யாக, செல்வாக்கு இல்லாமல் இருந்து, அதே நேரத்தில் இந்த வேலைக்கு வர வேண்டியவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. இப்படிப்பட்ட நிலையை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : பாதகம் ஏற்பட்டதாக அரசுக்குத் தகவல் வரவில்லை. அப்படி பாதிப்பு ஏற்படுமேயானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவரப்படி, சுமார் 300 இடங்களுக்குப் பொறியாளர்கள் வேலைக்கு வந்து சேரவில்லையென்று தெரிகிறது. வேறு மாநிலங்களிலுள்ள ஊதியத்தோடு நம்முடைய மாநிலத்திலுள்ள ஊதியத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இங்கு ஊதியம் மிகவும் குறைவாக இருப்பதுதான் இவ்வாறு ஏராள மான பொறியாளர்கள் வேலைக்கு வராமல் இடங்கள் காலியாக இருப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. தவிரவும் தேர்வாணைக் குழுவின் சில நிபந்தனைகள் காரணமாக, கட்டுப்பாடுகள் காரணமாக, பல ஆண்டுகள்வரை



1982 பிப்ரவரி 8]

அவர்கள் தற்காலிகமாகப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரண மாகவும் இதையெல்லாம் பார்த்து அந்தப் பொறியாளர்களிடையே அதிருப்தி ஏற்பட்டு, அவர்கள் தனியார் துறைக்கு, வேறு துறைகளுக்குப் போகிறார்கள் என்றும் அரசுத் துறைக்கு வர முன்வரவில்லையென்றும் தெரிய வருகிறது. இத்தகைய குறைகளைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: இப்படிப்பட்ட குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை. இருந்தாலும் மூலக் கேள்வியின் அடிப் படையில் உள்ளதுபோல் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் வகுப்பினர் அதிகமாகப் பொறியாளர்களாக வேலையில் சேர வரவில்லை. ஊதியக் குறைவு காரணமாக அவர்கள் பணியில் சேர முன் வரவில்லை என்பது சரியான தகவல் இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. ம. சங்கரலிங்கம்: நியமனம் பெற்றவர்கள் 700-க்கு மேற்பட்ட வர்கள் இருக்க, வேலையில் சேர்ந்தவர்கள் 400-க்கு மேற்பட்டவர்கள்தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசுத் துறையில் 10 (ஏ) (1)-லே நியமனம் பெற்றவர்கள் 10 ஆண்டுகளானாலும் அவர்க ளுடைய பணி வரன்முறை செய்யப்படாமல் இருப்பதும், அவர்களை நியமித்த தற்குப்பிறகு வரும் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களுடைய பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்கள் சீனியர்களாக வருவதுமே இதற்குக் காரணம் என்பதை அரசு அறியுமா ? இப்போது 10 (ஏ) (1)-லே வந்தால் எந்தவொரு பயனும் இல்லை. அவர்களை நியமிக்கும் போது "Without as.igning any reason at any time the services of the individual can be terminated." என்று தெளிவாகச் சொல்லியிருக்கும்போது, கெஜடெட் அந்தஸ்த்தில் இருப்பவர்கள் எப்படி வருவார்கள் என்பதை அரசு பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இதுபற்றிய கேள்வி தனி யாகப் போட்டால், விவரங்கள் சரியாகக் கொடுக்கப்படும்.

## Engineers of Public Works Department on Deputation to other Places.

*50. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state—

(a) the number of Engineers of the Public Works Department, who are on loan of service to other States and Centre and to other countries;

(b) how many of them are on loan of service for more than (i) one year, (ii) two years and above ;

(c) how many amongst them, are Assistant Engineers, Divisional Engineers, Executive Engineers, Superintending Engineers and Chief Engineers ; and

(d) their years of service in the Public Works Department?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ), (இ) (உ) மற்றும் (எ) விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. இர்ாமமூர்த்தி :** இந்த விவரங்களின் மூலமாக ஏறத்தாழ 10 ஆண்டு காலத்திற்கு மேலாக பொதுப் பணித்துறையில் பணிபுரிந்த பொறி யாளர்கள், உயர் அதிகாரிகள் 77 பேர்கள் அயல் நாடுகளுக்கு, அயல் பணி களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அனுபவம் பெற்ற பொறி யியல் வல்லுநர்கள், மற்றும் பயிற்சி பெற்றவர்கள் இவ்வாறு வெளி மாநிலங் களுக்கு, அல்லது வெளி நாடுகளுக்குப் போவதைத் தடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பாரத பிரதமர் அவர்களும் திரும்பத் திரும்பத் தெரிவித்துக்கொண்டிருக்கும்போது, இந்தத் துறையிலே எப்படி இந்த நிலை ஏற்பட்டது? அதற்கு இடம் கொடுத்தது தேவைதானா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இந்த நிலை இதற்கு முன்பு இருந்த அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசு, பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதிலே சற்று கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** முன்பிருந்த அரசு காலத்திலே இவ்வாறு நடை பெற்றிருக்குமானால், இந்த அரசு அவர்களை உடனடியாகத் திரும்பப் பெறு வதற்கு முயற்சி செய்யுமா அல்லது அவர்கள் 10 ஆண்டு காலத்திற்கும் மேலாக

@106—107 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வெளியே சென்றுவிட்டதால், அவர்களைப் பணிநீக்கம் செய்து மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கும் முறையைக் கையாளுமா? வெளிநாடுகளுக்கு அனுப்பும் முறை இப்போதும்கூட தொடர்ந்து நடந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றிய தகவல் இருக்கிறதோ, இல்லையோ 1970-லேயிருந்து எவ்வளவு பேர்கள் என்ற தகவலைச் சொன்னால், சில விவரங்களைக் கேட்க வசதியாக இருக்கும். பொறியாளர்கள் அங்கிருக்கும் அதிகாரிகளை ஸ்டெப்பிங் ஸ்டோனாக வைத்துக்கொண்டு, இவ்வாறு சொல் கிறார்கள். அதிகாரிகளில் சிலர் இதற்குத் துணையாக இருக்கிறார்கள். ஆகவே இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சொ.. நீ. இராசேந்திரன் :** வெளிநாடுகளில் பணி யாற்றுபவர்களில் 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இருப்பவர்களை பணி நீக்கம் செய்வதைவிட, அவர்களை மீண்டும் இங்கே கொண்டுவரும் முயற்சியை அரசு செய்து வருகிறது. வெளிநாடு செல்வதற்கான ஒப்புதலை மத்திய அரசு தருகிறது. வெளிநாட்டுப் பணி ஒப்படைப்பு பட்டியலை மத்திய அரசே வைத்து, பணியாளர்களின் பெயர்களைப் பதிவு செய்து, அவர்களே 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட், பாஸ்போர்ட்' போன்றவைகள் எல்லாம் கொடுத்து வருகிறார்கள். அப்படி மத்திய அரசு தேர்ந்தெடுத்து அனுப்பு வதைத்தான் இந்த அரசு அனுமதிக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கு முன்பிருந்த அரசு இதை ஊக்குவித்தது என்று சொன்னார்கள். இந்த அரசும் தொடர்ந்து அப்படியே செய்து வருகிறது. அதிலே எந்த அரசு ஊக்குவிக்கவில்லை? பணியில் இருப்பவர்கள் அயல் பணிகளுக்குச் சென்றால் 2 ஆண்டுக்குள்ளாகத்தான் செல்ல வேண்டும் என்றும் அந்த இரண்டு வருட காலத்திற்குப் பிறகு அயல் பணியிலே அவர் கள் செல்ல அனுமதிக்கக்கூடாது என்றும் இருக்கிறது. இப்போது 3 ஆண்டு களுக்கு மேலாக 3 பேர்கள் இருக்கிறார்கள் அவர்களை ஏன் தங்கள் பணி களுக்குக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? Brain Chain என்று சொல்லப்படும் 'அறிவு ஒழுக்கு' இப்போது இருக் கிறது. வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்த நிலைமை நல்லதல்ல, அது போன்று இப்போது 'தொழில் நுட்ப ஒழுக்கும்' இருக்கிறது. இவற்றைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்:** அயல் நாடுகளுக்கு அனுப்பப் பட்ட பொறியாளர்கள் அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற விதி இப்போது பின்பற்றப்படுகிறது. இதற்கு மேலும்

தேவைப்பட்டால், எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களோ, எந்த நாட்டைச்
சார்ந்தவர்களோ மேலும் அவர்களின் பணி வேண்டும் என்று விரும்பினால்
அதை அரசு பரிசீலனை செய்து நிறைவேற்றுகிறது. அதற்குப்பின் அவர்கள்
தமிழகத்திற்கு வர இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் கேள்
விக்கு பதில் அளிக்கும்போது, "எவ்வளவு எஞ்ஜினியர்கள் தேவைப்படுகி
றார்களோ அவ்வளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும்கூட அவர்கள் வருவ
தில்லை" என்று சொன்னார்கள். அந்தச் சூழ்நிலைகளிலே இன்றைக்குக்
கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையின்படி ஏறத்தாழ 36 உதவி செயற்
பொறியாளர்கள், 6 செயற் பொறியாளர்கள் என்ற அளவில் மிகுந்த அனுபவம்
பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வெளி
நாடுகளுக்குச் செல்ல மத்திய அரசு அனுமதி தந்தாலும் கூட, இங்கே அவர்
கள் இல்லாமலேயே பார்த்துக்கொள்ள முடியும், அவர்களுக்கு விலக்கு அளிக்
கிறோம் என்று மாநில அரசு ஒப்புதல் தந்தால்தான், அவர்களை வெளிநாடு
களுக்கு அனுப்ப முடியும். ஆகவே, இனிமேல் அப்படி ஒப்புதல் அளிப்பதை
மறுத்து நல்ல அனுபவம் பெற்ற பொறியியல் அதிகாரிகளுடைய ஆற்றலையும்,
அறிவையும் இந்த மாநிலம் பெற்றிடும் வகையிலே அரசு நடவடிக்கை
எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே,
நாங்கள் ஓர் அடிப்படையான கொள்கை வகுத்துக்கொண்டிருக்கிறோம். இப்
போது அப்படிப்பட்ட பொறியாளர்களை வேண்டும் என்று கேட்கும்போதெல்
லாம், 'நமக்குத் தேவையில்லை' என்கிற அளவுக்கு அதிகாரிகள் உத்தரவாதம்
கொடுத்தாலன்றி, யாரையும் வெளியே அனுப்ப இந்த அரசு தயாராக இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சாலைகளின் மையத்தில் கான்கிரீட் கட்டைகள்

* 41 வினா.—திரு. சி. ரா லெட்சுமிகாந்தன், மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு
கிறேன்—

(அ) சென்னை நகரில், அண்ணா சாலையில் அண்ணா சிலை முதல்
கருணாநிதி சிலை வரை, சாலையின் மையத்தில் கான்கிரீட் கட்டைகள்
அமைக்கப்பட்டுள்ளதால் விபத்துக்கள் குறைந்துள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், சென்னை நகரில் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்
சாலைகளிலும் இதுபோல் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?



(உ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இறங்குமுகமாக உள்ளது.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இவ்வாறு கான்கிரிட் கட்டைகள் அமைக்
கப்பட்டிருப்பதால், நேருக்குநேர் மோதிக்கொள்ளுகின்றதைத் தவிர்க்கும்
வகையில், ஆங்கிலத்தில் "Head on collission" என்று சொல்வார்களே
அதைத் தவிர்க்கும் வகையில் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் கட்டைகள்
உதவியாக இருக்கின்றன. இது மிகவும் பயனளிப்பதால் கல்கத்தா நெடுஞ்
சாலை, பெங்களூர்-திருச்சி நெடுஞ்சாலைகளில் சென்னை மாநகராட்சி எல்லை
வரையிலும் இந்தக் கட்டைகளை அமைத்தால், விபத்துக்களைக் குறைக்க
லாம் என்பதால், அப்படி இந்தக் கட்டைகளை அமைக்க மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இதுபோன்ற கட்டைகள் வைக்கப்
படுவதன் மூலமாக உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. மேலும்
விபத்துக்களின் மூலமாக ஏற்படும் பலத்த காயங்கள் என்றுகூட அல்ல, சொற்ப
காயங்களும் தவிர்க்கப்பட்டு வருகின்றன. இப்போது நெடுஞ்சாலை எண் 45-ல்
சென்னையிலிருந்து திண்டுக்கல் செல்லும் பாதையில் இதுபோன்ற நிலைமை
களை உருவாக்குவதற்கு கத்திப்பாராவிலேயிருந்து விமான நிலையம் வரை
2 மீட்டர் நீளம் உள்ள கட்டைகளை வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன. மற்ற தேசிய நெடுஞ்சாலைகளிலேயும் இதுபோன்ற நிலைமை
களைக் கையாளலாமா என்றும் அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சென்னைப் பெருநகரிலே உள்ள நெடுஞ்சாலை
களின் மத்தியில் கட்டைகள் அமைப்பது பயனுள்ளதாக இருக்கிறது என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். டெல்லி, ஹரியானா,
பஞ்சாப் போன்ற இடங்களுக்குப்போய் பார்த்தால், நெடுஞ்சாலைகளுக்கு
மத்தியில் மரங்களை வளர்த்து ஒரு பார்க் போல வைத்திருக்கிறார்கள் சாலை
யின் மத்தியில் நல்ல தடுப்பாகவும் இது இருக்கிறது. நமது மாநிலத்தில்
உள்ள நெடுஞ்சாலைகளிலும் அதுபோன்ற மரங்களை வைத்து விபத்துக்களைத்
தவிர்க்கவும், மேலும் சாலை ஓரங்களில் நிழல் தரவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பாதைகளின் அகலத்திற்கு
ஏற்ப இது பரிசீலிக்கப்படும்.

[1982 பிப்ரவரி 8

THIRU A. R. DAMODARAN: Sir, may I know whether, before putting up stands on the National Highways in the urban limits, this Government will consult the Highways authorities in the Central Government also because it is against the principle of National Highways to put up any sort of concrete blocks as a result of which a number of accidents are likely to occur to vehicles and in the traffic? Unlike what the Hon. Minister said, the world over, in National Highways in the City-limits, such blocks are not put because it will lead to accidents. May I request the Government to consider this aspect also?

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மேலை நாடுகளைப் பொறுத்த வரையில், நெடுஞ்சாலைகளில் மையக் கட்டைகளை வைப்பதைக் காட்டிலும் 'டிராபிக் ஐலண்டு'-களை அமைப்பதையே கைக்கொள்கிறார்கள். இரண்டு அல்லது 3 மீட்டர் அளவுக்கு இவற்றை அமைக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இவைகள் பாதையின் அகலத்தைப் பொறுத்தே மேற்கொள்ளப்படுகின்றன. நம் நாட்டு நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், We have got only two line traffic. எனவே four line traffic போன்ற பெரிய நெடுஞ்சாலைகள் இருந்தால், நாமும் அப்படிப்பட்ட நிலைமைகளை மேற்கொள்ள இயலும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 42 மற்றும் 43 ஆகியவை சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

**சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு பதவிகள் வழங்குதல்**

*** 42 வினா.—செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979-80 ஆம் கல்வி ஆண்டில், சென்னை மாநகராட்சி, மேல் நிலைப் பள்ளிகளுக்கென்று எத்தனை பதவிகளுக்கு அனுமதி கேட்டது ?

(இ) அனுமதிக்கப்பட்ட பதவிகள், மாதக் கணக்கான காலதாமதத்திற்குப் பிறகு நிரப்பப்பட்டன என்பது அரசுக்குத் தெரியுமா ?



1982 பிப்ரவரி 8]

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) 1979-80 ஆம் ஆண்டில் கூடுதல் ஆசிரியர்களை நியமித்து (தேவைக்கு ஏற்ப) 39 பணியிடங்கள் முதன்மைக் கல்வி அலுவலரால் அனுமதிக்கப்பட்டது.

(இ) & (உ) நிர்வாக காரணங்களினால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பணியிடங்கள் தாமதமாக நிரப்பப்பட்டுள்ளன.

*** 43 வினா.—செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-81 ஆம் கல்வி ஆண்டுக்கு சென்னை மாநகராட்சி மேல் நிலைப் பள்ளிகளுக்கு அரசால் அனுமதி அளிக்கப்பட்ட பதவிகள் எத்தனை ?

(இ) அவைகளில் எத்தனை பதவிகளை அது திரும்பக் கொடுத்து விட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) பதினான்கு மட்டும்.

(இ) ஒன்றைக் கூட திருப்பிக் கொடுக்கவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**செல்வி ஆ. லீலாவதி:** சென்னை மாநகராட்சியில் ஆகஸ்ட் மாதத்தில் ஒரு காலியிடம் இருந்தது. அப்போது ஒரு 'குவாலிபைடு ஆசிரியர்' கூட அந்தப் பணியிடத்திற்காகக் காத்திருந்தார். உடல் ஊனமுற்ற அந்த ஆசிரியர் இருந்தார். நிர்வாகக் காரணம் என்று சொல்லி அவரை காத்திருந்தபோதும், நியமிக்காமல், அதற்குப் பிறகு ஒருவர் தேர்ச்சி பெற்று வரும் வரை காத்திருந்து, அவரை அந்தப் பதவியில் நியமித்தார்கள். இவ்வாறு நியமிப்பதற்கு சுமார் மூன்று, நான்கு மாதங்கள் காலதாமதம் ஆயிற்று. அதன் காரணமாக அந்த வகுப்பிற்கு ஆசிரியர் இல்லாத நிலை இருந்தது. இதை சென்ற ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டேன். திரும்பவும் இப்போது அதே போன்ற தவறு நடைபெறுகிறது. எனவே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமலிருக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல், எந்தவிதமான குற்றச்சாட்டும் அரசின் கவனத்திற்கோ, மாநகராட்சியின் கவனத்திற்கோ கொண்டுவரப்படவில்லை, ஆனாலும் இதுபோன்ற நிலைமைகள் இருந்தால், கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும்.
அது மட்டுமல்ல. மாநகராட்சியில் பணியாற்றும் அலுவலர்கள் தங்களுக்குத் தேவையானவர்களைச் சில குறிப்பிட்ட பதவிகளில் நியமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டால், அத்தகைய நிலைமை[illegible] நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வித் துறையைப் பொறுத்தவரையில், ஓர் ஆண்டில் இரண்டு முறை ஒரு குறிப்பிட்ட தேதியில் முதுகலைப் பட்டத்தில் தேர்ச்சிபெற்றவர்கள் யார் யார் என்று விவரம் கேட்டு, பட்டியல் தயாரித்துக்கொள்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பிறகு தேர்ச்சி பெறுபவர்களை அந்தப் பட்டியலில் சேர்ப்பதில்லை. அப்படிப்பட்ட பட்டியலில் உள்ளவர்களைக் கொண்டே, காலியிடங்களை நிரப்பும் முறை கல்வித் துறையில் இருக்கிறது. இப்படிப்பட்ட முறையை உள்ளாட்சித் துறையிலும் பின்பற்றினால், மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் குறிப்பிட்டது போன்ற குறைகள் ஏற்படாது என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் பின்பற்றப்படும் முறையையே உள்ளாட்சித் துறையிலும் பின்பற்ற ஆணை பிறப்பிப்பாரா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கல்வித் துறையில் பின்பற்றப்படும் எல்லாக் கொள்கைகளையுமே உள்ளாட்சித் துறையில் பின்பற்ற முடியாத நிலையில் இருக்கிறோம். என்றாலும் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற முறையில், இவைகள் அங்கேயும் பின்பற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சென்னை மாநகராட்சியில் நிர்வாகக் காரணங்கள் காரணமாகப் பதவிகள் நிரப்பப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். அத்தகைய நிர்வாகக் காரணங்கள் யாவை ? எந்தத் தேதியில் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன, எந்தத் தேதிகளில் அவைகள் நிரப்பப்பட்டன, எந்தத் தேதி வரை அவை நிரப்பப்படாமல் இருந்தன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சப்ஜெக்ட் டீச்சர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் நமக்குப் போதுமான அளவுக்குக் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்து அவர்களை நியமித்தாலும், அவர்கள் உடனடியாகப் பணியில் வந்து சேருவதில்லை. இப்படிப்பட்ட காலதாமதங்கள் காரணமாக, சில பணியிடங்கள் நிரப்பப்படாத சூழ்நிலை ஏற்படுகிறது. அவைகளைத் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

**செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதிலில் கல்வித் துறையில் பின்பற்றும் முறைகள் அனைத்தையும் மாநகராட்சியில் பின்பற்ற முடியாது என்று குறிப்பிட்டார்கள். இருந்தாலும் பணியிடங்களை நிரப்பும்போது, மார்ச்சு மாதம் 1 ஆம் தேதியன்று தங்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டவர்களின் 'பேனலை'த் தயாரித்துக் கொண்டால், இப்படிப்பட்ட குழப்பங்கள் மாநகராட்சியில்கூட ஏற்படாது. சென்னை மாநகராட்சியில் ஓர் ஆசிரியர் எம்.எஸ்ஸி. (பாட்டனி)-யில் தேர்ச்சி பெற்றிருந்தார். இருந்தபோதும் அவர் பெயரைப் பேனலில் போடாமல் இன்னொரு ஆசிரியர் தேர்ச்சி பெற்று வரும்வரை காத்திருந்து அவரை அந்தப் பதவியில் நியமித்தார்கள். எனவே மார்ச்சு மாதம் 1 ஆம் தேதியே பேனல் தயாரித்துவிட்டால், இப்படிப்பட்ட குழப்பங்கள் இனியாவது ஏற்படாது என்பதால், இம்மாதிரி பேனல் தயார் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியைகள் சங்கத்தின் தலைவியாகவும் இருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகளை அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலவையில் இக்கேள்வி கேட்கப் பட்டாலும்கூட, ஏற்கெனவே இவைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்பதைச் சொல்லிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில், தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அமைச்சர் அவர்களின் பதிலில் 1979-80-ல் 39 இடங்களும், 1980-81-ல் 14 இடங்களும் நிரப்பப்பட்டன என்று சொல்லப் பட்டது. அதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது, அதைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் வினாவின் குறிக்கோளாகும். பொதுவாக, பள்ளிகள் திறக்கப் படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே நாம் அநேகமாக 'அட்மிஷன்களை' முடித்துவிடுகிறோம். எனவே பள்ளி திறப்பதற்கு முன்பே நாம் எத்தனை

[1982 பிப்ரவரி 8

ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்து விடலாம். இம்மாதிரி ஆசிரியர்களின் பணியிடங்களை நிரப்புவதில் காலதாமதம் ஏற்பட்டால்—அதிலும் மூன்று, நான்கு மாதங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலை ஏற்பட்டால்—அதன் காரணமாக மாணவர்களிடம் 'இன்டிசிப்ளின்' தான் தோன்றும். இதன் காரணமாக, பல்வேறு தொல்லைகள் ஏற்படும். எனவே பள்ளி திறக்கப்பட்ட 15 நாட்களுக்குள் காலியாக உள்ள பணியிடங்களைப் பொறுத்தவரையில், இருக்கும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தோ அல்லது புதிதாக ஆசிரியர்களை நியமித்தோ அவைகள் நிரப்பப்பட வேண்டும் என்ற வகையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த அரசைப் பொறுத்த வரையில், அண்மைக் காலத்தில் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறது. வேண்டிய நேரத்தில் மட்டும் பட்டியலைத் தயார் செய்யாமல், முன்னாலேயே தகுதி உள்ளவர்களின் பட்டியலைத் தயார் செய்து வைக்க வேண்டுமென்றும், தேவை ஏற்படும்போது அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டிருக்கிறது. அது உள்ளாட்சித் துறையிலும் பின்பற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** நான் கேட்ட துணை வினாவிற்கான சரியான தகவல்கள் சொல்லப்படாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை அவைக்குத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன். அதாவது 39 பதவிகள் எந்தத் தேதியில் அரசால் அனுமதிக்கப்பட்டன ? அவை எந்தத் தேதி வரை நிரப்பப்படவில்லை ? இடைக்காலத்தில் ஏற்பட்ட காலதாமதம் எவ்வளவு ? எந்தப் பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் பணியில் சேராமல் போனார்கள் போன்ற விவரங்கள் இருந்தால், அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 50 பணியிடங்கள் 14—6—1979 அன்று அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 38 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. ஒரே ஒரு பணியிடமான 'பாட்டனி டீச்சர்' இடம் மட்டும் நிரப்பப்படாமல் இருந்தது. அதற்குப் பின்னால் ஒரு ஐந்து, ஆறு தடவை, பெயர்ப் பட்டியலைப் பெற்று தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதைத்தான் நிர்வாகக் காரணங்கள் அல்லது சிக்கல்கள் என்று குறிப்பிட்டேன். அதைத் தவிர வேறு எந்தச் சிக்கலும் இல்லை.



1982 பிப்ரவரி 8]

## *Assessment of House-Tax by Tindivanam Municipality.*

* 14. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the dates on which completion certificates were issued to the house-owners in Tindivanam Municipality during the past four years (from March, 1977), for purposes of domestic power connecitons; and

(b) the dates on which the same houses were assessed by the said Municipality fcr house-tax?

(அ) வீட்டு உரிமையாளர்கள் மின்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** திண்டிவனம் நகராட்சியினால் முடிவு சான்றிதழ் இணைப்பு பெறுவதற்கு வழங்கப்படவில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளாக

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

இந்தக் கேள்வியின் நோக்கமே, பல வீடுகள்

**திரு. க. இராமமூர்த்தி :** அதில் ஒரு சுவரை அல்லது சுவற்றின் கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும் கூட, சிமிண்ட் பூச்சு செய்யாமல் விட்டுவிட்டு, அதன் ஒரு பகுதியை மட்டும் கட்டி முடிக்கப்படவில்லை என்று சொல்லி காரணமாக வீடு முழுவதுமாகக் மதிப்பீடே செய்யாத பலர், வரி விலக்கு பெற்றிருக்கிறார்கள் அல்லது நிலையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதுதான். இதற்கு அதிகாரிகள் உடந்தையில்லாமல் நடைபெற இயலாது என்ற எண்ணம் நகரில் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது ?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கான பதிலுக்குரிய குறிப்புகள் என்னிடத்திலே தற்போது இல்லை. பொதுவாக இப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. ஆகவே நகராட்சிகளில் அவற்றைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** முடிக்காத வீடுகளாக இருந்திருந்தால், அவர்கள் மின் இணைப்பைப் பெற்றிருக்க முடியாது. மின் இணைப்பைப் பெற்று சௌகரியமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் சில ஆண்டுகளுக்கு வரி மதிப்பீட்டுக்குக் கொண்டுவராமல் இருக்கிறார்கள். அந்த முறையிலே அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா ?

[1982 பிப்ரவரி 8

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வீடு எந்தத் தேதியில் முடிக்கப்பட்டாலும் அது எந்த அரையாண்டுக்குள் வருகிறது என்பதைப் பார்த்து வரி விதிக்கப்படுகிறது. சில நேரங்களில் பில்டிங் இன்ஸ்பெக்டர்கள் சரியான காலத்திலே நகராட்சிக்குத் தெரிவிக்கவில்லையென்றாலும், சில தவறுகள் ஏற்படுகின்றன. இத்தகைய குறைகளைப் போக்க இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** வீடு கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான், வரி விதிப்பிற்கு இலக்காகிறது. முடிக்கப்பட்ட வீடுகள் கூட, இன்னும் முடிக்கப் படவில்லை என்று செயற்கையாக, அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அல்லது அவர்களுடைய கெட்டிக்காரத்தனத்தால் தெரிவிக்கப்பட்டு வரி விதிப்பிற்கு இலக்காகாமல் இருக்கின்றன. இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வீடு கட்டுவதைப் பொறுத்த வரையில், அவற்றைக் கவனிப்பதற்காக ஒரு "விஜிலென்ஸ் ஸ்குவாட்" வேண்டுமென்ற எண்ணத்தோடு இன்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திண்டிவனம் நகராட்சியிலே கூட 1977 முதல் 1981 வரையில் 126 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாக நம்முடைய கணக்கு காட்டுகிறது. ஆனால், உண்மையான கணக்கு வேறாக இருக்கிறது. ஆகவே அவற்றை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று நகராட்சி ஆணையாளர், பில்டிங் இன்ஸ்பெக்டர்கள், டவுன் பிளானிங் ஆபீசர்கள் ஆகியவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவை மீண்டும் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு.

**மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இதர ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் உயர்த்தப்படாதது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஈர்க்கப்பட்ட (Inducted) பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் ரூ. 25-லிருந்து ரூ. 40-ஆக உயர்த்தப் பட்டும், ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இதர ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்த சிறப்பூதியம் உயர்த்தப்படாததால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் தக்க பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும் அது அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இதற்கான ஆணை எப்போது பிறப்பிக்கப்படும் என்பதையும் 5—9—1981 ஆம் தேதியிலிருந்து அமுல் படுத்தப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தொழில் பாடம் கற்பிக்கும் முன்னாள் ஒருமுனை பாட ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் வழங்குவதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை விவரமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தீர்க்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பரிசீலனையே இதுபற்றிய கருத்துக்களைப் பற்றித்தான்.

---

@ 107 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 பிப்ரவரி 8

### 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநருடைய உரைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக் கூடிய நாங்கள் நன்றி கூட தெரிவிக்கவில்லை என்றும், அது எங்களுடைய மனப்பான்மையைக் காட்டுகிறது என்றும் எங்கள் மீது குற்றச்சாட்டும், அதே நேரத்தில் ஆளுநருடைய உரை தமிழ் நாட்டிலே பெரும் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலே அமைந்திருக்கிறது என்றும் ஆளும் தரப்பிலேயிருந்து சொல்லப்பட்டது. ஆனால், இந்த உரையை முழுமையாகப் படித்துப் பார்க்கிறபோது, இது ஒரு மண் குதிரை என்று தெரிகிறது. மண் குதிரைக்குக் கடிவாளம் போட்டு அதைப் பிடித்துக் கொண்டு நாங்கள் சவாரி செய்ய வேண்டுமென்று சொல்ல, நாங்களும் ஏமாந்து சவாரி செய்தால், எங்களுடைய நிலை என்னவாகும் என்பதை இந்த அவை அறியும். ஆகவே ஆளுநர் உரை ஒரு மண் குதிரை, அதை நாங்கள் நம்பத் தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே, தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படுவதாகவும், குற்றங்கள் பெருமளவிலே தடுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலே சமீப காலத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற சில சம்பவங்களைப் பார்க்கிறபோது, ஆட்சியிலே இருப்பவர்கள், நிர்வாக இயந்திரத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பவர்கள் அத்தகைய சம்பவங்களைத் தடுக்க செயல்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால், அதற்கு நேர்மாறாக நாட்டிலே கொலை, கொள்ளை, வன்முறை எது நடந்தாலும் பரவாயில்லை, ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் எப்படியாவது பழி தீர்ப்பது என்ற உணர்வோடு செயல்படுவதாகத்தான் நாங்கள் கருதுகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டை ஆண்டு கொண்டிருக்கக் கூடிய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சென்னையிலேதான் குடியிருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு தலைநகரத்தைத் திருச்சிக்கு மாற்றப் போகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போல, உண்மையிலேயே மாற்றப்பட்டு திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையிலே தலைநகரம் இருந்திருந்து, சென்னையிலே சில அசம்பாவிதங்கள் நடந்தால். அப்போது அவர்கள், "இது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. சில நடவடிக்கைகளை எடுத்துக்



1982 பிப்ரவரி 8] [திரு. சோ. ஆறுமுகம்]

கொண்டிருக்கிறேன்" என்று சொல்லலாம். ஆனால், முதலமைச்சர் அவர்கள் கூட தலைநகரத்திலேதான் குடியிருக்கிறார். காவல் துறை அவர் கையிலேதான் இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து ஒரு கணக்கை எடுத்துப் பார்த்தேன், 1982 ஆம் வருடம் ஜனவரி 12 ஆம் தேதி

(முற்பகல் 10-20)

வரை, என்னுடைய தகவலின்படி சென்னை நகரில் மட்டும் எத்தனை திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். சென்னை கே. கே. நகரிலிருந்து பாரிமுனை செல்லும் 11-டி. பஸ்ஸில் தங்க நகைகள் எடுத்துச் சென்றவர்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு நடைபெற்றிருக்கிறது. அடுத்து, சென்னையைச் சேர்ந்த தி.நகர் துரைசாமி சாலையில் இருக்கும் புஷ்பராஜ் என்ற மார்வாடியின் வீட்டில் சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அளவுக்கு கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே மைலாப்பூர் யாகூப் காலனியைச் சேர்ந்த பொன்னம்மாள் என்பவர் தனியாக இரவில் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, ஸ்கூட்டரில் திடீரென்று வந்து அவர்களுடைய கழுத்திலே இருந்த 8½ பவுன் தங்க நகையைப் பறித்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அதுபோலவே பாண்டி பஜார் காவல் நிலையத்திற்கு 50 அடி தூரத்தில் துணிக் கடையில் கடையை உடைத்து சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள். இராஜா அண்ணாமலைபுரத்தில், மீனாட்சி அம்மாள் என்பவர் வீட்டில் பட்டப்பகலில் நம் மின் வாரியத்தைச் சேர்ந்த கணக்காளர் என்று சொல்லி, "மீட்டர் கணக்கு எடுக்க வந்திருக்கிறேன்" என்று சொல்லி, உள்ளே நுழைந்து அந்த வீட்டினுடைய பெண் கதவைத் திறக்க, அவருடைய கழுத்திலேயிருந்து 3 பவுன் தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அது போலவே பட்டினப்பாக்கத்தில் குடியிருக்கக்கூடிய பகுதியில், கூட்டுறவுச் சங்க சப்-ரிஜிஸ்ட்ரார் திரு. இராமசாமி என்பவருடைய வீட்டில் பூட்டை உடைத்து அவருடைய வீட்டிலே வைத்திருந்த 5 பவுன் நகையைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள். அதுபோலவே எழும்பூர் பாண்டித் தெருவில் ஆறுமுகம் என்பவர் வீட்டில் புகுந்து சுமார் 50 ஆயிரம் ரூபாயைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள். சென்னைக் கடற்கரை ரெயில்வே நிலையத்திலிருந்து தாம்பரம் செல்லும் ரெயிலில் பயணம் செய்த சாந்தகுமாரி, நிர்மலா என்ற பெண்ணிடம் ரெயிலிலேயே அவர்களைக் காயப்படுத்திவிட்டு அவர்கள் காதில் அணிந்திருந்த, மூக்கில் அணிந்திருந்த ரூபாய் 15 [illegible]ரம் மதிப்புள்ள நகைகளைக் கொள்ளை

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 8

(முற்பகல் 10-30)

இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுடைய கட்சிக்கு அண்ணா பெயரை வைத்திருக்கிறார்கள். அண்ணாவின் பெயரிலேதான் ஆட்சி நடத்துகிறோ மென்று மக்களிடத்திலே சொல்லுகிறார்கள். ஆனால், இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சிக்கு அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டு, அண்ணாவின் வழியிலே, தந்தை பெரியார் வழியிலேதான் ஆட்சி நடத்துகிறோமென்று சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றும் முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியினுடைய நிர்வாகத் திறமை யின்மையை மூடி மறைக்கத்தான் தந்தை பெரியார் பெயராலும், பாரதியார் பெயராலும், மற்றும் தமிழ் பெரியார்கள் பெயராலும் விழா எடுக்கிறார்கள். "இவர்களுக்கெல்லாம் விழா எடுக்கிறோம், உலகத் தமிழ் மாநாடு கொண்டாடு கிறோம், அதை இத்தனை லட்சம் பேர்கள் பாராட்டினார்கள், கண்டு களித்தார்கள். ஆகவே உலகத் தமிழ் மாநாடு நடத்திய நாங்கள், அண்ணாவின் பெயரை கட்சிக்கு வைத்துள்ள நாங்கள், தந்தை பெரியார், பாரதியார், காமராசர், இராஜாஜி போன்றவர்களுக்கு விழா எடுக்கும் நாங்கள் மக்களை மறந்துவிடத் தயாராக இல்லை, மக்களுக்காகத்தான் உழைக்கிறோம்" என்று வெளியிலே சொல்லி, தமிழர்களுக்காகப் பாடுபடுவதாக ஒரு பாவனையைக் காட்டிக்கொண்டு, தமிழர்களுக்குப் பெரும் துரோகம் செய்கிறார்களென்பது தான் என்னுடைய குற்றச் சாட்டாகும்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் தேர்தல் நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். படித்த இளைஞர்களுக்கெல்லாம் நாங்கள் வேலை வாய்ப்பு அளிப்போமென்று சொன்னார்கள். கடந்த 4 ஆண்டுகளில் கணக்கு எடுத்துப் பார்க்கும்போது, இன்றைக்கு வேலை தேடித்தரும் அலுவலகங்களில் வேலை வேண்டுமென்று பதிவு செய்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை பத்து மடங்காக உயர்ந்திருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருவோமென்று சொன்னார்கள். வீட்டுக்கு ஒருவருக்குக்கூட வேலைதரத் தேவையில்லை. 5,000 குடும்பங்களில் ஒருவருக்காவது வேலை கொடுக்க திட்டங்கள் எங்கே? ஏன் அதைச் செயல்படுத்தவில்லை என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வேலை வாய்ப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களின் மத்தியில் இனிமேல் அரசியல்வாதிகளை நம்பக்கூடாது என்ற எண்ணம்—இதை நான் பொதுவாகத்தான் சொல்கிறேன்—இன்றைக்கு உருவாகிவிட்டது. அண்ணா



1982 பிப்ரவரி 8] [திரு. சோ. ஆறுமுகம்]

தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி என்று குறிப்பாகச் சொல்ல வில்லை. எல்லோரும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, எதிர்க்கட்சியாக இருக்கும்போது, "நாங்கள் வந்தால் இதைச் செய்வோம், வானத்தை வில்லாக வளைப்போம், மணலைக் கயிறாகத் திரிப்போம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஆட்சிபீடத்தில் உட்கார்ந்த பிறகு, எதையும் செய்வதில்லை. எனவே "நமக்கான திட்டங்கள் உருவாகவில்லை" என்ற எண்ணம், அச்ச உணர்வு படித்த இளைஞர்கள் மத்தியிலே உருவாகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அந்த நிலை அதிகமாக உருவாக்கப் பட்டிருக்கிறது. இன்றைய தினம் அரசு வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை அதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

இன்றைக்கு விவசாயிகளின் பிரச்சினை ஒருபுறம் இருக்கிறது. ஆசிரியர்கள் பிரச்சினை, என்.ஜி.ஓ.வினர் பிரச்சினை மற்றொரு புறம் இருக்கிறது. இவர் களெல்லாம் கோரிக்கை வைக்கிறார்கள். படித்த இளைஞர்கள், வேலை வேண்டுமென்று குமுறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு காணாமல் இன்றைக்கு நம்முடைய அமைச்சர் பெருமக்கள் உல்லாசப் பயணம் செய்ய ஒரு ஹெலிகாப்டர் விமானம் அவசியம்தானா? இதுதான் அண்ணாவின் வழியா? அண்ணாவின் கொள்கையா? அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், என்ன சொன்னார்கள்? அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும்போது, "மந்திரிகள் பளபளப்பான கார்களில் வருகிறவர் கள், அதைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது" என்று சொன்னார்கள். எனவே ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், பெரிய கார் தேவையில்லை, பெரிய வீடு தேவையில்லை, சொந்த வீடு வைத்திருந்தால் அதிலேயே மந்திரிகள் குடி யிருக்க வேண்டும், வீடு இல்லாதவர்கள்தான் அரசு வாடகை வீட்டில் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். இப்போதிருக்கும் அமைச்சர்களைக் கோமான் வீட்டுப் பிள்ளைகள் என்று சொல்லவில்லை. மந்திரிகளாக வந்த பிறகு, கோமான் வீட்டுப் பிள்ளை என்று நினைத்துக்கொண்டு, ஹெலிகாப்டர் வாங்குகிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நான் குறுக்கிடக்கூடாதென்றுதான் கருதினேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வரவர்களால் பொறுக்க முடியவில்லைபோல இருக்கிறது.

யடித்துச் சென்றிருக்கிறார்கள். அதுபோலவே சாலிக் கிராமத்தைச் சேர்ந்த நவநீதகிருஷ்ணன் என்பவர் கொள்ளையடிக்கப்பட்ட சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தபோது, அவரைத் தாக்கி, கீழே தள்ளி அவருடைய வீட்டிலே யிருந்து 8 சவரன் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். தி. நகரில் சத்தியலட்சுமியும் அவருடைய தாயாரும் தி. நகர் ராகவையா ரோடில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் திடீரென்று சென்று அவர்கள் கழுத்திலேயிருந்து 8 பவுன் நகையைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அதுபோலவே வண்ணாரப்பேட்டையிலே சுமார் 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்று விட்டிருக்கிறார்கள். சென்னையை அடுத்த திருவேற்காடு பெருமாளகரம் என்ற பெருமாள்பேட்டையில் உள்ள ஒரு வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு ஒரு லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. சென்னை அசோக் நகரில் பாலகிருஷ்ணன் தெருவைச் சேர்ந்த இந்திரா என்ற பெண் தெருவில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் சென்று நகைகளைப் பறித்துச் சென்று . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மோட்டார் சைக்கிள்களையே திருடுகின்றார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** அந்த அளவுக்கு திருட்டுக் குற்றங்கள் பெருகி யிருக்கின்றன. அந்தப் பெண்ணின் கழுத்திலேயிருந்து ரூ. 15 ஆயிரம் மதிப் புள்ள தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றிருக்கிறார்கள். சென்னை பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் அருகிலே ஒரு நகைக் கடையில் நகை வாங்குவது போல நடித்து ரூ. 3 லட்சம் கொள்ளையடித்திருக்கிறார்கள். அதுபோலவே தி.நகரில் தேவகி என்பவரும் அவருடைய மகளும் ரோடில் சென்று கொண்டிருந்தபோது, வழி மறித்து, மகள் பக்கத்தில் இருக்கும்போதே, தாய் கழுத்தில் இருந்த சுமார் ரூ. 10 ஆயிரம் மதிப்புள்ள தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். அதைப்போலவே சென்னை பக்கத்தில் உள்ள மல்லேசுவரர் ராமசாமி கோயில் கதவை உடைத்து அதிலிருந்து ரூ. 10 லட்சம் மதிப்புள்ள கோயில் நகைகளைக் களவாடிச் சென்றிருக்கிறார்கள். கடந்த சுமார் இரண்டு மாதத்திற்குள்ளேயே சென்னை நகரிலே மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு திருட்டு, வழிப்பறி, கொள்ளை இவைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. காவல் துறையைக் கையிலே வைத்துக்கொண்டு, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பாதுகாப்பை என்னால் கொடுக்க முடியும் என்று சொன்ன முதலமைச்சர் அவர்கள் வாழக்கூடிய சென்னை நகரிலேயே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. இந்த மாதிரி குற்றங்கள் வளருவதற்கு இதிலே ஆளும் கட்சியினர் தலையிடுவதுதான்



காரணமாக இருக்குமோ என்ற வகையிலே இன்றைக்கு தமிழ்நாட்டிலே நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோலவே, வழிப்பறிக் கொள்ளைகள் வட நாட்டிலேதான் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் செய்தித்தாள்களிலே பார்க் கிறோம். இன்றைக்கு நம் தமிழகத்திலேயும் அது நடக்கிறது. காட்பாடி-வேலூருக்கு இடையில், பஸ் போகும்போது வழிமறிக்கப்பட்டு கொள்ளை யடிக்கின்ற சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பெங்களூருக்கும், வேலூருக்கும் இடையில் ஓசூர்-கிருஷ்ணகிரிக்குமிடையில் ஓடுகின்றபோது பஸ்லை வழி மறித்து கொள்ளையடித்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வழிப்பறிக் கொள்ளைகள் நம்முடைய தமிழகத்திலே சமீபகாலத்தில் நடைபெறுவதற்கு யார் பொறுப்பு என்று பார்த்தால், நான் சொல்வேன், இதற்கு ஆட்சியாளர்கள் தான பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆளும் கட்சியினர் கொள்ளை யடித்தார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் சட்டத்தைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர்கள் சமீபகாலத்தில் ஏன் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று பார்க்க வேண்டும். அதற்கு நம்முடைய காவல் துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏன் உத்தரவிடவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டு. ஆகவே சமீபத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் தமிழகத்திலே மிக அதிகமாக நடைபெறுகின்றன என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த ஆட்சியில் பொதுமக்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்த அச்சப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தாய்க்குலம் என்பதைப்பற்றிப் பேசினால் மட்டும் போதாது. இன்றைக்கு அந்தத் தாய்க்குலம் தனியாகச் செல்ல, தனியாக வீட்டிலே இருக்க அச்சப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. அதைத் தடுக்கின்ற முயற்சியிலே ஆட்சியிலே இருப்பவர்கள் எடுக்கின்ற நடவடிக்கை என்னவென்பது ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப் படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொள்ளவே எங்களுக்கு மனமில்லை என்று சொல்கின்றார்கள். நாங்கள் அதிலே ஒன்றும் கஞ்சப்புத்திக்காரர்கள் அல்ல. தாராளமாக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம். ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைமுறையில் இருப்பதைத் தடுக்க வேண்டும். அதற்கு வழி செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

[1982 பிப்ரவரி 8

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** முழு உண்மை தெரியாமல் பேசிக்கொண்டிருப்பதால், அதற்கு வேறு காரணம் என்று நினைத்து பேச வாய்ப்பு இருக்குமே என்றுதான் குறுக்கிடுகிறேன். எங்களுடைய அரசு உத்தரவிட்டிருப்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மீனவர்கள் போன்றவர்கள் கடலிலே தொழில் காரணமாகச் சென்று, அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் போது அவர்களைக் காப்பாற்றவும், அது போன்ற நேரங்களில் பயன்படுத்தத் தான் முன்னுரிமை என்பதும், எடுத்ததற்கெல்லாம் அதிலே பயணம் செய்யக் கூடாதென்பதும், தவிர்க்க முடியாத நேரங்களில் மக்களைச் சந்திக்க வேண்டும், மக்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாவிட்டாலும் அவர்களுடைய நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக தரையிலே வண்டியிலே போக முடியாத நிலை இருந்தால், அப்போது மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய உத்தரவாகும் என்பதை வெளியிட வாய்ப்பு தந்ததற்காக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தவிர்க்க முடியாத சில நேரங்களில் வேண்டுமானால், இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம், எடுத்ததற்கெல்லாம் இதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பது எங்களுடைய நோக்கம் என்று சொல்லும்போது, எல்லாம் அவசியமான காரியமாகத்தான் இருக்கும் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. எது எது அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும். எங்களைப் பொறுத்தவரையில், வாடகைக்கு பெங்களூரிலேயிருந்து கொண்டு வந்து பிரதம அமைச்சர் வந்த போது அல்லது உள்துறை அமைச்சர் வந்தபோது அவசியம் ஏற்படுகிறதே அதுபோன்ற நிலைமைகளில் மட்டும்தான், புயல் போன்ற நிலைமைகளில் மட்டும்தான் இது பயன்படுத்தப்படும். அதுதான் அவசியம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** நான் நன்றாக அறிந்துதான் கருத்தைச் சொல்கிறேன். இது பெரும்பாலும் அமைச்சர்கள் பயன்படுத்தும் வகையிலேதான் அமையும். அதை அவசியமான நேரங்களில் மட்டும்தான் பயன்படுத்திக் கொள்வோமென்று முதலமைச்சரவர்கள் எடுத்துக்கொண்டால், நான் குறுக்கிட விரும்பவில்லை.



1982 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே குறுக்கிட்டுச் சொல்வதற்கு, கருத்தைச் சொல்லுவதற்கு ஒருவருக்கு உரிமை இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் குறுக்கிடலாம். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறுக்கு வழியில் போக வேண்டாம். குறுக்கிடலாம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** நான் என்றைக்கும் நேர் வழியில் செல்கிறவன் தான். என்றைக்கும் குறுக்கு வழியைப் பயன்படுத்துவதில் ஈடுபடுவதில்லை. வேண்டுமென்றால் அரசியல் காரணங்களுக்காக ஆறுமுகம் குறுக்கு வழியில் செல்கிறான் என்று சொல்லலாம். என்னுடைய பகுதியில் உள்ள மக்களுக்கும், ஆளும் கட்சியில் உள்ள சில நண்பர்களுக்கும் ஆறுமுகம் குறுக்கு வழியில் செல்ல மாட்டான் என்பது தெரியும். அதை அவர்கள் மனது சொல்லுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்தது, முதல் அமைச்சரவர்களுக்குத் தெரியும். அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார்கள். அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பிறகு, அமெரிக்காவிலே பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், இங்கே தமிழகத்திற்கும் கொடுத்த செய்தி 'அவர் குளிர் சாதன அறையிலேதான் இருக்க வேண்டும். வெப்பம் அவருடைய உடலுக்கு ஒத்து வராது' என்பதுதான். எனவே அப்போது வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் வீட்டைக் காலி செய்து, குளிர் சாதன இயந்திரங்களை வைத்து, அண்ணா அவர்கள் அங்கே தங்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "ஒரு அண்ணா போனால் பரவாயில்லை, ஏழைகளுக்காகப் பாடுபடுகிறோம். ஏழைகளுக் காகத்தான் இந்த இயக்கம் என்று நான் சொன்னேன், எனவே என்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. நேராக நுங்கம்பாக்கத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று விமான நிலையத்தில் சொல்லி, பேரறிஞர் அண்ணா அவர்கள் அவருடைய இல்லத்திற்குச் சென்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லும் நாம், அண்ணா அவர்கள் எப்படிப்பட்ட உள்ளத்தோடு நாட்டு மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று எண்ணினார் என்பதை மறந்து விட்டு நாம் செயல்படக் கூடாதென்பதற்காகத்தான் இவ்வளவையும் சுட்டிக் காட்டுகிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 8

ஊழலே இல்லாமல் ஆட்சி நடத்துவோம் என்று சொல்லி, ஆட்சிப் பொறுப்பை 1977-லே ஏற்றுக்கொண்டது இந்த அரசு. அதற்குப் பின்னாலே தொடர்ந்து 1980-லே ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்திலும் அதைத்தான்

(முற்பகல் 10—40)

சொன்னது. ஆனால், சமீப காலமாக நிதி நிலை அறிக்கையானாலும், ஆளுநர் உரையானாலும் ஊழல் இல்லாத ஆட்சியை நடத்துகிறோம் என்று சொல்கின்ற வாசகத்தை எடுத்துவிட்டார்கள். காரணம் இந்த அரசாங்கமே ஊழல் நடைபெறுவதை ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்குள்ள சந்தேகம் எல்லாம். நாட்டிலே இன்றைக்கு ஊழல் இல்லை என்பதை ஆளும் கட்சியினர் நிரூபிக்க முன்வருவார்களா ? எங்கோ அங்கொன்றும் இங்கொன்றும் நடப்பதற்கெல்லாம் நாங்கள் பொறுப்பா ? ஆதாரங்கள் இருந்தால் தாருங்கள், நடவடிக்கை எடுக்கிறோம், தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுப்போம் என்று முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு அரசு நிர்வாக இயந்திரத்தில் அது தலைமைச் செயலகத்திலிருந்து மாவட்ட அளவு வரை, அது காவல் துறையானாலும் சரி அல்லது வேறு எந்தத் துறையானாலும் சரி, ஊழல் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. அதைத் தடுக்க ஆட்சியாளர்களுக்கு அக்கறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்றால், நாங்கள் ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட ஊழல் வளர்ச்சி சம்பவங்கள் தமிழ் நாட்டிலே சரிதானா ? இத்தனை அமைச்சர்கள் இருந்தும் "ஊழல் இல்லாமல் நாங்கள் ஆட்சி நடத்துவோம் " என்று சொன்ன இந்தக் கட்சி அதற்கான முயற்சியில் ஏன் ஈடுபடவில்லை? இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம் பற்றியும் ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். அது நல்ல திட்டம்தான்.

மத்திய சர்க்கார் கொள்கையாக அறிவித்து நிதி கொடுத்து அந்த நிதியை நேரத்திற்கு நேரம் ஒதுக்குகிறார்கள். பஞ்சாயத்து நிதி அல்லது அரசாங்கத்தின் நிதி . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். தன்னிறைவுத் திட்டம் தமிழக அரசால் கொண்டுவரப்பட்டது என்பதை உறுப்பினர் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.



1982 பிப்ரவரி 8]

திரு. சோ. ஆறுமுகம் : தேசிய வேலைவாய்ப்புத் திட்டமும், வேலைக்கு உணவுத் திட்டமும் இதிலேதான் வருகின்றன என்று நினைக்கிறேன். இந்தத் திட்டப் பணிகள் எல்லாம் இன்றைக்கு நிறைவேறுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவைகள் எல்லாம் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லாமலிருக்க முடியாது. முன்பெல்லாம் 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் என்றால், டெண்டர் விட்டு யார் குறைந்த தொகையில வேலையை முடிப்பதாகச் சொல்கிறார்களோ அவர்களிடம்தான் வேலை ஒப்படைக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள வேலைகளைக் கூட அதாவது ரோடுகள் போடுதல், பாலங்கள் கட்டுதல் போன்ற வேலைகளுக்குக் கூட நியமனம் மூலம் வேலை தரப்படுகிறது. நியமனம் வாயிலாக வேலை பெறக்கூடியவர்கள் ஏதாவது சொத்துச் சான்றிதழ்களை ஒப்படைத்தவர்கள் அல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 25 நிமிடம் பேசி விட்டார்கள் . . .

திரு. சோ. ஆறுமுகம் : நேற்றைக்கு 50 நிமிடம் வரை பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லோரும் பேச வேண்டியிருக்கிறது. நாளைக்கு ஒரு நாள்தான் இருக்கிறது. ஒவ்வொருவரும் கட்சித் தலைவர்களைப் போல பேசினால், எப்படி அவையை நடத்த முடியும் ?

திரு. சோ. ஆறுமுகம் : நியமன செய்யப்படுகிறவர்களே 'சால்வன்சி சர்ட்டிபிகேட் ' போன்றவைகளைப் பெற்றிருக்கிறார்களா என்றால், இல்லை, ஒரு வீடு வைத்துக் கொண்டிருப்பவர்கள் கூட சாதாரணமாக கான்டிராக்ட் எடுக்கிறார்கள். சாதாரண ஏழைகள் கான்டிராக்ட் எடுக்கக் கூடாது என்ற கொள்கையுடையவனல்ல நான். அவர்களும் எடுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு அவர்கள் எடுக்கின்ற வேலையை எப்படிச் செய்கிறார்கள் என்பது பற்றி, உள்ளபடியே வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன், நியமனத்தின் மூலம் வேலைகளை எடுத்து, பெர்மிட் சிமென்டை வாங்கி அதனை வெளியில் விற்று அந்தப் பணத்தைக் கொண்டு கட்டிடங்கள் அல்லது பாலங்களைக் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் ஆளும் கட்சியினுடைய கான்டிராக்டர்களுடைய ஆதிக்கம் ஏற்பட்டு, இன்றைக்கு நூற்றுக்கு 50 சதவிகித வேலைகள் கூட சரியான முறையில் உறுதியாகச் செய்யப்படவில்லை. நாட்டிலே இன்றைக்கு இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 பிப்ரவரி 8

அடுத்து, மதுவிலக்கைப் பொறுத்தவரையில், இந்த அரசு அதைத் தளர்த்தி விட்டது. தளர்த்தி விட்ட பிறகு, அதிலே நடைபெறக் கூடிய சம்பவங்களையெல்லாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு மதுவிலக்கைத் தளர்த்திய பிறகு அரசாங்கம் சொன்ன அளவுக்கு வருமானம் வருமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. இன்றைக்கு சாராயக் கடைகளை லட்சக்கணக்கில் ஏலத்தில் எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய விற்பனைக்கு எதிராக நாட்டிலே கள்ளச் சாராய விற்பனை அதிகமாக நடைபெறுகிற காரணத்தால், கட்டுப்படியாகவில்லை. கள்ளச் சாராய விற்பனைக்குக் காவல் துறை முழு ஒத்துழைப்பையும் கொடுக்கிறது என்று நோட்டீஸ் போடுகிறார்கள். ஓமலூரிலுள்ள ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அங்கே ஒரு நோட்டீஸை சாராயக் கடையை ஏலம் எடுத்தவர்கள் போட்டிருக்கிறார்கள். 25 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு, எங்களுடைய சாராயக் கடைக்கு விரோதமாக கள்ளச் சாராயக் கடையை நடத்த அனுமதித்திருக்கிறார்கள். நாங்கள் கிஸ்தியைக் கட்ட முடியாது என்று நோட்டீஸ் போடுகிறார்கள். இந்த அளவுக்கு இன்றைக்குக் கள்ளச் சாராயம்தான் அதிகமாக விற்பனையாகிறது. தனியாக கள்ளச் சாராயக் கடைகளை நடத்துகிறார்கள். அரசாங்க ஸ்பிரிட்டை வாங்கும் உரிமையைப் பெற்று கடைகளுக்குக் கொடுக்கிறவர்கள் அதைத் தரமான முறையில் தயாரித்துக் கொடுப்பதில்லை. அரசே தரமான முறையில் சாராயத்தைத் தயாரித்துக் கொடுப்பதில்லை. தண்ணீர் சரியான முறையில் கலக்குதல், இவ்வளவு நேரம் வைத்திருக்க வேண்டும் போன்ற முறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காத காரணத்தால், அதைக் குடிக்கின்ற பொதுமக்களுக்கு குடித்த உடனே குடல் எல்லாம் எரிந்து போகிறது. ஆகவே அதைச் சாப்பிட மாட்டோம் என்று குடித்துப் பழகியவர்கள் சொல்கிறார்கள். ஆகவே கள்ளச் சாராயம் கிடைக்கிற இடத்திற்குச் சென்றுவிடுகிறார்கள்.

அடுத்து, சிவில் சப்ளையை எடுத்துக் கொண்டால் 2 நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நடைபெற்றதை நாம் அறிவோம். தனியாக ரைஸ் மில் வைத்திருப்பவர்கள் 10 ஆயிரம் ரூபாய் சிவில் சப்ளையில் கட்டினால் போதும். அவர்களுக்குச் சொந்தமாக ரைஸ் மில் இருக்க வேண்டாம். வாடகைக்குக் கட்டிடத்தை எடுத்திருந்து 10 ஆயிரம் ரூபாய் கட்டினால், அவர்களிடம் லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நெல்லைக் கொடுத்து அரைத்துக் கொடுக்க ஒப்படைக்கிறார்கள். அப்படி நெல்லை அரிசியாக ஆக்கிக் கொடுக்க ஒரு மூட்டைக்கு இவ்வளவு என்று கூலி இருக்கிறது. ஆத்தூரில் இப்படி ஒப்படைக்கப்பட்ட இடத்தில் ஒருவர் 7 அல்லது 8 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல்லை



1982 பிப்ரவரி 8] [திரு. சோ. ஆறுமுகம்]

விற்று விட்டு, தலைமறைவாகிவிட்டார். நாட்டிலே இப்படிப்பட்ட ஊழல்கள் மலிந்து வருகின்றன. இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : கடைசியாக என்று சொல்லி முடிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

(உடனே உறுப்பினர் இருக்கையில் அமர்ந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். அரை மணி நேரத்திற்கு மேல் பேசி 35 நிமிடத்திற்கு மேலும் பேசிக் கொண்டேயிருந்தால், இங்கே உட்கார்ந்து நான் எப்படி அவையை நடத்துவது ? அது முறையல்ல. உறுப்பினர் இங்கே உட்கார்ந்திருந்தால்தான், அவையை எப்படி நடத்துவது என்பது தெரியும். ஒவ்வொருவரும் கட்சித் தலைவர்களைப் போல் பேசுவது கூடாது. நான் மணி அடித்ததற்காக உறுப்பினர் கோபமாக உட்கார வேண்டாம்.

**திரு. சோ. ஆறுமுகம்** : தொடர்ந்து ஆளுநர் உரையின் மீதான விவாதத்திலே ஒவ்வொரு உறுப்பினரும் கலந்துகொண்டு எத்தனை மணி பேச எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து இரண்டு பேர்தான் பேசியிருக்கிறோம். இரண்டு நாட்கள் நாங்கள் பேசவில்லை. நேற்றைக்குக் கூட நான் பேசலாமென்று இருக்கின்ற நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மூத்த அவர்கள் பேசுவதாக ஆளும் கட்சி கொறடா சொன்னதும், நான் பெருந் தன்மையுடன் இருந்துவிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அதற்காக உறுப்பினர் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம். அடுத்து, திருமதி தாரா செரியன்.

Thirumathi TARA CHERIAN : Hon. Chairman, Sir.........

**திரு. சோ. ஆறுமுகம்** : எங்களுடைய உரிமையைப் பறிக்கக்கூடிய முறையிலேயும், எங்களுடைய கருத்துக்களை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தாலேயும் நான் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(உறுப்பினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உட்காருங்கள் என்று நான் சொல்லவில்லை. உறுப்பினர் அவர்களாகவே உட்கார்ந்தார்கள்.

(முற்பகல் 10.50)

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, I thank you for the opportunity that you have given me for taking part in the deliberations over the Governor's Address to the joint session of the Legislature on the 1st of February. During the interval between the last session and this session, I know that our Hon. Chairman had been hospitalised and had not been well and I am glad to note that he has fully recovered and is amongst us. I wish him good health and long life.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

The Governor's Address has expressed the hope that the deliberations of this House will be useful and constructive and contribute to the progress of the State. I am sure that 'Ratha Pasam', 'Pangali Pasam' and 'Sagothara Pasam' will keep flowing in our deliberations.

I am happy to find that essential commodities are being distributed under the public distribution system but I cannot say that the benefit is extended to all the people in the State. I would like the Government to see that there are fair price shops in all places where at least rice will be given to all the people who are in need. If the commodities go to the shops too late, they will go only into the black market.

I would request you to give me 15 minutes and if I overstep my limit in time, you may warn me through the sounding of the bell.

There are many laudable schemes to benefit the Adi Dravidar and Scheduled Caste and Scheduled Tribe people. The general standard of living which is at a low ebb should be improved. Unless there is improvement in moral standards at all levels, there will be corruption and it will have to be rooted out. We have to bring to the notice of the Government the malpractices so that they may be removed. So far as developmental works





are concerned, instead of supervising them from a distant office they must go to the actual places where they are being implemented and they should see that actual work is carried on.

Many departments remain in water-tight compartments For instance, there is no co-ordination or co-operation between the Public Works, Highways, Electricity and Telephones Departments. Consequently, the roads which have been repaired at a very high cost are dug up by other departments and are made not usable, particularly by the Transport Department vehicles. Therefore, what I am requesting is that the Government should see that there is co-ordination between the various departments in their activities.

It is mentioned that in about 219 blocks, assets worth Rs. 130 crores will be created under the self-sufficiency scheme. Unless the scheme is extended to all the blocks, we will not be able to see the benefit of the scheme. We have got to learn something from States like Andhra Pradesh and Karnataka where they have been able to invite multi-nationals and industrialists from other States. We will have to sell our ideas and give them all facilities so that we may have more industries coming up in our own State

Sir, I now come to my pet subject and I think that there is some rationale in my bringing it before the House. The Tamil Nadu State Social Welfare Board has now come into being, with the concurrence of the Hon. the Chief Minister as well as that of the Central Social Welfare Board and with the acceptance of the Prime Minister. For two years, we did not have a Chairman for the Board. I am thankful to the Hon. the Chief Minister for having reposed confidence in me and for having asked me to take up that post. It has also been accepted by the Government of India. The efforts of the Board are a drop in the ocean when compared to all the social welfare schemes of the Government. But, if co-operation is forthcoming from the Government and the people. I feel that we will be able to carry out many socio-economic programmes, particularly for the benefit of the backward people, the women and children, the orphans, destitutes, the people who are maimed, etc. We have

some wonderful schemes which the Government Department may not be undertaking. But, at the same time, I want to assure all that the Board is not trying to overlap the efforts of the Government. Still, with the co-operation of some welfare organisations and some voluntary organisations, we can draw up a beautiful programme so that the people who have not been reached hitherto may be reached and some socio-economic programmes for their benefit may be implemented. I hope I will be able to give a small Note to all my hon. colleagues here in this connection, shortly. I request the help and co-operation of my hon. colleagues in this direction.

Sir, I think that the Hon. the Minister for Labour is having the feeling that I am completely ignorant of the labour movement and of what the Tamil Nadu Labour Policy stands for. I would like to say that I am genuinely interested in it and I have gone and seen some of the schemes aimed at the welfare of labour. But, there is one glaring factor in this regard and it is child labour. It is stated that out of the 52 billion children who are working all over the world, 38 billion working children are in India. The statistics given by the Government of India mention this fact. Therefore, it is very imperative that something should be done about it. I am glad that when an accident took place at Sivakasi, the Hon. the Chief Minister promised that he would do his best for child labour and would try to give them education. But, all the schemes that the Government formulate cannot be completely wholesome and cannot be implemented in full. There are many organisations which implement such schemes. For example, the Catholic Centre, with the co-operation of some other organisations, has put up a big dormitory for children who do not have homes of their own. Now, even very small children are working in the tinkering shops and petty shops and they also become domestic servants. They are exploited very much. A family can get a child labourer at Rs. 5 or Rs. 10 per month plus a meagre quantity of food. Therefore, I do hope that the Hon. the Minister for Social Welfare and the Government will take note of the wonderful scheme launched by the Catholic Centre, in collaboration with other organisations, whereby they have put up a beatiful dormitory for such children. They also give them



non-formal education and teach them health, hygiene and morality. It is a very good socio-economic programme and I am sure that it will be emulated.

Talking about the policy on education, I must say that something more has to be done. We have done a lot, compared to the other States. Our educational system is the best in the whole world. But, what is most important is to consider how to make education more purposeful, what role the educationists should play and what direction the educational process should take so as to make our education to be in tune with the needs of the fast-changing world. These are the things that have to be looked into. In this House, many hon. Members mention about the need for higher salaries to the teachers. Of course, it is very essential to pay the teachers adequate salaries. But, there are much more important things in the educational forum than mere salaries and other things. In India, we have rightly considered that education is the basic thing needed to harness the tremendous amount of resources for developmental purposes. But, what we now see is that the rise in demand for education has worsened the problem. A panel study of the Planning Commission has made it very clear that there should be a restraint on the proliferation of higher educational institutions. If some practical training aimed at gainful employment is given to the students at the plus two stage, it will solve a lot of problems. It is very essential that our education should be linked with employment. Education must make the people conscious of the ills of pollution like air pollution and water pollution. Now this is not taken care of. We do not impart education about them from the beginning.

(முற்பகல் 11.00)

I hope the Government will not misunderstand me. They have started three institutions, three Universities within a short title. They are going to start one at Karaikudi which is said to be an all-women University. I am a woman and I know

how necessary these things are. We are trying to do what S.N.D.P. University in Bombay started doing 30 years ago. Do we need a purely woman University now? Do we need so many Universities now? There must be real necessity for starting new Universities. The University Grants Commission has been urging against the mushroom growth of Universities. The Government should adopt a right approach in the matter because many things will have to be done due to political pulls and pressure and the regional claims and aspirations have been strong enough. While I appreciate the starting of these Universities, the Government will have to cry a halt to the starting of any more new Universities, so that we may strengthen all the existing Universities and new ones may be opened later. The Madras University has a wonderful stature and it is going to celebrate its 125th anniversary. I hope the Tamil Nadu Government will come forward to give substantial help and encourage people to institute more Chairs in fields where there are none in existence. We require intellectuals and we are asking for more Professors.

I hope I will not be misunderstood when I say something in favour of the English language. English is the only force which preserves the integrity of the country. The people in various States in the country have various mother-tongues and, in fact English is readily available for us for our mutual benefit. Now we are attempting to boost the regional languages to a certain extent. There is no need to be afraid of such activities. In Tamil Nadu Tamil language will have its due place At the same time, English should be given its due importance. Otherwise, the people of Tamil Nadu alone will suffer in the long run. They will not be able to get their quota in all-India Services and their positions in World bodies like the United Nations.

The International Year of the Disabled has been very beautifully conducted in our State and I must give credit to the Hon. the Chief Minister for the amount of interest that he [illegible] in it. During the International Year of the Handicapped, [illegible]y assurances have been given and many schemes have been drawn up for the benefit of the blind, etc.



Many hon. Members who spoke here were keen about the nationalisation of the educational institutions. But, let us remember that, as things stand today, there are more than 52 per cent of children whose parents are poor and, therefore, could not send their children to schools. Something has to be done about that before we think of taking over all the schools. Now, private agencies are running many nursery schools. I hope that th[illegible]n. the Minister for Education will not mind my saying tha[illegible] aspect has been very badly neglected. All of a sudden, he wants to start 50,000 nursery schools. But, it is not so easy a task. A man has to be given a certain amount of freedom in deciding to which school he should send his child and which medium of instruction that child should follow. In the field of education, there are many voluntary organisations which are doing some dedicated work. The Government should trust them and give them the required money. If those organisations do something wrong, the Government can always bring them to book. But, what I want to say is this. While the Government encourage new institutions to come up, let not the ordinary people be deprived of the opportunities that now exist if they want to send their children to private schools. Last year, during the Budget discussion, the Hon. the Education Minister mentioned that the Constitution had provided for certain safeguards to the minority institutions. Whether the Constitutional provision is there or not, let us understand the rationale behind the functioning of these organisations. It is only those who talk something against English who are the first persons to send their children to convents and other places. All that I want to say is that our educational system has got to be revitalised.

Regarding the educational institutions for the physically handicapped, I have a plea to make. In spite of all that the Government have done for such institutions, the names given to those institutions have not been changed. Now, they are known as 'Deaf School' and 'Dumb School' which they are not. They should be named as 'School for the Deaf', 'School for the Dumb' etc. If we consider the work turned out by such a school, the name that is given is a misnomer. Therefore, I request the Government to give t[illegible] schools proper names and to give them all encouragement [illegible] all the schemes for employment, etc. drawn up by

the Government are directed only towards a particular type of physically handicapped persons like the blind, etc. I am sorry to say that the most backward among the physically handicapped persons, in the matter of concessions, etc., are the mentally retarded. Whether it is at the Centre or in the State the previous Governments have not bestowed adequate attention on the mentally retarded, the spastic patients, persons who suffer from cerebral palsy, etc. It seems that 3 per cent of jobs in Government, local bodies, etc. are to be reserved for the physically handicapped. But what these mentally retarded people need is a shelter and also love and affection. The policy of starting work at 10 O' clock in the morning and putting down the tools at 5 O' clock in the evening, which is normally followed in the Government institutions will not be helpful in the case of the mentally retarded people. A mentally retarded child needs much love and care. An institution in which I am interested has been doing this service and it has helped thousands of mentally retarded children. But, nobody has thought about this institution. Sir, the Hon. the Health Minister is here. This morning, a question came up about the disease of polio in its epidemic or endemic form. But nobody asked how many poli victims were alive and how many victims were maimed for life. A question by the hon. Member Thiru A. R. Damodaran also came up regarding physio-therapy centres in the Medical Colleges. Sir, we have many railway accidents and road accidents.

THE HON. DR. H. V. HANDE: For the benefit of the hon. Member, I would like to state one thing. As far as the spastics are concerned, we have launched the Tamil Nadu Spastic Society. It is a wing of the All-India Spastic Society. With the help of the Governor's wife and with the blessings of the Hon. the Chief Minister, we are shortly getting a place and also and it will start functioning.

THIRUMATHI TARA CHERIAN: Sir, I am glad to hear it. I know a little about the things that are being done now. In Tamil Nadu, there have been many Ministries. Now at least they have woken up and the Government will get full support from us.





What about the people who are affliated with polio? There are victims of polio who have become invalid and they should be helped in all possible ways. The hon. Member Thiru Damodaran also mentioned it last year. There are a number of cases in which the polio victims have not been helped.

THE HON. DR. H. V. HANDE: As far as physio-therapy is concerned, without any supplementaries being raised, I would like to tell the hon. Member who is also an important person in the social welfare section that our K. K. Nagar Hospital is the best Hospital and has been appreciated by all not only from Tamil Nadu but by persons coming from other States also. This particular institution is very much appreciated (a) for the work done and (b) for the physio-therapists turned out by it not only for this State but for other States also.

THIRUMATHI TARA CHERIAN: This is very important but it will not solve our problem. Along with the training for physio-therapists, the opening of clinics is also necessary.

Without taking more time of the House, I want to say one thing. So much is being being for the downtrodden people. Even in the Governor's Address, there is mention about the many things that are being done for the welfare of the Adi-Dravidars. I feel that the schemes should be scrutinised and the money should be spent usefully. I know there is a certain provision in the Constitution enabling them to get some benefits. But the Constitution has been amended several times. The list of Backward Communities is becoming longer and longer. I will give one example. I had a brother who was being pampered by my mother till she was 12 years old, saying

" செத்துப்போன பிள்ளை உயிரோடு வந்தது "

Then it was brought to his notice that he had become 12 years old and then he became completely free All that I am asking our Government to do is to say that all the privileges granted to them become time-barred. Are we going to perpetuate the privileges and concessions? Are we going to keep them as Scheduled Castes for ever? Many persons belonging to the Backward Community have

come forward and have come up in life. Are they going to claim that they still remain backward? Among the so-called Forward Communities, there are Brahmins and Christians and some of them, for generations, have not seen schools and colleges, because they have not been afforded the opportunities. I feel the time has come to re-consider the entire matter. Our Hon. Chief Minister, when he came to office, boldly announced that the economic backwardness of the people would be taken into consideration and I hope he will try to implement his idea. I find a statement that widows will be helped and I hope no discrimination will be made between them. Widows are widows, and poor women are poor women, whatever may be their communities.

One more thing before I finish. An hon. Member was talking about the atrocities that had been happening—violence, robbery, etc. The blame should be put on the women also who wear such jewellery.

வயிற்றுக்கே சாப்பிட முடியாத மனிதன் கட்டாயம் பிடித்து இழுக்க வேண்டுமென்று நினைப்பான். ஆகவே கொஞ்சமாக நகையைப் போட்டுக் கொள்வது நன்மையாக இருக்கும்.

A Major belonging to Madras was killed for no fault of his, during a robbery. Such things are happening in many places. In a democratic form of Government the Police are under the control of the ruling party. The Police are also afraid of any possible charge against them for any excesses.

Many things are taking place and very often the Police also are blamed for certain things. But, I want to mention only one point. If a man is taking a drink on te terrace of his uat or in his backyard, there is nothing that anybody could do. Therefore, what is important is that the people should develop a civic sense. They should help the Government in all their efforts to make the people reach a better position.

Thank you.





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு முதலிலே வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். தன்னுடைய கருத்தை மட்டும் பார்க்காமல் காலத்தையும் பார்த்துப் பேசுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

* திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, தாங்கள் அனுமதித்த வகையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே, பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 136 கோடி ரூபாய் அளவில் நிலையான சொத்துக் களை ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டி ருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 25,000 ஆதி திராவிடர் களுக்கான வீடுகளைக் கட்டும் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். 2,717 பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தகைய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். கிராமங்களை முன்னேறச் செய்வது ஆரம்ப உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, இவைகளுக்கெல்லாம் ஒதுக்கியிருக்கக்கூடிய நிலை யைப் பார்க்கும்போது, ஆரம்பக் கல்விக்குச் சரியாக நிதி ஒதுக்கப்படாமல் இருக்கிறது, ஆரம்பக் கல்வி சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சில மாநிலங்களில் தங்களுடைய மொத்த வருமானத்தில் 37 சதவீதம், 40 சதவீதம், 32 சதவீதம், 36 சதவீதம் என்று கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில், இப்போது உயர்ந்திருக்கக் கூடிய வருமானத்தின் அடிப்படையிலே பார்க்கும்போது, இது 20 சதவீதமாகக் குறைந்திருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைச்சரவை மற்ற மாநிலங் களுடன் ஒப்பிட்டுப் பார்த்து கல்விக்காக அதிகமான நிதியை ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆசிரியர்களைப் போதுமான அளவிற்குப் போடவில்லையென்றாலும், கொஞ்சம் ஆசிரியர்களையாவது போட ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், ஆரம்பக் கல்வியிலே இன்றைக்குப் புகுத்த வேண்டிய புதிய போதனா முறைக்கான கருவிகள் இல்லை. மேல் நாடுகளுக்கு அதிகாரிகளும், அமைச்சர்களும் சென்று வருகிறார்கள். கல்வி போதனை முறை மேலை நாடுகளில் எப்படி இருக்கிறது என்று பார்க்கிறபோது

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் டேப் ரிக்கார்டர், தொலைகாட்சிப் பெட்டி, சினிமா படங்கள், போதுமான விஞ்ஞானக் கருவிகள் ஆகியவை எல்லாம் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் விஞ்ஞானப் பாடங்களுக்குக் கூட போதுமான கருவி இல்லாமல், கரும்பலகையில் படம் போட்டு, அதைப் போலவே மாணவனும் படம் போட்டு, அதையே திரும்பவும் தேர்வில் எழுத வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் மேல் நாடுகளைப் போல் பல்கலைக் கழகக் கல்வியில் போட்டியிட வேண்டுமென்று முயற்சி செய்கிறோம். அதற்காக அதிகமான நிதியை ஒதுக்குகிறோம். ஆனால் ஆரம்பக் கல்வியைச் சீர் செய்யாமல் உயர்நிலைக் கல்வியையும், பல்கலைக் கல்வியையும் சீர் செய்ய அதிகப் பணத்தைச் செலவு செய்தாலும். நிலைமை சீராகுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே ஆரம்பக் கல்வியில் கொஞ்சம் கண்ணுற்று அதிக நிதியை ஒதுக்கி அதற்குப் பிறகு உயர்நிலைக் கல்வியையும், அதற்குப் பிறகு மேல்நிலைக் கல்வியையும், அதற்குப் பிறகு கல்லூரிக் கல்வியையும், அதற்குப் பிறகு பல்கலைக் கழகத்தையும் கவனித்து இந்த முறையிலே நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை இப்போது ஏன் தெரிவிக்கிறேன் என்றால், இப்போது தான் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை மறந்துவிடாமல் ஆரம்பக் கல்விக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலே இருக்கக் கூடிய சூழ்நிலையைப் பார்த்தால், எல்லா இடங்களிலும் இலஞ்சம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நிர்வாக இயந்திரத்திலே இருப்பவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். காசு கொடுக்காமல் எதுவுமே நடக்கவில்லை என்பதுதான் பிரத்தியட்சமான நிலை. மாண்புமிகு அமைச்சர்களைக் குறை சொல்ல வேண்டுமென்று, கருதி நான் இதைச் சொல்லவில்லை. மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய சிக்கலை, நடைமுறை அனுபவத்தை இந்த அவையில் வைக்க வேண்டியது என்னுடைய

(முற்பகல் 11-20)

கடமை. நியாயம் செய்வது அமைச்சர்கள் கடமை. பாமர மக்களுக்குத்தான் இப்படி நடக்கிறது என்று கருதாதீர்கள். படித்த ஆசிரியப் பெருமக்களுக்குக் கூட ஏதாவது காரியங்கள் நடக்க வேண்டுமானால், லஞ்சக் குறைபாடுகள் துறைகளிலே இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அவையிலே கூட காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. கிரிமினல் வழக்குகள்



1982 பிப்ரவரி 8] [திரு. செ. முத்துசாமி]

டெல்லியிலே, உத்தரப் பிரதேசத்திலே எல்லாம் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அதுபோலவே நமது மாநிலத்திலும் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்போது நமது மாநிலத்தில் மற்ற மாநிலங்களைவிட குறைவு என்று ஆளும் கட்சியினர் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் வழக்குகள் குறைவாக இருக்கின்றன என்று ஒப்புவமை செய்வது சரியல்ல. நான் இதிலே சொல்லிக்கொள்வதெல்லாம் இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய மக்களுக்குச் சரியான பாதுகாப்பைத்தர வேண்டும் என்பது தான். மக்களுக்கு இருக்கக்கூடிய கவலையும் அதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இரண்டு வழக்குகள் என்றால், இங்கே ஒரு வழக்கு என்று சொல்வது சரியானது என்று சொல்ல முடியாது. இதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், ஒருவன் கையை ஒருவன் வெட்டிவிட்டான். இன்னொருவன் மற்றவன் பல்லைத் தட்டிவிட்டான். ஏனய்யா பல்லைத் தட்டிவிட்டாயே என்று கேட்டதற்கு அவன் கையை வெட்டியதை விட பல்லை உடைத்தது பரவாயில்லை என்று சொன்னான். அதுபோல இருக்கிறது இப்போது சொல்கின்ற முறைகள். ஆதலால் நம்முடைய மாநிலத்தில் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும், அவற்றை கவனத்தோடு பார்க்க வேண்டும். நாம் பொதுமக்களுக்காகச் சேவை செய்ய வந்துள்ளோம். ஆகவே அரசு இதிலெல்லாம் கூர்ந்து கவனித்து ஆவன செய்யச் சொல்லவேண்டும் என்று இந்த அவையிலே நான் சொல்கிறேன்.

இங்கே சொல்லப்படுவது அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கை பற்றி. அந்தத் திட்டத்தில், இருமொழிக் கொள்கையைக் கொண்டுவரும்போது இந்தக் கொள்கையின் காரணமாக இந்தி மொழியாசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள், அந்த அளவுக்கு இந்தக் கொள்கை இருக்கும் என்று அண்ணா காலத்தில் திட்டவட்டமாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை இன்றைக்கு எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இதை நான் மாண்புமிகு அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இடைநிலை ஆசிரியர்களுக்கு ஓர் ஊதிய உயர்வு பயிற்சிக்காக கொடுக்க வேண்டும். இப்படி உத்தரவு இருக்கிறது. அரசுத் துறையில் இரண்டு வருடப் பயிற்சி பெற்றிருந்தால்தான் அந்த ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் சொல்கின்றார்கள். அப்படி டிரெயினிங் பெறவில்லை, அதனால் இந்தி ஆசிரியருக்கு இல்லை என்று சொல்கின்றார்கள். அண்ணாவின் கொள்கை கல்வித் துறையில் எப்படிப் பரிகசிக்கப்படுகிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவ

விரும்புகிறேன். 1947-லே ஆசிரியருக்கு ஓராண்டு பயிற்சி போதும் என்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. கர்நாடகத்திலே ஓராண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே அவர்களுக்கெல்லாம் ஊதிய உயர்வு இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் அண்ணா அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுகிறது. அப்படியிருந்தும் அண்ணா அவர்களின் கொள்கைப்படி ஊதிய உயர்வைக் கொடுக்க மறுக்கிறார்களே, அ[illegible] தானா என்று கேட்கிறேன். இந்தி மொழி ஆசிரியர்கள் என்னிடம் [illegible]க் கேட்கின்றார்கள். எனக்கு அவர்கள் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அ[illegible] நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அரசும் நிச்சயமாக நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஆசிரியர்கள் சங்கங்கள் நடத்துவது என்பது பற்றி பிரச்சினை எழுந்தது. அதைப்பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, முன்பு சென்னை மாநிலத்தில் ஆந்திராவும் சேர்ந்திருந்த காலத்தில் அங்கீகாரம் பற்றிய பிரச்சினை வந்தது. அங்கீகாரம் இல்லாமல் சங்கம் செயல்பட்டால், நடவடிக்கை எடுப்போம் என்று மாவட்டக் கழகத்தில் நோட்டீஸ் விட்டார்கள். அங்கீகாரம் இல்லாத சங்கத்தில் உறுப்பினராக இருக்கக் கூடாது என நடவடிக்கை எடுத்தார்கள். அதுபற்றி கோர்ட்டுக்குப் பிரச்சினை சென்றது. அதன்பேரில் கோர்ட்டு சொல்லியது. ஆசிரியர்கள் சங்கங்கள் அமைக்க, அதற்கு அங்கீகாரம் அல்லது அனுமதி தேவையில்லை என்று உத்தரவிட்டது. அதையொட்டி அரசும் ஆசிரியர் சங்கங்கட்கு அனுமதி-அங்கீகாரம் ஏதும் தேவையில்லை, தானே செயல்படலாம் என உத்தரவிட்டது. சமீப காலத்தில் மூன்று சங்கங்கள் அங்கீகாரம் கோரின. அதன்பேரில் அங்கீகாரம் அளிப்பதற்கு எப்படி விதிமுறைகள் இருக்க வேண்டுமென்று அரசாணை வெளியிட்டது. தமிழகத்தில் என்ன என்ன சங்கங்கள் இருக்கின்றன, அந்தச் சங்கங்கள் இந்த அரசாணைப்படி அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. ஏன்? கல்வித் துறையில் ஊராட்சி ஆசிரியரை, அரசு ஊழியராக்கும் உயர்மட்டக் குழுவிற்கு 16 சங்கங்கள் அழைக்கப்பட்டு சாட்சியங்கள் கேட்கப்பட்டன. இதுவரையில் நடத்துகொண்டிருக்கக்கூடிய 16 சங்கங்களுக்கும் கல்வி இலாகாவில் உள்ள இயக்குநர் அல்லது செயலர் ஏன் தாக்கீது அனுப்பக் கூடாது? பஞ்சாயத்து யூனியன்களில் நெடுங்காலமாக இருக்கின்ற ஆசிரியர்



பிரச்சினைகள் தீர்க்கப்பட நான் சார்ந்துள்ள ஆசிரியர் கூட்டணி உள்ளிட்டு மூன்று சங்கங்கள் குறை தீர்க்கும் நாளில் D.D.O. வால் அழைக்கப்பட்டு ஆசிரியர்கட்காக பிரதிநிதித்துவம் செய்து வந்தன. இதற்கு ஆர். டி. எல். ஏ. இலாகா ஓர் உத்தரவு இட்டிருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையிலே இதுவரையில் பிரதிநிதித்துவம் செய்து கொண்டுவந்தன. அந்தச் சங்கங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் தாக்கீது அனுப்ப வேண்டாமா? அப்படி அனுப்ப [illegible]. நியாயமான ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகள் ஏன் இ[illegible]ச் செய்யவில்லை? அரசு அதிகாரிகள் இத்தகைய விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். நிர்வாக இயந்திரத்தில் குறைகள் இருக்கக் கூடாது. இப்போது பி. அன்ட். ஏ. ஆர். துறையில் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அங்கீகாரம் பெற்ற சங்கத்தினுடைய பிரதிநிதிகள் பிரச்சினைகளை அரசுக்கு அனுப்பினால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். அரசு பதில்தர வேண்டும். நடந்துகொண்டிருக்கின்ற சங்கங்கள், அரசு அங்கீகாரமில்லாத சங்கங்கள், இவைகள் பிரச்சினைகளை எழுதி அனுப்பினால், அவர்களுடைய பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து முடிவு அறிவிக்க வேண்டும் என்ற பிரச்சினைகளில் கூட நிருவாக இயந்திரத்தில் சிவப்பு நாடா நிலைமைகள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. முடிவுசெய்ய பல ஆண்டுக் காலமாகிக் கொண்டிருக்கிறது. இதுதான் இன்றைய நிலை. அங்கீகாரமாகாத சங்கங்கள் பிரதிநிதித்துவம் செய்யும்போது அவற்றின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு பிறகு, அதன்மீது நடவடிக்கையை எடுத்து முடிவு செய்த பிறகு அதனை ஏன் தெரிவிக்கக்கூடாது? என்ன ஜனநாயகம் இது? அங்கீகாரமாகாத சங்கப் பிரச்சினை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா, இல்லையா என்பதைக் கவனிக்க என்ன அமைப்பு வைத்துள்ளீர்கள், என P. & A.C. துறை கூறவில்லையே ஏன்? அப்படியாயின் எதற்காக இந்த உத்தரவு? கண் துடைப்புக்காகவா? இது ஒரு ஜனநாயக நாடு. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய "செல்" பதில் தருகிறது: ஆனால் மற்ற அதிகாரிகள் பதில் கொடுக்கவில்லை: இப்படி இருப்பது ஜனநாயக நாட்டில் நியாயம்தானா? இந்த ஒருதலைப் பட்ச நடவடிக்கை இருக்கலாமா? பிரச்சினையில் அமைச்சரவை நியாயம் செய்ய வேண்டும், ஜனநாயக ரீதியாகப் பரிசீலித்து யார் பிரச்சினையை எழுதிக் கொடுத்தாலும், அதற்குப் பதில் கொடுக்க வேண்டுமென்று இருக்க வேண்டும். இங்கே சமத்துவம் பற்றிப் பேசுகின்றார்கள்: இந்த நாட்டில் உள்ள சங்கங்கள் நடுவண்

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

அரசு சட்டப்படி பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தலையிட்டு பல விஷயங்களைக் கவனித்திருக்கின்றார்கள். அவர் நல்ல முறையிலே செயல்படுகிறார்கள். நல்ல அனுபவம் பெற்றவர்கள். ஜனநாயக ரீதியாக ஆசிரியர்கள் சங்கங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். நாங்கள் கொடுக்கின்ற பிரச்சினைகளில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அங்கீகார விதிகள் ஜனநாயக ரீதியில் இல்லை. அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாக உள்ளது. அங்கீகாரம் வேண்டுமென்றால் இந்தச் சங்கங்கள் தனிப்பட்ட ஆசிரியர்கள் பிரச்சினைகளைக் கொண்டுவந்து கேட்கக்கூடாது. அதிகாரிகள் தவறு செய்தால், அது குறித்து 'டெமான்ஸ்ட்ரேஷன்' செய்யக்கூடாது அதிகாரிகளின் தவற்றை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கக்கூடாது. அதிகாரிகள் தவறுகளை விமர்சித்து சுற்றறிக்கை வெளியிடக்கூடாது. கண்ட பத்திரிகைகளில் எழுதக்கூடாது. இப்படியெல்லாம் சங்கங்கள் இருக்குமானால், அங்கீகாரம் தரலாம் என்று அரசு சொல்வதில் நியாயம் இருக்கிறதா ? எந்தச் சங்கம் இதை ஏற்றுக் கொள்ள முடியும் ?. இதைக் கொஞ்சம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆணை வெளியிட்டுவிட்டதால் இதைக் கௌரவப் பிரச்சினையாக அரசு கருதக்கூடாது. ஏதோ ஒரு காலத்தில் போட்ட விதிகள் இல்லை. கிராமக் கணக்குப் பிள்ளைகள், முன்சீப்கள் விஷயத்தில் இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போட்டு சந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, விதிமுறைகளைப் பற்றியோ உரிமைகளைப் பற்றியோ அல்லது அலுவலர்கள் செய்கின்ற காரியங்களைப் பற்றியோ எழுதக்கூடாது, பேசக்கூடாது. அதிகாரிகள் செய்கின்ற தவறுகளை எதிர்த்துக் கோஷம் போடக்கூடாது, ஊர்வலத்திலே போகக்கூடாது, ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்றால், நிர்வாக இயந்திரத்திலே உள்ள கோளாறுகளைத் தீர்ப்பது

(முற்பகல் 11-30)

எப்படி ? யார் மூலம் ? எப்படி நடக்கும் ? அதிகாரிகளின் தவறான போக்கை எப்படித் தடுப்பார்கள் ? ஜனநாயக உரிமையை எப்படி நிலைநாட்ட முடியும் ? தர்மத்தின் பெயரால், உரிமையின் பெயரால் இதை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தக்கது செய்ய விதிகளை மாற்றி அமைத்து, எல்லாச் சங்கங்களுக்கும் அங்கீகாரம் அளிக்க வேண்டும். கேரள மாநிலம் சின்ன மாநிலம். ஆசிரியர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. தமிழகத்தைப் பார்க்கும்போது, 50 சதவிகிதம்தான் இருப்பார்கள். அங்கே 22, சங்கங்களுக்கு மாநில அரசு அங்கீகாரம் தந்திருக்கிறது. மேற்கு வங்கத்திலேயுள்ள அரசு ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கான 7 சங்கங்களுக்கு அங்கீ



1982 பிப்ரவரி 8] [திரு. செ. முத்துசாமி]

காரம் தந்திருக்கிறது. எனவே நடைமுறை விதியிலே இருக்கக்கூடிய சில வற்றைத் தளர்த்தி அல்லது மாற்றி, நான் சொன்னதுபோல், எல்லாச் சங்கங்களுக்கும் அங்கீகாரம் தந்து, எல்லோரையும் ஒரே நிலையில் வைக்க வேண்டும். அல்லது கொடுத்துள்ள அங்கீகாரங்களை நீக்குங்கள். மாநில அளவில் ஆசிரியர் பிரச்சினைகளைச் சொல்ல ஒரு கவுன்சிலும், மாவட்ட அளவில் ஒரு கவுன்சிலும் அமைப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்னைக்கு வந்து அடிக்கடி பிரச்சினைகளைச் சொல்லாமல், அங்கே அவை தீரவேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினர்தான் அங்கே வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்தச் சங்கத்திலே இல்லாத வேறு சங்க உறுப்பினர்கள் எப்படி தங்கள் பிரச்சினைகளைச் சொல்லுவது ? மற்ற சங்கங்கள் யாரிடம் சொல்லுவது ? மாவட்ட அளவில் பிரச்சினைகளைச் சொல்ல வேண்டுமென்றால், எல்லா சங்கங்களின் பிரதிநிதிகளும் வரும் சூழ்நிலை இருக்க வேண்டாமா ? அந்த அடிப்படையிலே சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் அல்லாதவர்கள் பதவி வகிக்கக்கூடாது என்று 'கம்ப்ளீட் ரெஸ்டிரிக்ஷன்' செய்கிறார்கள். 'ரீசனபுள் ரெஸ்டிரிக்ஷன்ஸ் கேன் பி மேட்' என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அங்கீகாரம் அளிக்கும்போது, நியாயமான முறையில் வரையறைகள் செய்யலாமென்று சொல்லுகிறது. அதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் ஆசிரியராகப் பணியாற்றியவன். எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருந்ததில்லை. சங்கத்திற்குப் பொதுச் செயலாளராக வந்த பிறகு, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு, செயல்பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு எம்.எல்.சி. யாக வந்திருக்கிறேன். இன்றுவரை எந்த அரசியல் கட்சி மேடையிலும் ஏறியதில்லை. அரசு சொல்லியுள்ள நடைமுறைகளை வைத்துக் கொண்டு, அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, எம்.எல்.சி. ஆனதால் டிஸ்மிஸ் செய்யப்பட்டேன். மத்திய அரசுச் சட்டம் தேர்தலில் நிற்க வகை செய்கிறதென்று மேலவை உறுப்பினர் சகோதரி செல்வி லீலாவதி அவர்கள் கோர்ட்டுக்கு சென்று தடை பெற்றதால், அவருடைய ஆசிரியை பணி நிலை பெற்றிருக்கிறது. வழக்கு மன்றத்திற்கு நான் செல்லாததால், டிஸ்மிஸ் செய்யப்பட்டு, இன்றைக்கு எம்.எல்.சி.யாக மட்டும் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். என்னைப் போன்றவர்கள் தொடர்ந்து சங்கத்தில் இருக்கும் நிலைக்குத் தடையாக விதிகள் வகுக்கப்பட்டுள்ளது என்று சொல்லிக் கொள்கிறேன். தக்கது செய்யுங்கள். இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்ய ஆட்சிக்கு அதிகாரமிருக்கிறது. அதை 'சேலெஞ்ச்' செய்யவில்லை. ஆனால் மத்திய அரசு சட்டத்திற்கு மாறாக இருக்கலாமா ? இப்படி ஒரு கொள்கையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு சங்கத்தை முடக்குவதற்கு நடைமுறை உத்தி வந்துவிட்டதென்ற கவலையை அமைச்சரவையின் கவனத்

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

திற்குக் கொண்டு வருகிறேன். இதை வேறு யாரிடம் சொல்லுவது? கல்வி
அமைச்சரவர்களிடம் சொல்லியிருக்கிறேன். நேரடியாக அவர்களிடம் பேசி
யிருக்கிறேன். எனவே இதில் நீதி வழங்குக என்று குறிப்பிட விரும்புகிறேன்.
நியாயத்தைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்கவும், சண்டை
போட்டுக் கேட்கவும் உரிமை இருக்கிறது என்பதால், அழுத்தம் திருத்தமாக
அந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அங்கீகாரம் கொடுத்ததால் எப்படிச்
செயல்பாடுகள் உள்ளன என்பதை 2, 3 உதாரணங்கள் மூலம் சொல்ல விரும்பு
கிறேன். பள்ளி டைரக்டர் அலுவலகத்திலே ஒரு அடிஷனல் டைரக்டர் இருக்
கிறார். ஆரம்பக் கல்விக்கு அவர் பொறுப்பு. அவர் என்ன செய்கிறார்?
சட்டசபை நடக்கும் இந்த நேரத்தில் 21 நாட்கள் சுற்றுப்பயணம் போட்டுக்
கொண்டு, சென்னையை விட்டுச் சென்றுவிட்டார். அவர், அங்கீகாரம் அளிக்
கப்பட்ட சங்கத்திடமிருந்துதான் கோரிக்கைகளை வாங்கிக்கொள்வேன், நீ
கொண்டு வந்து கொடுக்காதே, கொடுத்தால் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்று
சொல்லுகிறார். பி. & எ.ஆர். டிபார்ட்மென்ட் விண்ணப்பங்களை பரிசீலிக்க
வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும், பதில் கொடுக்க வேண்டியதில்லை
யென்று சொல்லியிருக்கிறது. இப்படி பாதகம் செய்ய வேண்டுமென்று
சொல்லவில்லை. ஆனால், அந்த அதிகாரி அப்படிச் செய்கிறார். ஆசிரியர்
களைக் கேவலமாகப் பேசுகிறார். அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் மாதாமாதம்
சம்பளம் வாங்கி, கஷ்டப்பட்டுப் பணியாற்றும் ஆசிரியர் தன்னுடைய பிரச்சி
னையைச் சொல்ல வேண்டுமென்றால், அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் உறுப்பி
னரல்ல, அதனால் வாங்க மாட்டேன் என்றால், இந்த ஆட்சியைப்பற்றி என்ன
கவலை, என்ன கருத்து, என்ன எண்ணம், என்ன எதிர்ப்பு உணர்வு ஆசிரியர்
கட்கு ஏற்படுமென்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன். இது நியாயம்தானா?
இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அடிஷனல் டைரக்டர் ப்ரோகிராம்
போட்டிருக்கிறார். 2—2—1982-லிருந்து ஆரம்பித்து 'பார்டிசிபேட் இன் தி
மீட்டிங் ஆஃப் தி தமிழ்நாடு எலிமென்டரி ஸ்கூல் டீச்சர்ஸ் பெடரேஷன்' . .
இப்படி 6 ஆம் தேதி வரை இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சங்கத்தினர் ஏற்பாடு
செய்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகளில் 11 இடங்கள்—11 பிளாக்குகளிலே பள்ளி
கள் மூடப்பட்டிருக்கின்றன. அவர் சுற்றுப்பயணம் செல்லும்போது, பள்ளி
களுக்கு விடுப்பு விட்டுவிடுகிறார்கள். 4 நகரசபைகளிலே விடுப்பு விட்டிருக்கி
றார்கள். இப்படி ஓர் அரசியல் கட்சித் தலைவர்போல, அரசுப்பணி ஏதும்
இன்றி, ஒரு சங்கத்திற்காக காலையிலே ஒரு கூட்டம், மதியம் ஒரு கூட்டம்
மாலை ஒரு கூட்டம் என்று புரோகிராம் போட்டால் எப்படி? இதை
(பயணத்திட்ட நகல்) தலைவரவர்கள் மூலமாக ஒப்படைக்கிறேன். மக்கள்
வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அதிகாரியா, இல்லையா, இவர்? இது
சம்பந்தமாக நான் கல்வி அமைச்சரவர்கள் கவனத்திற்கும், தலைமைச் செய



1982 பிப்ரவரி 8] [திரு. செ. முத்துசாமி]

லாளர் கவனத்திற்கும் கொண்டு சென்றேன். தக்க நடவடிக்கை எடுத்திருக்
கிறார்கள். அதற்காகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனே
டூரை ரத்து செய்து, திரும்பி வா என்று கல்விச் செயலாளர் தந்தி அனுப்பி
யிருக்கிறார். அதற்கு என்ன பிரதிபலிப்பு என்பதுதான் வேடிக்கையான
விஷயம். இப்படி ஒருதலைப்பட்சமாகப் போவது தர்மமல்ல என்று இரண்டாம்
தேதி நான் தந்தி கொடுத்தேன். 3 ஆம் தேதி கல்விச் செயலாளர் தந்தி
கொடுக்கிறார். ஒரு துறையின் செயலாளர் அவர் . அவரைப்பற்றிச் சொன்ன
வார்த்தைகளை சபையிலே குறிப்பிட விரும்பவில்லை. 'ன்' விகுதிபோட்டு
சொல்லப்பட்டது. கல்விச் செயலாளர் அனுப்பியிருக்கிறார் என்று சி.ஈ.ஓ.
சொல்கிறார். 'என்ன படி, நீயே படி' என்று இவர் சொல்லுகிறார். சி.ஈ.ஓ.
படித்தார். அந்த ஆள் 200 ரூபாய் சம்பளம் அதிகமாக வாங்குகிறான், இவர்
யார் என்னை வரச் சொல்வதற்கு என்கிறார். இப்படிப்பட்ட பிரதிபலிப்பு
ஒரு துறையின் செயலாளரின் தந்திக்கு இருந்தால், கீழே இருக்கும் ஆசிரியர்
களை எப்படி இவர் நடத்துவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.
இதைப்பற்றி விசாரணை செய்யுங்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன். மற்றவற்றை அரசின் நடவடிக்கைக்கு விட்டுவிடுகிறேன். இப்படி
யாரும் நடக்க ஒரு ஜனநாயக அரசு அனுமதிக்காது. இதில் நீதி கோரு
கிறேன்.

அடுத்தபடி மதுரை சி.ஈ.ஓ. என்ன செய்கிறார்? உன் பெட்டிஷனை
வாங்க முடியாது என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்
கிறதென்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சுதந்திரம்
அடைந்த நாளிலிருந்து எந்த ஒரு காலகட்டத்திலும் இப்படிப்பட்ட நிலை
ஏற்பட்டதில்லை. பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்குப் பல பாத
கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது நியாயம்தானா? பஞ்சாயத்து யூனியன்
களில் பணியாற்றுபவர்களை அரசு ஊழியர்களாக்கியிருப்பது உயர்ந்த
நோக்கம். ஆனால் 1—6—1981-ல் உள்ள சம்பள நிலுவைகளைக் கொடுக்க
உத்தரவு போடவில்லை. ஆனால் 21 நாட்கள் பயணத் திட்டம் போட்டிருக்
கிறார். பிரச்சினைகளில் தீர்வு காண வேண்டிய ஸ்டேட் ஆபீசர்—அரசாங்கம்
தகுதி கொடுத்திருக்கிறது—சட்டசபை நடக்கும்போது பயணம் போகிறார்.
இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். யார் பொறுப்பில்
இருக்கிறார்களென்பதல்ல பிரச்சினை. பொறுப்பிலே இருக்கிறவர்கள்
தவறாக நடந்தால் என்ன நீதி?

அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ன செய்கிறது? சி.ஈ.ஓ. எல்லா ஆசிரியர்
களையும் கூப்பிட்டு பிரச்சினையைக் கேட்டால், அவர் கேட்கக்கூடாது,
வெளியே போகச் சொல்லுங்கள் என்று சொல்லுகிறது. அங்கீகாரம் என்ற

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

பெயரால் இயங்கும் கும்பல், ஜனநாயகத்தில் எல்லோரிடமும் பிரச்சினை கேட்கவேண்டிய அதிகாரியிடத்தில் பிரச்சினைகளைச் சொல்லும்போது, இப்படிச் சொல்லுகிறார்கள். என்ன அகம்பாவம்! ஆணவம்!

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : நான் சீக்கிரம் முடித்துவிடுகிறேன். பிரச்சினையின் ஆழமிருக்கிறதே, அது கடுமையானது. உங்களுக்கு மரியாதை கொடுத்து முடிக்க விரும்புகிறேன். ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

(முற்பகல் 11-40)

தயவுசெய்து அனுமதியுங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவமதிக்கிறார்கள், ஆணவமாகப் பேசுகிறார்கள், ஆத்திரப்படுகிறார்கள். டி.இ.ஓ. வைப் போய் பார்க்கிறோம். அவர் உட்காரச் சொல்கிறார். எங்களை எப்படி அவர் நாற்காலியில் உட்கார வைக்கலாம் என்று கேட்பது அங்கீகார ஆணவசங்கம். இது சரிதானா? எங்களுடைய சங்க மாவட்டத் தலைவர் நாற்காலியில் உட்கார்ந்து விட்டாராம். இப்படிச் சொல்வது என்றால், நாடு எங்கே செல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கத்திற்கு இந்த அதிகாரம் யார் தந்தது? இவற்றிற்கு முடிவு கட்டியாக வேண்டும்.

அடுத்து, 3 அகவிலைப் படி கொடுப்பது பற்றிய பிரச்சினைக்கு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போதுதான் உறுப்பினர் பிரச்சினைக்கு வருகிறார்களா?

திரு. செ. முத்துசாமி: நெருக்கடியை உணர்ந்துதான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். மத்திய அரசு 3 அகவிலைப் படி கொடுத்திருக்கிறது. தமிழக அரசு மௌனம் சாதிக்கிறது. மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியா?

திரு. சோ. ஆறுமுகம் : தலைவரவர்களுக்கு நெருக்கடி என்று உறுப்பினர் சொல்கிறாரா? அப்படி என்ன நெருக்கடி தலைவரவர்களுக்கு வந்துவிட்டது? (சிரிப்பு).



1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எனக்கு நெருக்கடி வந்தால் எல்லோருக்கும் நெருக்கடி வரும். (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் எப்போதுமே குறுக்கிடுவதில் விருப்பம் உள்ளவர். ஆகவே குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார். எனக்கு உள்ள நெருக்கடி எல்லாம் காலத்தில் முடிக்க வேண்டுமே என்ற நெருக்கடிதான். அப்படியே நம்முடைய தலைவரவர்களுக்கு எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும், கவலைப்படக் கூடியவர் அல்ல அவர். மத்திய அரசு 3 தவணை டி.ஏ. கொடுத்து விட்டது. நம்முடைய அரசு இனனும் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கவில்லை. ஏப்ரல் மாதத்திலிருந்து 'கேஷ்' ஆகக் கொடுப்பதாகவும் அதுவரை "பிராவிடண்ட் பண்ட்"-ல் சேர்ப்பதாகவும் மத்திய அரசு சொல்லிவிட்டது. அந்த அறிவிப்பை தமிழக அரசும் செய்ய வேண்டும். இன்றைக்கு விலைவாசி அதிகமாக ஏறிவிட்டது. தவிரவும் போன வருஷம் பட்ஜெட்டுக்குப் பின்னால் 150 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாக வருமானம் வந்திருக்கிறது. ஆகவே தமிழக அரசு இதைக் கொடுப்பதில் ஒன்றும் கஷ்டமில்லை. நிதித் துறை 'சவுண்ட்' ஆக இருக்கிறது. இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, 4-வது ஊதியக் கமிஷன் இன்னும் போடப்படவில்லை. பீகார் மாநிலத்தில் அரசாங்கத்தில் பணிபுரியும் ஆசிரியர்களும், ஊழியர்களும் 4-வது ஊதியக் கமிஷன் முடிவை அமுல்படுத்துவதிலுள்ள கோளாறை எதிர்த்துப் போராடினார்கள். ஆட்சியாளர்கள் "சுட்டுத் தள்ளுங்கள்" என்றுகூடச் சொன்னார்கள். அதையும் எதிர்த்துப் போராடினார்கள். கடைசியில் 500 ரூபாய் ஆண்டுதோறும் போனஸ் தருவதாக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. சமரசம் ஏற்பட்டு, ஒப்பந்தம் ஏற்பட்டு கையெழுத்துப் போட்ட பிறகுதான் போராட்டம் நின்றிருக்கிறது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும்போதுதான் அதை எதிர்த்து இவ்வளவும் நடைபெற்றது. அவர்கள் பெற்ற வெற்றியைப் பாராட்டுகிறேன். ஆனால் இங்கே இன்னும் நான்காவது பே கமிஷன் போடப்படவில்லை. அதை உடனடியாகப் போட வேண்டும். ஐந்து வருடத்திற்கு ஒரு முறை ஊதியக் குழு அமைக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை கடந்த ஆட்சிகள் செய்யவில்லை. நாங்கள் சொல்லியும் செய்யவில்லை. இந்த அரசும் அதே பாதையில் தயவுசெய்து செல்ல வேண்டாம். தயவுசெய்து அதை உடனே அமையுங்கள். ஐந்து வருடத்திற்கு ஒரு முறை ஊதியக் குழுவினை அமைக்க வேண்டும். ஆறாவது வருடம் ஊதியக் குழுவினை அமைத்தால், ஏழாவது வருடம் ரிப்போர்ட் கொடுக்கும். தீர்ப்பை ஏழாவது வருடம் கொடுத்து 8-வது வருடத்திலிருந்து அமுல்படுத்த வேண்டாம். நான்காம் வருடத்தில் அமைத்து ஐந்தாவது வருடத்திலிருந்து ஊதியக் குழுவின் முடிவை அமுல்படுத்தும் வகையில் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

அடுத்து, இடைநிலை ஆசிரியர்களை பி.டி. ஆசிரியர்களாக, தமிழ் ஆசிரியர்களாக, உயர்த்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் எஸ்.ஜி பி.டி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அங்கே செகண்டரி கிரேட் ஆசிரியர்களை பி.டி. ஆசிரியர்களாக ஆக்கி அதற்கான வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பி.டி. பாஸ் பண்ணினால் அவர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுக்கிறார்கள். அதேபோல உயர் நிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அதே சலுகையைப் பொருந்துமாறு செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஆந்திராவில் செய்திருப்பதைப்போல இங்கேயும் செய்ய வேண்'ம். ஆந்திராவில் 1—4—1978-லிருந்து செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் 450 ரூபாய் என்கிற விதத்தில் சம்பளம் பெற்று வருகிறார்கள். இங்கே அந்தமாதிரிச் சம்பளத்தை இன்னும் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. இங்கே மதுவிலக்கு தளர்த்தப்பட்டு வருமானம் அதிகமாக வந்துள்ளது. ஆந்திரா நம்முடைய மாநிலத்திலிருந்து பிரிந்து சென்றது. நமது மாநிலம் தான் தாய் மாநிலம். அதற்கேற்பவாவது செய்ய வேண்டும். இப்போது மோசமான உத்தரவு ஒன்று வந்திருக்கிறது. பி. அன்ட் ஏ.ஆர். துறையிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வருவதில்லை. அதனால்தான் இரண்டாவது பே கமிஷனில் செலக்ஷன் கிரேட் பதவியைத் தந்தார்கள். 10 வருடம் பணி முடித்த ஆசிரியர்களுக்கு அது ஒரு 'இன்செண்டிவ்' மாதிரி. அதனால் அவர்களுக்கு 5 ரூபாய், 10 ரூபாய் அதிகமாகக் கிடைத்தது. அதன் பிறகு மூன்றாவது பே கமிஷனில் சிறப்பு நிலையை ஆசிரியர்களுக்குத் தந்தார்கள். இப்படி சலுகை வந்த காலக் கட்டத்தில் ஹெட்மாஸ்டருக்கான பதவி உயர்வு வேண்டாம் என்று சொல்லி விடும் ஆசிரியர்களுக்கு செலக்ஷன் மற்றும் சிறப்பு நிலையைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் சொல்லும் போது, "நோ அடிஷனல் ரெஸ்பான்சிபிலிட்டி இன்வால்வ்ட்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் இதில் கூடுதலான பொறுப்பு எதுவும் இல்லாத நிலையில் அடிப்படை விதிகள் எஃப் ஆர். 22 (B)படி இன்கிரிமென்ட் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது சரியில்லை, தர்மமில்லை. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிட . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் உறுப்பினர் பேசிக் கொண்டேயிருப்பது தர்மமல்ல என்பதை நானும் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கும். (சிரிப்பு)



1982 பிப்ரவரி 8]

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, தாங்களே அப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வந்தால், நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நான் உங்களிடமிருந்து கேட்டுக்கொள்கிற இடத்தில் இருக்கிறேன். நீங்கள் எனக்குக் கொடுக்கிற இடத்தில் இருக்கிறீர்கள். கொடுக்கிற இடத்தில் இருக்கிற நீங்கள் அப்படிச் சொல்வது எனது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தாங்கள் சொன்னாலே, ஆர்டர் போட்டாலே உட்கார்ந்து கொள்கிறேன். இரண்டே இரண்டு பிரச்சினைபற்றிச் சொல்ல தாங்கள் தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒரு மணித் துளியில் முடித்து விடுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** ஆதித் திராவிட மாணவர்கள் மற்றும் மலை ஜாதி மாணவர்களுக்கு வங்காளத்தில் பாக்கெட் மணி என்கிற வகையில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மாதந்தோறும் 20 ரூபாய் கொடுக்கிறார்கள். கேரளாவில் ஹாஸ்டல் மற்றும் ஸ்காலர்ஷிப் தவிர இந்த வகையில் ரூபாய் 25 மாதந்தோறும் தருகிறார்கள். இந்தச் சலுகையை தமிழக அரசும் உடனடியாக வழங்கி முக்கியமாக அரிஜன் மக்கள் மத்தியில் நல்ல பெயரைப் பெறவேண்டும், அவர்களுடைய நன்மையைக் கருதி இதைச் செய்ய வேண்டும்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை, அது அதிகமாக இருக்கிறது. ஆசிரியர்களில் வேலையில்லாதவர்கள் 45 ஆயிரத் துக்கு மேல் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வழங்குவதற் கான ஒரு நல்ல திட்டத்தை உடனடியாக இந்த அரசு கொண்டுவர வேண்டும். என்னுடைய கான்ஸ்டிட்யூவென்சிக்கு உட்பட்ட பகுதியில் 5 சி.இ.ஓ.-க்கள் இருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டமும் இதற்குள் அடங்கியது. தர்மபுரி மாவட்டத்தில் வேதனையான நிலைமை இருக்கிறது. 17 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் 3 மாதமாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியர்களைப் போட்டால், அவர்கள் பணியில் சேர முன்வருவ தில்லை. 6-வது வகுப்பில் ஒரு ஆசிரியர் சராசரி 85 மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. 50 சதவிகிதம் பள்ளிகளில் இத்தகைய நிலை தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இந்த அளவுக்கு நிலைமை இருக்கிறதா? கல்வியில் ஏற்கெனவே பின்தங்கி யிருக்கக் கூடிய தர்மபுரி மாவட்டத்தை மேலும் பின்தங்க வைப்பது நல்லதா? அங்கு தெலுங்கு, கன்னடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்

[திரு. செ. முத்துசாமி] [1982 பிப்ரவரி 8

அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கு இன்னும் புத்தகம் கிடைக்கவில்லை. ஆந்திராவிலிருந்தும், கர்நாடகாவிலிருந்தும்தான் அவர்களுக்குப் புத்தகங்களை வாங்கிக் கொடுக்கிறோம். பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிற நேரத்திலேயே இன்டென்ட் போட்டு அங்குள்ள கடைகளிலிருந்து புத்தகங்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டாமா ? அதுபோல் இதுவரை அரிஜன் மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை. பல முறை இதுபற்றி எடுத்துச் சொல்லியும், தீர்வு காணவில்லை. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட பெற்றோர்களும், கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்ட பெற்றோர்களும் தங்களை ஒதுக்குவதாகக் கருதுகிறார்கள். தயவுசெய்து அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். நம்முடைய தமிழ் நாட்டு டெக்ஸ்ட் புக் சொசைட்டி மிகவும் நல்ல முறையில் புத்தகங்களை வெளியிட்டு வழங்கி வருகிறது. அரிஜன் மாணவர்களுக்கும், மதிய உணவு மாணவர்களுக்கும் இன்னும் புத்தகங்கள் வழங்கப்படவில்லை. வங்காளத்தில் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக அரசு புத்தகங்களை வழங்குகிறது. இங்கேயும் தயவுசெய்து இலவசமாக வழங்குகின்ற புத்தகங்களை ஜூன் மாதத்திலேயே வழங்கி விடுங்கள். கொடுப்பதை உரிய காலத்தில் கொடுக்க வேண்டும். புத்தகங்கள் இதுவரை கொடுக்கப்படாத நிலையில் அவர்கள் எந்தப் புத்தகத்தைப் பார்த்துப் படிப்பார்கள் ? இவற்றிற்கெல்லாம் உடனடியாகத் தீர்வுகாண வேண்டும். முதலிலே புத்தகத்தை வழங்காமல் பிறகு கடைசியில் பள்ளிக்கூடம் முடியும் சமயத்தில் திரும்பக் கொடுத்து விடுகிறார்கள். இதை நான் கல்வி ஆலோசனைக் குழுவிலும் சொல்லியிருக்கிறேன். இந்த அவையிலும் பல முறை சொல்லியிருக்கிறேன். இவற்றிற்கெல்லாம் நிவாரணம் தேட வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வாய்ப்பை எடுத்துக் கொண்டார்கள். அடுத்தவர்களும் பேச வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மற்றவர்கள் பேசுவது குறித்து எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் எல்லோருக்கும் கொடுத்தது போல எனக்கும் ½ மணி நேரம் கொடுக்கக் கூடாதா? தலைவரவர்கள் மணியைத் தட்டுவதாலேயே பிரச்சினைகளை என்னால் சொல்ல முடியாமல் போய்விடுகிறது.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இங்கே நீட்டத் தீட்டத் திறப்பதில்லை. உட்காருங்கள்.



1982 பிப்ரவரி 8]

**திரு. செ. முத்துசாமி :** தட்டித்தட்டி நிறுத்துவதுதான் இங்கே நடக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்லாசிரியராக இருந்து இங்கே வந்திருப்பவர்கள். நான் நேரத்தைக் கருதி அடிக்கடி மணி அடிக்காமல் பார்த்துக் கொண்டிருந்தால் அது நல்லதாக இருந்திருக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் நல்லாசிரியர் என்ற பெயர் வைத்திருப்பதற்கு நான் தலை வணங்குகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சிறந்த புலவர். அவர் மீதும் நான் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறேன். என்னுடைய பிரச்சினையெல்லாம் மற்றவர்களுக்கு கிடைத்த சலுகை எனக்கு அளிக்கக்கூடாதா என்பது. மற்றவர்களுக்கு அடித்ததைப்போல, 20 நிமிட நேரம் கழிந்து எனக்கும் மணி அடிக்கக்கூடாதா ? ஆரம்பத்திலேயிருந்து மணியடித்து என்னுடைய கவனம் திசை திரும்ப . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வாணியம்பாடியிலே இரயில் விபத்து நடந்ததென்றால், முதல் பெட்டியிலே இருந்தவர்கள் இறந்து விட்டார்கள் என்பதால் எல்லாப் பெட்டிகளிலுமே இருப்பவர்களும் இறக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறாரா?

**திரு. செ. முத்துசாமி :** உரிமைப் பிரச்சினையிலே இன்னொருவன் சாகிறானா இல்லையா என்பதல்ல பிரச்சினை. எனக்கிருக்கிற . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இரண்டு நாட்களுக்கு முன்னாலே பேசியிருந்தால் 50 நிமிட நேரம் பேசியிருக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் மாநில அரசு 13 மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றியதைப் பற்றியும், தண்ணீர் நிறைவுப் பணிகளுடைய சாதனைகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சியடைந்து அதற்காக அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல தமிழ் வளர்ச்சி நடவடிக்கையாக உரிமையியல் நீதிமன்றங்களிலே தமிழிலே தீர்ப்பு வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தமைக்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதியார், பாரதிதாசன்

பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் குறித்தும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பது குறித்தும், மகளிர் பல்கலைக் கழகம் அமைக்கப்பட விருப்பது குறித்தும், காரைக்குடியிலே ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட விருப்பது குறித்தும் என்னுடைய வரவேற்பையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆளுநர் அவர்களின் உரையிலே இருக்கின்ற நல்ல அம்சங்களை நான் திறந்த மனத்துடன் . . .

திரு. க. இராமமூர்த்தி : 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நாங்கள் இங்கே சில அரசியல் கட்சிகளைச் சார்ந்து அமர்ந்திருக்கிறோம். சில நாட் கள் இங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் எங்களுக்குத் தெரியாமல் போய்க் கொண் டிருக்கிறது. எந்த முறையிலே நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று முன்னரேயே அறிவித்தால் நன்றாக இருக்கும். ஏதோ ஒரு நாள் எங்களைப் பேச வேண்டும் என்று அழைத்துப் பேசவைப்பது, அப்புறம் இடையிலே குறுக்கீடுகள் செய்து கொண்டிருப்பது என்பது நல்ல தல்ல. பேச வேண்டாம் என்று சொன்னால் முன்னாலேயே சொல்லி விடுங் கள். இரண்டும் இல்லாமல், கடைசிவரையில் இப்படியே இருந்துவிட்டு, பேசாமல் வெளியே செல்லும் நிலைமை சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய உணர்வை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியிலே இருப்பவர்களுடைய எண்ணிக்கைக்குத் தக்கபடி யாருமே அதிக நேரம் எடுக்கவில்லை. எல்லாம் மொத்தமாகப் பார்த்து, ஒவ்வொரு கட்சிக்கும், ஒவ்வொரு குழுவிற்கும் எவ்வளவு நேரம் கொடுக்கலாம் என்று தீர்மானித்தால், அந்தக் குழுவிற்குள்ளே இருப்பவர்கள் தங்களுக்குள்ளே அந்த நேரத்தைப் பகிர்ந்துகொள்ளலாம். இதைப் பின்பற்றினால், அது எல்லோருக்கும் நலம் பயப்பதாக இருக்கும். இதைக் குறித்து, மாண்புமிகு தலைவர் அவர்கள் உடனடியாக 'பிசினஸ் அட்வைசரி கமிட்டி'-யைக் கூட்டி, இனிமேல் மொத்த நேரம் எவ்வளவு, அதிலே இவ்வளவு நேரம் இந்த இந்தக் கட்சிக்கு, அல்லது குழுவுக்கு என்று சொன்னால் நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய பெயர் கொடுக்கப்பட்டது. இப்போது அது எனக்குத் தெரியாமல் அடிக்கப்பட்டிருக்கிறது. பேச விட வில்லை என்று சொன்னால், 'நீங்கள் இன்றைக்குப் பேசப் போவதில்லை' என்று சொல்லலாம். அப்படிக்கூடச் சொல்லாமல் கடைசி நேரம் வரையில்





உட்கார வைத்துவிட்டு, பின்னர் பேசவிடப் போவதில்லை என்ற நிலைமை நல்லதல்ல. மாண்புமிகு தலைவர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். இதற்குத் தலைவர்தான் பதில் சொல்ல முடியும். எந்த முறையிலே, ஏன் மாற்றப்படுகிறது? அப்படித் தகவல் தாராமல் மாற்றும் அளவுக்கு என்ன அவசியம் இருக்கிறது?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தகவல் தாராமல் மாற்றப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : நேற்றைய முன்தினம் இவ்வாறு நடந்தது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இருக்கிற நேரத்தைக்கூட வரையறுக்காமல் ஒரு யதார்த்த நிலையிலேதான் இந்த அவை நடந்து வருகிறது. காலத்தைக்கூட கடுமையாக வரையறுக்காமல் நடத்துவது நமக் குள்ளே நல்லது என்ற அடிப்படையிலேதான் நடந்து வருகிறது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. தாஸ் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு திரு. முனு சாமி அவர்கள் பேசவிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் முதல் நாளே பேசியிருக்க வேண்டும். ஆனால், அவருக்கு எந்த விதமான தகவலும் தாராமல், பேசவிடவில்லை. அவர் அடுத்த நாள் பேசினார். திரு. முனுசாமி அவர்களுக்கும் தகவல் தாராமல் தள்ளப்பட்டு, அவர் இன்றைக்கும் பேச முடியாது என்ற நிலைமைதான் வரும் என்று கருதுகிறேன். எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பது புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் நடு நிலைமையோடு அணுக வேண்டும் என்பதிலே நாங்கள் நம்பிக்கை வைத்திருக் கிறோம். முதல் நாள் பேச வேண்டும் என்று பெயர் கொடுத்திருந்தால், அனுமதித்திருப்போம்.

திரு. க. இராமமூர்த்தி : பெயர் கொடுத்திருந்தும், பேச அனுமதிக்கப்பட வில்லை. நாள் பூராவும் உட்கார்ந்து இருந்துவிட்டுப் போய் விட்டார்கள். அடுத்த நாள்தான் பேசினார்கள். (குறுக்கீடு) I am very sorry இந்தத் தகவலைப் பொறுத்தவரையில், நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 8

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசி முடித்தவுடனே, திரு. முனுசாமி அவர்கள் பேசவிருக்கிறார்கள். இனிமேல் இப்படி நடக்காமல் இருப்பதற்கு, ஒருவகையிலே காலவரையறை செய்து விட்டால், இந்தக் குறைபாடுகள் எதிர் பார்க்காமலேகூட ஏற்பட வாய்ப்பு இருக்காது.

**திரு. க. இராமமூர்த்தி :** இஷ்டப்படி யாரை வேண்டுமானாலும் மாற்ற லாம் என்ற நிலைமை வந்துவிட்டால், அது நல்லதல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒருசில நேரங்களிலே 'மாற்றிக்கொள்ளுங்கள்' என்று நாங்களே கேட்கிறோம். இஷ்டப்படியல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுகூட கேட்கக்கூடாது என்பதுதான் என் னுடைய கருத்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதல் நாள் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசுவதாக இருந்தபோது, கொறடா அவர்கள் சொல்லி திரு. தாஸ் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்ற தகவலின் அடிப்படையிலேதான் அவர் மறுநாள் பேசியிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மாற்றங்களைப் பற்றியெல்லாம் எங்களுக்குத் தகவல் தர வேண்டும். அரசாங்கக் கொறடா உதவி செய்வதற்குத் தான் இருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்களுக்கு இருக்கிற குறைபாடு எங்களுக்கும் இருக்கிறது. நம் முடைய கொறடா அவர்கள், அன்றாடம் இன்னின்ன கட்சிகளில் இன்னார் இன்னார் பேசுவதற்கு இருக்கிறார்கள் என்று பெயர் கொடுக்கும்போது ஒத்துழைத்தால் இந்த மாதிரிப் பிரச்சினைகள் வராது. எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரையில், எங்களுடைய கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி விட்டால், யார், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில், எப்படிப் பேசுவது என்று எங்களுக்குள்ளே முடிவு செய்யலாம். சட்டமன்றத்திலேகூட அப்படித்தான் நடந்து வருகிறது. இன்றைய தினம் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. நீலநாராயணன் அவர்கள் அரை மணி நேரம்தான் எடுத்துக் கொண்டார்கள். இப்போது திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பேசும் போது, நேரமில்லை என்ற அளவிலே பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல ஒவ்வொரு கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கினால், நாங்கள் வசதிக்கேற்ப பகிர்ந்து கொள்ளலாம்.



1982 பிப்ரவரி 8]

* **DR. M. A. MUTHIAH CHETTIAR :** Mr. Deputy Chairman, I may be allowed to state the practice, as far as I know, that has been followed in the Lower House for more than 60 years. The Hon. the Leader of the House correctly stated that the Business Advisory Committee could fix the time allowed for each party and the members of the particular party could divide the time among themselves. It will be easy to allocate the time of the House. This can be done for the Budget discussion and I certainly endorse the views of the Hon. the Leader of the House. This has been the practice in the Lower House. In this House, we all functioned as members of a family and such allocation was not found necessary. If anybody insists upon following such a practice, we can follow the practice, which is followed not only in the Lower House but in such institutions all over the world.

(நண்பகல் 12-00)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஒரே நாளில் பலரும் பேசுவதற்கு விரும்பு வதாலும், குறித்த நேரத்தில் சில உறுப்பினர்கள் தங்கள் பேச்சை முடிக்க முடியாது போவதாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** I have a fundamental right. என்னுடைய பெயரை நான் கொடுத்தால், கொடுத்த அன்று எனக்குப் பேச வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்றால், அதற்கான காரணத்தை எனக்குச் சொல்ல வேண்டும். எனக்கே தெரிவிக்காமல், என்னுடைய பெயரை அடுத்த நாளைக்குத் தள்ளிப் போடுவதைத்தான் தவறு என்று சொல்லுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர் களை நான் சந்தித்து, தாங்கள் பெயர் கொடுத்திருந்தாலும், நிலைமை இப்படி இருக்கிறது, நாளைக்கு நீங்கள் பேசலாம் என்று கேட்டுக் கொண்டேன். அது அநேகமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். எனினும் இனி இப்படி ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் பேசுவதற்கு என்று நேரத்தை ஒதுக்கீடு செய்து கொடுப்பது முறையாக இருக்கும் என்றே நானும் கருதுகிறேன்.

[1982 பிப்ரவரி 8

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களைப் பொறுத்தவரையில், அவரிடம் கடைசி நிமிடத்தில் சொல்லி அடுத்த நாள் பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் விஷயத்தில் அப்படிக்கூட கேட்கப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களைப் பொறுத்தவரையில், அவரை மறுநாள் பேசும்படி நான் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் அரசாங்கக் கொறடா அவரிடம் கேட்டுக் கொண்டாரே தவிர, அவராகவே கூட அதைக் கேட்கவில்லை. எனவே அந்த வகையில் நான்தான் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசுவதற்குத் தள்ளிப் போனதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. திரு முனுசாமி அவர்கள் விஷயத்தில் இரண்டு நாட்களாகத் தள்ளிப் போவதற்கு என்ன காரணம்? அதைத்தான் கேட்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேச்சைத் துவங்கிய உடனேயே ஒரு தாராளமான விவாதம் இடையிலே நடைபெறுவதற்குத் தாங்கள் அனுமதி அளித்ததைப் போல் நான் பேசும்போதும் அதேபோன்று தாராள மனப்பான்மையைக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் என் பேச்சைத் தொடருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தீயைக் கொண்டே தீயை அணைக்கலாம் என்று கருதத் தேவையில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆக, அரசின் நல்ல நலத் திட்டங்களை நான் வரவேற்றுப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனினும் மற்ற ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே குறிப்பிட்டதைப்போல், ஆளுநர் அவர்களின் உரையில் ஆசிரியர்களைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் இல்லாதிருப்பது எங்களுக்கெல்லாம் வருத்தத்தைத் தருகிறது. அரசுத் தரப்பில் ஒருவேளை இப்படியும் நினைத்திருக்கலாம். ஆசிரியர்களின் பிரச்சினைகள் தான் மேலவையில் எப்போதும் அலசிப் பேசப்படுகின்றனவே, இந்நிலையில் தனியாக ஆளுநர் உரையில் எதையும் சொல்ல வேண்டாம் என்றுகூட நினைத்திருக்கலாம். என்ன இருந்தாலும், ஆளுநர் உரை என்பது அரசின் அடுத்த ஆண்டு கொள்கையைப்பற்றி அறிவிக்கும் உரையாக இருப்பதால், அதில்



1982 பிப்ரவரி 8]. [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஆசிரியர்களைப் பற்றிய அறிவிப்பு இருந்தால்தான், அது எங்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்கதாக இருக்கும் என்றும், இல்லையென்றால் உண்மையிலேயே வருத்தத்தைத் தரத் தக்கதாகத்தான் இருக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஆசிரியர்களின் கூட்டத்தில் ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதாவது ஆசிரியர்களுக்கு என்று தனியான வீட்டு வசதிக் கழகம் ஒன்று அமைக்கப்படுவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். காவல் துறையினருக்கு என்று ஒரு தனி வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டிருப்பதைப்போல், ஆசிரியர்களுக்கும் தனியான வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பது எங்கள் அனைவரின் கோரிக்கையாகும். எனவே இதைக் குறித்து அரசு சார்பில் வரும் நிதிநிலை அறிக்கையின்போதாவது நல்லதொரு அறிவிப்பைக் கொடுத்தால் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஆசிரியர்கள் பணியாற்றுகிற நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது தமிழகத்திலுள்ள மூன்று லட்சம் ஆசிரியர்களின் ஒட்டுமொத்தமான கோரிக்கை. எனவே அதைக் குறித்தும் அரசு அறிவிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட காலமாகவே தனியார் பள்ளி ஆசிரியர்கள் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் அலுவலர்களின் தொல்லைகளுக்காட்பட்டு வருகிறார்கள். இத்தகைய தொல்லைகளுக்கெல்லாம் காரணமாக உள்ள சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று நாங்கள் அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றுவரை தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் தனியார் கல்லூரிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் ஆகியவற்றிற்குள் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கும், உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் கல்வித் துறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததற்கு எங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இனியாவது அரசு விரைந்து உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 8

அதைப்போலவே அனைத்து மட்டத்தில் உள்ள ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையையும் அரசு பரிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இடைநிலை ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவர்கள் பெற்ற பயிற்சிக் காலத்திற்கு ஓர் ஊதிய உயர்வைக் கொடுத்து இந்த அரசு ஒரு புதிய சரித்திரத்தையே படைத்திருக்கிறது. எனவே அந்த வகையில் பலன் அடைந்த அனைத்து ஆசிரியர்களின் சார்பில் நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதைப்போலவே பயிற்சி பெற்ற மற்ற ஆசிரியர்களுக்கும், அதாவது உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அவர்கள் பயிற்சி பெற்ற காலத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் ஓர் ஊதிய உயர்வை வழங்கி நல்ல நீதியை வழங்க வேண்டும் என்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். 1—6—1981 முதல் இடைநிலை ஆசிரியர்களுக்கு 20 ஆண்டு பணிக்காலத்தைக் கணக்கிட்டு சிறப்பு நிலை வழங்கப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். அதைப்போலவே 20 ஆண்டு காலம் பணி முடித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஓராண்டு குறுகிய காலப் பயிற்சி கல்வித் திட்டத்தை நாங்களே உரிய முறையில் தயாரித்து, அதை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைக் குறித்தும் அரசு நல்லதொரு முடிவைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உடற்கல்வி ஆசிரியர்கள், பி.பி.எட்., எம்.பி.எட்., பட்டம் பெறுவதற்கு ஒரு பயிற்சித் திட்டத்தைக் கேட்டு வருகிறார்கள். அதையும் அரசு பரிசீலித்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முதல்நிலை உடற்கல்வி ஆசிரியர்கள் கொடுத்த கோரிக்கை இரண்டு மூன்று வருஷங்களாக அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு இந்த அரசின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. அறிவிக்கப்பட்ட ஆணைகள் இன்னும் அமுல்படுத்தப்படாமல் இருக்கின்றன.



1982 பிப்ரவரி 8] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அமுல்படுத்தினாலும், அதில் சிக்கல்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக ஆசிரியர்களிடையே மிகுந்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அரசு விரைவில் நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் 40,000 பேர் ஆசிரியர் பயிற்சிபெற்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். பள்ளிகளில் அவர்களின் பணி தேவைப்படுகிறது என்றாலும், அனுமதிக்கப்பட்ட இடங்கள் இல்லை என்ற காரணத்தால், அதிகமான இடங்களை அரசு உருவாக்கி, அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், பல சீர்திருத்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருப்பதை நான் மனமுவந்து பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் நான் அரசின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை இந்த அரசு, அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறது. அதன் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தி நிர்வாகத்தையும் செம்மைப்படுத்தியதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அதைப்போலவே இம்மாநிலத்தில் ஆதித் திராவிடர் நலத் துறைப் பள்ளிகள் இருக்கின்றன. பிற்பட்டோர் நலத் துறை சார்பாகப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. உள்ளாட்சித் துறை, வனத் துறை ஆகியவற்றின் சார்பிலும் பல பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவைகள் அனைத்துமே அரசுப் பள்ளிகள்தாம். ஆனால் அவைகள் அனைத்தையும் ஒரே துறையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரி வருகிறோம். இவ்வாறு ஒவ்வொரு துறையின்கீழும் சில பள்ளிகள் நடை பெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரி யர்களும் மாணவர்களும் பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள். இதனைப் போக்க உள்ள ஒரே வழி பல்வேறு நலத் துறைகளின்கீழ் செயல் படும் பள்ளிகளையும் உள்ளாட்சித் துறையின்கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளையும் வனத் துறையின்கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளையும் கல்வித் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதாகும். இது ஒரு நிர்வாக மாற்றம் சம்பந்தமான சீர்திருத்தம் என்ற காரணத்தால், அரசு இதை ஆதரவாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்வதோடு, இதன் மூலம் கல்வியின் தரத்தையும் நம்மால் உயர்த்த முடியும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்துவதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்தது பற்றி மேலவை உறுப்பினர்கள் பலர் கருத்து வேறுபா

களைத் தெரிவித்திருக்கிறார்கள். அண்மையில் "ஆனந்த விகடன்" பத்திரிகையில் கட்டுரை எழுதி சில பெரியவர்கள், அறிஞர்கள் இந்த அரசைச் சாடியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகங்கள் உண்மையான தன்னாட்சி பெற்ற, சுயாட்சி அமைப்பாக, கல்வி மேம்பாட்டைக் கருதி செயல்படுகிற அமைப்பாகச் செயல்பட வேண்டும், பல்கலைக் கழகத்தில் தனியார் ஆதிக்கமும் இருக்கக்கூடாது, அரசின் குறுக்கீடும் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து. தனியார் ஆதிக்கங்களைக் கட்டுப்படுத்த, அங்கே இருக்கின்ற ஒழுங்கீனங்களை நீக்குவதற்காக, பல்கலைக் கழகங்களில் உள்ள முறைகேடுகளைப் போக்குவதற்காக, பல்கலைக் கழகம் தன்னுடைய இலட்சியத்தை நோக்கி நடைபோடுவதற்காக அரசு சில நடவடிக்கைகளை எடுத்தேயாக வேண்டும். காரணம், அரசு கொண்டு வருகிற சட்டத்தால்தான் பல்கலைக் கழகங்களே உருவாகின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே அங்கே குறைபாடுகள் இருக்கும்போது, அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு சில நடவடிக்கைகளை எடுக்கும்போது, அதை ஆசிரியர் சமூகத்தின் சார்பாக நாங்கள் உளமார, மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பித்து யாராவது பேசினால், அதைப்பற்றி நாங்கள் கவலைப்படப் போவதில்லை. "ஆனந்த விகடன்" பத்திரிகையில் பெரியவர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்களைப் படித்து நாங்கள் உள்ளபடியே வேதனையடைகிறோம். அவர்கள் கல்வித் துறையைப்பற்றி, அதனுடைய மேம்பாட்டைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் பல்கலைக் கழகத்தின் இலாப நட்டக் கணக்கை மட்டும்தான் பார்க்கிறார்கள்; நட்டம் எதனால் வந்தது, தமிழக அரசு இதற்கு எவ்வாறு பொறுப்பு என்பதைப் பற்றி மட்டும் அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, கல்வித் துறை மேம்பாடுபற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்காக உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பல்கலைக் கழகம் என்பது சமுதாயத்தின் மூளை போன்றதாகும். அங்கே கோளாறு ஏற்பட்டால், சமுதாயத்தில் கோளாறு ஏற்படும். ஆகவே சமுதாயத்தின் மூளை போன்று இருக்கின்ற பல்கலைக் கழகத்தைச் செம்மைப்படுத்த அரசு எடுக்கக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே சமயத்தில் அரசின் தேவையில்லாத குறுக்கீடுகளையும், கல்விப் பணியில் அரசின் குறுக்கீடுகளையும் நாங்கள் ஆதரிக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்து, பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்துவதற்காக சென்ற ஆண்டு அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக தக்க சட்டத் திருத்தத்தை விரைவாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பல்கலைக் கழகங்களைப் பற்றி மேலும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பல்கலைக் கழகங்கள் அரசினுடைய நிதியுதவியைப் பெறுவதாலும் ஏழை எளிய மக்களுடைய வரிப் பணத்திலிருந்து அந்த நிதியுதவி தரப்படுவதாலும், அவைகள் சமுதாய உணர்வோடு கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு செயல்படத் தவறினால், சமுதாயத்தினுடைய செல்வாக்கையும், ஆதரவையும், நம்பிக்கையையும் இழந்துவிடும் என்பதை எச்சரிக்கையாக பல்கலைக் கழகம், பல்கலைக் கழகம் என்று கூப்பாடு போடுகிறவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே சமுதாய உணர்வை வளர்க்கிற பல்கலைக் கழகங்களாக, பிரச்சினைகளை அலசிப் பார்த்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய பல்கலைக் கழகங்களாக தமிழகத்தின் பல்கலைக் கழகங்கள் வளர வேண்டும். அப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களை உருவாக்குவதற்காக அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நாங்கள் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். ஆகவே அதைத் துணிவாக அரசு தொடர்ந்து செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்தில் வலியுறுத்துகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பி.ஏ., பி.எஸ்சி. போன்ற பட்டப் படிப்புகள் மூடப்பட்டு விட்டன. இது குறித்து நானே வழக்கு மன்றத்திலே வழக்கு தொடுத்திருப்பதால், அதைப்பற்றி இங்கே பேச விரும்பவில்லை. அது நாகரிகமாகாது என்பதால் அதைப்பற்றிப் பேசவில்லை. அவ்வாறு பட்டப் படிப்புகளை மூடுவதற்கு அவர்கள் சொன்ன காரணம், "ஆராய்ச்சி மையமாக பல்கலைக் கழகத்தை ஆக்கப் போகிறோம்" என்பதுதான். ஆராய்ச்சி மையமாக ஆக்க வேண்டும் என்பதை வரவேற்கிறேன். பல்கலைக் கழகத்தை ஆராய்ச்சி மையமாக ஆக்க வேண்டுமென்றால், பட்டப் படிப்புகளை வேறு இடங்களில் மாற்றி அமைத்திருக்கலாம். அதைச் செய்யவில்லை. பல்கலைக் கழகத்தை ஆராய்ச்சி மையமாக ஆக்க வேண்டுமென்றால், பல்கலைக் கழகத்தினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற துணை வேந்தர் ஆராய்ச்சி அறிவும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். ஆராய்ச்சி அனுபவம் இல்லாத துணை வேந்தர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும்போது, எவ்வாறு பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மையமாக ஆக முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. பல்கலைக் கழகத்தை ஆராய்ச்சி மையமாக ஆக்க வேண்டுமென்று அரசுத் தரப்பிலே கூறும்போது, அதற்கேற்ற துணை வேந்தரை அரசு நியமிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் துணை வேந்தரை நியமிப்பதிலே நிர்வாகம் வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஆராய்ச்சி மையம் என்ற பெயரிலே எப்படிப்

பட்ட தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை அரசு ஓரளவிற்கு உணர்கிறது. ஆனாலும் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்ட கொள்கையைப் பின்பற்ற முடியாது என்பதைத் தயவுசெய்து மனதிலே கொண்டால், நலமாக இருக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அவை முன்னவர் அவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு ஆராய்ச்சி அனுபவம் இல்லை.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, ஆராய்ச்சி அனுபவம், ஆராய்ச்சி அறிவு என்று எடுத்துக் கொள்வதைவிட ஆராய்ச்சி உணர்வு பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு இருந்தாலே போதுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆராய்ச்சி உணர்வு எல்லோருக்கும் இருக்கலாம். ஆராய்ச்சி அனுபவம், ஆராய்ச்சிப் பின்னணி இருந்தால்தான், சரியான முறையிலே அவர் பேராசிரியர்களுக்கு வழி காட்ட முடியும். ஆராய்ச்சி உணர்வு எல்லோருக்கும் இருக்கலாம். அது வேறு விஷயம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரைப் பற்றி சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னேன். இப்போது குறிப்பிட்ட ஒரு புகாரைச் சொல்கிறேன். இது உண்மையா என்பதை அரசு பரிசிலனை செய்தாலே போதும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: கூடுமானவரை இந்த அவையிலே வந்து பதில் சொல்ல முடியாத, தன்னாட்சி பெற்றிருக்கக் கூடிய அமைப்புகளில் இருக்கிறவர்களைப் பற்றிய குறைபாடுகளையும், குற்றச் சாட்டுக்களையும் எப்படிச் சொல்லுவது என்பதுபற்றி ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம். தயவு செய்து அதையும் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துணை வேந்தர் நியமனத்தைப் பொறுத்த வரையிலே, தமிழகத்தில் நல்ல பாரம்பரியத்தைப் பின்பற்றி வருகிறோம். வட மாநிலங்களில் ஐ.ஏ.எஸ். அலுவலர்கள்கூட துணை வேந்தர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் கவனத்திலே கொள்வது நல்லது. துணை வேந்தரைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கலாம், குறைபாடு இருக்கலாம். அந்த முறையிலே அவர் திருத்திக்கொள்ளலாம் என்று சொன்னால் நல்லது. ஆனால் அவர் மீது Prejudiced mind மாண்புமிகு உறுப்பினருக்கு வந்துவிடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அவர் மீது எனக்கு Prejudice இல்லை. அரசு பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்கிறது. ஆகவே பல்கலைக் கழகங்களைக் கண்காணிக்கிற, மேற்பார்வை செய்கிற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அரசின் தலையீடு, குறுக்கீடு இல்லா விட்டாலும்கூட, பல்கலைக் கழகங்களில் உள்ள அரசின் பிரதிநிதிகள் இதை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறேனே தவிர, அதற்காக அவரைப் பதவியிலிருந்து எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. உள்நோக்கம் இல்லாமல் சொல்லுகிறேன். நான் சொல்லும் குற்றச்சாட்டில் உண்மை இல்லையென்றால், அதற்காக மேலவையில் வருத்தம் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கடல்வாழ் உயிரியல் துறை இருக்கிறது. அதற்கு விசைப்படகு தேவைப்படுகிறது. பல்கலைக் கழகத்தினர் டாட்டா நிறுவனத்திற்குச் சொந்தமான விசைப்படகைப் பெறுவதற்காக முயற்சி செய்கிறார்கள். டாட்டா நிறுவனத்திற்குச் சொந்தமான விசைப்படகு அவர்களுக்கு 6 மாதங்களுக்கு மட்டுமே பயன்படுகிறது. அவர்கள் பயன்படுத்தாத 6 மாத காலத்தில் அதை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தள்ளிவிட முயற்சி செய்கிறார்கள். அந்த விசைப் படகைப் பராமரிக்க ஒரு நாளைக்கு இரண்டாயிரம் ரூபாய் செலவாகும். இதைப் பல்கலைக் கழகம்தான் ஏற்க வேண்டும். இந்தச் செலவு மறைமுகமாக தமிழக அரசின் மீது வரலாம். ஒரு நாளைக்கு இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து பராமரிக்க வேண்டிய விசைப் படகை பல்கலைக் கழகத்தின் தலையிலே சுமத்துவதற்காக ஒப்பந்தம் செய்ய துணை வேந்தருக்கு டாட்டா நிறுவனம் விமானத்திலே சென்று வர வசதி செய்து கொடுத்திருக்கிறது. டாட்டா நிறுவனத்தின் செலவிலேயே சென்று பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதைப்பற்றி அரசு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

முந்தைய பதிவாளர் மீது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே 30 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இடையிலே வந்த குறுக்கீடுகளைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. இப்போது ஓர் ஆணை வந்திருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பழைய பதிவாளர் திரு. கௌரிசங்கர் ராஜிநாமா குறித்தது அது. அதில்——

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 8

"Thiru Gowri Sankar is informed that his letter of resignation from the post of Registrar is accepted from 3rd December 1981. The Syndicate records its appreciation of the services rendered by him as Registrar. He is deemed to have been on other duty from 25th July 1980 to 3rd December 1981 and he will be paid salary less quarters rent, etc."

Thiru Gowri Sankar, formerly Registrar till 2nd December 1981, is now appointed as University Representative in Madras and is to take care of the University interests and be a liaison officer with the Government and attend to such other duties as may be entrusted."

என்று போடப்பட்டிருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இன்னும் இரு உறுப்பினர்கள் பேச இருப்பதால் சிக்கிரம் முடிக்கவும்.

(பிற்பகல் 12-20)

Liaison Officer என்ற ஒரு புதிய பதவியை ஏற்படுத்தி, அவருக்கு அந்தப் பதவியில் நியமனம் தரப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் நகல் இங்கே இருக்கிறது. அதை அரசினுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன். நான் எதற்காக இதைச் சொல்கின்றேன் என்றால், ஒரு பல்கலைக் கழக நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட வேண்டுமென்று நினைக்கும் போது, அதைச் செம்மைப்படுத்துவதற்குத் தகுதியுள்ள ஆட்கள் அங்கே வேண்டும். புதிய பதிவாளர் பூம்புகார் கலைக் கல்லூரியில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலே இருந்தவர், அங்கு முதல்வராக இருந்தவர், ஒழுங்கீனங்கள் செய்தவரை, சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகத்தின் கண்டனத்திற்கு ஆளான ஒருவரை, இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய பதிவாளராக நியமித்திருக்கிறார்கள். இதைத்தான் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறேன். மேற்கொண்டு அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக இதை விட்டுவிடுகிறேன். அதை நான் அரசின் பொறுப்பில் விட்டுவிடுகிறேன்.

கல்வித் துறையில் யாராவது தவறுகள் செய்தால், ஒழுங்கீனங்கள் செய்தால், கல்வி அமைச்சர் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களைச்



1982 பிப்ரவரி 8] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

சரியான பாதையில் செல்லச் செய்கின்ற அளவுக்கு ஆற்றலைப் பெற்றவர்கள், அமைச்சர் இவ்வளவு கடுமையான தீவிரமான நடவடிக்கை எடுக்கின்றவராக இருந்தும்கூட, திண்டிவனம் கல்வி மாவட்டத்திலே மாவட்டக் கல்வி அதிகாரியாக இருக்கின்றவர் செய்கின்ற ஊழல்கள், நடவடிக்கைகள், ஒழுங்கீனங்கள் அதிகமாக இருக்கின்றன. அவரைப்பற்றி அரசுக்கும் விவரங்கள் வந்திருக்கும். அவர் தொடர்ந்து ஒழுங்கீனங்கள் செய்து கொண்டிருக்கிறார். இதுகுறித்து ஒரு விசாரணை வேண்டும். அந்த திண்டிவனம் கல்வி மாவட்டத்தில் ஊழல்கள் புரிந்து வருகின்ற அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றச்சாட்டுகளை நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு நிபந்தனை, அவரை உடனடியாக அந்த இடத்திலிருந்து மாற்ற வேண்டும். அப்படி மாற்றிய பிறகு விசாரணை தொடங்க வேண்டும். அதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நலத் திட்டங்களைப் பொறுத்தவரையிலே, நான் ஒன்று அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்சி அரசிலும் சரி, நல்ல நலத் திட்டங்களைப் போடும்போது, இந்தத் திட்டங்களுடைய பலன்கள் மக்களுக்கு விரைவாகப் போய்ச் சேருவதில்லை. திட்டங்களின் பலன்களை விரைவாக மக்கள் அடைய வேண்டும் என்று சொன்னால், நம்முடைய நிர்வாக அமைப்பு முறை அதற்குக் குந்தகமாக இருக்கிறது. விரைவாக அதன் பலன்கள் மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்றால், சிவப்பு நாடா முறை ஒழிக்கப்பட வேண்டும். இந்தச் சிவப்பு நாடா முறை பல ஆண்டு காலமாக இருந்து கொண்டிருக்கின்றது. இது அரசுக்கும் தெரியும். இதிலே அரசு முனைந்து செயல்பட வேண்டும். அதை ஒழிக்க, மாற்ற என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அதற்கு என்று ஒரு குழுவை அமைத்து விவாதிக்க வேண்டும். அனுபவம் வாய்ந்தவர்கள் அனுபவங்களை வைத்து அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அறிந்து நல்ல நடைமுறைகளைக் கொண்டு வந்தால், சிவப்பு நாடா முறையை ஒழித்த பெருமை இந்த அரசுக்குக் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்தில் மற்ற அரசுகளால் செய்ய முடியாததை இந்த ஆட்சி செய்தது என்ற பெருமை அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதுபற்றிச் சொல்கிறேன். இது ஒரு மிகப் பெரிய சமூகப் பிரச்சினை. இதைக் குறித்து நான் விரிவாகப் பேசாவிட்டாலும், ஒரே ஒரு கருத்தை அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே 51 சதவீதம் பேர் இருக்கிறார்கள்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 பிப்ரவரி 8

அந்த 51 சதவிகிதம் என்பதை ஓர் ஆண்டில் 40 சதவிகிதமாகக் குறைப்போம் என்ற அளவில் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும். அப்படி 10 சதவிகிதத்தைக் குறைப்பதற்கு என்ன என்ன திட்டங்கள் வகுக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். 10 லட்சம் பேர்கள் வேலையற்றவர்கள் இருக்கின்றார்கள் என்றால், தமிழகத்தில் உள்ள அந்த 10 லட்சம் பேர்களை, 5 லட்சம் அளவுக்கு ஒரு ஆண்டில் குறைக்க வேண்டும் அல்லது இரண்டு ஆண்டில் குறைக்க வேண்டும் என்று திட்டம் வகுத்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இந்தக் கண்ணோட்டத்திலே அரசு செயல்பட்டால்தான், இதிலேயெல்லாம் முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நடவடிக்கை எடுத்தால்தான் எண்ணிக்கை குறையுமே தவிர, இல்லாவிடில் அந்த எண்ணிக்கை அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே படித்து பட்டம் பெற்ற பெண்கள் மொத்தம் 2,83,708 பேர் இருக்கிறார்கள். அதிலே கேரளா முதலிடம் வகிக்கிறது. 32,258 பேர் இருக்கிறார்கள். டெல்லி 31,305 பேர்கள், மேற்கு வங்கம் 30,698 பேர். நான்காவது தமிழ்நாடு 26,894 பேர். இது 30—6—1980 தேதி விவரப்படி கணக்கிடப்பட்டிருக்கிறது. பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். சமூக நலத் துறைத் தலைவர் அவர்கள்கூட இருக்கிறார்கள். இது அவர்களுடைய சிந்தனைக்குரிய கருத்து. இதற்கு என்ன செய்ய வேண்டும்? பெண்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, விவசாயப் பல்கலைக் கழகங்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சிறிய மாநிலங்களில்கூட இரண்டு, மூன்று விவசாயப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழகம் விவசாயத்தையே நம்பியிருக்கின்ற பிரதானமான தொழிலாக வைத்து வாழ்க்கை நடத்துகின்ற மாநிலம். இந்த மாநிலத்தில் ஒரே ஒரு விவசாயப் பல்கலைக் கழகம்தான் இருக்கிறது. ஆகவே செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு ஒன்றும், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் பகுதிக்கு ஒன்றும், திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டைப் பகுதிகளுக்கு ஒன்றும், இப்போது இருக்கின்ற கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, சேலம், தர்மபுரி பகுதிக்கு ஒன்றும் என்ற அளவில் பல்கலைக் கழகங்கள் இருக்க வேண்டும்.



1982 பிப்ரவரி 8] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, மாநில அளவில் திட்டக் குழு போடுவதை நான் பாராட்டுகிறேன். மாவட்ட அளவிலே திட்டக் குழு போட வேண்டும். Decentralisation என்பது முக்கியமானது. மாவட்ட அளவில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். மாநில அளவில் இருந்தால், நடவடிக்கைகள் சீக்கிரத்தில் எடுக்க முடிவதில்லை. ஆகவே மாவட்ட அளவில் திட்டக் குழுக்கள் அமைத்தால்தான், அந்தப் பணிகளை முழு அளவிலே செய்ய முடியும். அது நம் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகளைப் பொறுத்தவரையில், ஒரு வயது முதல் 10 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுக்கு வேண்டிய கல்வி, உணவு ஆகிய இரண்டும் அரசே கொடுக்கின்ற அளவுக்கு திட்டம் வேண்டும். அது ஒரு உன்னதமான திட்டமாக இருக்கும். இந்தத் தலைமுறையில் உள்ளவர்கள், முதியவர்களுக்கு நல்ல நிலைமையை உருவாக்காவிட்டாலும், அடுத்த தலைமுறையில் வருகின்ற பிள்ளைகள் நல்ல வாழ்க்கையைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆகவே ஒரு வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கல்வியும் உணவும் அளிக்கின்ற அளவுக்கு அரசே வாய்ப்பு வசதிகளைக் கொடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டால்தான் ஏழையெளிய மக்களின் குழந்தைகள் சிறந்த குழந்தைகளாக வளரும். அதற்கு என்று ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளைத் திறமையாக விருப்பு வெறுப்பின்றிச் செய்வதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளை அரசு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலே ஒரு அலுவலகம் இருக்க வேண்டும். அந்த உறுப்பினர் ஒரு அலுவலகம் வைத்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். அவருக்கு ஒரு நேர்முக உதவியாளர், Junior Assistant பதவித்தரத்தில் கொடுக்க வேண்டும். உத்தரப் பிரதேசத்தில் உள்ள வாய்ப்பைப்போல இந்த மாநிலத்திலும் மாநில முழுவதும் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தவிதமான வரம்பில்லாமல் ரெயில் பயணம் செய்யும் சலுகையைப் பெற்றுத்தர வேண்டும். பிளேன் பிரயாணம்கூட வேண்டாம். ரெயில் பயணத்திற்கு மாநிலத்திற்குள் போவதற்கு வசதி செய்து தர வேண்டும். இந்த வசதியை தமிழக அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செய்துதர வேண்டும். வேறு மாநிலங்களில் கொடுக்கின்ற வசதிகளைப் பற்றி ஆதாரங்களுடன் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்று உறுப்பினர்களுக்குத் தெரியாது. வாரப் பத்திரிகைகள் வாங்க வசதி செய்து கொடுத்தால், வசதியாக இருக்கும். அதற்கு என்று ஒரு படி கொடுத்தால், நலமாக இருக்கும். அல்லது பத்திரிகைகளை வாங்கிக் கொடுத்தாலும் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாகச் செய்வதற்கு வசதியாக இருக்கும். சட்டமன்றப் பணிகளைச் செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி வேண்டும். இந்த ஜனநாயக நாட்டிலே படித்தவர்கள், படிக்காதவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு இந்தப் பயிற்சி அவசியம். சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது பிரச்சினை என்று வந்தால், அதை அவர்கள் நேரடியாக அமைச்சர் அவர்களிடமே கொடுக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். நானே ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு பிரச்சினை அண்டர் செக்ரட்டரி அளவில் தீர வேண்டியதாக இருக்கிறது. அதுபற்றித் தெரியாமல் அதை அமைச்சரிடம் கொடுத்துவிட்டால், அது அவரிடமிருந்து அண்டர் செக்ரட்டரிக்கு வந்து, சில நாட்கள் கழித்து பதில் பெறவேண்டியதாக இருக்கிறது. அதற்குப் பதில் ஆறு மாதம் கழித்துத்தான் வரும். எனக்குக்கூட அதிலே அனுபவம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் நேரடியாகக் கொடுத்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும், காரியங்கள் முடிந்துவிடும் என்று நினைக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை உறுப்பினர்கள் பேசி முடிக்கும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஆக சட்டமன்ற உறுப்பினர்கள், எந்தெந்த மனுக்களை யார் யாரிடம் கொடுக்க வேண்டுமென்பதற்கு அனுபவமும் இல்லை, பயிற்சியும் இல்லை. அதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். முன்னாள் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட இதை வற்புறுத்தி வருகிறார்கள். அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி கொடுக்க வேண்டும். குறிப்பாக யார் யாரிடம் எந்தக் கோரிக்கைகளைக் கொடுப்பது என்பதில் பயிற்சி அளிக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

சிதம்பரத்திலே கென்னடி நர்சரிப் பள்ளி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், சிக்கல்கள் குறித்து நான் மாண்புமிகு முதல்வரவர்களிடம் இன்று காலை மனு கொடுத்திருக்கிறேன். அதற்கு ஆதாரமான சான்றுகளையும், புகைப்படங்களையும், துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக





மாண்புமிகு முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றைச் சமர்ப்பிக்கிறேன். இதில் நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* **திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது பேச வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் முதலிலே மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு சிறந்த முறையில் நடத்தப்பட்டது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த மாநாட்டின் சிறப்புப் பற்றி கடந்த ஆண்டில் பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை ஆதரித்தும், எதிர்த்தும் சொன்னார்கள். அப்போது நான் ஒரு கருத்தைச் சொன்னேன். "உலகத் தமிழ் மாநாட்டில் செலவழிக்கப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பங்கு அங்கே, மதுரையில், வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய குறைகள் நீங்க செலவழிக்கப்பட்டிருக்கின்றது, ஆகையால் இந்த மாநாட்டை நான் வரவேற்கிறேன்" என்று சொன்னேன். அந்த மதுரை உலகத் தமிழ் மாநாட்டின் அடிப்படையில் இந்த ஆண்டு தேசிய கவி பாரதியார் நூற்றாண்டு விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு குடியரசு நாள் அன்று, அரசு நடத்திய விழாவில் பாரதியாருடைய பொன்மொழிகளைத் தாங்கி பல அலங்கார வண்டிகள் அணிவகுப்பில் கலந்து கொண்டன. அவற்றுக்குப் பின்னால் ஆதித் திராவிடர் நலத்துறை சார்பாகவும், பழங்குடி மக்கள் சார்பாகவும் அலங்கார வண்டிகள் கலந்து கொண்டன. சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளாகியும், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோருக்காக அரசாங்கத்தின் மூலமாகப் போடப்படும் திட்டங்கள் உண்மையிலேயே அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறதா அல்லது அந்தத் திட்டங்களின் பயன்களை அந்த மக்கள் பெற்றார்களா என்று பார்க்கும்போது, உள்ளபடியே அவர்களுக்கு அந்தப் பலன்கள் கிடைக்கவில்லை என்பது தெரிகிறது. குடியரசு தின விழாவில் கலந்துகொண்ட அலங்கார வண்டிகளைப் பார்க்கும்போது, அது தெரிகிறது. சுதந்திரம் பெற்று பல ஆண்டுகளாகியும் அவர்கள் இன்னும் வளர்ச்சி பெறவில்லை. அவர்கள் முன்னேற்றம் அடையவில்லை என்று காண்பிக்கும் வகையில் அலங்கார வண்டிகள் நமக்கு அன்றைய தினம் காட்சியளித்தன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அந்த விழாவில் கலந்து கொண்டிருப்பார்கள். நமது முதலமைச்சரவர்களும், ஆளுநர் அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை அந்த அலங்கார வண்டிகளில் ஜோடித்திருக்கலாம். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி இருந்தார்களோ அதே ரீதியில் அலங்கார வண்டிகளிலும் வந்தார்கள். அரசு

[திரு. பி. முனுசாமி] [1982 பிப்ரவரி 8

ஒன்றைச் செய்திருக்கலாம். இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதித் திராவிட மக்கள், பழங்குடி மக்கள் இந்த நிலைமையில் இருந்தார்கள், சுதந்திரம் பெற்ற பிறகு அவர்களுடைய வாழ்க்கை, பொருளாதாரம் எல்லாம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லுமளவிற்கு அலங்கார ஊர்திகளில் காட்டியிருந்தால், நிச்சயமாக அதை நான் வரவேற்பேன். ஆனால் பழங்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்ந்ததுபோலவே அலங்கார வண்டிகள் ஜோடிக்கப்பட்டு, அணி வகுப்பில் கலந்து கொண்டன. ஆகையால் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் குடியரசு தின விழாவிலாவது, ஆதித் திராவிட நல இலாக்கா இதை மாற்றிக் கொள்ளுமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அரசாங்கம் பல கோடி ரூபாய்களைச் செலவு செய்கிறது. பல நன்மைகளைச் செய்கிறது. ஆனால் அலங்கார வண்டிகளைப் பார்க்கும்போது, அருவருப்பாக இருக்கிறது. ஒரு பக்கம் பழைய கால நிலைமையையும் மறு பக்கம் இன்றைய நிலையையும் காண்பிக்கும் வகையில் அலங்கார வண்டிகள் இருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு வறட்சியால் 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. அதற்கு மத்திய அரசு நியமித்த குழு தமிழகம் வந்து, பல மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்து, ஏறக்குறைய 48 கோடி ரூபாயை ஒதுக்கியது. தமிழக அரசும் அதற்கு மேல் 5, 6 கோடி ரூபாய்களைச் செலவழித்திருக்கிறது. அதற்காகப் பாராட்ட வேண்டியது தான். அதில் சில குறைபாடுகள் இருந்தாலும், மக்களுக்காகச் செலவழிக்கின்ற தொகை மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று இந்த அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றால் வறட்சி நிலையைப் போக்குவதை விடுத்து, ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்கள் வறட்சி நிலையைப் போக்கிக் கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதைப் போக்கும் வகையில், அரசின் நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. விலைவாசிப் பிரச்சினை குறித்து மத்திய அரசுமீது பழி போடக்கூடாது. விலைவாசிப் பிரச்சினையை மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்துதான் சமாளிக்க வேண்டும். மத்திய அரசுமீது பழி போட்டு, மாநில அரசு தப்பித்துக் கொள்ளக்கூடாது. குறிப்பாக ஓட்டல்களில் பண்டங்களின் விலையைக் குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கலாம். ஓட்டல் அதிபர்களுடன் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்துகிறோமென்று சொல்லுகிறார்கள். பேசுவதாகப் பத்திரிகையில் செய்தி வருகிறது. ஆனால் பேசுகிறார்களா, பண்டங்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறார்களா என்றால், இல்லை. இளைஞர் காங்கிரஸ் கட்சி சார்பாக ஆங்காங்கே நடக்கும் போராட்டங்களின் மூலம் பண்டங்களின் விலையைக் குறைக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அப்படி ஒரு கட்சி போராட்டம் நடத்துவதைவிட, பண்டங்களின் விலையைக் குறைக்க அரசே தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 8] [திரு. பி. முனுசாமி]

கிராமத் தன்னிறைவுத் திட்டம் தமிழக அரசு மூலமாக நிறைவேற்றப்படும் திட்டமாகும். நல்ல அருமையான திட்டம் அது. அதை வரவேற்கிறேன். அதன்மூலம் சாலை வசதி, இணைப்புச் சாலை வசதி, ஆதித் திராவிடருக்கு வீட்டு வசதி, பள்ளிக்கூடம் கட்டுதல், குடிநீர் வசதி போன்ற பல வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப் பாராட்ட வேண்டும். கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் நிறைய இருக்கிறது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-40)

ஏனென்று சொன்னால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை, தமிழகத்தைப் பொறுத்தவரை, இங்கு மற்ற மாநிலங்களைவிட வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகமாக இருப்பதாக மத்திய அரசின் உள்துறை மூலமாக வெளியிடப்பட்டிருக்கின்ற செய்தி மூலம் தெரிய வருகிறது. அதோடு கூட வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களைப் பொறுத்தவரையில் கூட, தமிழகத்தில் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக வாழ்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நிச்சயமாக பல தொழிற்சாலைகளை இந்த அரசு உருவாக்கியாக வேண்டும். இந்த அரசு பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றை மிகவும் வேகமாக உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். நமது மாபெரும் தலைவர் காமராஜர் நாள் ஒன்றுக்கு ஒரு தொழிற்சாலை என்கிற திட்டத்தை உருவாக்கி, நாடு பூராவும் பல பெரிய திட்டங்களை அமுல்படுத்தித் தந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஒரு நாளைக்கு ஒரு சாராயத் தொழிற்சாலையையும், சாராயக் கடையையும் உருவாக்கக் கூடிய

நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்றால், அரசாங்கம் திட்டங்களைப் போட்டு அவற்றைச் செயல்படுத்த வேண்டும். திட்டங்களை அமுல்படுத்துவதன் வாயிலாக மட்டும்தான் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க முடியும். இதற்கு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், அனல் மின்சாரத் திட்டம், புனல் மின்சாரத் திட்டம் என்று இருக்கின்றன. புனல் மின்சாரத் திட்டத்தின் மூலம் நாம் பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி விட்டதன் காரணமாக, அவை ஒரு முடிவுக்கு வந்துவிட்டன. அனல் மின்சாரத்துக்கு நிலக்கரி இன்னும் இயந்திரங்கள் எல்லாம் வேண்டும். வடக்கேயிருந்து நிலக்கரி போன்றவற்றை இங்கு கொண்டு வருவதற்கே 70 கோடி ரூபாய் வரை ஆகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அனல் மின்சாரத் திட்டத்தை நாம் நம்பியிருப்பதை விட, அணு மின்சாரத்தை அதிக அளவில் கொண்டு வருவதற்கு திட்டங்களை வகுத்து அவற்றை வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலி போன்ற இடங்களில் அந்தத் திட்டத்தை உருவாக்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு விரைவில் அமைக்க ஆவன செய்ய வேண்டும். சமீபத்தில் மத்திய அரசு அண்டை மாநிலங்களுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அதாவது நீர் மின்சாரத் திட்டத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு சப்ளை செய்கின்ற மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் சப்சிடி வழங்கப் போவதாக ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆக, அந்தத் திட்டத்தின் மூலம் அதிகமான அளவுக்கு மின்சாரத்தை அண்டை மாநிலங்களிலிருந்து பெறுகின்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு அண்டை மாநிலங்களோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று இந்த அரசைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்காவில் இப்போது 'வெயில் மின்சாரத் திட்டம்" என்கிற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் கிடைக்கின்ற மின்சாரத்தால் பல தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் ஆராய்ச்சி செய்து தமிழக அரசு அமுல்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10-ல் ஒரு பங்குதான் அதற்காகச் செலவாகும் என்றும் சொல்கிறார்கள். இதற்கான முயற்சியில் அரசாங்கம்



ஈடுபட்டால், மின் உற்பத்தி பெருகும். தொழில் வளர்ச்சி பெருகும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். ஆக, மிகவும் முக்கியமான இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், விரைவில் திட்டத்தின் பலன் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேரும் வகையில் கவனமாகச் செயலாற்ற வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு இருக்கிற ஆதித் திராவிடர் நல இலாக்கா ஓரளவுக்குச் செயல்படுகிறது. அது முழு அளவுக்குச் செயல்படவில்லையென்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அது செயலற்ற நிலையில் இருக்கிறது. அதை தமிழக முதல்வர் அவர்களே எடுத்து நடத்தப் போவதாக இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு பத்திரிகைகளில் செய்தி வந்தது. அப்படிச் செய்வது வரவேற்கக் கூடியது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆதித் திராவிட மக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைத்து அதன் மூலம் அவர்களுடைய நலனைக் காக்க ஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. 1974 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 30 ஆயிரம் வீடுகள் ஆதித் திராவிட மக்களுக்காகக் கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டு 5 ஆயிரம் வீடுகள் கட்ட ஒப்புதல் செய்யப்பட்டிருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டு 5 ஆயிரம் வீடுகளைக் கட்ட அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. ஆனால் 2 ஆயிரம் வீடுகள்தான் இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன. ஏன் இந்தக் காலதாமதம்? 30 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்று சொன்னால், இது முந்திய ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டம். இப்போது புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் வீடுகளை விரைவில் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதித் திராவிடர் நல இலாக்கா மூலமாக நடத்தப்படுகின்ற "வார விழா" வைப்பற்றி பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகிறார்கள். அதனை பல பத்திரிகைகள் இரண்டு மூன்று பக்கங்களில் பெரிய அளவில் வெளியிடுகின்றன. அதன் மூலம் பல ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அப்படிச் செய்ய வேண்டியதில்லை. அதுபோன்று அரசாங்கம் ஆயிரக்கணக்கில் அநாவசியமாகச் செலவு செய்வதை நிறுத்த வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற காரியங்களுக்கு விளம்பரங்களுக்காக இவ்வளவு முக்கியத்துவம் தந்ததில்லை. ஆதித் திராவிட மக்களுக்காக நடத்தப்படுகின்ற விழாக்களின்போது, சாதாரண போஸ்டர்களைத்தான் ஒட்டு

வார்கள். ஆனால் இன்றையதினம் தமிழகத்திலுள்ள அத்தனை பத்திரிகைகளிலும் இரண்டு மூன்று பக்கங்களில், இரண்டு மூன்று கலர்களில் விளம்பரமாக வெளியிடப்படுகிறது. மேலும் இரண்டு மூன்று வண்ணங்களில் போஸ்டர்களும் ஒட்டப்படுகின்றன. இதற்கெல்லாம் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். இப்படிச் செய்வதை நிறுத்திவிட்டு, அந்தத் தொகையை ஆதித் திராவிட மாணவர்களுக்காகச் செலவு செய்யலாம். அடுத்த ஆண்டிலிருந்தாவது இப்படியெல்லாம் ஆதித் திராவிட வார விழாவைக் கொண்டாடுவதை நிறுத்தி விட்டு, சாதாரணமாக எளிய முறையில் கொண்டாட வேண்டுமென்று நான் அரசாங்கத்தைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். 20 அம்சத் திட்டம் பாரதப் பிரதமரால் அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை இந்த அரசு வரவேற்றிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதை விரைவில், வேகமாக இந்த அரசு செயல்படுத்த வேண்டும். எனக்கு இந்த வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நேரத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்காக என்னை அழைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில், இந்த அவையில் நான் எவ்வளவு நேரம் பேசுவது என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்கு ஏற்றாற்போல் பேசியாக வேண்டுமென்ற உணர்வோடு ஒருசில கருத்துக்களை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி மட்டும் சில பல கருத்துக்களை இங்கே சொன்னார். அவர் அரசியல்வாதியாகப் பேச மாட்டார் என்றுதான் நான் கருதிக்கொண்டிருந்தேன். அவர் ஆளுநரால் நியமிக்கப்பட்டவர். ஆளுநர் உரையிலுள்ள நியாயங்களைச் சொல்லுவார், ஆளுநருக்காக அவர் பேச வேண்டியவர், ஆகவே அதிலுள்ள நல்ல கருத்துக்களை இங்கே பேசுவார் என்று நான் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ, அவர் உட்கார்ந்திருக்கின்ற இடத்தின் காரணமாகவோ என்னவோ, சிரித்துக்கொண்டே மிக சாதாரணமாக "ஆளும் கட்சிக்காரர்கள் வறட்சியைத் தீர்த்துக்கொள்கிறார்கள்" என்று இங்கே குறிப்பிட்டார்

(பிற்பகல் 12-50)

அதை வேறு யாராவது சொல்லியிருந்தால், சண்டை வந்திருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் சொன்னதால், அது ஒரு பெரிய





பிரச்சினையாகவில்லை. ஆளும் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள் மிகவும் வறட்சியானவர்கள்தான். நீண்ட காலமாக வறட்சியிலே இருந்து கொண்டுதான் இந்த இயக்கத்திலே வந்திருக்கிறோம். நிலச்சுவாந்தார்களிடத்திலே, மிட்டா மிராசுதார்களிடத்திலே, பெரிய பணக்காரர்களிடத்திலே கையைக் கட்டிக்கொண்டு வாழும் நிலையிலே இந்த இயக்கம் இல்லை. மிட்டா மிராசுதார்களை, நிலச்சுவாந்தார்களை எதிர்க்கத்தான் இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். எங்களைப் பார்க்கும்போது, அவர்களுக்கு வறட்சியாகத்தான் தெரியும். ஆனால், சில நேரத்தில் சிலருடைய சட்டைகளைப் பார்த்து வறட்சி போய்விட்டது என்றுகூட நினைக்கலாம். சட்டையை மாற்றி வேறு சட்டை போட்டிருப்பதால், பளபளப்பாக இருக்கலாம். அவர்கள் இருக்கும் இடத்திலேயும் இந்த நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன்.

ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அனைத்திற்கும் விளக்கம் சொல்ல முடியாவிட்டாலும், இன்றைக்கு சாதாரணமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்கவில்லை என்று சொல்லி கூட்டுறவு முறையில் விற்பனை செய்து லாபங்களை அவர்கள் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் அவர்களின் இந்தக் கருத்து மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தக் கருத்தை விளக்கமாக, பல்வேறு கோணத்திலிருந்து பரிசீலனை செய்து நிலைமைகளை எடுத்துச்சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இந்த அவையிலே அதை எடுத்துக் கூற முடியும் என்று கருதினேன். நாம் பல வகையிலே சிந்தித்திருக்கலாம். பல்வேறு பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கலாம். இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்குக் கிடைக்கும் விலை மிகவும் குறைவு. அந்த விவசாயி தான் விளைவிக்கும் நெல்லை விற்றுவிட்டு, அரிசி வாங்கும்போது 4 மடங்கு அதிகமாக விலை கொடுத்து வாங்கும் நிலைமையில் தான் இன்றைக்கு இருக்கிறான். கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதைப்போல, இடைத்தரகர்கள், இடையிலே புகுந்துகொண்டு அதிக விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் அப்படி அதிகமாக விலையை வைப்பதால், கூட்டுறவு விற்பனை சங்கங்களை விவசாயிகளே ஆரம்பிக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கிற ஆசை எல்லாம், இந்த அரசு இந்த முயற்சியிலே வெற்றி பெற வேண்டும் என்று சொன்னால், விற்பனை செய்வதற்காக ஆரம்பிக்கப்படும் கூட்டுறவுச்

சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்போது, அடிப்படையாக இருக்கும் ரைஸ் மில்களை அரசின் கைக்குக் கொண்டுவர வேண்டும். விவசாயி உற்பத்தி செய்யும் நெல்லை அவனே வைத்துக்கொண்டு, அவனே அரைத்து விற்றால், அதிலிருந்து கிடைக்கும் லாபம் அந்த விவசாயிக்கே போய்ச் சேரும். நெசவாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு இப்போது பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. உற்பத்தி செய்யும் துணியை விற்கும்போது வரும் லாபம் இப்போது அவர்களுக்கே கிடைக்கிறது. அந்த நிலைமை விவசாயிகளுக்கும் வரவேண்டும் என்ற அடிப்படையில் முயற்சி எடுத்திருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். ஆனால், அந்தத் திட்டத்தை நல்ல முறையிலே சிந்தித்துச் செயல்படுவதற்கு வழிவகைகளைக் கூற வேண்டிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைச் சொல்லாமல், குறைகளைச் சொல்லும்போது, அதற்கு விளக்கம் தருவது மிகவும் அவசியமாகிறது.

மின்சாரத்தைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார் தொழிலுக்குத் தேவையானபோது, அதை அவர்களே உற்பத்தி செய்யும் வாய்ப்பு கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் தொழிலுக்குத் தேவையான மின்சாரத்தை அவர்கள் உற்பத்தி செய்வதற்கு அவர்களை அனுமதிக்கலாமா என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், உடனே பேசுகிறவர்கள், மின்சார வாரியம் விலைக்குப் போகிறது என்று சொல்கிறார்கள். கன்னியாகுமரியிலே இருப்பவர்கள் 'மின்சார வாரியம்' விலைக்குப் போகிறது என்று சொல்லும் அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. எதை ஆரம்பித்தாலும் ஊழலிலே ஆரம்பித்து, ஊழலிலே முடித்து விளம்பரம் தேட வேண்டும் என்று பேசுகிறார்களே தவிர, இந்த நோக்கத்திலே இருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டும் அளவிலே இல்லை. மின்சார வாரியத்தை விற்கப் போகிறார்கள் என்று சொல்லும் போது, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருப்பவர்கள், அண்ணா சாலையிலே இருக்கும் மின்சார வாரியம் விற்பனை ஆகிவிட்டதா என்று கேட்கும் நிலைக்கு . . . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் யாரும் மின்சார வாரியத்தை விற்கப் போவதாகப் பேசவில்லை. பேசாத ஒன்றைப்பற்றிப் பேசி நேரத்தை வீணாக்கவேண்டுமா ?

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறுக்கிட்டுவிட்டார்கள். இங்கே சொல்லாத ஒன்றை நான் சொல்ல மாட்டேன்.



**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஒரேயொரு விளக்கம் சொல்ல வேண்டும். ஆளுநர் அவர்களின் உரையிலே இருக்கின்ற வார்த்தைகள் தனியார் இலாபகாரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களேயானால், அரசு அதைப் பரிசீலிக்கும் என்பது. தங்களுடைய தொழிலுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டிருப்பது என்பது இப்போதும் இருக்கிறது. இது புதிதாகக் கொண்டுவரும் ஒன்றல்ல. ஆனால் இலாபகாரமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதென்றால், உற்பத்தி செய்கின்றவர் அதை விநியோகம் செய்கின்ற முறையிலேதான் லாபம் பெற முடியும். ஆகவே, அதற்குப் பொருள் என்ன என்பதுதான் பிரச்சினை. படித்த அத்தனை பேருக்கும் இது புரியும். வேறு ஏதாவது பொருள் இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், மின்சார வாரியம் எப்படி அரசின் கைக்குள்ளே இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். சொல்லவேண்டிய கருத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். பந்தை எடுத்து வீசியெறிந்துவிட்டு, பின்னர் சொல்லாமல் இருப்பது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தனியார் இலாபகாரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களேயானால், அரசு பரிசீலித்துப்பார்க்க விரும்புகிறது என்பதற்கு விளக்கம் கேட்கிறார். இந்த வகையில் மத்திய அரசு ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அநேகமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அதைத் தெரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். தனியார் லாபகரமாக உற்பத்தி செய்ய முன்வந்தால், அவர்களுக்கு ஊக்கம் தரலாமா என்று மத்திய அரசும் பரிசீலித்து வருகிறது. 'டாட்டா'-வும் இப்போது மின் உற்பத்தி செய்ய முன்வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்களுடைய கருத்து என்னவென்று விளக்கினால் நல்லது.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்தக் கருத்தை நான் பேசும்போது விளக்குகிறேன். ஆளுநர் உரையின் மீது தவறாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறாரே என்பதுதான் பிரச்சினை.

**திரு. ஆ. நல்லசிவன் :** மின்சார உற்பத்தியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசினார்கள். அரசின் கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டும். தொழில் துறையில் சொந்தத் தொழிலுக்குத் தேவையான அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்கிறதா ? எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் மற்றும் விநியோகம் முழுவதும் எலக்ட்ரிசிட்டி போர்டின் பொறுப்பிலேதான் இப்போது இருக்கிறது. மின்சார வெட்டு இருந்தபோது, தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிக்கப்படக்கூடாது

என்பதற்காக, போதுமான அளவுக்கு எலக்ட்ரிசிட்டி போர்டால் சப்ளை பண்ண முடியாது என்ற நிலைமை இருந்தபோது மட்டும், ஜெனரேட்டர்கள் அனுமதிக்கப்பட்டன. அதை விட்டுவிட்டு, இப்போது முழுவதும் எலக்ட்ரிசிட்டி போர்டை நம்பியிருக்க வேண்டாம், மின்சார வெட்டு இல்லாத பிற காலங்களிலுமே அவர்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று அரசு அனுமதிக்க இருக்கிறதா? எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷனைப் பொறுத்தவரையில், பப்ளிக் செக்டருக்கு மாற்றக்கூடிய கொள்கையை அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதா? இதைத் தெளிவாக்க வேண்டும். எலக்ட்ரிசிட்டி போர்டால் சப்ளை பண்ண முடியாது என்ற நிலைமை வந்த காலத்திலே, பாக்டரிகள் மூடப்பட்டுவிடக்கூடாது என்ற அளவிலேதான் இந்த நடவடிக்கைகள் முன்பு எடுக்கப்பட்டன. தனியார் இலாபகரமாக உற்பத்தி செய்ய முன்வந்தால், அப்படி உற்பத்தி செய்யும் மின்சாரத்தை எலக்ட்ரிசிட்டி போர்டு வாங்கி சப்ளை செய்யலாம் என்று அரசு உத்தேசித்திருக்கிறதா? அல்லது, பொதுவாக தனியார் துறையிலே உற்பத்தியைச் செய்து, போர்டிலே இருந்து சப்ளை செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைவாகத் தந்தால், அதை வாங்க சர்க்கார் தயாராக இருக்கிறதா?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-00)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மின் வாரியத்தைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்தவன் என்ற வகையில் ஒரு விவரத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னர் மின்சார விநியோகம் என்பது தமிழகத்தில் ஐந்து கார்ப்பரேஷன்களிடம் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆன உடனே, மின்சார விநியோகம் தனியாரிடம் இருக்கக்கூடாது என்று கருதி, அதனைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று விரும்பி, இப்பணியை மின்சார வாரியமே மேற்கொள்ள வேண்டும் என்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். அண்ணா அவர்கள் கொண்டு வந்த சூழ்நிலையை மறந்துவிட்டு, இப்போது மின்சார உற்பத்திக்கே தனியாரை நம்பிக்கொண்டிருப்பதற்கு ஏதுவாக ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறதே, இது சரிதானா என்றுதான் கேட்கப்பட்டதே தவிர, வேறல்ல. அது மட்டுமல்ல, மின் வாரியத்தையே விற்றுவிட்டதாக இங்கே யாரும் பேசவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



**திரு. எஸ். ஆர். இராதா :** நான் பேசிய பேச்சுக்கு நான்கு உறுப்பினர்கள் குறுக்கிட்டிருக்கிறார்கள். நான் நால்வருக்கும் பதில் சொல்ல வேண்டும். என்னுடைய நிலை அவ்வளவு பரிதாபமாகிவிட்டது!

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உங்களுக்காக நான்கு பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்! (சிரிப்பு)

**திரு. எஸ். ஆர். இராதா :** அது மாற்றப்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். பகுத்தறிவு மிக்க இந்தக் காலத்திலும் நான்கு பேருக்குக் காத்துக் கொண்டிருக்கும் நிலையில்லாமல், தானே போகிற நிலை இருக்க வேண்டும். ஒருவரையும் நம்பிக் கொண்டிருக்கும் நிலை இருக்கக்கூடாது!

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் தவறான பொருளில் சொல்லவில்லை. ஊரில் இருக்கிற அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல விரும்பினேன். அதற்குத்தான் நாலு பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நானும் அதைத்தான் சொல்கிறேன். இனியும் நான்கு பேரை நம்பி வாழ்வது என்பது இருக்கக் கூடாது. தானாகப் போய், தனியாக முடித்துக்கொள்கிற நிலை வர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் என்னைப் பார்த்து ஒரு வினா எழுப்பியிருக்கிறார். அது அவருக்குள்ள, அவருடைய கட்சிக்குள்ள இயற்கையான எண்ணத்தின் அடிப்படையில் எழுந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவர்களுக்குள்ள கவலையின் அடிப்படையில் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். கவர்னர் உரையில் "தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால், அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்கவும் விரும்புகிறது" என்று சொல்லப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தேகம் உண்டாகியிருக்கிறது. இருந்தாலும் நான் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், இதற்கொரு நல்ல பாரம்பரியம் உண்டு. இங்கே யாரும் வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு, அதன் மீது ஆராய்ச்சி நடத்துவதில்லை. பலரும் பல யோசனைகளைச் சொல்வார்கள். அரசுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லுகிற அவை இது. ஆனால் இன்றையதினம் இங்கே பலர் வார்த்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்களே தவிர,

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 பிப்ரவரி 8

அரசுக்கு உருப்படியான யோசனை ஏதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில் நான் என்ன சொல்லுகிறேன் என்பதல்ல பிரச்சினை. எதிர் வரிசையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கு என்ன யோசனை சொல்லுகிறார்கள் என்பதுதான் கேள்வி. இந்த மன்றத்தில் ஆளுநர் உரையின் மூலம் அரசு ஒரு கருத்தை எடுத்து வைத்திருக்கிறது. அதை எந்தெந்தக் கட்சி எந்தெந்த வகையில் ஆதரிக்கிறது என்பதை நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம். அரசாங்கத்தின் மூலம் செய்யும் மின்சார உற்பத்தி போதுமானதாக இல்லை என்றோ, அல்லது அரசின் விநியோகம் சரியில்லை என்றோ அல்லது இது தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதானால் அதற்கு இன்னின்ன கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென்றோ யாராவது யோசனை சொல்கிறார்களா என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லாமல் மின்சார வாரியமே விலைக்குப் போகிறது என்று பேசுவது எந்த வகையிலும் சரியில்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் மின்சார வாரியமே விலைக்குப் போகிறது என்று பேச ஆரம்பித்த போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அவையில் இல்லை என்று கருதுகிறேன். உடனே நாங்கள் குறுக்கிட்டுப் பேச வேண்டிய நிலை அப்போது ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் இதற்கு ஒரு நீண்ட விளக்கம் சொல்ல வேண்டி ஏற்பட்டது. எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இதைத் தடுக்காவிட்டால், இதையும் "கப்பல் பேர ஊழலைப்போல்" உருவாக்கிவிடுவார்கள். கப்பல் வாங்கப் போகிறோம் என்று சொன்ன உடனே இவர்கள் என்ன செய்தார்கள் என்பதை நாம் அறிவோம். நாடெங்கும் கப்பலைத் தொங்கவிட்டு, கப்பல் பேரத்தில் பெரிய ஊழல் நடந்துவிட்டது என்று பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அதன் விளைவு என்னவாயிற்று என்றால், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் கப்பல் பேர ஊழல் என்னவாயிற்று என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இன்றையதினம் அதனால் எத்தகைய நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கப்பலின் விலையில் சுமார் 10, 12 கோடி ரூபாய் அதிகமாகிவிட்டது. ஊழல் குற்றம்சாட்டியவர்கள் யாராவது இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளப் போகிறார்களா? நாடு முழுவதும் கப்பலைத் தொங்கவிட்டு, வேடிக்கை பார்க்கிற கப்பலாக அதைச் செய்தார்களே தவிர, ஏதாவது உருப்படியான யோசனையைத் தெரிவித்தார்களா என்றால் இல்லை. எனவே, குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது கொஞ்சம் யோசித்துச்



1982 பிப்ரவரி 8] [திரு. எஸ். ஆர். இராதா]

சொல்ல வேண்டும். குற்றச்சாட்டுக்களைச் சொல்லவே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. விவாதிக்கிறபோது நல்லவைகளைப் பாராட்டட்டும், குற்றங்கள் இருந்தால் எடுத்துச் சொல்லட்டும். இந்த அரசு சொல்லும் அனைத்தையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிற அரசல்ல இங்கே இருப்பது. தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள் என்று சொல்லுவதுதான் இந்தப் புரட்சித் தலைவரின் அரசு. அப்படிக் குற்றம் குறைகள் சொல்லப்படும்போது, எங்களையும் பார்த்து "இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்கிற நிலையில்தான் எங்கள் புரட்சித் தலைவர் இருக்கிறாரே தவிர, "இவர் யார் கேட்பதற்கு" என்ற பழைய பாணியில் இப்போது இங்கே யாருமில்லை. இதை மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நன்கு உணர வேண்டும். எனவே நாங்கள் செய்வதில் நல்ல அம்சங்கள் இருந்தால் பாராட்டட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் பேசும்போது, இந்த அரசு புதிய 20 அம்சத் திட்டத்தை வரவேற்பதைப் பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இங்கே பலருக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. எனக்கும்கூட அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் உள்ள மக்களில் பலருக்கும் இந்தச் சந்தேகம் ஏற்பட்டிருக்கக்கூடும். புதிய 20 அம்சத் திட்டம் என்றால் பழைய 20 அம்சத் திட்டம் என்னவாயிற்று? அதற்கும் இதற்கும் வேறுபாடு உண்டா? பழைய 20 அம்சத் திட்டத்தில் என்ன செய்தார்கள், இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தின்கீழ் என்ன செய்ய இருக்கிறார்கள் என்று கேட்கிற நிலை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசைப் பார்த்துக் கேட்பதாக யாரும் எண்ண வேண்டாம் . . .

திரு. ஆ. நல்லசிவன் : பழைய 20 அம்சத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரின் கருத்து என்ன? பழைய 20 அம்சத் திட்டம் நிறைவேற்றப் பட்டு, இந்தப் புதிய 20 அம்சத் திட்டம் வந்திருப்பதாகத்தான் உறுப்பினர் கருதுகிறாரா அல்லது பழைய 20 அம்சத் திட்டமே போதும் என்று கருதுகிறாரா? புதிய 20 அம்சத் திட்டம்தான் சரி என்று சொல்லுகிறாரா? அவருடைய கருத்து என்ன என்று சொன்னால், நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : என்னைக் கேட்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தாம் ஏதாவது சொல்லுகிறாரா என்பதுதான் என்னுடைய கேள்வி. நான் சொன்னது, நாட்டிலே உள்ள பொதுமக்களுக்கு இப்படிப்பட்ட சந்தேகங்கள் வருகின்றன என்பதுதான். இந்த அரசைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்தப் புதிய நல்ல கொள்கையையும்

வரவேற்கிறோம். அதிலே வேகத்தையும் முனைப்பையும் நாங்கள் காட்டு கிறோம். இதுதான் எங்கள் நிலை. இப்படி நல்ல கொள்கைகளைச் சொல்லும் போது, அவற்றை ஏற்றுச் செயல்பட விரும்புகிறோமே தவிர, அவர்கள் சொல்லுகிற எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு எதற்கெடுத்தாலும் "ஆமாம் சாமி" போடுகிற நிலையில் எங்கள் கட்சி இல்லை, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது 20 அம்சத் திட்டத்ின்கீழ் விவசாய நிலங்களைப் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைச் செய்தால்தான் ஒரு அரசு முற்போக்கான நிலையை உருவாக்க முடியும் என்கிறார்கள். அதன் அடிப்படையில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுகிற நிலையை உருவாக்கியதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதே அடிப்படையில், அதாவது நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தவறான முறையில் நிலத்தைப் பங்குபோட்டுக் கொண்டதை எதிர்த்து இங்கே நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்பினால், அதில் கையெழுத்துப் போட மாட்டேன் என்கிறார்கள். கேட்டால் 20 அம்சத் திட்டம் அதில் வரவில்லை என்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில், 20 அம்சத் திட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதன் அடிப்படையில்தான் இங்கே ஒரு சட்டத்தை உருவாக்குகிறோம். உருவாக்கி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினால், "நீங்கள் இதைச் சரியாகச் செய்யவில்லை" என்று சொல்கிறார்கள். ஏதோ நோக்கத்திற்காகச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் அவன் ஒரு முறையை வைத்திருந்தான். அவன் நினைத்தவருக்கெல்லாம் பட்டா போட்டுக் கொடுத்தான். ராஜாக்களையும் மிராசுகளையும் அழைத்து, கண்ணுக்குத் தெரிகிற அளவுக்கு நீ வேலி போட்டுக்கொள், அந்த இடம் அனைத்தும் உனக்குச் சொந்தம் என்று சொல்லிவிட்டான். அதைப்போலவே சென்னை போன்ற பகுதிகளில் மிட்டா மிராசுகளை அழைத்து மாடு போகிற அளவுக்கு வேலி போட்டுக்கொள் என்று சொல்லி அந்த நிலத்தையெல்லாம் அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்தான். அதுமட்டுமல்ல. இரவு நேரத்தில் விருந்து கொடுத்தவர்களுக்கெல்லாம் அவர்களுக்கு வேண்டிய அளவு நிலத்தைக் கொடுத்தான். எனவேதான் இத்தகைய நிலைமைகளையெல்லாம் நாம் மாற்ற வேண்டும் என்று எண்ணி நில உச்ச வரம்புச் சட்டம் என்றும், நிலச் சீர்திருத்தச் சட்டம் என்றும் கொண்டு வந்தோம். வந்த சட்டத்தில் ஏற்பட்ட தவறு என்னவென்றால்—இன்றைக்கும் அது எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது—மறைந்த திரு. காமராஜர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதாக அறிவிப்புக் கொடுத்தபோது



தஞ்சை மாவட்டத்தில் அதற்கு முன்னாள் ஒரே நாளில் மட்டும் ரூ. 14 லட்சத்திற்கு பத்திரங்கள் விற்பனையாகி, பதிவு செய்யப்பட்டது. அவர்கள் யார் யார் என்பதை நான் பெயரோடு சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குக் கோபம் வரும். மூப்பனாரும், வாண்டையாரும் . . . .

திரு. க. இராமமூர்த்தி : இப்போதே நீங்கள் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க கையாலாகாமல் இருக்கிறீர்களே, அதற்கு என்ன காரணம் ?

திரு. எஸ். ஆர். இராதா : கேள்வி கேட்பது என்பது சுலபம். அன்றைய தினம் உண்மையாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்களுக்கு உண்மை நிலை தெரியும் . . .

திரு. க. இராமமூர்த்தி : தயவுசெய்து நான் கேட்டதற்குப் பதில் சொல்ல வேண்டும். இதையெல்லாம் பேசிப் பேசித்தான் ஆட்சிக்கு வந்து சட்டத்தைப் போட்டீர்கள். சட்டத்தைப் போட்டு கையிலே வைத்துக் கொண்டு அந்தச் சட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்க இயலாதவர்களாக, கையால் ஆகாதவர்களாக, ஏன் இருக்கிறீர்கள் ? கையூட்டு காரணமாக இதில் செயல் படாமல் இருக்கிறீர்களா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆர். இராதா : அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொஞ்சம் வேகத்தோடு பல வார்த்தைகளைச் சேர்த்துப் பேசியிருக்கிறார். அப்படிப்பட்ட வார்த்தைகளைப் போட்டுப் பேசுவது நல்லதல்ல என்று நான் ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அதிலிருந்து தன்னை மாற்றிக்கொள்ள வேண்டாம்.

திரு. எஸ். ஆர். இராதா : நேரத்திற்குத் தகுந்தாற்போல பேச வேண்டு மென்று ஆரம்பத்திலேயே சொன்னேன். "கையூட்டு" என்ற வார்த்தையை அவருக்கே உள்ள பாணியிலே சேர்த்திருக்கிறார். அதற்காக நான் வருத்தப்

படவில்லை. வேகமாக இருக்க வேண்டியவர், வேகமாக இருக்கிறார். என்னுடைய கேள்வி, இருபது அம்சத் திட்டத்திலே வருவதை நிறைவேற்றுவது ஒரு அரசின் கடமையா இல்லையா? அப்படி நிறைவேற்றுகிற நேரத்தில், "கையால் ஆகாதா" என்று கேட்டால், கையால் ஆவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று உடனடியாக அவரைப் பார்த்து எங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறது. மத்திய சர்க்கார் என்று பேசினாலே அதற்கு வக்காலத்து வாங்குகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புகள், வழிவகைகள், விதிகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு நீங்களும் உங்கள் அரசும் ஏன் அதைச் செயல்படுத்தவில்லை என்பதுதான் என் கேள்வி.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த அரசினிடத்திலே இருக்கின்ற சட்டத்திலே, வசதியிலே, வாய்ப்பிலே எங்கே தவறு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் . . .

திரு. க. இராமமூர்த்தி : நில உச்சவரம்புச் சட்டத்திலே அதற்கான பிரிவுகள் இருக்கின்றன. அந்தச் சட்டப் பிரிவின்படி இவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. இதற்கான பதிலை இது வரை மாண்புமிகு உறுப்பினரும், அமைச்சர்களும் கூட தெளிவாகச் சொல்லவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : என்னைப் பொறுத்தவரையில், நான் தெளிவாகச் சொல்கிறேன். நான் சொல்லுவதில் அவருக்குப் புரிகிற வகையில் தெளிவு இல்லையென்றால் நான் ஏற்றுக்கொள்வேன். உறுப்பினர் அவர்களைப் புரிந்துகொள்ள வைக்கிற அளவிற்கு எனக்குத் தகுதி இல்லாமல் இருக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : குறிப்பிட்ட சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என் கேள்வி. அதை ஏன் செயல்படுத்தவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. உங்களுக்குத் தகுதியில்லை என்பதல்ல. எவ்வளவு தகுதி இருக்கிறது என்பது கையில் உள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்தே தெரிகிறது. அதற்குச் சொல்லவில்லை. கையில் உள்ள சட்டத்தை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று தெரிவித்ததற்குப் பிறகு மத்திய அரசு தன் சட்டத்தைப் பயன்படுத்தி எடுக்க வாய்ப்பு உள்ளது. நீங்கள் ஏன் உங்கள் சட்டத்தை வைத்துக்கொண்டு நிலத்தை எடுக்கவில்லை?





திரு. எஸ். ஆர். இராதா : இன்றைக்கு இருக்கிற சட்டத்தின் மூலமாக எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். செய்யவில்லையென்றால், குற்றச்சாட்டாக "இந்த ஊரிலே இவ்வளவு நிலம் எடுக்க சட்டத்திலே வழிவகை இருக்கிறதே, நீங்கள் ஏன் அதை எடுக்கவில்லை?" என்று கேட்டால் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவருக்கு இருக்கின்ற சட்ட அமைப்பு நிறைவை, திருப்தியைத் தருகிறது. நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில் இந்தச் சட்டத்தால் நிறைவு செய்ய முடியவில்லை. ஆகவேதான் அதை மாற்றுவதன் மூலமாக நிலங்களை எடுக்க முடியும் என்று கருதி மாற்றுகிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : இப்போது இருக்கிற சட்டத்தை மாற்றுவது சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. உங்களுடைய அதிகாரத்தின் அடிப்படையிலே எவ்வளவு தூரம் உங்களுடைய மற்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதைக் காணுவதற்கு ஓர் அளவுகோலாக இதைப் பயன்படுத்துகிறீர்கள் என்பது என்னுடைய கருத்து.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, திரு. இராமமூர்த்தி அவர்கள் நோக்கம் கற்பித்துப் பேசுகிறார்கள். வாதத்திற்காக நோக்கம் கற்பித்துப் பேச வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அவரவர்கள் தங்களுடைய நிலைக்குத் தகுந்த மாதிரி நோக்கம் கற்பிக்கலாம். அது வேறு விஷயம்.

திரு. க. இராமமூர்த்தி : ஆரம்பத்திலேயே, இந்தச் சட்டம் கொண்டுவந்த போது, இது நோக்கத்தோடு கொண்டு வரப்படுகிறது என்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்திலே இப்போதும் மாறுபடவில்லை நான்.

திரு. எஸ். ஆர். இராதா : இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். இதை முன்னதாகவே சொல்லியிருந்தால் . . .

திரு. க இராமமூர்த்தி : அப்போது மாண்புமிகு உறுப்பினர் வெளியேயிருந்தார். நான் அப்போதே பேசியிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அவர் ஆதரிக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு . . .

[1982 பிப்ரவரி 8

திரு. க. இராமமூர்த்தி : அரசு கொண்டு வந்த சட்டத்தை ஆதரிப்பது என்ற பிரச்சினையே இல்லை. தவறுகள் நிறைந்த சட்டம் என்று அன்றைக்கே எதிர்த்திருக்கிறேன். அவர் வெளியே இருந்ததால், முழு விவரத்தையும் தெரிந்துகொள்ளவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : வெளியே இருந்திருந்தாலும் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டிருக்கிறேன். ஏனென்றால் பலகாலம் அவரோடு பழகி யிருக்கிறேன். "வெளியே இருந்தேன்" என்று ஏன் சொல்லுகிறார் என்பது எனக்குத் தெரியும். நான் தெரிந்துகொள்ளாமல் இருந்திருந்தால், கேள்வியே வந்திருக்காது. சட்டத்தை ஆதரிக்கும்போது அவ்வளவு பேரும் ஆதரித்தார்கள். சட்ட முன்வடிவு வந்த நேரத்திலே சட்டமன்றப் பேரவையிலே நடந்த விவாதத்தைக் கேட்கிற நேரத்தில், திரு. இளையபெருமாள் அவர்கள் எவ்வளவு தெளிவாகப் பேசினார்கள் என்பது எனக்குத் தெரியும். அவருடைய பேச்சைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அவையின் நடவடிக்கைக்குப் பதில் சொல்கிறாரா அல்லது அந்த அவையின் நடவடிக்கைகளுக்குப் பதில் சொல்கிறாரா என்பது தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கூடுமான வரையில் பதில் சொல்லாது, பேசவிட்டால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : காங்கிரஸ் கட்சியினர் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்தார்கள். அவர்கள் ஆதரித்த சட்ட முன்வடிவு அங்கே போனபோது ஜனாதிபதி அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை அவர் அங்கீகரிக்கவில்லை என்று அர்த்தம்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அவையில் அது பற்றிய விவாதம் நடை பெற்றபோது திருத்தங்கள் கொடுக்கப்பட்டன ; வாக்கெடுப்பு நடைபெற்றது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். தவறான கருத்தின் அடிப் படையிலே பேசிக்கொண்டிருக்கிறார். "அந்தச் சட்டமே குறைகள் மலிந்த, தவறுகள் நிறைந்த, தவறுகள் செய்வதற்கு வாய்ப்பும், வசதிகளும் நிறைந்த சட்டம்" என்று இந்த அவையிலேயே பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டு அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறைகள் மலிந்திருக்கின்றன என்ற அடிப்படையிலே மத்திய அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது.



1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தற்போது நேரம் 1-15.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, நேரம் 1-15 என்பதாலே . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு பேருக்கும்தான் சொல்லுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் சரியாக இல்லையென்றால், நான் நாளைக் காலை மீண்டும் விவாதத்தை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறேன். இப்போதே முடிக்க வேண்டுமென்று சொன்னால், நான் பேசுகின்றபோது, குறுக்கீடுகள் வரக்கூடாது. சபையிலே இப்போது பல பேர் குறுக்கிடுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மட்டும் பேசி இப்போதே முடிக்கலாம்.

திரு. எஸ். ஆர். இராதா: திருத்தங்களைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பொதுவாக வரவேற்கிற நிலைமையிலே எல்லாக் கட்சியினரின் ஆதரவும் இந்தச் சட்ட முன்வடிவிற்கு இருந்தது என்பதை நிச்சயமாக யாரும் மறுக்க முடியாது என்று நினைக்கிறேன். அனைவரும் ஆதரித்ததற்குப் பிறகு, ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை யென்று திரும்ப வந்திருக்கிறது. இப்போது மீண்டும் பரிசீலனையில் இருக்கிறது. இராஜா காலத்திலே இருந்த முறை, வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த முறை, சுதந்திரத்திற்குப் பிறகு மூன்று முறை மாற்றப் பட்ட பிறகும், ஏழை விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை என்பதை நிச்சயமாக யாரும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில், எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, விவசாயிகளின் நிலை இன்றைக்குச் சட்டத்தின் மூலமாக உயர்த்தப்பட்டுவிட்டதா என்றால் இல்லை. உழுபவனுக்கே நிலம் சொந்த மாக்கப்பட வேண்டும் என்று எல்லாக் கட்சியினரும் பேசிக்கொண்டிருக் கிறோம். எங்கள் மாவட்டத்தில் இத்தனை பேருக்கு இவ்வளவு வேலி சொந்தமாகிவிட்டது, பழைய முறை மாறிவிட்டது என்று யாராவது சொல்ல முடியுமா ? திரு. காமராஜ் அவர்கள் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, 16 இலட்சம் ரூபாய்க்கு விற்பனையான பத்திரங்களின் மூலமாக வேண்டுமானால் இடங்கள் மாறியிருக்கலாம். ஆனால் இன்றும் பாரம்பரைப்

பட்டா பாத்தியம் இருக்கிறது. அதே மிராசுதாரர்கள்தான் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கோபித்துக்கொள்ளக் கூடாது. இன்றைக்கும் மூப்பனார், வாண்டையார், நெடும்பலத்தார் எல்லாம் இருக்கிறார்கள். தங்களுடைய அந்தஸ்து கொஞ்சமும் குறையாமல் இருக்கிறார்கள். தங்களை யாரும் மாற்ற முடியாது என்று கவலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை முற்போக்குச் சட்ட முன்வடிவு என்று வரவேற்கிறவர்களும் இருக்கிறார்கள்.

**திரு க. இராமமூர்த்தி :** இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் தந்து மூப்பனார், வாண்டையார் எல்லாம் இருக்கிறார்கள் என்று பேசிக் கொண்டிருந்தால் பரவாயில்லை. பெயரளவிலே "மூப்பனார்" என்பதாலே அவர்களை அது கட்டுவிடும் என்பதல்ல. மூப்பனாருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? இந்தச் சட்டத்தின் கீழ் எவ்வளவு நிலம் இருக்கிறதென்று கண்டுபிடித்தார்கள் ? எவ்வளவு நிலத்தை எடுக்க முடியும் என்று நம்புகிறார்கள் என்பதையெல்லாம் சொல்ல வேண்டும். ஆனால் பொதுவாக நிலத்தை எடுக்க வாய்ப்பில்லை. உறுப்பினர் சொல்லுவதைப் பார்த்தால், யார் யார் நியம் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து பணம் பெறுவதற்கு ஏற்ற வகையிலே போட்டது என்றோ, அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து பணமாகவோ, நிலமாகவோ கேட்டு வாங்குவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. இது உங்களுக்காக ஏற்படுத்திக் கொண்டது. சமுதாய நலனுக்காக அரசு இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை. மூப்பனார், வாண்டையார் என்று ஜாதிப் பெயரைச் சொல்லி மூப்பனாரைவிட, வாண்டையாரை விட, தமிழகத்திலே நீங்கள் கோடீஸ்வரர்களாக ஆகிக்கொண்டிருக்கிறீர்கள், முதலாளிகளாக, ஏகாதிபதிகளாக மாறிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் உணர்த்துகிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ முடித்திருக்கிறார். என்னை ஏகாதிபதி, முதலாளி, இராஜா, மிராசுதார் என்று சொல்லுகிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** கோடிக்கணக்கான, இலட்சக் கணக்கான பணம் செலவிடுகிற அமைப்பு உள்ளவர்கள், வசதி உள்ளவர்கள் யார் என்று தெரியும்.





(பிற்பகல் 1-20)

**திரு. எஸ். ஆர். இராதா :** அவர்களுடைய நண்பர்களைத் தான் அவருக்குத் தெரியுமே தவிர, வேறு அல்ல. அவருடைய நண்பர்களைப்பற்றி நான் நிச்சயமாக ஆட்சேபணை செய்ய மாட்டேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நண்பர்களைப் பற்றியல்ல. எதிரிகளைப்பற்றி மிகத் தெளிவாக தெரியும்.

**திரு. எஸ். ஆர். இராதா:** அதனாலேதான் அரசியலிலே தகராறுகள் வருகின்றன. எதிரிகளைப் பார்த்துக்கொண்டு நண்பர்களைப் பார்க்காமல் விடுவதனால்தான் அரசியலிலே தகராறு வருகிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைமுறையிலே ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக்கொண்டே போவது சரியல்ல. திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோதும் இதுதான் நடந்துகொண்டிருக்கும்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்கள்)

மன்னிக்க வேண்டும். கொள்கை ரீதியாக தவறான தகவலை இங்கே தரும்போது, அதற்குத் திருத்தம் சொல்லலாமே தவிர, ஏதோ டெல்லி என்று சொன்னவுடனே அங்கத்தினர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள், மூப்பனார் என்று சொன்ன உடனே எழுந்திருக்கிறார்கள். நாளைக்கு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலைமைதான் ஏற்படும். அங்கத்தினர்களுக்கு நேரம் கொடுக்கிறோம், அப்போது தெளிவாக மறுக்கலாம். ஆளும் கட்சித் திட்டங்களிலே, சட்டத்திலே உள்ள குற்றங்களை அப்போது சுட்டிக்காட்டலாம். இப்போது இன்டர்வென்ஷன் வேண்டாம். உறுப்பினர்கள் பேசும்போது அப்படி இருக்கக்கூடாது. இப்போது பேசுகின்றவர், திரு. இராதா அவர்கள் பேசும்போதும் இருக்கக்கூடாது. வார்த்தைக்கு வார்த்தை நிமிடத்திற்கு நிமிடம் இன்டர்வென்ஷன் என்று சொன்னால் விவாதத்தை முடிக்க முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி :** அங்கத்தினர் அவர்கள் இராமமூர்த்தி என்று குறிப்பிட்டுப் பேசுவதால்தான் நான் குறுக்கிடவேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அதை நான் ஏற்றுக் கொள்
கிறேன். நான் மறுக்கவில்லை. நடைமுறையிலே நாம் ஒரு முறையைப்
பின்பற்ற வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இன்டர்
வென்ஷன் இருந்தால், திரு. இராதா அவர்களுக்கு அவர் எவ்வளவு நேரம்
பேசினார் என்று கணக்கிட முடியாமல் இருக்கிறது. திரு. இராதா அவர்கள்
முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் விரும்
பலாம். ஆனால் திரு. இராதா அவர்கள் நேரம் போதவில்லை என்று கருத
லாம். நிறைய குறுக்கீடுகள் வந்துவிட்டன என்று ஒரு காரணத்தை
வைத்துக்கொண்டு, அவர் அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாம். அவர்
பேசிய பிறகு, உறுப்பினர் அவர்கள் பேச வாய்ப்பிருக்கிறது. அப்போது
ஒட்டுமொத்தமாக உறுப்பினர் அவர்களுடைய சந்தேகங்களைப் போக்கு
வதற்கு அரசு இருக்கிறது. அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
பதில் சொல்ல இருக்கிறார் என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். தயவு செய்து அங்கத்தினர்கள் நேரத்தில் முடிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
திரு. இராமமூர்த்தி அவர்கள் நாளையதினம் பேச இருக்கிறார்கள். அப்படி
ஏதாவது சொல்ல வேண்டுமானால், ஒட்டு மொத்தமாக அவர்கள் சொல்
வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது பேசலாம். இன்னொன்று நான்
அவரை குறுக்கிடவே கூடாது என்று சொல்ல வில்லை.

திரு. க. இராமமூர்த்தி : ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் மறுக்கின்ற
ஒன்றைச் சொல்லும்போது, நாங்கள் வாய் மூடிக்கொண்டு பேசாமலிருந்தால்
பத்திரிகையிலே அது வேறு விதமாக வரும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடிக்கடி குறுக்கிடவும்
வேண்டாம். குறுக்கீட்டை அழைக்கவும் வேண்டாம் என்று சொல்லிக்
கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
நான் ஒரு மணிக்கு முன்னால் அவர் பெயர் சொன்னதாக நினைவு. அவர்
அப்போது சொன்னதை வைத்துக்கொண்டு தொடர்ந்து நான் பேசுகின்ற
ஒவ்வொரு வார்த்தைக்கும் குறுக்கிட்டுக்கொண்டு இருக்கிறார். நான்
பெயரைத் தப்பித் தவறிக்கூடச் சொல்ல மாட்டேன். அது இராமமூர்த்தி
என்ற பெயராக இருந்தாலும், கம்யூனிஸ்ட் இராமமூர்த்தி பெயராக இருந்
தாலும், அதைச் சொல்லவில்லை. அந்தப் பெயரை நான் சபையிலே



உச்சரிக்கவில்லை. அதனாலேயே நான் பிரச்சினைகளை விட்டுவிடுவேன்
என்று நினைக்க வேண்டாம். யார் யாருக்கு கோபம் வரும், வராது என்
பது எனக்குத் தெரியும். நான் சொல்ல வருகின்ற கருத்து, இன்றைக்கு 20
அம்சத் திட்டத்திலே நில உச்சவரம்புச் சட்டத்தை மத்திய அரசு அனுமதிக்
கிறது. அது ஒரு முற்போக்கான சட்டம். அது சட்டசபையிலே வரு
கின்ற நேரத்திலே திருத்தங்கள் என்ற அளவிலே, வார்த்தைகளில் திருத்தம்
வருமே தவிர, ஒட்டு மொத்தமாக அதை யாரும் எதிர்த்துப்பேசுகின்ற
நிலைமை வரவில்லை. சட்டத்திலே வார்த்தைகளிலே திருத்தம் வேண்டும்
என்று வரும். அந்த வார்த்தை இருந்தால், இந்த விளக்கம் வரும் என்று
நினைக்கிறார்கள். அப்போது திருத்தம் கொடுக்கிறார்கள். இந்தச் சட்ட
முன்வடிவைப் பற்றி தமிழகத்திலே உள்ள எந்தக் கட்சிக்கும் ஆட்சேபணை
இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இப்போது இப்படிப் பேசுவது
எனக்குப் புரியவில்லை. ஒரு மாற்றம் வேண்டும் என்ற அளவிலே, நிலம்
பங்கீடுசெய்வதிலே மாற்றம் வேண்டும் என்று இதைக் கொண்டுவருகிறோம்.
இதை எல்லோரும் ஆதரித்ததற்குப் பின்னால் தமிழ் நாட்டிலே சட்டமன்றத்
திலே மேடையிலே நீண்ட விவாதம் நடந்ததற்குப் பின்னால், 20 அம்சத்
திட்டத்திலே ஆர்வம் காட்டுகின்ற ஒரு அரசிலே இருக்கின்ற ஜனாதிபதி
அதைத் திருப்பி அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால், நாம் அதைப்
பற்றிச் சிந்திக்க வேண்டுமா ? அப்படியானால், மீண்டும் பழைய பாரம்
பரியத்தையே உருவாக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றார்களா ? அதைத்
தான் நான் கேள்வியாகக் கேட்கிறேன். நான் வாண்டையார், மூப்பனார்
என்று சொன்னதும் கையூட்டு பெறுவதற்காக, நாங்கள் யாரிடத்திலோ காசு
வாங்குவதற்காகச் செய்கின்றோம் என்ற நோக்கம் கற்பிக்கின்றார்கள். அது
அந்தக் காலத்திலே அவர்கள் செய்ததன் விளைவு. ஆனால் எங்களுக்கு
அந்த நோக்கம் இல்லை. அந்த நோக்கம் இல்லாததானால்தான், நாங்கள்
தைரியமாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம். யாருக்கு
பாதிப்பு ஏற்பட்டாலும், எனக்குக் கவலையில்லை. இதனால் சாதாரண
நிலம் இல்லாத விவசாயிக்கு என்ன லாபம் இருக்கும் என்றுதான் பார்க்
கிறோமே தவிர, வேறல்ல. கண்ணாடிக்கு முன்னாலே தம்மையே பார்த்
துக்கொண்டு, தம்மைப் போலவே தானே இப்போது இருப்பவர்களும் இருப்
பார்கள் என்ற சந்தேகத்தோடு பார்க்கின்றார்கள். இந்தக் காரியத்திற்கு
நாம் இப்படித்தானே செய்தோம், அதுபோலவே இவர்களும் இந்தக் காரியத்
திற்கு அப்படிச் செய்கிறார்களோ என்று பார்க்கின்றார்கள். அவர்கள்
கண்ணாடியிலே தங்களைப் பார்க்கும்போது, அவர்கள் உருவம்தான் தெரி
யும் தங்களைப் பார்த்தபிறகுதான், எங்கள் உருவத்தைப் அந்த கண்ணாடி

யில் பார்க்க வேண்டும். இந்த அரசைப் பொறுத்த வரையிலே, அந்த நிலை இல்லை. அதனாலேதான் இந்த நிலச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று சொல்கிறோம். அது காமராஜருடைய சட்டமாக இருந்தாலும் சரி, அது நாங்கள் ஒன்றாக இருந்தபோது, திரு கருணாநிதி அவர்கள் கொண்டு வந்த சட்டமாக இருந்தாலும் சரி, அதிலே இருக்கின்ற ஓட்டை உடைசலை அடைத்து ஒரு புதிய மரபை, மறுமலர்ச்சியுடைய சட்டமுன்வடிவை, அதுவும் 20 அம்சத் திட்டத்திலிருந்து சொல்கின்ற அந்தச் சட்ட முன்வடிவை, நாங்கள் கம்யூனிஸ்ட் ஒப்புதலோடு அனுப்பியிருக்கிறோம். அப்படி அனுப்புகிறோம் என்று சொன்னால், அந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்று சொன்னால், தமிழ் நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் துடிதுடிப்போடு இருக்க வேண்டாமா, சுறுசுறுப்போடு இருக்க வேண்டாமா, அதிலே வேகம் காட்ட வேண்டாமா? அதற்குப் பதில் மகிழ்ச்சியடைகிறார்கள். "பார்த்தீர்களா, நாங்கள் அந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பச் செய்து விட்டோம். நாங்கள் தான் ஏகாதிபதிகள்" என்று சொல்கிறார்கள் எங்களை யாராவது எதிர்த்துப் பேசினால், உடனே அப்படிச் செய்வோம் என்று சொல்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் குறுக்கிட விரும்பவில்லை. அவருடைய பேச்சிலே கருணாநிதி சட்டம், காமராஜர் சட்டம் என்று சொல்லுகிறார்கள். ஒரு கட்சி ஆட்சியிலேயிருந்த சட்டம் என்று குறிப்பிட்டால், நன்றாக இருக்கும். அது நம்முடைய தரத்திற்கு ஏற்ப அமையும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கத்திற்கென்று நான் சொல்கிறேன். அவர் எப்படிப் பேச வேண்டும் என்ற மரபை வரையறுப்பவர். அவர் சொல்கின்ற முறையைத்தான் பின்பற்றுவோம். வேறு யாரும் அந்த அளவுக்கு மரபைச் சொல்பவர் இல்லை எனலாம். அவரிடத்திலே மரியாதை வைத்திருக்கிறேன். எந்தக் குற்றத்தைச் சொன்னாலும் அவர்கள் 'ஏற்றுக் கொள்கிறேன், அதிலே தவறு இருக்கிறது' என்று சொல்வார்கள். நான் வார்த்தைகள் வேகத்தில் கருணாநிதி என்று சொல்லிவிட்டேன். அதனால் மரியாதைக் குறைவாகச் சொல்லிவிட்டேன் என்பதல்ல. வேறுவிதமாகச் சொல்லிவிட்டேன் என்பது அல்ல. நான் கட்சித் தலைவர் பெயரைச் சொல்லவில்லை என்கிறார். அதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் ஒன்றாக இருந்தபோது எல்லோரும் சேர்ந்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அதுவும் திருப்பி



அளிக்கவில்லை என்பதாலே அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்தச் சட்டத்திலே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்து, அதை நிறைவேற்ற வேண்டும் என்று அனுப்பியிருக்கிறது. ஒரு முற்போக்கான சட்டத் திருத்தத்தைப் போட்டிருக்கிறது. அதன் மூலமாக ஏழையெளிய மக்கள் நலம் பெற வேண்டும், ஒரு மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்றுதான் இன்றைக்குச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறோம். அந்தச் சட்டமுன்வடிவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதிலே தமிழ் நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு ஒரு துடிப்பு இருக்க வேண்டும். அதைத்தான் நான் விரும்புகிறேன். அதிலே அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். அதிலே குறைகளைச் சொல்கிறார்கள். அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக வழிவகைகளைச் சொல்கின்றார்களா? அப்படி முன்வரவில்லை என்று சொன்னால், தமிழ் நாட்டிலே விவசாயிகள் மீது அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை என்ன? தமிழ் நாட்டு விவசாய ஏழைகளுக்கு நிலம் வேண்டுமென்பதிலே அக்கறை உள்ளவர்களா? அப்படி இருந்தால், ஆளும் கட்சியுடன் எதிர்க் கட்சிகள் சேர வேண்டாமா? அவர்களை விட இதில் துடிப்பாக இருக்க வேண்டாமா? நான் நிச்சயமாகச் சொல்வேன் எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்கு அவர்களிடம் பற்றும் பாசமும் இருக்கிறதா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** அங்கத்தினர் அவர்கள் எதிர்க் கட்சி என்று பொதுவாகச் சொல்கின்றார்கள். ஏற்கெனவே அவர்களோடு 3 மாதத்திற்கு முன்பாகவே அரசுக்குச் சாதகமாக தமிழ் நாடு பூராவிலும் ஒரு இயக்கம் நடத்தியிருக்கிறோம். எதிர்க் கட்சிகள் பல இருக்கின்றன. எதிர்க் கட்சிகள் சில என்று சொல்லட்டும். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்த்துவிட வேண்டாம்

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதைச் சொன்னாலும் அதற்கு அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்பது நல்லதல்ல. நானும் அவர்களை எதிர்க்கட்சியாக்க வேண்டாம் என்பதற்காகத்தான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியிலே பொதுக் குழுவிலேகூட தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதனாலே இந்த விவாதத்திலே எங்களை [illegible] அவர்கள் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் அவர்களை [illegible] எதிர்க் கட்சியாக்க மாட்டேன். இந்தச் சட்டமுன்வடிவில் [illegible] பேருக்கும் ஒரே விதமான நிலைமைதான். இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள



122051

கட்சி என்ற அடிப்படையில் அவர்கள் செய்ய முடிகிறது. இந்தச் சட்டத்திற்காக ஆளும் கட்சி என்ற அளவில் சண்டைக்குப் போக முடியவில்லை என்ற வருத்தம் இருக்கிறது. அந்த நிலைமையில்தான் இருக்கிறோமே தவிர, வேறல்ல. நாங்கள் பயப்படுவதாக நினைக்கக்கூடாது. மத்திய சர்க்காருக்குப் பயப்படுகின்ற அளவுக்கு இந்த சர்க்கார் இல்லை என்பதை பல நேரங்களிலே காட்டியிருக்கிறோம்.

(பிற்பகல் 1 30)

புரட்சித் தலைவரவர்களைப் பொறுத்தவரையில், தலை நிமிர்ந்து ஒன்று சொல்லுவேன். யாருக்கும் பயப்படக்கூடாது என்பதால்தான் துணிந்து ஒரு கட்சி ஆரம்பித்து, அந்தக் கட்சியின் மூலமாக இரண்டு முறை அரசு அமைத்திருக்கிறார்கள். அவரைக் கண்டு பயப்படுகிறார்கள், இவரைக் கண்டு பயப்படுகிறார்கள் என்று சொன்னால், அது உங்களுடைய ஆசைக்காக சொல்லுகிறீர்கள் என்பதுதான் பொருள். நீங்கள் பயந்துகொண்டிருக்கிறீர்கள். எனவே மற்றவர்களைப் பார்க்கும்போது, அவர்களும் பயந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அப்படிப் பயப்படுகிற சுபாவம் இருந்திருந்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நாங்கள் சேர்ந்திருக்க மாட்டோம். எங்களுக்குப் பயமில்லாத காரணத்தினாலேதான் துணிந்து எந்த நேரத்திலும் எதிர்க்க வேண்டிய நேரத்தில் எதிர்த்து, ஆதரிக்க வேண்டிய நிலையில் ஆதரிக்கிறோமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோலவே மேலும் ஒன்றைச் சொல்லுவேன். இன்றைக்கு எத்தனையோ குற்றச்சாட்டுகளை அரசுமீது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்னும் 5 மணித் துளியில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவரவர்களே, தாங்கள் முடிக்க வேண்டுமென்று சொன்னால், முடித்து விடுகிறேன். எந்த நேரத்திலும் பேச வேண்டியதை அப்படியே நான் வைத்துக்கொள்வேன். சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு வரும்போது சொல்லிக்கொள்வேன். நேரத்திற்காக நான் இப்போது முடித்துக்கொள்கிறேனே தவிர, என்னுடைய பேச்சு முடிந்ததாக நினைக்கவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.





அவையிலே பல நேரங்களிலே, பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று
சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மன்றத்திலே யாராவது எதற்காவது
பொறுப்பு எடுத்துக்கொண்டதாக வரலாறு இருக்கிறதா? அமைச்சர்கள் உறுதி
மொழி கொடுத்தால், உறுதிமொழி கமிட்டி என்று போட்டு, பரிசீலனை செய்
கிறார்கள். 1972-லே ஒரு அமைச்சர் என்ன சொன்னார் என்று இன்றைக்கு
விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சியிலே இருக்கிற
வர்கள் ஏதாவது பிரச்சினைகளைச் சொல்லி, நான் பொறுப்பு ஏற்றுக்கொள்
கிறேன் என்று சர்வ சாதாரணமாக வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.
1980-லே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். பெரிய குற்றச்சாட்டு சொல்லி, வட ஆற்காடு மாவட்டத்
திலே பஸ் முதலாளிகளிடத்தில் பணம் வாங்கினார்கள் என்றார்கள். என்
றைக்கு நிரூபிக்கப் போகிறார்? யார் வாங்கியது என்பது தெரியுமென்றும்,
வாங்கினவர்களை விசாரிக்க வேண்டுமென்றும், அப்படி வாங்கியிருந்தால்
விடக்கூடாதென்றும் சொல்லி. . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் ஏதோ கொடுத்த வாக்குறுதி
சொல்லுகிறார்கள்.
விருந்து பின் வாங்கியதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள்.
எப்போது இந்த அரசாங்கம் சம்மன் செய்தது, இந்த இடத்திற்கு வாருங்கள்
என்று? அவைத் தலைவர் எப்போது கூப்பிட்டு ஆதாரம் கேட்டார்? அப்
போது சொன்ன குற்றச்சாட்டுக்கு, யார் விசாரிக்கப்போகிறார்கள் என்று
சொல்லுங்கள், எப்படி விசாரிக்கப் போகிறார்கள் என்று சொல்லுங்கள், நான்
யாரிடத்திலே, எந்த இடத்திலே பணம் கொடுத்தார்கள் என்பதை நிரூபிக்கத்
தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவர் அவர்களே, முன்மாதிரியாக
தாங்களே உத்தரவு போட வேண்டும். அவரே சொல்லியிருக்கிறார். துணைத்
தலைவர் என்ற முறையில் மரபை உருவாக்குங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சட்டப்படி உங்களுக்கு இருக்கும் அதி
காரத்தைப் பயன்படுத்தி, நோட்டீஸ் அனுப்புங்கள். ஆதாரங்களோடு,
அமைச்சரவையில் உள்ள அமைச்சர்—குறிப்பாக சம்பந்தப்பட்ட ஒரு
அமைச்சர் பஸ் முதலாளிகளிடத்தில் பணம் வாங்கியிருக்கிறார் வட ஆற்காடு
மாவட்டத்தில் என்பதை நிரூபிக்கச் சொல்லுங்கள், தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று
தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் பேசத் தெரிந்ததையெல்லாம் பேசி, பிறகு இந்தப் பிரச்சினையில் என்ன நிலையை எல்லோரும் எடுப்பது என்ற நிலைமைகள் எல்லாம் வருகின்றன. அதற்கு துணைத் தலைவரவர்கள் அனுமதி அளிக்கப் போகிறாரா என்று கேட்க விரும்புகிறேன். உறுதி மொழிக் குழு என்று ஒன்று இருக்கிறது. உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டுகின்றபோது, சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது குற்றம் சாட்டுகிறபோது, அவர் எழுந்து நிரூபிக்க முடியுமா என்று கேட்கிறார். உறுப்பினர் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், அவர் அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார். இப்படியே இதை வளர்த்துக் கொண்டே போனால், பேச்சை முடிக்க முடியாது. எங்கே அது இழுத்துச் சென்றுவிடுமென்பதை எல்லோரும் புரிந்து கொள்ளுவது நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இது பிரச்சினையாகிவிட்டதால் நான் ஒரு சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். 1967க்கு முன்னால் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, மருத்துவக் கல்லூரியில் ஒருவர் பணம் வாங்கியதாகச் சொன்னபோது, அப்போதிருந்த அமைச்சர், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். எதிர்க் கட்சியில் இருந்தவர் குறிப்பாகச் சொல்லிவிட்டார். உடனே எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் எல்லோரும் அவைக் குழு போட்டு, விசாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள்கூடச் சொன்னார்கள். எல்லோரும் சொன்னார்கள். அது அவைத் தலைவர் முடிவிற்கு விடப்பட்டது. அரசு விரும்பினால் குற்றம் சாட்டியவர் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறார். அரசு ஒரு குழு போட்டு அல்லது அவைத் தலைவர் ஒரு குழு போட்டு குற்றம் சாட்டியவர் வந்து நிரூபிக்காவிட்டால்தான் குற்றம். அதற்கு அவர் தயார் என்று சொன்ன பிறகு, விசாரணைக் குழுவை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அமைக்காமல் இருப்பது அல்லது அமைப்பது உங்களுடைய சவுகரியம். 1980-லே சொன்னதை மீண்டும் ஒரு குற்றமாக எங்கள் மீது சுமத்துவது அவையின் மரபிற்கு நல்லதல்ல. நீங்கள் விசாரிக்க அவரை அழைத்து, அவர் வராமல் இருந்தால்தான் குற்றம். பழைய குற்றச்சாட்டு குறித்து விசாரணைக் குழு அமைக்காமல், அதை மீண்டும் எங்கள்மீது குற்றமாகச் சுமத்தும் முறையை மாற்ற வேண்டி, இதில் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கோருகிறேன்.



**திரு. ப. மாணிக்கம்:** இம்மாதிரி பிரச்சினைகள் அடிக்கடி வருவதால், அரசுடன் கலந்து இது சம்பந்தமாக பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் விவாதித்து, அதற்கு ஏதாவது ஒரு வடிவம் தந்தாலொழிய, சவால்கள் வரத்தான் வரும், நிரூபிக்கிறேன் என்று சொல்லுவார்கள், அதையே திருப்பித் திருப்பிப் பேசுவதால் அவையின் தன்மையும், தரமும் பாதிக்கப்படுகிறது. குற்றச்சாட்டு வருகிறது, பொறுப்பு ஏற்கிறார்கள். பிறகு ஒன்றுமில்லாமல் போகிறது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் அவையின்மீது நம்பிக்கை குறைந்து விடும். இம்மாதிரி பிரச்சினை வந்தால், குறிப்பிட்ட பிரச்சினை மீது தீர்ப்பு கொடுத்தாவது, அதை நிரூபிக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது குறித்து என்னுடைய தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நேரமின்மை குறித்து, என்னுடைய பேச்சை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1.37)

## இணைப்பு I

(12 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 50-க்கான விடையைக் காண்க.)

(அ) 30—9—1981 வரையிலான அரசுக் கணக்கின்படி அயற்பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை விபரம் :

| | |
|---|---|
| 1. வெளி மாநிலங்களுக்கு அயற்பணியில் சென்ற பொறியாளர்களின் எண்ணிக்கை. | 2 |
| 2. மைய அரசு மற்றும் மைய அரசு நிறுவனங்களுக்கு அயற்பணியில் சென்ற பொறியாளர்களின் எண்ணிக்கை. | 18 |
| 3. வெளிநாடுகளுக்கு அயற்பணியில் சென்ற பொறியாளர்களின் எண்ணிக்கை. | 61 |
| (ஆ) ஓர் ஆண்டுக்கு மேலாக அயற்பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 19 |
| இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அயற்பணியிலிருப்பவர்களின் எண்ணிக்கை. | 6 |
| மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அயற்பணியிலிருப்பவர்களின் எண்ணிக்கை. | 32 |
| (இ) அயற்பணியிற் சென்ற உதவிப் பொறியாளர்களின் எண்ணிக்கை. | 36 |
| அயற்பணியிற் சென்ற உதவிச் செயற்பொறியாளர்களின் எண்ணிக்கை. | 36 |
| அயற்பணியிற் சென்ற கோட்டப்பொறியாளர்களின் எண்ணிக்கை. | இல்லை. |
| அயற்பணியிற் சென்ற செயற்பொறியாளர்களின் எண்ணிக்கை. | 6 |
| அயற்பணியிற் சென்ற கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கை. | 2 |
| அயற்பணியிற் சென்ற தலைமைப் பொறியாளரின் எண்ணிக்கை. | 1 |



(ஈ) மேற்கண்டவர்கள் பொதுப்பணித் துணை... ஆற்றியுள்ள பணிக்காலம் :

| | |
|---|---|
| (1) 10 ஆண்டு காலத்துக்குக் குறைவாக பணி புரிந்தவர்களின் எண்ணிக்கை. | 4 |
| (2) 10 ஆண்டு காலத்துக்கு மேலாக பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கை. | 77 |

## இணைப்பு II

(23 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### கல்வி

மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளை நடத்த முதுகலைப் பட்டத்துடன் பி.டி. அல்லது பி.எட். பயிற்சிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று கல்வித் தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட கல்வித் தகுதிகள் பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தால், உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் மொழியாசிரியர்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளை நடத்த உட்படுத்தப்பட்டனர். முழுத்தகுதி பெறாத காரணத்தால் அவர்களுக்கு உயர் ஊதியம் வழங்கப்படாமல், சிறப்பூதியம் ரூ. 25 வழங்கப்பட்டு வந்தது. அச்சிறப்பூதியத்தை ரூ. 40 ஆக 1—9—1981 முதல் உயர்த்தி அரசாணை நிலை எண் 1999, கல்வி, நாள் 5—9—1981-ல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வாணையில், பட்டதாரி ஆசிரியர்களை மட்டும் குறிப்பிட்டு இருந்ததால் இதர வகை ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உயர்வுத் தொகையான ரூ. 40 வழங்குவதில் ஐயப்பாடு எழுந்தது. இவ்வாணையை விரிவாக்கி ஈர்க்கப்பட்ட ஆசிரியர் அனைவருக்கும் பொருந்தும்படி செய்ய கீழ்க்கண்ட இரு கருத்துருக்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(1) மேல்நிலை வகுப்புகளில் தொழிற்பாடம் கற்பிக்கும் முன்னாள் இருமுனைப்பாட ஆசிரியர்களுக்கும் (earstwhile bifurcated teachers) சிறப்பூதியத்தை ரூ. 40 ஆக உயர்த்துதல்.

(2) மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் உடற்பயிற்சி கல்வி கற்பிக்கும் உட்படுத்தப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் சிறப்பூதியத்தை ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்துதல்.

மேற்கண்ட இரண்டு கருத்துருக்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## சென்னையில் உள்ள உணவு விடுதிகளில் (ஓட்டல்கள்) காபி, இட்லி இதர தின்பண்டங்களின் விலை உயர்த்தப்பட்டிருப்பது குறித்து

[1982 பிப்ரவரி 9

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பொதுவாக வெளி மார்க்கெட்டில் எந்த அளவுக்கு விலைவாசி உயர்கிறதோ அதே விகிதாசாரத்தின் அடிப்படையில் உணவுப் பண்டங்களின் விலைகளை விடுதிகளில் உயர்த்துவதுதான் நியாயம். ஆனால் மார்க்கெட்டில் உணவுப் பொருள்களின் விலை குறைவாக இருக்கும்போதே விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தி விடுகிறார்கள். ஆனால், உணவுப் பொருள்களின் விலைவாசி வெளி மார்க்கெட்டில் உயர்ந்து விட்டதால், அவர்களும் உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தியிருப்பதாக வாடிக்கையான காரணத்தையும் சொல்லிவிடுகிறார்கள். இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனித்து எந்த அளவுக்கு வெளி மார்க்கெட்டில் விலைவாசி உயர்ந்திருக்கிறதோ அதன் அடிப்படையில் உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்த ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்த முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வதுபோல், வெளி மார்க்கெட்டில் உணவுப் பொருள்கள் விற்கப்படுகின்ற விலைவாசியின் அடிப்படையில், விலையேற்றத்தின் நியாயமான அடிப்படையில், ஓட்டல்களிலும் உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்துவதாகத்தான் ஓட்டல் சங்கத்தைச் சார்ந்தவர்கள் கூறுகிறார்கள். இந்த அடிப்படையில் அவ்வப்போது உணவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஓட்டல்களுக்குச் சென்று கண்காணிக்கிறார்கள். ஆய்வு செய்வதுடன் அல்லாமல், ஓட்டல் சங்கத்தினரையும் அவ்வப்போது கலந்து இதுகுறித்துப் பேசி வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அந்தந்த மாவட்டத்திலுள்ள நிலைமைகளுக்கேற்ப ஓட்டல்களிலுள்ள பண்டங்களின் விலையைக் கண்காணித்து விலையை ஏற்றாமல் பார்த்துக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறோம். ஒரே மாதிரியாக ஓட்டல் பண்டங்களின் விலை இல்லாமலிருந்தாலும் கூட பரவாயில்லை. ஓட்டல்களின் தரத்தின், நிலைமைகளின், செலவினங்களின் அடிப்படையில், அவற்றை ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அந்த வகையில் பண்டங்களுக்கு நியாயமான விலைகள் இருக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறோம். ஆனால், அவ்வப்போது நிலவுகின்ற விலைவாசியையொட்டி, அவர்கள் ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையை ஏற்றி விடுகிறார்கள். இப்போது கூட அவர்களைக் கூப்பிட்டுப் பேசி எடுத்த ஒரு முடிவின் அடிப்படையில், "இப்படித்தான் நீங்கள் செய்ய வேண்டும்" என்று சொன்னோம். அதற்கு அவர்கள் நியாய விலைக்கு அரசாங்கம் உணவுப் பொருள்களை வழங்கினால், விற்கும் பண்டங்களையும் கட்டுப்பாடாக நியாய விலைக்கு விற்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நியாய விலையில் விற்கும் பொருள்கள் போதுமான



1982 பிப்ரவரி 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவுக்கு நமது பங்கீட்டு முறைக்கே இல்லாதபோது, அவர்களுடைய இந்த நிபந்தனையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே நாமும் இதுகுறித்து மேற்கொண்டு வற்புறுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். "குறிப்பிட்ட நியாய விலைக்கு உணவுப் பண்டங்களை அரசாங்கம் கொடுத்தால்தான், குறிப்பிட்ட நியாய விலைக்கு உணவுப் பொருட்களை நாங்களும் கொடுக்க முடியும்" என்று அவர்கள் சொல்லு கிறார்கள். இதுமாதிரி நிலைமையில் நாமும் குறிப்பிட்ட உணவுப் பொருட்களை உபரியாக இருக்கின்ற வேளையில் அவர்களுக்குக் கொடுக்கலாம். அதன் அடிப்படையில் அவர்களால் விற்கப்படுகின்ற உணவுப் பண்டங்களின் விலையையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி விலையை நிர்ணயிக்க முடியுமா என்பதுபற்றியும் ஆராயச் சொல்லியிருக்கிறோம். அண்மையில் கூட ஓட்டல் உரிமையாளர்களைக் கூப்பிட்டுப் பேசி, 5 பைசா உயர்த்தியிருப்பதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதைக் குறைப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, உணவுப் பண்டங் களை ஓட்டல்களின் தரத்திற்கேற்ப மூன்று விதமான விலைகளில் விற்கலாமென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்த்தால், இந்த அடிப்படையிலான விலையைக் கூட இந்த ஓட்டல்கள் பின்பற்றுவதில்லை. குறைந்தபட்சம் இவ்வளவு விலை என்று குறிப்பிடப்பட்டிருக்கிற அளவுக்கு உணவுப் பண்டங்களை ஓட்டல்களில் விற்பது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? இவ்வாறு விலைகள் ஏற்றுவதைத் தவிர்க்க அரசே பல முக்கியமான உணவு விடுதிகளைத் திறந்து—நஷ்டம் ஏற்பட்டாலும் கூட பரவாயில்லை என்கிற அளவுக்கு—பொதுமக்களுக்கு வசதி செய்யப் படுமா ? அப்படி அரசே விடுதிகளைத் திறந்தால், போட்டியின் அடிப்படையில் அவர்களும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்க முன்வரலாம். இதுகுறித்து பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உறுப்பினருடைய யோசனை கேட்பதற்கு நன்றாக, சரியாக இருந்தாலும் கூட, நடைமுறைப்படுத்தும்போது, நடைமுறையில் ஓரளவுக்குத் தோல்வி யுற்ற ஒன்று அது. தனியார் ஓட்டல்களை வியாபாரம் நன்றாக நடக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும், வாடிக்கையாளர்கள் அதிகமாக வர வேண்டுமென்ற அடிப்படையிலும் வியாபார ரீதியில் நடத்துகிறார்கள். ஆனால் அரசே ஓட்டல்களை நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வரும்போது,

## சென்னையில் உள்ள உணவு விடுதிகளில் (ஓட்டல்கள்) காபி, இட்லி இதர தின்பண்டங்களின் விலை உயர்த்தப்பட்டிருப்பது குறித்து

டாக்டர் இரா. நெடுஞ்செழியன் [1982 பிப்ரவரி 9

பல்வேறு நிலைகளில் செலவுகள் அதிகமாகும். அவ்வாறு செலவுகள் அதிகமாகும்போது, உணவுப் பண்டங்களின் விலையை அதிகமாக உயர்த்தி விற்க வேண்டி வரும். அப்படியே விலையை உயர்த்தாமலிருந்தால், நஷ்டம் மிகவும் அதிகமாக வரும். அது மட்டுமல்லாமல், நாடு பூராவும் ஆயிரக் கணக்கான இடங்களில் பரவலாக அதை வைக்காமல் இரண்டொரு இடங்களில் மட்டும் வைப்பது நல்லதாக இராது. இதை விட உபரியாக பொது மக்களுடைய பங்கீட்டிற்குப் போக மீதியிருக்கின்ற உணவுப் பொருள்களை நியாய விலைக்கு வழங்கி, அதன் மூலம் உணவுப் பண்டங்களின் விலையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அவர்களும் வெளிச் சந்தை சர்க்கரை, அரிசி, மைதா, கோதுமை போன்றவற்றைத் தந்தால், அதற்கேற்ப நியாய விலையில் உணவுப் பண்டங்களை விற்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். பங்கீட்டிற்குத் தேவையான, நியாய விலையில் விற்கப்படும் பாமாலின், கோதுமை, சர்க்கரை போன்றவை உபரியாக இப்போது இல்லை. அதனால்தான் ஓட்டல்களுக்கு அவைகளைத் தர முடியவில்லை. இன்னின்ன விலைக்குத்தான் உணவுப் பண்டங்களை விற்கலாம் என்று சட்டம் கொண்டு வரலாமா என்றும் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அப்படி சட்டம் கொண்டுவந்தாலும் கூட, விலையைக் கட்டுப்படுத்த முடியுமா என்கிற கேள்வியும் எழுகிறது. காரணம் ஆந்திராவில் இதுகுறித்து ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், உடனே அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் 'ஸ்டே ஆர்டர்' வாங்கி வந்து, அரசாங்க உத்தரவை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படியே சட்டத்தின் மூலம் விலையைக் குறைத்தாலும் கூட, அதன் பிறகு, பண்டங்களைத் தரமாக வைத்திருக்கிறார்களா என்றும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே எப்படியும் அவர்களுடைய ஒத்துழைப்போடுதான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போதும் கெரோசின் போன்றவற்றை அவர்களுக்குத் தருகிறோம். இந்த அளவுக்கு விலையைக் கட்டுப்படுத்தி உணவுப் பண்டங்களை விற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எந்த அளவுக்கு மேலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், விதவைத் தாய்மார்களுக்கு கடன் தந்து, இட்லி, தயிர் சாதம் போன்றவைகளை ஓரளவுக்கு அவர்கள் லாபம் பெறத் தக்க அளவுக்கு விற்க ஏற்பாடு செய்யலாமா என்பது குறித்தும் ஆராயச் சொல்லியிருக்கிறோம். அரசாங்கமே ஓட்டல் நடத்துவதானால், அதிகச் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 8. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. வி. வி. வி. ஆனந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகாகவி பாரதியாருடைய நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு மிகச் சிறப்பாக நடத்தியதை நான் வரவேற்கிறேன். பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று சொன்னார். ஆனால், இன்றையதினம் உழவும் தொழிலும் வந்தனைக்குள்ளாகவில்லை, நிந்தனைக்குள்ளாகியிருக்கிறது. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தை அடுத்து, வான் சிறப்பைக் குறிப்பிட்டிருந்தார். இந்த ஆண்டு தமிழகத்தில் நல்ல மழை பெய்து நல்ல விளைச்சலும் கண்டிருக்கிறது. இருப்பினும் கூட உழவர்கள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கும் கரும்புக்கும் நல்ல விலை இல்லாததால், அவர்கள் அவதியுறுகிறார்கள். அவர்களுக்காக 'அக்ரிகல்சரல் பிரைஸஸ் கமிஷன்' நிர்ணயித்திருக்கும் விலையானது அவர்களுக்குக் கட்டுப்படி ஆகாத ஒரு குறைந்தபட்ச விலையாகும். உழவர்களுக்குத் தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் குடிமைப் பொருள்கள், சிமெண்ட் இவை எல்லாவற்றின் விலையும் ஏறியிருக்கின்றது. லாரிக் கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் எல்லாம் கூடியிருக்கின்றன. டீசல் விலை கூடியிருக்கிறது. இந்நிலையில் அவர்கள் பயிர் செய்து அறுவடை செய்த உணவுப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இன்றைக்கு விவசாயிகள் மிகவும் சிரமமான நிலைமையில் இருக்கிறார்கள். இந்நிலையில் லெவியை 50 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள். ஐம்பது சதவிகித லெவி என்பது பெரிய வியாபாரிகளிடமிருந்தும் ஆலை அதிபர்களிடமிருந்தும் என்று இருந்தாலும் கூட, அது சிறிய விவசாயிகளையும் பெரும் அளவுக்குப் பாதிக்கிறது. ஐம்பது சதவிகித நெல்லை, சர்க்காருக்கு லெவியாக, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று இருப்பதால், ஆலை அதிபர்கள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில்தான் கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கு

(முற்பகல் 9-40)

சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் அல்லது அதனால் ஏற்படும் இழப்பை விவசாயிகளின் மீது சுமத்தி விலையைக் குறைத்து வாங்க வேண்டும். இந்நிலையில் பல ஆலைகள் இயங்கவில்லை. ஆலை அதிபர்கள் தங்களுடைய தொழிலை வெகுவாகக் குறைத்துக்கொண்டார்கள். ஆகவே, உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்க வழியில்லாத சூழ்நிலை உண்டாகியிருக்கிறது. வருகிற லெவி கொள்முதலுக்குக் குறியீடு குறிப்பிட்டு அதைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன் காரணமாக, அதிகாரிகள் இந்தக் கொள்முதலிலே நேரடியாக விவசாயிகளைத்

துன்புறுத்துகிறார்கள். இப்போது வட்டத்திற்கு வட்டம் ஒரு மண்டலமாக இயங்குகிறது. இப்போது இந்தியா முழுவதிலுமே நெல், அரிசி போக்கு வரத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது என்ற முறையிலே ஒரே மண்டலமாக இருந்தாலும் கூட, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள அதிகாரிகள் தடை செய்கிறார்கள். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை வீட்டிக்குக் கொண்டு செல்லும் வண்டியை வழிகளிலேயே நிறுத்தி லெவி கேட்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே இந்த நிலைதான் இப்போது இருந்து வருகிறது. இன்றைக்கு விவசாயிகள் 'பைரமெண்ட் பர்ச்சேஸ் சென்டர்'-களிலே தாங்கள் விளைவித்த பொருட்களை மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறார்கள். அப்படித்தான் விற்க வேண்டுமென்று அதிகாரிகளும் கெடுபிடி செய்கிறார்கள்.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

என்ற நிலையிலே இந்த லெவி கொள்முதல் இருக்கிறது. இந்தக் கெடுபிடி லெவி கொள்முதலினால் விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்குச் சரியான விலை இல்லாததால், நெல், கரும்பு போன்ற விவசாயப் பயிர்களைப் பயிரிடுவதை விட்டுவிட்டு இனி விறகுதான் உற்பத்தி செய்வார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்பு இருந்துவந்த வறட்சி நிலைமை நீங்கி, இப்போது நல்ல விளைச்சல் இருந்தும், அதை அங்குள்ள விவசாயிகளால் அனுபவிக்க முடியவில்லை. முன்பு பஞ்சம் ஏற்பட்டபோது பட்ட கஷ்டங்களைக் கூட இப்போது தீர்த்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பூராவும் இனி விறகு உற்பத்தி செய்தாலும் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை. விலைவாசி உயர்வுக்கு, பொதுவாக விநியோக வர்த்தகம் காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சுதந்திர வர்த்தகத்தில்தான் சரக்குகள் தாராளமாகக் கிடைக்கும். அத்துடன் தேவையான சந்தர்ப்பத்தில் தேவைக்கேற்ப விநியோகமும் கிடைக்கும். இந்தச் சுதந்திர வர்த்தகத்தை நீக்கிவிட்டு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவோ, கூட்டுறவுத் துறை மூலமாகவோ விநியோகத்தை மேற்கொண்டால், செலவு அதிகமாக ஆகும். இந்த முறை எந்தவிதமான தன்மையும் பயக்காது. ஆகவே, இதை மிகவும் கவனத்துடன் ஆராய வேண்டும். 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சுதந்திர வர்த்தகத்தில் தாராளமாக தரமான பண்டங்கள் கிடைக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார்கள். விலைவாசி உயர்வதற்கு மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையும், ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கையும், பணவீக்கமும்தான் காரணங்களாகும்; விநியோகம் எந்தவிதத்திலும் காரணமல்ல.





நிலக்கரி கிடைக்காததால், பல பாய்லர் தொழிற்சாலைகளில் இப்போது நிலக்கரிக்குப் பதிலாக விறகை உபயோகிக்கிறார்கள். நிலக்கரி இப்போது தாராளமாகக் கிடைக்கவில்லை. சுரங்கங்களிலே போதுமான அளவுக்கு உற்பத்தி இல்லையென்றும் சொல்கிறார்கள். அதே நேரத்தில் உற்பத்தியான நிலக்கரியைக் கொண்டுசெல்ல வாகனங்கள் இல்லையென்றும் சொல்கிறார்கள். வடமாநிலங்களிலேயிருந்து வரும் நிலக்கரியை நம்பி, அனல்மின் நிலையங்களை ஏற்படுத்துவதில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்கள் தாராளமாக நிலக்கரி சப்ளைக்கு உத்தரவாதம் அளித்தால்தான், இந்த வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இதில் எந்தவிதமான லாபமும் இருக்காது. சென்ற ஆண்டு வறட்சி நிலவியபோது, நமது அரசு பஞ்சாப் மாநிலத்தில் அரிசியைக் கொள்முதல் செய்தது. ஆனால், அந்த அரிசியை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவர வாகனங்கள் ஒதுக்கப்படவில்லை. மின் உற்பத்திக்கு நாம் அனல்மின் நிலையங்களைவிட அணுமின் நிலையங்களையும். ஒகேனக்கல் புனல்மின் நிலையம் போன்ற புனல்மின் நிலையங்களையும் மட்டுமே நம்புவதுதான் சிறந்தது. காற்றின் மூலமும் சூரிய ஒளியின் மூலமும் கிடைக்கும் சக்தியையும் நாம் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சூரிய சக்தியால் இயங்கும் சைக்கிள், மோட்டார் வண்டிகள் எல்லாம் இப்போது வருகின்றன. அந்த முறையில்கூட இந்த பாய்லர்களை இயங்க வைக்கலாமா என்பதைப்பற்றி நாம் ஆராய வேண்டும். இந்த வகையில் ஊற்சாகம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கை மீண்டும் அமுல் நடத்துவோம் என்று கூறியிருப்பதை நான் வெகுவாக வரவேற்கிறேன். மதுவிலக்கைத் தளர்த்தும்போது, அதற்குச் சொல்லப்பட்ட காரணம் கள்ளச் சாராயம் மதுவிலக்கை நல்லமுறையில் செயல்பட விடவில்லை என்பதுதான். இன்னும் கள்ளச் சாராயம் பெருமளவுக்கு நடந்துகொண்டுதான் வருகிறது. ஆகவே, மதுவிலக்கைத் தளர்த்தினால் கள்ளச் சாராயம் ஒழியும் என்ற வாதம் எடுபடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல. மீண்டும் மதுவிலக்கை அமுல்நடத்த வேண்டும், மதுவிலக்கு இல்லாவிட்டால், பாதிக்கப்படுபவர்கள் ஏழைத் தொழிலாளர்கள், மாணவர்கள் போன்றவர்கள் தான். இவர்கள்தாம் இதற்குப் பலியாகிறார்கள்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில், விலைவாசி கூடும்போதெல்லாம் விற்பனை வரியும் கூடுகிறது. விலைவாசி கூடிக்கொண்டே போவதால் விற்பனை வரியை விற்பனை வரி வீதத்தைக் குறைக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். கூடுதல் விற்பனை வரியை அகற்ற வேண்டும்

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1982 பிப்ரவரி

மாணவச் செல்வங்கள் பயன்படுத்தக்கூடிய உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான 'ஸ்போர்ட்ஸ் கூட்ஸ்' போன்றவைற்றிற்கு இருக்கும் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்திற்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டுவருவது மிகவும் சிறந்தது. ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நதி நீரைத் தருவதற்கு அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலித்து அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும்.

மத்திய அரசை வலியுறுத்தி சேதுசமுத்திர திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கரூர்-திண்டுக்கல் ரயில்வே திட்டம் மத்திய அரசால் ஒத்துக்கொள்ளப்பட்டாலும், வேலை மிகவும் ஆமை வேகத்தில்தான் நடைபெற்று வருகிறது. அதையும் விரைவுபடுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1982 ஆம் ஆண்டு மதுரையில் டி.வி. வரும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கான முயற்சி எதுவும் இன்னும் செய்யப்படவில்லை. திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் பயன்படும் விதத்தில் வாகைக் குளத்தில் விமான நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

நமது மாநிலத்தில் பஸ் போக்குவரத்துக்கும் அதிகப்படியான ரூட்கள் கொடுத்திருக்கிறார்கள். பஸ் போக்குவரத்து நல்லமுறையில் நடந்து வருகிறது ஆனால் பஸ் போக்குவரத்திற்கேற்ப சாலைகள் நல்லபடியாக அமைத் திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை சாலைகள் நல்லமுறையில் இருந்தால் தான், பஸ் போக்குவரத்து நல்லமுறையில் இயங்க முடியும் மேலும் இப்போது நம்முடைய பஸ்கள் நல்லமுறையில் சரிவரப் பராமரிக்கப்பட வில்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது, தேவையான அளவுக்கு நல்ல ஓட்டுநர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

இப்போது வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். படித்த இளைஞர்கள் எல்லோரும் அரசாங்க அலுவலகங்கள், எல்.ஐ.சி., பாங்க் போன்றவைகளில் வேலை செய்யத்தான் விரும்புகிறார்கள். உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. மற்ற நாடுகளில் படித்தவர்கள் கூட உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளுக்குச் செல்கிறார்கள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உழைப்பின் மேன்மையை இப்போது வலியுறுத்தியிருக்கிறார்கள். உழைப்பின் மேன்மையை மற்ற நாடுகளில் உள்ளவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். படித்தவர்கள், தாங்கள் படித்ததற்கான அளவிலே உள்ள வேலை கிடைக்கும் வரை, கிடைக்கும் மற்ற வேலைகளை மேற்கொள்ளலாம். பஸ் ஓட்டுநர் களுக்குப் பயிற்சி அளிக்கும்போது அவர்களுக்கு ஒரு 'ரிட்டன் டெஸ்ட்' வைக்க வேண்டும். மற்ற நாடுகளில் எல்லாம் அப்படி வைக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 9] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

அப்படிச் செய்தால்தான், அவர்களுக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய விதி முறைகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இப்போது ரொம்பப் பேர்களுக்கு சாலை விதிகளே தெரியவில்லை. எனவே ஓட்டுநர்களுக்கு ஒரு "ரிட்டன் டெஸ்ட்" வைத்தால், அதன் காரணமாக சாலை விபத்துக்கள் குறைய உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

தற்போது பல இடங்களில் பட்டப் பகலிலேயே கொள்ளைகள் நடை பெறுவதைப் பார்க்கிறோம். பஸ்களைக்கூட நிறுத்தி சில இடங்களில் கொள்ளையடித்திருக்கிறார்கள். மாநிலத்தில் குற்றங்கள் அதிகமாகிவிட்டன. இதற்குக் காரணம் மக்களிடையே குற்றம் செய்யும் உணர்வு அதிகரித்திருப்பது தான். இதற்கு சினிமா ஒரு பெரிய, முக்கியமான காரணமாக இருக்கிறது. எனவே குற்ற உணர்வுகளைத் தூண்டக்கூடிய வகையில் அமைந்துள்ள சினிமாக்களைக் கண்டிப்பாகத் தணிக்கை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட படங்களைத் தமிழகத்தில் வெளியிட முடியாதபடி தடை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு பல்கலைக் கழகங்களைத் துவங்கியிருக்கும் தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். லெவி கொடுமையால் இன்றைக்கு உழவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நமது நாட்டைப் பொறுத்தவரையில் உழவுத் தொழில்தான் தலையாய தொழில். நாட்டின் பெரும்பகுதி மக்கள் இந்த உழவுத் தொழிலைத்தான் நம்பியிருக் கிறார்கள். அவர்களுக்கு இன்றையதினம் இந்த லெவி மூலம் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே இந்த லெவி கொடுமைகளை நீக்கி, அவர்களின் உற்பத்திக்கு நல்ல விலை இடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திரத்திலிருந்து தமிழகத்திற்கு அரிசியைக் கொண்டு வருவதற்குத் தற்போது சட்டபூர்வமான தடையேதுமில்லை என்றாலும்கூட, தமிழகத்திலுள்ள அதிகாரிகள் "மூவ்மெண்ட் பெர்மிட்" கொடுக்க மறுக்கிறார்கள். ஆந்திரத்திலிருந்து அந்த அரிசியும் இங்கே விற்கப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கிறது. ஆந்திரத்திலிருந்து அதிகமான அரிசி கொண்டு வருவதற்கு அனுமதி அளித்தால் தமிழகத்திற்கு அதிகமான அளவில் ஆந்திர அரிசி வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதன் மூலம் தமிழகத்தில் அரிசியின் விலையும் குறைவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் ஆந்திராவிலிருந்து வந்து அரிசி என்று சொல்லிக்கொண்டு, உள்நாட்டு விளைச்சலுக்கே லெவி கொடுக்காமல் சிலர் ஏமாற்றுகிறார்கள் என்ற காரணம் காட்டி, பெர்மிட் கொடுக்க மறுக்கிறார்கள் ஆந்திராவிலிருந்து சட்டப்படி ரெயிலில் வந்த அரிசியை விற்பதற்குக்கூட, இந்தக் காரணத்தைக் காட்டி, அதிகாரிகள் தடை

செய்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நடைமுறைச் சிக்கல்களையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு வழங்கியதற்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனது கட்சியின் சார்பாக, சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இதில் பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை, இந்த ஆண்டுக்கான கொள்கை அறிவிப்பாக அமைத் திருக்கிறது. கொள்கை அறிவிப்பு என்ற அடிப்படையில் இந்த உரையில் இரண்டு பிரச்சினைகளில் முக்கியமான கொள்கை அறிவிப்புகள் வந்திருக் கின்றன. அதில் ஒன்று. விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு மாநில அரசு ஒரு புதிய வழிமுறையைக் கண்டுபிடித்திருக்கிறது. அதாவது உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நேரடியாக இனி உற்பத்தி யாளர்களே மக்களுக்குத் தங்களின் பொருள்களைக் குறைந்த விலையில் விநியோகம் செய்வதற்கான ஓர் ஏற்பாடு, நான் எடுத்த எடுப்பிலேயே இந்தக் கொள்கையைப்பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம் இது ஒரு முக்கியமான கொள்கையாக இங்கே அறிவிக்கப்பட்டிருப்பது. ஆனால் இந்த அறிவிப்பு இன்றைய தேவையின் அடிப்படையில் பொருத்தமானதுதானா என்று பார்த்தால், பொருத்தமற்றது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பார்த்தால்கூட, இது பொருத்தமானதாக இல்லை. பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் இதைக் குறிப்பிட வேண்டுமென்றால், இதற்கான சரியான தமிழ்ச்சொல் எனக்குத் தெரியாததால், இதனை ஆங்கிலத்திலேயே குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு "எகனாமிக் ரொமாண்டிசிசம்" அதாவது காரியத்திற்கு உதவாத கற்பனை நிலையே தவிர, நடைமுறைக்கு ஒத்து வர முடியாத ஒரு கொள்கை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது. என்றாலும் மாநில அரசுக்குத் தன் அளவில் பொறுப்பு இருக்கிறது என்ற வகையில் அது ஒரு சில காரியங்களைச் செய்ய முன்வந்திருக்கிறது என்று ஆளுநர் உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். இதற்குப் பிரதான காரணங்களான பொருளாதாரக் கொள்கை, நிதிக் கொள்கை, பணக் கொள்கை. இம்மூன்றும் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளன. அதிகமான பணப் புழக்கத்தின் காரணமாக விலைவாசி ஏற்றம் பெருகுகிறது. மத்திய அரசும் மாநில அரசும் பற்றாக்குறை பட்ஜெட்





போடுவதன் மூலம் நாட்டில் அதிகமாக நோட்டு அடிக்க வேண்டிய நிலை உருவாகிறது. இப்படி பண வீக்கத்திற்கு அவர்களே வழி செய்துவிட்டு, விலையைக் கட்டுப்படுத்துவது என்பது சாத்தியமல்லை. அண்மையில்கூட விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த மத்திய அரசு கருப்புப் பணத்தை முடக்க வேண்டும் என்று ஒரு யோசனை மேற்கொண்டது. கருப்புப் பணத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு தரப்பில் பல்வேறு விதமான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வாஞ்சு கமிட்டி இது குறித்து விசாரித்தபோது, நாட்டில் 25,000 கோடி ரூபாய் அளவுக்குக் கருப்புப் பணம் இருக்கிறது என்று குறிப்பிட்டது. இது எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லப்பட்ட தொகை. இப்போது ஆண்டுக்காண்டு 13,000 கோடி ரூபாய் கருப்புப் பணம் பெருகுவதாக பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இது ஒரு 'போலல் மார்க்கெட்' என்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. மத்திய அரசின் வருடாந்திர பட்ஜெட்டில் பாதி அளவுக்குக் கருப்புப்பணம் ஆண்டுதோறும் பெருகி வருகிறது.

ஆக, இப்படி ஒரு போட்டி மார்க்கெட் போல் கள்ளப் பணம், கருப்புப் பணம் பெருகும் நிலை நமது பொருளாதாரத்தை அடிப்படையிலேயே சீர்குலைக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறது. இதைத்தான் கட்டுப்படுத்தப் போவதாக அவ்வப்போது மத்திய அரசு வாக்குறுதி அளிக்கிறது. இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சில பிரசுரங்கள் அளிக்கப்பட்டிருக் கின்றன. இந்த ஆண்டு நாம் எப்படி நிலைமையைச் சமாளித்திருக்கிறோம் என்றும். விலைவாசியைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் நாட்டில் விலை குறையவில்லை என்பதுதான் உண்மையான நிலை. ஆண்டுக்கு ஆண்டு கூட அல்ல, மாதத்திற்கு மாதம் விலை உயர்ந்து கொண்டிருக்கிறது என்பது தான் நிதர்சனமான உண்மை. இப்படிப்பட்ட நிலையில் அடிப்படையான கொள்கை மாற்றத்தைச் செய்ய வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு. அதைச் செய்யாமல் மத்திய அரசு வேறு நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்பதன் மூலம் எதையும் சாதித்துவிட முடியாது. இந்த நிலையில்தான் நமது மாநில அரசு இங்கே ஒரு புதிய கொள்கைத் திட்டத்தை முன்னால் வைத்திருக்கிறது. இன்றையதினம் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகிற விலை கிடைக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் வைப்பதன் மூலம் இனி உற்பத்தி செய்யும் விவசாயி களுக்குக் கட்டுப்படியாகிற விலை கிடைக்குமா என்பதுதான் கேள்வி. 1971-72-லிருந்து இன்றும் சொல்லப்போனால் 1969 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் உள்ள மிக முக்கியமான பிரச்சினை. விவசாயிகளுக்குக் கட்டுப்படி யாகிற விலை கிடைக்கவில்லை என்பதுதான். இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் காலத்திலிருந்து நாட்டில் ஒரு முக்கியமான

பிரச்சினையாக இருந்து வருகிறது. எல்லா மாநிலங்களிலும் விவசாயிகளின் கிளர்ச்சிகளுக்கு முக்கியமான காரணம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கட்டுப்படியாகிற விலை கிடைக்காததும், கடன் சுமையும்தான். இந்த உண்மையை ஏற்க மறுத்து, பாராளுமன்ற ஜனநாயக முறை காரணமாகத்தான் இத்தகைய போராட்டங்கள் ஏற்படுகின்றன என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

1920 ஆம் ஆண்டில் நடந்த ஒத்துழையாமை இயக்கமும், 1930-31 ஆம் ஆண்டில் நடந்த சட்ட மறுப்பு இயக்கமும் விவசாயிகளின் வாழ்வு சீர்குலைந்ததால் ஏற்பட்ட போராட்டம்தான் அந்தப் போராட்டங்களுக்கே இதுதான் அஸ்திவாரம் அதைப் போலவே இப்போது மூன்றாவது திட்ட காலத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலை என்னவென்றால், விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்குச் சரியான கட்டுப்படியாகிற விலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அதாவது "அன்ரெம்யூனரேட்டிவ்" விலைகாரணமாக, கட்டுப்படியாகாத விலை காரணமாக விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எனவேதான் தங்களுக்குக் கட்டுப்படியாகிற விலை வேண்டும் என்று போராட்டம் நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மக்களுக்கு விநியோகம் செய்வது என்றால், மத்திய அரசும் மாநில அரசும் தங்களுக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள் என்பதுதான் பொருளாகும். அதன் விளைவுகளைப் பார்க்க வேண்டும். அவர்களின் பொருள்களுக்கு என்ன கொள்முதல் விலை? என்ன விலையில் அவர்கள் விற்பனை செய்வார்கள்? விவசாயிகளே நேரடியாக விற்றுக்கொள்வார்கள் என்றால் இதன் மூலம் விவசாயிகளும் பொருள் வாங்குவோரும் மோதிக் கொள்கிற நிலைதான் உருவாகும். அது மட்டுமல்ல இந்தப் பணியை விவசாயி செய்யவே முடியாது. இது கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட ஒன்று. கூட்டுறவுத் துறையினால் எப்படி விலையைக் கட்டுப்படுத்த முடியும்? அல்லது கூட்டுறவுத் துறையால் விவசாயிக்கு எப்படி நியாயமான விலையை வாங்கிக் கொடுக்க முடியும்? எனவேதான் நான், இது நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு கற்பனையே தவிர காரியத்தமான பொருளாதாரத் திட்டம் அல்ல என்று எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்டேன். ஏதோ விமர்சிக்க வேண்டும் என்ற அடிப்படையிலோ, குறை காண வேண்டும் என்ற அடிப்படையிலோ நான் இதைச் சொல்லவில்லை. பொருளாதார அடிப்படையில் பார்த்தால், அறிவிக்கப்பட்ட திட்டம் காரியார்த்தத்திற்குப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெறும் நல்லெண்ணம் மட்டும் நாட்டின் பொருளாதார நிலையை மாற்றிவிடாது. எனவே இது நிச்சயமாகத் தோல்வியுறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





காரணம் அந்த அளவுக்குப் பலவீனமான இந்தக் கொள்கை, இது சரியான கொள்கை அல்ல. இதற்குப் பதில் கட்டுப்படியாகக் கூடிய விலையில் அரசு விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்ததை உரிய முறையில் விநியோகம் செய்ய வேண்டும் இந்த நாட்டில் மத்திய அரசு பொது விநியோகம் குறித்து ஒரு திட்டவட்டமான கொள்கையை அறிவித்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், இன்றையதினம் நாட்டில் உள்ள நிலைமை என்ன? மாநிலத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு சில பொருள்களை நாம் இப்போது விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். மண்ணெண்ணெய், பாமாலின், அரிசி, சர்க்கரை ரவை, கோதுமை இவைகளைத்தான் மிகவும் 'லிமிடெட்' ஆக விநியோகம் செய்து வருகிறோம். ஆனால், இதற்கு தினந்தோறும் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளவர்கள், வயது வந்த பெண்களிலிருந்து கணவன், மனைவி, குழந்தைகள் அனைவரும் போய் கியூவில் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. வீட்டின் தலைவன் ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு கியூவில் போய் நிற்க வேண்டியிருக்கிறது. வீட்டின் தலைவி போனால் வீட்டில் அடுப்பு எரியாது. 'இன்றைக்கு நான் சர்க்கரைக்குப் போய் நிற்கிறேன். நீ நாளைக்கு அரிசிக்குப் போய் நில்' என்று தகப்பன் பிள்ளையைப் பார்த்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 10-00)

இப்படிப்பட்ட நிலைமைகள் நம்முடைய சிவில் சப்ளைஸ் முறை மூலமாக ஏற்படுகின்றன. அத்தியாவசியப் பண்டங்களையெல்லாம் விநியோகம் செய்ய வேண்டுமென்றால், உற்பத்தி இல்லாமல் செய்ய முடியாது. கடலை, நெல், கரும்பு இவைகளைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்க முடியாது. இவைகளையெல்லாம் மில்லுக்குத்தான் தர முடியும். இவைகளையெல்லாம் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் எப்படி விநியோகம் செய்ய முடியும்? அது ஒரு முழுமையான அமைப்பாக இருக்குமா? எனவே நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இருந்தாலும், இது காரியத்திற்கு உதவாத தவறான கொள்கை. இதை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். மத்திய அரசோடு மோதல் வரக்கூடாது என்ற எண்ணத்தோடு இது அமைக்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. இது ஒரு சரியான கொள்கையல்ல, தவறான கொள்கை, இது நடைமுறையில் வெற்றி பெறாது.

இரண்டாவது, மின்சாரம் சம்பந்தமான கொள்கை, நேற்று கூட அதைப் பற்றி தாவா நடந்தது. இதைப்பற்றி ஆங்கிலத்தில் உள்ளதைப் படிக்க தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும். பொதுவாக மின்சாரத் தேவை நம்முடைய தமிழ் நாட்டிற்கு அதிகம். தமிழ் நாட்டில் இரண்டு பசிகள் அதிகமாக இருக்கின்றன. ஒன்று நீர்ப் பசி, இரண்டாவது மின்சாரப் பசி இவ்விரண்டையும் நாம் பூர்த்தி செய்ய வேண்டும். மின்சாரப் பசியைப்

போக்குவதற்காக மாநில அரசு பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. திட்டங்களை நிறைவேற்றவில்லையென்று நான் கூறவில்லை. தமிழ் நாட்டில் இப்போது மேலும் நீர் மின்சக்தி—நீர் மின்சக்தி என்பதை தமிழில் மிகவும் அழகாக புனல் மின்சக்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்—நிறைவேற்றுவதற்குரிய சாத்தியக்கூறுகள் அறவே இல்லை. ஆகவே, அனல் மின்சக்தியைத் தான் நம்ப வேண்டியிருக்கிறது. அனல் மின்சக்திக்கு நிலக்கரி அதிகமாகத் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** "அனல்" என்ற வார்த்தைக்கேற்ப "புனல்" என்று போட்டிருக்கிறார்கள். நல்ல தமிழ், மிகவும் அழகாக இருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** அழகாக இருக்கிறது என்று பாராட்டிவிட்டுத்தான் நானும் சொல்கிறேன். நிலக்கரித் திண்டாட்டம் என்ற பிரச்சினை இருக்கிறது. மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நம்முடைய மாநில அரசு மத்திய அரசின் கொள்கையில் உள்ள கோளாறுகளை எதிர்த்துப் போராட வேண்டும். அதற்காக (Confrontation) வேண்டுமென்று நான் வாதாடவில்லை. அப்படிப்பட்ட கொள்கை என்னுடைய கட்சியின் கொள்கையல்ல. குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்க்க, மாநில அரசின் உரிமைகளுக்காக மத்திய அரசுடன் போராட வேண்டும். உரிமைக்காகப் போராடவில்லையென்றால், பிரச்சினைகள் தீராது. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கக் கூடிய முயற்சியை தனியார் கையில் விட்டுவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மத்திய அரசு யோசனையாகச் சொல்லியிருக்கலாம். சென்ற ஆண்டே மின்சார உற்பத்தி பற்றி விவாதம் இங்கே நடந்தபோது, இது போன்ற யோசனை ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்பட்டபோது, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டோம். இந்த ஆண்டு தனியாரும் செய்யலாம் என்ற குறிப்பு ஆளுநர் உரையிலே இருக்கிறது. ஆளுநர் உரையின் பத்தி 17-ல்

"The Government has decided to permit private industrialists to take up generation of power for their own consumption" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சொந்த உபயோகத்திற்காக ஏற்கெனவே ஜெனரேட்டர்களை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் பல இடங்களில் அப்படி இருக்கிறது. தமிழ் நாட்டிலும் சொந்த உபயோகத்திற்காகச் செய்கிறார்கள். டாட்டா நிறுவனமும் அப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கடுத்து—

"The Government would also like to consider any proposal for generation of power by private entrepreneurs if it can be done profitably."





என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இருப்பதை ஏன் ஒப்பிடுகிறேன் என்றால், தமிழில் அதற்கேற்ப துல்லியமாக மொழிபெயர்க்கவில்லை. தமிழில் "தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன் வருவார்களேயானால், அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்க விரும்புகிறது" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். இலாபகரமாக தங்கள் சொந்தத்திற்கல்ல. "மின்சார உற்பத்தி செய்யும் தொழிலை தனியார் ஏற்க முன்வருவார்களேயானால், அது தனியார் துறைக்கு ஒப்படைக்கப்படும்" என்ற முறையில் பொருள்படுகிறது. இது மத்திய அரசின் ஆலோசனையாக இருந்தாலும் தப்பு. நம்முடைய மாநில அரசு அப்படிப்பட்ட நிலைக்குப் போகுமானால், படிப்படியாக பொதுத் துறையில் உள்ள மின்சாரம் பலவீனத்திற்குள்ளாகும். அல்லது உற்பத்தியில் (economic sabotage) நடக்கும். ஏற்கெனவே பொதுத் துறையில் இது நடக்கிறது. இரயில்வேயில் பொருள்களைத் ஊடுருவுகிறது. அதாவது (penetration of private capital) தனியாரிடம் வாங்குவதால் இரயில்வேயின் லாபம் தனியார் துறைக்கு என்று சொல்லுவார்கள். பொதுத் துறையில் வரக்கூடிய இலாபம், ஆதாயம் எல்லாம் பாதிக்கப்படும். இது மத்திய அரசின் கொள்கையாக இருந்த போதிலும், நம்முடைய மாநில அரசு இதை ஏற்கக் கூடாது. ஏனென்றால் இது கொள்கை ரீதியாக தப்பான கொள்கை. அதை ஒத்துக்கொள்வது சரியாக இருக்காது. மேலும் உற்பத்திச் செலவும் அதிகமாக இருக்கிறது.

Thirumathi TARA CHERIAN : Sir, may I say one thing ? Of course, I am subject to correction. In the State of Maharashtra, the Tatas are doing that. They have an electricity distribution system of their own.

**திரு. ப. மாணிக்கம் :** நானே அதைக் குறிப்பிட்டேன். (Captive power) டாட்டா செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டிலும் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி விவரம் தெரிவித்தால், நான் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், அந்தக் கொள்கை சரியில்லை. மகாராஷ்டிரத்திலே கூட அதற்குக் கொள்கை ரீதியாக எதிர்ப்பு இருக்கிறது. டாட்டா தங்களுடைய தொழிலுக்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே தனியார் அதைச் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களை அனுமதிக்க அரசு ஆலோசனை செய்யத் தயாராக இருக்கிறது என்ற கொள்கையை வகுத்திருக்கிறது. அப்படியென்றால் தனியார் கையில் போகும். நடைமுறையில் இன்றைக்குள்ள மின் உற்பத்தி படிப்படியாக ஊடுருவப்பட்டு தேய்ந்துவிடும். அப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது. இந்தியாவினுடைய மின்சார உற்பத்திப் பிரச்சினையாக இருக்கட்டும், இவைகள் எல்லாம் அதிகப் விவசாயப் பிரச்சினையாக இருக்கட்டும்.

பரிமாணம் உள்ள பிரச்சினைகள். ஒரு தற்காலிக சாந்தி நிரந்தர வேதனையை உண்டாக்கும். இது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து மட்டுமல்ல. பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கை இதுதான். திரு. கிருஷ்ணமேனன் கூட, The problems are massive in India and it needs massive solution என்று கூறியிருக்கிறார். இப்படி பொருளாதார நிபுணர்கள் சொல்லுவதால் நானும் சொல்லுகிறேன், இந்தக் கொள்கை சரியான கொள்கையல்ல என்று. உற்பத்திச் செலவு கூடுகிறது என்று மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றால் கூட, அதை விவேகத்தோடுதான் செய்ய வேண்டும். விவசாயத் துறைக்கு அளிக்கும் மின்சாரக் கட்டணத்தைக் கூட்டுவதன் மூலம் இன்றைக்குள்ள பிரச்சினைகள் தீராது. பல மாறுதல்கள் ஏற்பட்டு புதிய முறை இப்போதுதான் வகுக்கப்பட்டிருக்கிறது. தொழில், விவசாயம் ஆகியவற்றுக்கு மின்சாரம் தேவைப்படுவதால், அதுபற்றி ஆழ்ந்து பரிசீலித்து விவேகமான முடிவு எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கொள்கைக்குப் போகக் கூடாது என்று குறிப்பிடுகிறேன். தமிழ் நாட்டினுடைய அபிவிருத்திக்கு சில

(முற்பகல் 10-10)

காரியங்கள், அதாவது வனத்தை மக்களுக்குச் சாதகமாக ஆக்கக்கூடிய முறையிலே வனத்தை மாற்றி மக்களுக்கு உபயோககரமாக மாற்றலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது வறட்சி நிலையைப் பயன்படுத்தி மத்திய அரசு கொடுத்தது குறைவு. அவர்கள் கொடுத்தது 48.90 கோடி ரூபாய். நாம் செலவு செய்திருப்பது 55.24 கோடி ரூபாய். அவர்கள் கொடுத்ததைவிட அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம். அதனாலே நமக்கு ஆதாயங்கள், சாலை மேம்பாடு, பாசன ஏரி, குளங்கள், நீர் நிலைகள் ஆகிய சொத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே வறட்சி நிவாரண வேலைகள் பற்றிக் குறைபாடுகள் சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு கொள்கைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு பார்த்தால், மத்திய அரசு இன்றைக்கு அந்த வறட்சி நிவாரண வேலைகளுக்காக ஒதுக்குவது கொஞ்சம்தான் என்றாலும், நாம் அதிலே கொஞ்சம் கூடுதலாகவே செலவு செய்கிறோம். இதற்கு மேலும் ஆறு கோடி ரூபாய் திட்ட அமைப்பு என்ற முறையிலே செலவு செய்திருக்கிறோம். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நிலைமைகளைச் சமாளித்து வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள இன்றைய நிலையைப் பற்றி ஆளுநர் அவர்களின் உரையிலே பாரா 31 சொல்லியிருக்கிறார்கள். 'நல்ல பருவ மழையால் இப்போது நிலைமை மாறி வருகிறது. சில பகுதிகள் தவிர இம்மாநிலத்தின் மற்ற எல்லா பகுதிகளிலும் உள்ள பல்வேறு ஏரிகள், நீர்த் தேக்கங்கள் நிரம்புவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.





இப்படி ஜாக்கிரதையாகவே குறிப்பிட்டுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மேற்பகுதி இப்படி பல இடங்களிலே மழை இல்லை. இந்தப் பிரச்சினை அடுத்து மார்ச் ஏப்ரலிலே உண்டாகும். இதுதான் இப்போதுள்ள நிலை. வறட்சி 13 மாவட்டங்களிலே இருக்கும் என்பது மாறி, சில மாவட்டங்களைப் பாதிக்கும் என்று சொல்லலாம். இது மார்ச், ஏப்ரல், மே மாதத்தில் இன்னும் அதிகமாக இருக்கும். அதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற அளவிலே, நம்முடைய மாநிலத்தில் உள்ள நீர்ப்பிடிப்புகளைச் சரிப்படுத்த வேண்டும். நான் இதைப்பற்றித் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக்கொண்டு வருகிறேன். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்று சொல்வார்களே அதுபோல எப்படியாவது கொஞ்சம் கொஞ்சமாகவாவது இந்த நீர்ப் பிடிப்புகளைக் காப்பாற்றுவதிலே, இந்த நீர்ப் பிடிப்புகளைப் பாதுகாப்பதிலே இனியாவது இந்த அரசு கவனம் செலுத்தும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது அரசு செலுத்துகின்ற கவனம் போதாது. இந்த நீர் வசதிகளைப் பொறுத்துத்தான் நம்முடைய வனங்களின் வளம் இருக்கும். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற டைரியில்கூட வனத்தைப் பாதுகாப்பதற்கு நல்ல பழமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் ஏழைக்கு அன்னமிடு என்று சொன்னால், அதற்குக் காரணம் ஏழைகள் அதிகமாகிவிட்டார்கள் என்று பொருள். இப்படிச் சொன்னால் 'ஏழைகளுக்குச் சோறு போடு, போடாவிட்டால் ஏழைகள் கிளர்ச்சி பண்ணுவார்கள்' என்ற அளவிலேதான் பொருள் கொள்ள முடியும். நமக்குக் கிடைக்கின்ற விவரங்களைப் பார்த்தால், வனங்களைப் பாதுகாப்பதற்கு அரசு மாற்று நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை நாம் ஏற்றால்கூட, பல இடங்களிலே இதே கருத்து மாறக்கூடிய நடவடிக்கைகள் ஏராளமாக இருக்கின்றன. நீர்ப்பிடிப்புகள் ஏற்படுவதிலே காடுகளுக்கும் முக்கியமான பங்கு இருக்கிறது. இந்த நிலையைக் குறிப்பிடக் காரணம், தர்மபுரி மாவட்டத்திலே கர்நாடக எல்லையோரப் பகுதிகளிலே மரங்கள் வெட்டப்பட்டு காவல் துறையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்குப் போயிருக்கிறது. அதை வனத் துறையிலே இருந்தவர்கள் தடுத்திருக்கிறார்கள். இன்னாருக்குப் போகிறது என்று சொல்லியும் தடுத்திருக்கிறார்கள். தடுத்த வனத் துறை அதிகாரி மீது திருட்டு நகையை வாங்கியதாகக் குற்றச்சாட்டு சொல்லி, அவரை அழைத்துச் சென்று போலீஸ் ஸ்டேஷனிலே அடித்திருக்கிறார்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள். வனத் துறையைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, காவல் துறை தலைமை அதிகாரிகள் தலையிட்டு தீர்த்திருக்கிறார்கள். நடந்த விவரங்களை நான் சற்று சுருக்கமாகவே சொல்கின்றேன். இப்படி வேலியே பயிரை மேய்கின்றது. வேலியே பயிரை மேய்கின்ற கதைகள் நிறைய நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக வனத்

துறையிலே, அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது. காரணம் இப்படிப் போவதை வனத் துறையிலே கண்டுபிடிக்க முடியாது. இதிலே உஷார் தன்மை வேண்டுமென்பது என்னுடைய கருத்து. வனங்கள் பாதுகாப்பு என்ற வகையில் பார்க்கிற போது, அரசாங்கம் இன்னும் நுணுக்கமாக இருக்க வேண்டும். இதிலே அரசுக்குக் கவனம் போதவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அணைக்கட்டு பற்றிச் சொல்கிறேன். களவரப்பள்ளி என்று ஒரு இடம். ஹொசூருக்குப் பக்கத்தில் ஓர் அணைக்கட்டு வர இருக்கிறது. அதாவது அதற்காக எழுப்பப்பட்ட ஆரம்பபூர்வமான வேலைகள் அஸ்திவாரம் போடப்பட்ட நிலையில் இருக்கிறது. அதன் சொந்தக்கார அம்மாள் அதில் நஷ்ட ஈட்டுக்காக உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார்கள். நிலத்திற்குத் தொகை கிடைக்கவில்லை என்று போயிருப்பார்கள் என நினைக்கிறேன். அங்கு அணை கட்டியதால், சேதாரம் அதிகமாக ஆகிவிட்டது. அங்கே கட்டியதை இடிக்க வேண்டுமென்றும், நஷ்ட ஈடு தர வேண்டுமென்றும் வழக்கு போட்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல எண்ணத்தில் இதைச் செய்கின்றார்களா, கெட்ட எண்ணத்தில் செய்கின்றார்களா என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. நஷ்ட ஈடு விஷயமாக உரிய காலத்திலே பேசித் தீர்க்கவில்லை என்ற பிரச்சினை வந்திருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது அது உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. அங்கே அந்த அணை கட்டப்பட்டால், தொழில் வளத்திற்கு வசதியாக இருக்கும். தொழில் வளர்ச்சியடைவது தண்ணீர் இல்லாமல் முடியாது. ஹொசூரில் அந்த அணை சீக்கிரம் வர வேண்டும். அங்கே தண்ணீர் தேவைப்படுகிறது. இன்றைக்கு அந்தப் பகுதியில் வசதிகள் பெருக வேண்டுமென்றால், அங்கே குடிநீர் வேண்டும். அந்த வசதி இல்லாததால் ஓர் ஆபத்து இருக்கிறது. எனக்குக் கிடைக்கின்ற தகவல்படி, அங்கே 'இண்டஸ்ட்ரீஸ்' எவ்வளவு நாள் நடத்த முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வேறு மாற்று இடத்திற்குப் போகலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையிலே நான் ஹொசூருக்குச் சென்றேன். அங்கே தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அங்கேயிருக்கின்றவர்களுக்கு நிறைய தண்ணீர் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். அங்கே 10 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரத்திற்கு நன்றி. காரணம், இன்றைக்குக் கொடுக்கக்கூடிய விவரம் ஒரு மாதம் கழித்து நிலைமை மாறக்கூடிய சூழ்நிலைகள்கூட ஏற்படலாம். 12 ஆயிரம் வீடுகள் கட்டலாம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் யார் கொடுப்பது? தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீடு காரணமாக நான் கொஞ்சம் காலம் இழந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஒரு நிமிடமிருக்கும் அவ்வளவுதான்.

**திரு. ப. மாணிக்கம் :** 12 ஆயிரம் வீடுகள் கட்டுவது என்று சொல்லும் போது, ஹொசூரில் உள்ளவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு இருக்கிறதா? வீடு கட்டலாம், தொழில்கள் ஆரம்பிக்கலாம். நீர் வசதியில்லாமல் பல இடங்களில் 'இண்டஸ்ட்ரீஸ்' ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. இதை தொன்றுதொட்டு வரலாற்றிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். தண்ணீர் வசதி இல்லாமல் யாரும் இருக்க முடியாது. இதை நான் ஏதோ அரசியல் காரணமாகச் சொல்லவில்லை. இந்த ஹொசூரில் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் நெருக்கடி அதிகமாக ஏற்படும். அந்த அணைக்கட்டைக் கட்டுவதற்கான பல முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், நான் கேள்விப்பட்டேன் அங்கே ஒரு சர்வ கட்சி அமைப்பு சேர்ந்து எப்படியாவது அந்த அணைக்கட்டைக் கட்ட முயற்சி மேற்கொள்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஹொசூரில் எதிர்காலத்தில் தண்ணீர் நெருக்கடி அதிகமாக ஏற்படும். ஆகவே அந்த அணைக்கட்டைக் கட்டுவதால் அது விவசாயத்திற்கும் பயன்படும். எனவே, இதில் அரசு போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அது உயர்நீதி மன்றத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அதிலே சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். கான்ஸ்டிடியூஷனிலே திருத்தங்கள் கூட கொண்டு வந்தோம். பொது நன்மைகளுக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்காக கான்ஸ்டிடியூஷனிலே கூட அமெண்ட்மெண்ட் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்துச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்கும் மக்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும். பட்ஜெட் வருகிறபோது, மற்ற விவரங்களைப்பற்றிப் பேசிக் கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திலே தண்ணீர் தொட்டி ஒன்று கட்டினார்கள். அது இடிந்து விழுந்திருக்கிறது. அதேபோல் இன்னொரு இடத்தில் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதை ஆளுநர் அவர்கள் வந்து திறந்து வைத்தார்கள். அப்போது அந்தத் தண்ணீர் தொட்டியிலிருந்து பைப்பில் தண்ணீர் வருவதற்குப் பதிலாக மேலேயிருந்தே தண்ணீர் கொட்டியது. அப்போது கலெக்டர் அந்தத் தண்ணீர் சரியாக பைப்பில் வரவில்லை என்றும், அதை உடனே திருத்துங்கள் என்றும் சொல்லி நிறுத்தியிருக்கிறார்கள். இப்படித் தன்னிறைவுத் திட்டத்தில் காரியங்கள் நடந்திருக்கின்றன. இதிலே இப்படி குறைபாடுகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வீணாக்குவதில் பயனில்லை. எந்தெந்த இடத்திலே இப்படி வீணாகிறது என்பதை அரசு கண்டுபிடிக்க வேண்டும். அந்தக் குறைகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நிலைமைகள் தொடர்ந்து ஏற்பட்டுவிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நடந்த சம்பவத்திற்காக, அதைக் கட்டியவர் மீது கிரிமினல் ப்ரொசீடிங்ஸ் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. ப. மாணிக்கம் :** நன்றி. நான் குறைபாடுகளைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். ஓரிடத்தில், இரண்டு இடங்களில் என்றில்லாமல் இது அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதில் கவனம் வேண்டும். ஆளுநர் அவர்கள் உரையில் காவல் துறையைப் பற்றி இரண்டு வரிகளில் குறிப்பிட்டு, அதற்கடுத்து காவல் துறையினருக்கு என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை பொதுவாக சீராக உள்ளது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன, சமூகவிரோத சக்திகள் அடக்கப்பட்டுள்ளன என்று சொல்லிவிட்டு, அதற்கடுத்து காவல் துறையினரின் நன்மைக்காகப் பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சமூகவிரோத சக்திகள் அடக்கப்பட்டுள்ளன, தீவிரவாதிகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருப்பதால், ஒரு சாராயம்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கைக்காகச் சொல்லவில்லை. கோவையிலே 2½ இலட்சம் ரூபாய்க்கு ஒருவர் ஒரு கடையை எடுத்துவிட்டு, சப்ளை இல்லாமல் திரும்பவும் கடையை அவர் ஒப்படைத்து, அதை வேறு ஒருவர் எடுத்திருக்கிறார்.



சப்ளை இல்லை என்பது மட்டுமல்ல, கள்ளச் சாராயம் நிறைய நடமாடுகிறது. இப்படிப்பட்ட புகார்கள் பல இடங்களில் இருக்கின்றன. உதாரணத்திற்காக ஒன்று சொன்னேன். இதையெல்லாம் காவல் துறையால் கட்டுப்படுத்த முடிகிறதா? காவல் துறைக்குத்தான் அந்தக் கடமை இருக்கிறது. இன்றையதினம் காவல் துறையில் நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். 1930, 1940-ல் இருந்த போலீஸ் போன்று அல்ல. அவர்களுக்கு ஆளைப் பார்த்து அடிக்கத்தான் தெரியும். ஆனால், படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் இன்றைய தினம் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இதில் தலையிட முடியவில்லை. அதற்கு மாறாக கறுப்புக் குல்லாய் செய்கிற வேலைதான் ஜாஸ்தி. அப்படி நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அது இந்தத் துறையின் செயல்பாட்டைப் பாதிக்கிறது. பல இடங்களில் அத்துமீறல்கள் நடக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில். .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கான அதிகபட்ச நேரமும் முடிந்துவிட்டது.

**திரு. ப. மாணிக்கம் :** இன்னும் 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் அத்துமீறி பல காரியங்களைக் காவல் துறை செய்து கொண்டிருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு முறையாகக் கொண்டு வரப்பட்டபோதிலும், அதற்கு எந்தவித நியாயமும் வழங்கப்படவில்லை. அங்கே தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியதாகச் சொல்லுகிறார்கள். லேவாதேவிக்காரர்களுக்கு எதிராக விவசாயிகள் எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாம் காவல் துறையால் அடக்கப்படுகின்றன. எங்களுடைய கட்சியின் மாவட்டச் செயலாளர் அங்கேயுள்ள பொறுப்புள்ள மாவட்ட அதிகாரியால் தாக்கப்படுகிறார். காரணம் கோபம்தான். 1940-ல் இது நடந்திருந்தால் என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் 1982-ல் இவ்வாறு நடக்கிறது. அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. காவல் துறையில் படித்த அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். இருந்தும் ஏன் அத்துமீறிய காரியங்கள் நடக்கின்றன? அரசியல் காரணமா? எதுவாயினும் காவல் துறையில் சரியான கொள்கை வேண்டும். சரியான கொள்கை இல்லாமல் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்திவிட்டோம், சட்டம், ஒழுங்கு அழகாக இருக்கிறது என்றால் எப்படி? இன்றைய தினம் சமூக விரோத சக்திகள் நாகரீகமாகச் செயல்படக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, காவல் துறையினரும் நாகரீகமாகச் செயல்பட வேண்டும் என்பது ஒன்று. காவல் துறையினர் அரசியல் கட்சிகளை அடக்குவதற்கும், ஆகாதவர்களை அடக்குவதற்கும்தான் என்ற கொள்கையைக் கைவிட வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளர் கொள்கை ஒரு முற்போக்கான கொள்கை, கனிந்த பலனைத் தந்துகொண்டிருக்கிறது—இப்படி எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கலாம். தொழிற் துறையும் சரி, மக்கள் சமுதாயமும் சரி அடங்கும்போது அமைதியாக இருக்கும். ஆனால் வெடிப்பு எப்போது வருகிறதென்பது தெரியாது. இந்தியா ஓர் எரிமலையில் அமர்ந்து கொண்டிருக்கிறது, என்றைக்கு எங்கு வெடிக்குமென்பது தெரியாது என்று சொல்லப்படுகிறது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 'ஆர்கனைஸ்ட் லேபர்' என்று இருக்கிறார்களே, அவர்களிடமிருந்து பிரச்சினைகள் வருகின்றன. அவர்கள் கிளர்ச்சிகளை முறையாகச் சமாளிக்க சட்ட வழிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக கடந்த மாதம் 19 ஆம் தேதி நடந்ததைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். அதன் விவரத்திற்குள் போகவில்லை. பால் பண்ணையில் சென்ற ஆண்டு நடந்தது போராட்டம். அதற்கு அனுதாபம் தெரிவித்ததால், சென்னையில் 1,500 பேர்கள் வெளியே இருக்கிறார்கள். இது முற்போக்குக் கொள்கையா? தொழிலாளர்கள் வெளியே இருக்கும் போது, புதிதாகத் தொழிலாளர்களைக் கொண்டுவந்து, மிஷின்களை ஓட்டக்கூடாது என்பது கன்வென்ஷன். ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு 1,500 தொழிலாளர்களை நடுத் தெருவில் நிறுத்தியிருக்கிறார்கள். இன்றைய தினம் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. புதிதாக வேலை கொடுப்பது எப்படி? வேலையில் இருப்பவர்களைச் சந்தியில் நிறுத்தி, புதியவர்களுக்கு வேலை கொடுப்பதென்றால், அப்படி ஓர் ஆட்சி நடந்தால், இன்னொரு ஆட்சி வரும்போது இதைவிடக் கொடுமையாக இருக்கும். கனிந்த பலனைத் தருமென்பதற்குப் பதிலாக கனிந்த பலன் கனலாக மாறுமென்று எச்சரித்து, அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், எப்படி மற்ற உறுப்பினர்கள் ஆளுநர் அவர்கள் உரையில் பேசுவார்களென்று நான் எதிர்பார்த்தேனோ, அந்த எண்ணத்திற்கு மிகவும் ஆச்சரியமளிப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். தமிழுக்காகவும், தமிழர்களுடைய நல்வாழ்விற்காகவும் இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் மகிழ்ச்சியடைவார்கள், அகமகிழ்வார்கள் என்று எண்ணினேன். ஆனால், அவர்கள் ஆத்திரத்தைக் கொட்டினார்கள் என்பது மாத்திரமல்ல, நிர்வாகம் சரியில்லை, அதை மறைக்கத்தான் விழா எடுக்கிறார்கள் என்று பேசினார்கள். அடுத்து, இந்த அரசின்





கொள்கைகளையும், மக்களுக்காகச் செய்த நல்ல பணிகளையும் பார்த்து கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் போற்றுவார்களென்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் வேறு பக்கம், வேறு கோணத்தில் பார்த்துக் கூறுகிறார்கள். மத்தளத்திற்கு இரண்டு பக்கம் அடி என்பதுபோல இரண்டு பக்கங்களிலும் அடியை வாங்கிக் கொண்டாலும், நியாயத்தின் அடிப்படையிலே இந்த அரசு செயல்படுவதால், செயலாற்றுவதால், இந்தத் தாக்குதல்களையெல்லாம் தட்டிக் கொடுக்கும் வகையிலே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை இந்த அரசு பெற்றிருக்கிறது. பாரதியார் நூற்றாண்டு விழா சிறப்பாக நடக்க திட்டங்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள்கூட இதை வரவேற்றிருக்கிறார்கள். மலேசியாவில் திரு டேவிட் அவர்கள் விழா எடுக்க ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழுக்கு எப்போதும் இல்லாத அளவிற்குப் பெருமை சேர்க்கப்பட்டிருக்கிறது. பாரதியார் பாரதிதாசன் பெயர்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது மட்டுமல்ல, பெண்களுக்காக ஒரு பல்கலைக் கழகம் என்று அரசு ஒரு நல்ல திட்டத்தை வெளியிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

சென்ற ஆண்டு வறட்சி நிலை இருந்தபோது, அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக பல நல்ல காரியங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் துயர் துடைக்கப்பட்டிருக்கிறதென்பதை எண்ணி மகிழ்ச்சியடையக் கடமைப்பட்டிருக்கிறேன். உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றிப் பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்கள் 'மிச்ச வரம்பா' என்று கேட்டார்கள். அதன் காரணமாக புதிய நடவடிக்கையை அரசு எடுத்தது. அந்தச் சட்டம் வருகிறதென்பதால், அதற்கு முன்னாலேயே அதை எதிர்பார்த்து மாற்றிக் கொண்டிருந்த நிலையைப் போக்க வேண்டும், 1958 சனவரி 1, 1960 ஏப்ரல் 6 இதற்கு இடைப்பட்ட காலங்களில் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள சிலர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தடுக்க வேண்டுமென்று நினைத்தது. சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, 'Spirit of the law' and letter of the Law என்று இரண்டு நிலைகளைக் குறிப்பிட வேண்டும். உளப்பூர்வமாக அரசின் நோக்கம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். உச்சவரம்பு வருகிறதென்று அறிந்து, எதிர்பார்த்து ஏமாற்றம் செய்பவர்களைத் தடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது சில வார்த்தைகளிலே, சில வரிகளிலே ஏற்படுகிற குழப்பங்களை வைத்து, 'இவர்கள் திட்டமிட்டுச் செய்தார்கள்' என்று குற்றம் சாட்டப் போகிறார்களா?

அருமை நண்பர் திரு நீலநாராயணன் அவர்கள், எங்கள் காலத்தில் திரும்பி வரவில்லை என்று சொன்னார்கள். 7—11—1975-ல், அவர்கள் காலத்தில், 'டெக்ஸ்டைல் கம்பெனி அக்விசிஷன் ஆஃப் அண்டர்டேக்கிங்

பில், 1975-க்கு இசைவு (with hold) செய்யப்பட்டது. அதைப் போலவே "லாஸ்கோ ஸ்டீல் லிமிடெட் பில்"-லுக்கும் இசைவு 'வித்ஹோல்ட்' செய்யப்பட்டது. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் பில்லுக்கும் அதே கதிதான். சக்தி பைப்ஸ் லிமிடெட் பில்லுக்கும் அதே கதிதான்.

(முற்பகல் 10-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

'தமிழ் நாடு ஹாண்ட்லூம் அன்ட் டெக்ஸ்டைல்' பற்றி ஒரு சட்டம் சட்ட மன்றப் பேரவையிலும், மேலவையிலும் நிறைவேற்றப்பட்டு அனுப்பப் பட்டது. அதற்கும் இதே கதிதான். இங்கேயிருந்து அனுப்பப்படுகின்றவைகள் எல்லாம் திருப்பி அனுப்பப்படுகின்ற நிலைமைதான் இருக்கிறது. இப்படிப் பட்ட நல்ல சட்டங்களையெல்லாம் உண்மையிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், இந்த அரசுக்குக் குரல் கொடுப்பதுடன் கரம் கொடுத்திருக்க வேண்டாமா? இந்த அரசு மத்திய அரசுக்கு முதலிலே ஒரு தாக்கீது அனுப்பியது. 6 மாதம் கழிந்த பிறகு தான் அதற்குப் பதில் வந்தது. இதிலே உள்நோக்கம் என்ன? ஏன் இந்தக் காலதாமதம்? அதனால் தொடர்ந்து கடிதம் எழுதி வலியுறுத்துகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதே மாதிரிதான் நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும். இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கின்ற காரணங்கள் என்னவென்றால், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில் இப்போது மாறுதல்களைக் கொண்டு வந்தால், அதனால் குழப்பங்கள் வரலாம் என்று சொல்லுகிறார்கள். நாம் நம்முடைய வாதங்களை இதுகுறித்துச் சொல்ல வேண்டும். பாகப் பிரிவினைக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம் அல்ல இது. ஒரு காலகட்டத்திலே கொண்டுவரப்பட்ட சட்டத்திலே ஓட்டை இருப்பதாகப் பின்னால் தெரிய வந்தால், அந்த ஓட்டையை அடைப்பதில் என்ன தவறு? இதை அந்தக் கால கட்டத்திலேயே கொண்டு வந்தவர்கள் பாராட்டியிருக்க வேண்டாமா? அதற்குப் பதிலாக இவர்களும் அவர்களோடு சேர்ந்து நின்று, இந்த அரசாங்கத்தைத் தாக்குவது எனக்கு உள்ளபடியே வேதனையாக இருக்கிறது.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் அண்ணா வழியிலிருந்து நாங்கள் வழுக்குகிறோம் என்று இங்கே குறைபட்டுக் கொண்டார்கள். மக்களுக்கு நல்வாழ்வைத் தர வேண்டும். அவர்களுடைய நல்வாழ்வுக்கு எது தேவையோ அதை அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அண்ணா அவர்கள் ஒரு முறை அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, அண்ணா அவர்களைப் பார்த்து நிருபர்கள் கேள்வி கேட்டார்கள். "நீங்கள்





அமெரிக்காவை விரும்புகிறீர்களா அல்லது இரஷ்யாவை விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்கள். அதாவது, சோஷலிச சித்தாந்தத்தை விரும்புகிறீர்களா அல்லது கம்யூனிச சித்தாந்தத்தை விரும்புகிறீர்களா என்று நிருபர்கள் கேட்கிறார்கள். அதற்கு அண்ணா அவர்கள் "எங்களுக்கு யார் அதிகமாக உதவுகிறார்களோ அவர்களை விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். மக்கள் பயன் பெற வேண்டும், தமிழ் மாநிலம் வளர்ச்சி பெற வேண்டும். இப்போது மின்சாரத்தைப் பொறுத்தவரையில் . . .

*** திரு. நீலநாராயணன் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய கொள்கையை எப்படி வகுத்துக் கொண்டார்கள் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் குறிப்பிட்டார். பொதுத் துறையிலே இருக்கின்ற ஒரு நிறுவனத்தைத் தனியார் துறைக்கு அனுப்புவதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆதரித்தார்களா இல்லையா என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரிடமிருந்து திட்ட வட்டமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத்தான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்று நான் வருத்தத்தோடு சொல்கிறேன். மின்சாரம் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. அது தற்போது போதுமானதாக இல்லை. அதைப் பெருக்குகின்ற வகையில் திட்டங்கள் போட வேண்டியிருக்கிறது. தனியாரும், தாங்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து தங்களுடைய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வார்களானால், அதை நாம் வரவேற்க வேண்டும். நமக்குத் தேவைப்படுகின்ற மின்சாரத்தை அதிகப்படுத்த முன்வருகின்ற தனியார்களுக்கு நாம் துணையாக இருப்பதில் தவறு ஒன்றுமில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இப்போதும் எல்லோருமே அப்படிச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அச்சகங்கள், சினிமா தியேட்டர்கள் போன்றவற்றில் எல்லோருமே ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டு தங்களுடைய தேவைக்கு மின்சாரத்தைத் தயாரித்துக் கொள்கிறார்கள். ஆனால், அதைப்பற்றி நாங்கள் இங்கே குறிப்பிடவில்லை. தனியாரே மின்சாரத்தை உற்பத்தி செய்து அதை மின்சார வாரியத்துக்குப் போட்டியாக விற்கக் கூடிய நிலை வந்தால், அது முறைதானா? மேலும் அப்படிச் செய்வது தேசியமய கொள்கைக்கு விரோதமான ஒன்று என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களுடைய கருத்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நமக்கு மின்சாரத் தேவை அதிகமாக இருக்கிறது. நம்மால் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. தனியார் மின்சாரத்தைத் தயாரித்து நமக்கு வழங்குகிறார்கள் என்றால், நமக்குத் துணையாக வருகிறார்கள் என்று அர்த்தம். அப்படிச் செய்வதினாலேயே அவர்கள் முதலாளித்துவ நிலைக்கு வந்து, நம்மைத் தள்ளி வைத்து விடுவார்கள் என்கிற அச்சம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வரத் தேவையில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையிலே மின்சாரம் என்பது பொதுத் துறையிலேதான் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை மத்திய அரசு இப்போது மாற்றி தனியாருக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற வாய்ப்பினைக் கொடுக்கலாமாவென்று யோசனை செய்தது. அதற்குத்தான் இப்போது நமது மாநிலத்தில் ஆதரவு திரட்ட முயற்சி செய்கிறார்கள். என்னுடைய கேள்வியெல்லாம் இந்த அரசு தனியாரிடம் மின்சாரத்தைத் தயாரிக்கின்ற பொறுப்பினை ஒப்படைக்க வேண்டுமென்பதற்காக காரண காரியங்களை ஏன் சொல்ல வேண்டும் என்பதுதான். இதில் தனியார் ' இன்வெஸ்ட்மென்ட் ' பண்ணுவது தேவையில்லை. பொதுத் துறையிலிருந்து இதனை மாற்றக் கூடாது என்றுதான் தமிழக அரசு மத்திய அரசிடம் சண்டை போட வேண்டுமே தவிர, ஆதரவாக முன்னே போய் நிற்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவது அருமையான திட்டம்.

*** மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அவைத் தலைவரவர்களே, கடந்த 4, 5 நாட்களாக மின்சாரம் ஒரு விவாதத்திற்குரிய முக்கியமான, சுவையான பிரச்சினையாக அவையில் பேசப்படுகிறது. இதைப் பற்றிச் சுற்றி வளைக்காமல், சுற்றி வளைத்துப் பேசாமல் ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்கிறேன். 34 ஆண்டுக் கால அனுபவத்தில் நாம் சில கொள்கைகளை மறு பரிசீலனை செய்யக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நாட்டினுடைய ஒட்டுமொத்தமான நன்மையைக் கருதி, தொழில் வளர்ச்சி ஏற்பட்டாக வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியாக வேண்டும். சமுதாயத்திலே சமத்துவ நிலையை ஏற்படுத்தியாக வேண்டும். அதே நேரத்தில் ஜனநாயக அமைப்பையும் பழுதுபடுத்தி விடாமல் காரியங்களை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் பல கொள்கைகளை மறு பரிசீலனை செய்கிறோம். ஒரு





' டீவியேஷன் ' என்று சொல்வதைப்போல, இருப்பதை விட்டுவிடாமல் மாறிச் சென்று அந்த நோக்கத்தை அடைய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்தே—ஒன்றுபட்ட கட்சியாக இருந்த காலத்திலிருந்தே—ஜாயின்ட் செக்டாருக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். அப்போது இருந்த அரசாங்கமும், முதல்வர் அவர்களும், தொழிலமைச்சர் அவர்களும் ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்கே எப்படி ' ஜாயின்ட் செக்டார் ' வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை அறிந்து, அதன் அடிப்படையிலே இங்கேயும் ' ஜாயின்ட் செக்டார் ' வரலாம் என்று சொன்னார்கள். அதிலே தனியார் துறையிலே இருக்கக்கூடிய சில ஆற்றலை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது தான் மிகவும் முக்கியமான அம்சம். ஒரு தொழில் நிறுவனம் வெற்றி பெற மூலதனம், பணம், மார்க்கெட் போன்ற அம்சங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. ஆனால், அதைவிட மிக மிக முக்கியமானது ' மானேஜேரியல் ஸ்கில் ' ஆகும். அது தனியாரிடம் இருந்தாலும் கூட, அரசு அதைப் பெற்றுக்கொள்வது நாட்டினுடைய ஒட்டுமொத்தமான நன்மைக்கு, வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் என்ற அடிப்படையில் தான், அதனை அன்றைக்கு ஏற்றுக்கொண்டோம். அதைக்கூட அப்போது விமர்சனம் செய்தார்கள். நல்ல நீரும், சாக்கடையும் கலப்பதா என்று சொன்னார்கள். எப்படி இருந்தாலும், தாமரை பூத்தால் போதும் என்று அப்போது பதில் கூட சொல்லப்பட்டது. விவசாயத்திற்குச் சாக்கடை நீரைப் பயன்படுத்தினால் போதும். நல்ல நீரைக் குடிநீராகப் பயன்படுத்தினால் போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட இது குறித்துப் பேசியிருக்கிறார்கள். நாம் இம்மாதிரி காரியங்களை நடைமுறைப்படுத்த தனியாரை அனுமதித்தாலும் கூட முறையாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சில கட்டுப்பாடுகளை விதித்து அதற்கான அதிகாரம் சிலவற்றை அரசே வைத்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு, போக்குவரத்து போன்றவை அரசு கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில், நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும், முக்கியமான தேவையான நிலக்கரி போன்றவை நமக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. வேகன்கள் கிடைக்கவில்லையென்ற குற்றச்சாட்டும், நிலக்கரி சரியாகக் கிடைக்கவில்லையென்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. நிலக்கரி கிடைக்கவில்லையென்று மத்திய அமைச்சரிடம் கேட்டால், இல்லையில்லை வேகன்தான் கிடைக்கவில்லையென்று சொல்லுவார். வேகன் கிடைக்கவில்லையென்று மத்திய அமைச்சரிடம் கேட்டால், இல்லையில்லை நிலக்கரிதான் கிடைக்கவில்லையென்று சொல்லுவார். ஆக மொத்தத்தில் நமக்கு

வேண்டியது, நாம் கேட்பது, நமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் அதே வேளையில் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 900 டிரக்குகள் அளவுக்கு நிலக்கரி திருட்டுத்தனமாகச் செல்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு யார் காரணம் என்று நாம் பார்க்க வேண்டியதில்லை. காரணம், இது மத்திய அரசு சம்பந்தப்பட்டது. இந்தியாவை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் மட்டும்தான (இண்டஸ்ட்ரியல் மைண்ட்) தொழிற் பண்பு மிகவும் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதேபோல 'ஆட்டோமோபைல் இண்டஸ்ட்ரீஸ்' போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் கூட, தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. அதற்கான தகுதியுடையவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவி, மூலப்பொருள், மின்சாரம் போன்றவற்றைக் கொடுப்பதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவேதான் தனியாரே மின்சாரத்தை உற்பத்தி செய்து அவர்களே அதை ஏற்று நடத்த முன்வந்தால், அவர்களுக்கு அந்த வாய்ப்பினைக் கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. இதில் ஒளிவு மறைவு ஒன்றுமில்லை. ஆனால் இதிலுள்ள சாதக பாதகங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லலாம். அரசு அதையும் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. தனியார் லாபகரமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய முன்வருவார்களானால், அதை அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது என்பது இரண்டாவது அம்சமாக ஆளுநர் உரையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அப்படித் தயாராக

(முற்பகல் 10-40)

இருப்பதற்கான காரணங்கள் என்ன? எந்தச் சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்று பார்க்கும்போது, அரசு தனியாரை ஊக்குவிக்க விரும்புகிறது. அவர்களிடத்திலே இருக்கும் திறமையைப் பயன்படுத்தி தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்று கருதுகிறது. ஒட்டுமொத்தமாக, அரசு செய்தாலும், தனியார் செய்தாலும், நாட்டிலே தொழில் வளர வேண்டும், பொருளாதார மேம்பாடு ஏற்பட வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும், ஒரு 'வெல்ஃபேர் ஸ்டேட்' என்ற அளவிலே நல்ல காரியங்களை நிறைவேற்றக் கூடிய ஆட்சி நடக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஐடியாலஜிக்கலாக, ஏதோ சித்தாந்தம் அதற்குள்ளேதான் இருப்போம் என்ற நிலை இல்லாமல், 'ப்ராக்மேட்டிசம்' என்று சொல்லும் யதார்த்தங்களை வைத்திருக்கிறது இந்த அரசு. யதார்த்தங்கள் இலட்சியங்கள் அல்ல. யதார்த்தங்களைப் புறக்கணிக்க முடியாது. நமக்கு



ஏற்பட்ட அனுபவங்கள் இதற்குக் காரணங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலுள்ள சாதக பாதகங்களைச் சொன்னால், அரசு அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. அவைகளைச் சுட்டிக்காட்டினால் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** குடிசைகளுக்கு மின் விளக்கு வழங்கும் திட்டத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம். குடிசைகளுக்கு எதற்கு மின் விளக்குகள் என்று நினைத்திருந்தால், இருக்கின்ற மின்சாரம் போதும் என்ற நிலை இருந்திருக்கும். மின்சாரம் பெரிய அளவிலே தேவைப்படும் போது, இதுபோன்ற முயற்சிகள் மிகவும் தேவையாக இருக்கின்றன.

காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். "இதில் அரசு தன்னுடைய கொள்கையை விளக்க வேண்டும், மத்திய அரசை எதிர்த்துப் போராட நாங்கள் தயார்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்நாடபதி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை 1971-லே வந்தது. இப்படி இது ஒரு பிரச்சினையாக வரப் போகிறது என்றும், 1974-லே அந்த ஒப்பந்தம் காலாவதியாகப் போகிறது என்றும் சொன்னபோது, அன்றையதினம் பொறுப்பிலே இருந்தவர்கள் இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் செயல்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை அப்போதே தீர்ந்திருக்கும். ஆனால், இந்த நோக்கில் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சொட்டு தண்ணீர் கூட விடமாட்டோம் என்று பேசினால், இது எப்படி தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதாக இருக்கும்? வங்காள தேசத்தில் இருக்கும் நதிநீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது சிந்து—கங்கை பற்றி எடுக்கும் நிலைமை போல, ஐரோப்பாவையே எடுத்துக்கொண்டால், இந்த நதிநீர்ப் பிரச்சினைகளில் எடுக்கும் நிலைமைபோல, மாநிலத்திற்கு மாநிலம் இருக்கும் பிரச்சினையைப் பார்க்கும் நிலைமை விடுத்து, இதிலே மத்திய அரசு துணிந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு வலியுறுத்த வேண்டும்.

தொழிற் பெருக்கத்திற்கு சில நல்ல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். விற்பனை வரியைப் பொறுத்தவரையில், தொழில் நடத்துபவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வட்டியில்லாக் கடனை 50 இலட்சத்திலிருந்து 1 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி ஊக்கம் அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

இருமொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், அது எந்த அளவுக்கு நடைமுறையில் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, நீதிமன்றங்களிலும் தமிழில் நடவடிக்கைகள் வர வேண்டும் என்று இப்போது நடவடிக்கை எடுத்து வருவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

கடல் சார்ந்த ஆய்வு என்கிறபோது, காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பக்கம், பூம்புகாருக்கு அருகிலே அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டுகளுக்கு முன்பு இரஷ்ய நாட்டைச் சேர்ந்த ஒரு பெரிய கப்பல் அந்தப் பகுதிக்கு வந்திருந்து ஆய்வுகளை நடத்தியது. அந்த ஆய்வோடு சேர்ந்து நமது முயற்சியையும் மேற்கொண்டு நல்ல பலனை அடைய முயற்சிக்க வேண்டும்.

குழந்தைகள் தொழு நோய் என்பது இப்போது தமிழ் நாட்டிலே பரவியிருக்கிறது என்பதால், அதற்குரிய தேவையை உணர்ந்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருவதை நான் பாராட்டுகிறேன்.

தொழிலாளர்கள் பிரச்சினையைக் குறிப்பிட்டு, "ஒருநாள் தானே 'பந்த்' செய்தோம், இதற்கு இப்படிச் செய்தார்களே, ஆனால் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையிலே செய்தது என்ன?" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசியதற்கு நான் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் இலங்கை நிகழ்ச்சியைப்பற்றி எழுதிய கவிதையை இங்கே படித்துக் காட்டுகிறேன்.

"வீடுகளெல்லாம் தீயால்
வீழ்த்தினார்! கடைகளெல்லாம்
கேடுற நெருப்பு வைத்தார்!
கீழ்மன வெறியர் எங்கள்
பீடுறு யாழ்மா நாட்டின்
பெரியநூ நிலைய மீதும்
போடுசெந் தியை என்றார்....!
பொன்னூ ல்கள் எரித்தார்! சென்றார்
அம்மம்மா! என்ன சொல்வேன்?
அனலிலே கம்பன் மாண்டான்!
இம்மா நிலம் வணங்கும்
இனியவள் ளுவன் மடிந்தான்!
'உம்' மென எழுந்த தீயில்
உயர்தமிழ் இளங்கோ செத்தான்!
செம்மனப் புலவ ரெல்லாம்
செந்தீயில் வெந்தா ரம்மா!

என்ற நிகழ்ச்சிதான் இலங்கையிலே நடந்தது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டைச் சுற்றி 200 காவலர்கள் சேர்ந்து கொன்றுவிட இருந்த



காட்சியெல்லாம் கண்டு கொதித்துதான் தமிழகம் திரண்டது. நம்முடைய உணர்ச்சியைப் பார்த்து அங்கிருக்கும் தமிழர்கள் மகிழ்ச்சியடையும்போது, இங்கே இருக்கும் தமிழர்கள் இப்படி நினைத்துவிட்டார்களே என்று நான் மிகவும் வருந்துகிறேன். தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்றால், அதனால் நாட்டுக்குப் பெருமிழப்பு ஏற்படுகிறது. நான் அண்மையில் ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கே உள்ள தொழிலாளர்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எந்த அளவுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று பார்க்கும்போதுதான், அந்த நாடு தொழில் துறையில் வளர்ச்சியடைந்திருக்கும் காரணம் புரிந்தது. அந்த நிலைமை இங்கேயும் ஏற்பட வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "நாங்கள் வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்துவிட்டோம், நீங்கள் அறிவிக்காததால், உங்களுக்குத் தேர்தலிலே அக்கறையில்லை" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் வேட்பாளர்களின் பட்டியலை அறிவித்தது ஒன்றாலே களத்திற்கு வந்துவிட்ட நிலை வந்துவிடாது. சட்டபூர்வமாக நீதிமன்றத்தின் முடிவு தெரிந்தவுடன், தேர்தலை நடத்தவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள் விஷயத்திலே ஒன்றை நான் அனுபவபூர்வமாகத் தெரிவித்துக கொள்கிறேன். பட்டியலிட்டு தமிழ் நாட்டில் இத்தனை ஆயிரம் காவல் நிலையங்கள் இருக்கின்றன, இவ்வளவு காவல் நிலையங்கள் இருந்தும் கலவரங்களும், குழப்பங்களும் ஏற்படுகின்றன என்றெல்லாம் சொல்லப்பட்டது. இவைகள் இல்லாவிட்டாலும், இந்தக் காவல் நிலையங்கள் தேவையில்லையா? ஆளவந்தார் என்பவரை தலை வேறு உடல் வேறாக வெட்டிப் போட்டுவிட்டு தலையைக் கடலிலேயும், முண்டத்தை இரயிலிலேயும் அனுப்பிவிட்ட நிகழ்ச்சிகள் ஏற்படவில்லையா? அம்மாதிரி நிகழ்ச்சிகளைத் தடுக்க காவல் நிலையங்கள் மிகவும் தேவைதான். இப்போதும் இதுமாதிரி கொலை, கொள்ளைகள் நாட்டிலே எவ்வளவு நடைபெறுகின்றன! ஆனால், அகில இந்தியா என்று மட்டுமல்ல, உலகமே வியந்து பாராட்டும் அளவுக்கு தமிழ் நாட்டு போலீசார் எத்தனையோ வழக்குகளில் குற்றவாளிகளைப பிடித்திருக்கிறார்கள். பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், முதல் பக்கத்திலேயும், இரண்டாவது பக்கத்திலேயும் கொலை, கொள்ளைகளைப் பற்றி எழுதியிருந்தால், அடுத்துவரும் பக்கங்களிலே அவைகளைப் பிடித்திருப்பதையும், காவல் துறையினர் ஆற்றிய சிறப்புப் பணிகளையும் போட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். அப்படி கவனித்துப் படித்தால்,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1982 பிப்ரவரி 9

நிலைமைகள் புரியும். காவலர்களுக்குத் தேவையான அளவுக்கு குடியிருப்புக்கள் கட்டுவதற்கு ஊக்கம் தந்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அண்மையில் பெய்த நல்ல மழையின் காரணமாக இப்போது நிலைமை மிகவும் மாறியிருக்கிறது. தமிழகம் ஒரு நல்ல எதிர்காலத்தை எதிர்நோக்கி யிருக்கும்போது, நாம் எடுக்கும் ஆக்கப் பணிகளுக்கு எதிர்க் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் நல்ல ஊக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் "எச்சரிக்கையாக இருங்கள், அ.தி.மு.க., தி.மு.க இரு சாராரின் ஆதரவு இல்லாமல் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற முடியாது" என்று எச்சரிக்கை செய்திருப்பதன் நல்ல நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். நிச்சயமாக நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்போம், இந்த அரசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தமிழ் நாட்டின் நல்லதொரு எதிர் காலத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆற்றுகின்ற பணியில் அனைவரும் துணை இருக்க வேண்டும். ஆளுநர் அவர்களின் இந்த உரை அந்த அடிப்படையிலே அமைந்திருப்பதனால், இதை வரவேற்று, பாராட்டி, அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் அவர்களின் உரை மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்க முடியாவிட்டாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் சின்னஞ்சிறு கிராமமாகிய குப்பிடிச்சாத்தம் கிராமத்திலே பிறந்த என்னையும், என்னுடைய தம்பியையும் வழக்கறிஞர் டி. வி. இராதாகிருஷ்ணன் அவர்களையும், நாங்கள் எல்லாம் சேர்ந்து நடத்தும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கும் இல்ஜி அவர்களையும் கைது செய்து, உள்ளபடியே தேவையான அளவுக்கு பொருள் வசதி இல்லாத எங்களைப் பற்றி விளம்பரப்படுத்த முடியாத நிலையில் இருந்த எங்களுக்கு, தமிழ் நாட்டிலே இருக்கும் அத்தனை பத்திரிகைகளிலும் விளம்பரம் கிடைக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். தமிழகத்தில் மட்டும் என்றுகூட அல்ல, வானொலியிலும், பி.பி.சி.-யிலேயெல்லாம் கூட இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு தமிழகத்திலே பத்திரிகை தர்மத்தைப் பாதுகாக்கிறது என்று எடுத்துக்காட்டும் அளவுக்கு, எங்களைப்பற்றி விளம்பரம் கிடைக்க ஏற்பாடு செய்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் அவர்கள் எங்களைக்



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கைது செய்தது சரியா தவறா என்ற பிரச்சினைக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அவைகளைப்பற்றி நான் நீதிமன்றத்திலே சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரின் பேச்சை நான் கேட்டபோது எனக்கே கூட "நாமென்ன தமிழகத்தில்தான் இருக்கிறோமா" என்ற ஐயப்பாடே வந்தது. ஏதோ தமிழைப் பற்றி ஆளும் கட்சிக்கு மட்டும் தான் அக்கறை இருப்பதைப் போலவும், எதிர்க் கட்சிகள் என்பவை தமிழ் என்றாலே விரோதிகள் போலவும் அவர்கள் இங்கே பேசினார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றியும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் ஆட்சி மொழி என்பது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கண்டெடுத்த திட்டமல்ல. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தபோது, மறைந்த திரு. காமராஜர் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக்கினார். திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ் ஆட்சி மொழியாக விரிவடைந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் ஆட்சி மொழியை விரிவுபடுத்த வேண்டும் என்று இரு மொழிக் கொள்கையை தமிழ் நாட்டில் கொண்டு வந்தார். அதன் காரணமாக இங்கே தமிழ் வளர்ந்து விளையாட தொடங்கியது. அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் 7 ஆண்டுக் காலத்தில் தமிழ் மொழியை வளர்க்கவும், எந்தெந்தத் துறைகளிலெல்லாம் தமிழை ஆட்சி மொழியாகப் புகுத்த முடியுமோ அத்தனை காரியங்களையும் மேற்கொண்டார். ஆக அதனுடைய வளர்ச்சியாகத்தான், அந்த வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கட்டாகத்தான் இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்தது. அதன் மற்றொரு படியாகத்தான் இன்றையதினம் சிவில் நீதிமன்றங்களில் தமிழ் என்ற நிலை இருக்கிறது. இதை எந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் குறை கண்டார் என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசியதென்ன ? "தமிழ்ப் பல்கலைக் கழகம் வந்திருக்கிறது அதற்கு அங்கீகாரம் இல்லை என்று பத்திரிகைகளில் செய்தி போட்டிருக்கிறார்களே, அதற்கு இந்த அரசின் சார்பில் எந்தவிதமான மறுப்பும் இல்லையே. இதற்கு என்ன காரணம்?" என்ற வினாவைத்தான் கேட்டார். ஆனால் உடனே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்னவோ அவர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கே விரோதி போலவும் அதற்கு ஆட்சேபம் எதிர்ப்பு தெரிவித்ததைப் போலவும் இங்கே பேசினார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 பிப்ரவரி 9

தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான அதிகாரம் இந்த மாநில அரசுக்கே இருக்கிறது. அதற்கு யு.ஜி.சி. அனுமதிகூட தேவையில்லை. நம்முடைய நிதி வசதியை வைத்துக்கொண்டேகூட, நாம் அத்தகைய பல்கலைக் கழகத்தை அமைத்து நடத்தலாம். நமக்கு அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் மத்திய அரசில் இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் இல்லாமல் போய், நாளையதினம் இந்தி வெறியர்கள் வந்து உட்கார்ந்துகொண்டு, "யு.ஜி.சி. எந்தெந்தப் பல்கலைக் கழகத்தை அஃபிலியேட் செய்திருக்கிறதோ அந்தப் பல்கலைக் கழகங்கள் மட்டும்தான் இனி இந்தியாவில் இருக்கலாம்" என்றும், வேறு எந்தப் பல்கலைக் கழகமும் இனி இந்த நாட்டில் இருக்கக் கூடாது என்றும் உத்தரவு போட்டால், நம் நிலைமை என்ன? இன்றையதினம் புறம்போக்கு நிலங்களில் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள் குடிசைகள் போட்டுக் கொள்ளலாம் என்று உரிமை இருந்தாலும் கூட, திடீரென்று இப்போது அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து புறம்போக்கு நிலங்களில் யாராவது குடிசை போட்டால், மிசா சட்டத்தைப்போல் ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு, அவர்களைக் கைது செய்து உள்ளே போடுவோம் என்று சொல்வதைப் போல், நாளையதினம் மத்திய அரசில் வருகிற ஒரு ஆட்சி சொன்னால், நம் நிலைமை என்ன என்பதுதான் பிரச்சினை. யு.ஜி.சியால் அங்கீகரிக்கப்படாத எந்தப் பல்கலைக் கழகமும் இனி நாட்டில் இயங்கக்கூடாது என்று உத்தரவு போட்டால், அதன் விளைவு என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் திரு. நீலநாராயணன் அவர்கள் இங்கே அந்தக் கருத்தைக் குறிப்பிட்டார்களே தவிர பல்கலைக் கழகம் அமைப்பதிலே எந்தக் கருத்து வேறுபாடும் அவருக்கு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு நாங்கள் அல்லவா சொந்தக்காரர்கள் என்று இங்கே பேசுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் உள்ள பூர்வமாக அந்த வகையில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை. எங்களுடைய தலைவர் எப்போதோ கட்டிய வீட்டில் "கருணாநிதி" என்று தன்னுடைய பெயரைப் பொறித்திருக்கிறார். அந்தக் கல்லில் உள்ளது பெரியாரின் சீர்திருத்த எழுத்தில் இருக்கும், ஆனால் இங்கே வீரம் பேசிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் எந்த அளவுக்குப் பெரியார் எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அரசாங்கத்தில் கடிதம் எழுதுவதற்கும் அரசாங்கத்தின் அமைப்புகளில் போடுவதற்கும் மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இந்த நாட்டில் இந்த மாநிலத்தை ஆட்சி செய்யும் கட்சியின் சார்பில் "அண்ணா" என்று ஒரு நாளேடு நடத்தப்படுகிறது. அதிலே இந்தப் பெரியார் எழுத்துக்கள் பயன்



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

படுத்தப்படுகின்றனவா என்றால், இல்லை. அல்லது இந்த நாட்டில் இருக்கும் பத்திரிகைகள் எல்லாம் பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறதா என்றால், இல்லை.

இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை யாருக்காகக் கொண்டு வருகிறார்கள் என்றால், நமக்காகக்கூட அல்ல; நம்முடைய எதிர்காலச் சந்ததியினருக்காக, தற்போதைய இளைஞர்களுக்காகப் பயன்படும் வகையில் கொண்டு வருகிறார்கள். இந்த மண்ணில் பிறந்த குழந்தைகள் இப்போதிருந்தே பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்களைப் படித்துக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கொண்டு வருகிறோம் என்கிறார்கள். அப்படிச் சொல்வதாலே அவர்களுக்காவது இப்போது கற்றுக் கொடுக்கிறார்களா என்றால், அதுவுமில்லை. நமது அரசாங்கத்தின் மூலம் பள்ளிப் பாடநூல்களை நாம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி வெளியிடப்படும் பாடப்புத்தகங்களில் பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்றால், அதுவுமில்லை. இது தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள இலக்கண நூல் (உறுப்பினர் இரண்டு புத்தகங்களை அவையில் எடுத்துக் காட்டினார்) மற்றது தமிழ்ப் பாடப் புத்தகம். இந்த இரண்டு புத்தகங்களிலும் எங்காவது பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், ஒரு பக்கத்தில் கூட பார்க்க முடியவில்லை. இந்த நிலையில் நாங்கள்தான் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று பேசுவது எப்படி நியாயமாகும்?

டாக்டர் இரா. சனார்த்தனம்: கலைஞர் வீட்டில் கல்லோடு இருந்தது இப்போது காரியத்திற்கு வந்திருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் பெரியார் சீர்திருத்த எழுத்து முறை அமுல்படுத்தப்படுகிறது. பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், எல்லாப் பத்திரிகைகளும் சேர்ந்து முடிவெடுத்தால்தான் நன்றாக இருக்கும். நான் கேட்பதெல்லாம் பெரியாரின் சீர்திருத்த எழுத்தைக் கல்லில் பொறித்தவர்கள் தங்களின் ஆட்சிக் காலத்தில் அதைப்பற்றி ஏன் அக்கறை காட்டவில்லை என்பதுதான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கல்லில் போட்டது உண்மைதான். ஆனால் உங்களைப் போல் ஏட்டில் போட்டுவிட்டு அதை நாட்டில் அமுல்படுத்தாமல் இருப்பதைவிட அது மேல். பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை இந்தச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளுகிற காலம் வரும். அதுவரை இந்தச் சமுதாயத்தைப் பக்குவப்படுத்த வேண்டும் என்றுதான் அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வந்தோம். நான் இங்கே எடுத்துக்காட்டியது அரசாங்கப் பாடப்புத்தகம், அந்தப் புத்தகத்தில் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்

படவில்லை. அப்படி மேற்கொள்ளப்பட்டதாக எடுத்துக் காட்டினால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனவேதான் சொல்லுகிறேன் இந்த ஆட்சியாளர்களுக்கு அதிலே அக்கறையில்லை. ஏதோ பெரியாரின் தொண்டர்களைத் திருப்திப்படுத்த வேண்டும், அவர்களை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று இதைச் செய்தார்களே தவிர உண்மையில் ஆட்சியாளர்களுக்கு அதில் அக்கறையில்லை, எதிலுமே இரட்டை வேடம் போடுகிறவர்கள், சினிமாவிலும் சரி, அரசியலிலும் சரி, எதிலும் இரட்டை வேடம் போடுகிறவர்கள் என்பதால், அந்தப் பழக்கம் பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்திலும் வந்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தொழில்களைப்பற்றி இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தொழில்களே வளராமல் போனதைப் போலவும், [illegible] போலவும் இங்கே பேசினார்கள். அவர்களுக்குச் சில உண்மைகளை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பல கோடி ரூபாய் முதலீட்டில் "ஸ்பிக் நிறுவனம்" நிறுவப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான். மாண்புமிகு அமைச்சர் திரு. விஜயசாரதி அவர்கள் ஊரான ஆர்க்கோணத்தில் "ஸ்டீல் ரோலிங் மில்" திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் பல கோடிக் கணக்கான ரூபாய் மூலதனத்தோடு தொடங்கப்பட்டது. அதைப்போலத்தான் சிப்காட். அது மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றாக இருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்களால் குரலெழுப்பப்பட்டு, பின்னால் இப்போது தொடங்கப்பட்டுள்ள சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் போது ஏற்பட்டதுதான். இப்படிப் பட்டியல் போட்டுக் கொண்டே போக முடியும். ஆனால் நண்பர்கள் அதை மறந்துவிட்டுப் பேசுவதுதான் விந்தையாக இருக்கிறது. இந்த மன்றத்தில் ஏதோ இவர்கள் காலத்தில்தான் தொழில்கள் வளர்ந்து கொண்டிருப்பதைப்போல் பேசுகிறார்கள். மைனிங் லைசென்ஸ் பெறுவதில் உள்ள நிலைமையைப்பற்றி நான் சொன்னால்கூட, ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒரு நீதிமன்றம் சொல்லியிருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"The High Court, on Thursday, allowing a petition for a Writ of Mandamus, directed the Tamil Nadu Government to renew, within two months, the mining lease of a private company in Salem for another period of 20 years.

The Ramakrishna Magnesite Mines Limited had applied to the State Government for renewal of its lease over an area of 72 acres of Kondappanaickenpatti, Salem district for 20 years,



when the first lease expired on February 2, 1976. As no orders were forthcoming from the State Government, petitioner filed a revision application before the Central Government and the Directorate of State Government to pass orders on the renewal application within hundred days. The State Government passed an order rejecting the application. Petitioner filed three more revision petitions before the Central Government, before the State Government finally passed an order on June 18, 1979 rejecting the petitioner's renewal application on the grounds that he did not conduct successful mining operations, did not remit dues regularly and was violating mining conditions. Petitioner filed a fifth revision petition before the Centre and it held that the State had not specified the exact nature of violation by petitioner or indicated the amount due from him. It set aside the State's order and directed it to extend the lease, for the petitioner had paid rents and royalty till the expiry of the lease. As the State Government did not respond, the petitioner filed the present Writ Petition for ordering the State to renew the lease.

Justice Mr. G. Ramanujam found that there were no arrears of rent and royalty regarding the earlier lease. In view of the position and the positive direction from the Centre, the disposal of the renewal application would only be through granting renewal. The State Government, by law, had to obey the order of the higher statutory authorities.

The Judge was surprised by the stand taken by the State in its counter-affidavit. Though the Centre had passed an order on August 12, 1980, the State Government had chosen not to obey the instructions till today. Even after petitioner had filed a Writ Petition, the State had shown no anxiety to obey the order.

Justice Mr. Ramanujam also ordered the State Government to pay Rs. 1,000 as costs to petitioner, in view of its attitude ever since petitioner filed the renewal application which led to five revision petitions and litigation in the High Court."

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 பிப்ரவரி 9

(முற்பகல் 11.00)

ஆட்சியாளர்கள் எந்த அளவிற்கு தனிப்பட்டவர்களைத் தொல்லைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள், எந்த அளவிற்கு அவர்களைத் துன்புறுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது மட்டுமல்லாமல், அரசுக்கு அபராதம் விதிப்பதைப் போல நீதிமன்றத்திற்கான செலவு ஆயிரம் ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. நாட்டிலே தொழில் வளர வேண்டுமென்று விரும்புகிறவர்கள் விண்ணப்பம் போட்டு, அதுவும் ஏற்கெனவே தொழில் நடத்தியவர் புதுப்பிப்பதற்காக விண்ணப்பம் கொடுத்தபோது, இந்த நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. வேண்டுமானால் மைனிங்கைப் பொறுத்த வரையில் மொத்தத்தையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளப் போகிறது, யாருக்கும் புதுப்பித்துத் தரப்போவதில்லை என்று சொன்னால், பாராட்டுவோம். அதைச் சொன்னார்களா என்றால், இல்லை. நாங்கள் மத்திய அரசாங்கத்தோடு ஒத்துப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் மத்திய அரசு போட்ட உத்தரவை மதித்தார்களா என்றால், இல்லை. ஒரு பக்கத்திலே மேடையிலே மத்திய அரசாங்கத்தின் புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் நாங்களும் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்று பத்திரிகையிலெல்லாம் எழுதி வருகிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் போட்ட உத்தரவை மதிக்கவில்லை, "ஓபே" செய்யவில்லை என்று நீதிமன்றத்தில் சொல்லப்படுகிறது. இவர்கள் தொழிலை வளர்க்கின்ற வேடிக்கை இந்த மாதிரி இலட்சணத்தில் இருக்கிறது.

அது மட்டுமல்ல, 1977-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு எங்கள் ஆட்சியில் "காகித ஆலை" ஏற்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். "காகித ஆலையை" நினைக்கும்போது, தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்தபோது நடத்திய நாடகம்தான் நினைவுக்கு வருகிறது. முதலிலே 100 கோடி ரூபாயில் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அவரவர் தங்கள் தொகுதியிலே வருவதாகக் கனவு கண்டார்கள். 100 கோடி ரூபாய் என்று ஆரம்பிக்கப்பட்டது பிறகு 120 கோடியாக மாறி, அதற்குப் பிறகு 160 கோடி என்று சொல்லப்பட்டு, இப்போது 200 கோடி என்று சொல்லப்படுகிறது. பிரதமர் கூட அதைத் திறந்து வைக்க வரப்போகிறார்கள் என்று சொல்கிறார்கள். 100 கோடி ரூபாய் எப்படி 200 கோடி ரூபாயாகக் கூடியது என்பதைப்பற்றிய விவரம் தெரிவித்தால், நலமாக இருக்கும்.

வறட்சியைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வறட்சியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல முடியுமா, அதைப்பற்றி ஒரு செய்தி உண்டா என்று



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட அதைப் பற்றிப் பேசினார்கள். உடனே அமைச்சர் அவர்கள், "எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, ஊழல்கள் தி.மு.க. ஆட்சியிலேதான் நடந்தன என்று சொல்லிவிட்டு, "திரு. சி. சுப்பிரமணியம் கணக்கு கேட்டபோது ஏன் உடனே கொடுக்கவில்லை?" என்று கேட்டார். திரு. சுப்பிரமணியம் எங்கே கணக்கு கேட்டார்? கணக்கு கேட்க வேண்டுமென்றால், அதற்கு ஒரு முறை கிடையாதா? இங்கே கோட்டைக்கு வரட்டும், வந்து முதலமைச்சரை அழைக்கட்டும், நிதியமைச்சரை அழைக்கட்டும், தலைமைச் செயலாளரை அழைக்கட்டும், நிதிச் செயலாளரை அழைக்கட்டும், எங்கே கணக்கு என்று கேட்கட்டும். அப்படிக் கேட்டிருந்தால், எல்லாவிதமான கணக்கையும் கொடுக்கத் தயாராக இருந்திருப்போம். அப்படி இல்லாமல் ஒரு பொதுக் கூட்டத்திலே நின்று கொண்டு, "பணம் கொடுத்திருக்கிறோம், கணக்குக் காட்டினால்தான் மேலும் கொடுப்போம்" என்று சொன்னால், நாங்கள் இன்னும் சுயமரியாதைக்காரன் என்று நம்புவதால், பெரியார் உணர்வு எங்களுக்கு இருப்பதால், "நீ யார் கணக்கு கேட்க?" என்று திருப்பிக் கேட்டோம். அது சுயமரியாதையின் பிரதிபலிப்பு. சில பேர் அழைத்தாலும் போவார்கள், அழைக்காவிட்டாலும் போவார்கள் . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, மடியிலே கனம் இல்லையென்றால், வழியிலே பயம் ஏன்? எங்கே கேட்டாலும் கணக்கு தருவதுதானே.

திரு. ஆற்காடு வீராசாமி : மானம் உள்ளவன் தெருவிலே கேட்க மாட்டான். நிதியமைச்சர் கணக்கைக் கேட்டார் என்றால், அவர் என்ன சட்டம் தெரியாதவரா? மாநில அரசாங்கத்திலே உள்ள அமைச்சர்கள் தங்கள் இஷ்டம்போல் செக்கிலே கையெழுத்துப் போட்டு செலவு செய்ய முடியுமா? இலாக்காதான் செலவு செய்கின்றது. அப்படி இலாக்காக்கள் செலவு செய்யும் போது, அதைத் தணிக்கை செய்கின்ற அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. அக்கவுண்டென்ட்-ஜெனரல் தான் 'ஆடிட்' செய்கிறார். நம்முடைய அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியாது. மடியிலே கனம் இல்லை. வழியிலும் பயம் இல்லை. ஆகவேதான் தன்மான உணர்வோடு "நீ யார் கணக்கு கேட்க?" என்று கேட்டோம். வறட்சிப் பணிகளைப் பொறுத்த வரையில், தி.மு.க. ஆட்சியிலேதான் ஊழல் இருந்தது என்றும், அ.தி.மு.க. ஆட்சியிலே இல்லையென்றும் சொன்னார்கள். இந்த ஆட்சியிலே ஊழல்கள் கொஞ்சமா நஞ்சமா? அளவிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்றன. பெரிய பட்டியலே போட்டுக் காட்ட முடியும். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்லுகிறேன்.

(திரு. ஆற்காடு வீராசாமி.) [1982 பிப்ரவரி 9

காஞ்சீபுரம் எக்சிகியூட்டிவ் என்ஜினியர் 30 இலட்சம் ரூபாய்க்கு வேலை செய்யாதவர்களுக்கு 'பில்' போட்டு 'செக்' கொடுத்துவிட்டார். அது "சீஃப் என்ஜினியர்" தகவலுக்கு எட்டிவிட்டது. உடனடியாக அவர் சென்றார். 'சீஃப் என்ஜினியர்' சென்று பார்த்தபோது, புகார் உண்மை யென்று தெரிந்தது. ஒரு நியாயமான 'சீஃப் என்ஜினியர்' தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று நினைத்தார். அலுவலகத்திற்கு வந்தார். ஓர் உத்தரவும் போட்டார். என்ன உத்தரவு அது? "காஞ்சீபுரம் எக்சிகியூட்டிவ் என்ஜினியர் செக்கிலே கையெழுத்துப் போடக் கூடாது" என்று உத்தரவு போட்டார். His powers have been withdrawn அவருடைய அதிகாரம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசாங்கம் பாராட்டியிருக்க வேண்டுமல்லவா? ஊழலை ஒழிப்பதற்காக அவதாரம் எடுத்து வந்த இவர்கள், இவ்வளவு பெரிய நல்ல காரியம் செய்தவருக்குப் பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும் அவரைப் பாராட்டியிருக்க வேண்டாமா? அதற்கு மாறாக அந்த சீஃப் என்ஜினியரை 'சஸ்பெண்ட்' செய்துவிட்டு, சஸ்பெண்ட் செய்யப்பட்ட எக்சிகியூட்டிவ் என்ஜினியருக்கு வேலை கொடுத்து பாராட்டு தந்திருக்கிறார்கள். இதற்குப் பெயர் "ஊழலே இல்லை" அருமையான நிர்வாகம் என்று புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டம், ஒழுங்கைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே நடக்கவில்லை அங்கே நடக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே போகலாம். தி.மு.க. ஆட்சியிலே சட்டம், ஒழுங்கு இல்லையென்று சொன்னார்கள். அதற்கு நாங்களும் பதில் சொன்னோம். "நீங்கள் லாயக்கில்லை என்றுதானே எங்களை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்" என்று ஆளும் கட்சியினர் சொல்லிக் கொள்கிறார்கள். நாங்கள் லாயக்கு உள்ளவர்களா, இல்லாதவர்களா என்பதை மறுபடியும் பார்ப்போம். ஆனால் இப்போது சட்டம், ஒழுங்கு தற்போதைய ஆளும் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு கொடிகட்டிப் பறக்கிறதா? எல்லா விவாதத்திற்குள்ளும் நான் போக விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் "நக்ஸலைட்" என்ற பெயராலே 36 பேரைச் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். நக்சலைட்டுகளைக் கைது செய்வதிலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நக்சலைட்டுகளைக் கண்டதும் சுட்டுத்தள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தால், எந்தச் சட்டத்தின் கீழ் உத்தரவிட்டார்கள்? இந்த அரசுக்கு யார் அந்த அதிகாரத்



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

தைக் கொடுத்தது? இந்த நாட்டிலே சமீபத்திலே தூக்கிலிடப்பட்டார்களே பில்லா, ரங்கா அவர்கள் கூட 7 பேர்களைக் கொலை செய்திருக்கிறோம் என்று பத்திரிகை நிருபர்களைப் பார்த்துப் பேசியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்களைக் கூட நீதிமன்றத்திலே அழைத்து, தலைவர் அவர்களே, குற்றவாளி என்று நிரூபித்த பின்னர்தான் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. நீதிமன்றத்திலே தூக்கு தண்டனை வழங்கப்பட்ட பிறகு, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அப்பீல் செய்தார்கள். குடியரசுத் தலைவர் கூட, அதைப் பரிசீலனை செய்து, "நீதிமன்றம் நல்ல தீர்ப்பு கொடுத்திருக்கிறது. எனவே கருணை கிடையாது" என்று சொல்லிவிட்டார். பிறகு இந்தியக் குடியரசுத் தலைவர் கூட சரியாக தங்களுடைய கருணை மனுவைப் பரிசீலிக்கவில்லை என்று சொல்லி சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் செய்தார்கள். சுப்ரீம் கோர்ட் கூட குறிப்பிட்ட தேதியில் தூக்கு தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவிட்டு அந்த வழக்கை விசாரித்தது. அதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டும் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியது நியாயம் என்று சொன்னதற்குப் பிறகு, அவர்கள் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயகம் என்ற பெயரால் கொலைகாரர்களுக்குக் கூட இத்தகைய வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கும்போது, பி.ஏ., எம்.ஏ., எம்.எஸ்ஸி படித்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 36 பேர்கள் ஏழையாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக, வறுமையில் உழன்று விரட்டப்பட்டு சில இடங்களில் திருடினார்கள், கொள்ளை யடித்தார்கள் என்பதற்காக அவர்கள் திருடினார்கள், கொள்ளையடித்தார்கள் என்பதற்குரிய தண்டனையைக் கொடுப்பதற்குப் பதிலாக, நக்சலைட் என்ற பெயரால் கண்ட இடத்திலே சுட்டுத் தள்ளுங்கள் என்று உத்தரவு பிறப்பித்திருந்தால், அப்படி போலீஸ்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மீது பாய்ந்திருந்தால், யாருக்குத் தான் இந்த நாட்டிலே பாதுகாப்பு இருக்கிறது? காரணம் கேட்கும் அமைச்சரைக் கூட வேண்டாத போலீஸ்காரன் ஒருவன் "நக்சலைட் போல் தோன்றியது" என்று சொல்லி சுட்டுவிட்டான் என்று சொன்னால், அதை நாடு ஏற்றுக்கொள்ளுமா? அப்படி நடக்கக் கூடாது. அப்படி நடக்க வேண்டுமென்று நான் விரும்பமாட்டேன். அப்படி நடந்தால் அது நியாயம்தானா? இந்த முறையை அனுமதிக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருச்செந்தூர் சுப்பிரமணியப்பிள்ளையைப்பற்றி நிறைய விவாதம் நடக்க விருக்கிறது. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ... துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். 1972-ம் ஆண்டிலேயே

ஆலயத்திலே கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னேன். திருத்தணி முருகன் ஆலயத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் கொடுத்த வைர வேல் நாணயமில்லையென்று பொறுப்பு வாய்ந்தவர்கள் புகார் கொடுத்தார்கள் என்று நான் அப்போது பேசிய சமயத்தில், "விசாரணை நடத்துவேன்" என்று அமைச்சரே சொன்னார். ஆனால், இப்போது 1982-ஆம் ஆண்டிலே இருக்கிறோம். ஒரு நகைத் திருட்டு குற்றச்சாட்டைக் கண்டுபிடிக்க இந்த ஆட்சிக்கு 4 ஆண்டுகள் தேவையா? எந்த அதிகாரி இது குறித்து விசாரணை நடத்தினார்? அவருடைய அறிக்கை வந்துவிட்டதா? இதெல்லாம் தெரியவில்லை. அல்லது அதையும் இந்த அரசாங்கத்திடமிருந்து நாங்கள் வாங்கிக் கொண்டு வந்து பத்திரிகையிலே போட்டு, அதற்காகச் சிறைச்சாலைக்குப் போக வேண்டுமோ என்னவோ தெரியவில்லை.

(முற்பகல் 11—10)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த சம்பவம் குறித்து விசாரிக்க அரசு அன்றைக்கு இருந்த வருவாய் வாரிய உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களை நியமித்தது. அவர்களும் அதிலே நேர விசாரித்து அப்படிப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். தேவையானால் அந்த அறிக்கை உங்களிடத்திலே தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயும் போய் திருட்டுத் தொழிலிலே ஈடுபட வேண்டாமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திருட்டுத் தொழிலுக்கு அதுதான் இலக்கணம், அமைச்சர்களுடைய ரகசியங்களை நான் திருடுவது தவறு என்று சொன்னால், அந்தத் திருட்டுகளைச் செய்யத் தயாராக இருக்கிறேன். அதற்கு என்ன தண்டனை கொடுத்தாலும், ஏற்கத் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர்கள் லஞ்சம் வாங்குவார்கள், ஊழல் செய்வார்கள், அது சம்பந்தமான தஸ்தாவேஜுகள், ஏடுகள் இவைகளை நான் திருடுவது குற்றம் என்று சொன்னால், அந்தக் குற்றத்திற்காக என்ன தண்டனையைக் கொடுத்தாலும், ஏற்றுக்கொள்ளத் தயார். அந்தக் குற்றத்தைச் செய்யத் தயார் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் அவ்வளவு உத்தமர்கள் ஆயிற்றே.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்வது முறையா? ஆதாரத்தோடு உறுப்பினர் அவர்கள் வெளியிடுவாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. ஆற்காடு வீராசாமி:** எவ்வளவு ஆதாரங்கள் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். கொடுக்கவும் போகிறேன். ஏதோ உத்தமர்கள் போல, இந்த நாட்டிலே வேஷம் போட்டுக் கொண்டிருப்பதே தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த இந்த ஆட்சியினுடைய ஆலயத்திற்கு ஓர் எல்லை இருக்க வேண்டும். நாட்டிலே குடிமக்கள் எல்லாம், ஜனநாயக அடிப்படையிலே நடத்தப்பட வேண்டுமென்ற உணர்வு இருக்க வேண்டும். நிலைமை அப்படியிருக்கிறதா என்றால் இல்லை. இன்னொரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

நிதி இலாகாவிலே சிறு சேமிப்புத் துறை இருக்கிறது. அதற்குப் பணம் தேவைப்படலாம். அதை வசூலிக்க எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய ஜனநாயக அரசிலே புரட்சித் தலைவர் ஆட்சியிலே, புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே என்ன செய்கிறார்கள்? அதற்கு ஓர் உதாரணம் தருகிறேன். ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்தக் கடித நகலைப் படிக்கிறேன். "ந.க. 15857/81(எ-3), தாலுகா அலுவலகம், சேலம், நாள் 1—2—1982—அவசரத் தாக்கீது.

பொருள்: சிறு சேமிப்பு—சேலம் வட்டம் —சிறு சேமிப்பு வசூல் பற்றிய விபரம் குறித்து ஆய்வு செய்தல்—சம்பந்தமாக.

தகவல்: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க. 61320/81 (பி-1), நாள் 13—1—1982.

மேற்காணும் தகவலில், சேலம் வட்டத்திற்கு, சிறு சேமிப்பு வசூல் திட்டத்தின் மூலம் ரூபாய் 15 லட்சம் வசூல் செய்து கொடுக்கும்படியும், மேலும் சிறப்பு வசூல் இலக்கீடு செய்து 1—1—1982 முதல் 28—2—1982 ஆம் தேதி முடிய வசூல் செய்து, இலக்கினை அடைய உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து உங்களிடம் கலந்து ஆலோசனை நடத்த சேலம் வட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 5—2—1982 ஆம் தேதி மாலை 3-00 மணிக்குக் கூட்டம் நடைபெற உள்ளது. எனவே அன்று தவறாமல் எல்லா நகை அடகுதாரர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தவறினால் உங்களது உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். தாசில்தார், சேலம்."

நான் கேட்கிறேன். அரசாங்கத்திற்கு சிறு சேமிப்புப் பணம் வேண்டும். அந்தப் பணம் வசூல் செய்யப்படுவதை நியாயம் என்று ஒத்துக்கொள்கிறேன். அதில் நகைக் கடைக்காரர்கள் வரத் தவறினால், உரிமம் ரத்து செய்யப்படும்

என்று இருக்கிறது. லைசென்ஸைக் 'கேன்சல்' செய்வோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் வந்திருந்து கேட்டதைக் கொடுக்கா விட்டால், என்ன செய்வார்கள்? கொடுக்காவிட்டாலே லைசென்ஸ் ரத்து என்றால், அவர்கள் அங்கே வந்து 'நீங்கள்' கேட்டதை அவர்கள் கொடுக்காவிட்டால், என்ன 'செய்வீர்கள்'? கொள்ளையடிப்பார்களா என்று நான் கேட்டால் கோபப்படுவார்கள். இப்படி ஓர் உத்தரவு. இந்த அரசாங்கத்திலே யார் இதற்கு அனுமதி அளித்தது? இதனால் ஒருவருடைய அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டத்திற்கு ஒருவர் வரமுடியாமல் போகலாம். இயற்கை காரணமாக அவர் அந்தக் கூட்டத்திற்கு வர முடியாமல், அதில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கலாம். அதற்காக லைசென்ஸை ரத்து செய்வார்களா? இப்படிப்பட்ட உத்தரவுகளைப் போட்டுக்கொண்டு நிர்வாகம் செம்மையாக நடக்கிறது, மிக அழகாக நடக்கிறது என்று சொன்னால், அது எப்படி சரியாகும்?

அடுத்து இன்னொரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1977-லே ஆளுநர் அவர்கள் உரையிலே,

“மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட மதுவிலக்குக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவோம். மகளிரும், இளைஞர்களும் குடித் தீமையால் பெரிதாக பாதிக்கப்படுகின்றனர். பல அலுவல்களில் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதற்கும், அதன் மூலம் சமூக விரோதிகள் பொருளாதாரக் கட்டுக் கோப்புகளையும் சமூக நெறிகளை உருக்குலைப்பதற்கும் இது காரணமாக இருக்கிறது. மதுவிலக்கைக் கண்டிப்புடன் செயல்படுத்துவதற்குச் சட்ட வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று சொல்லியிருந்தார்கள். அதற்குப் பிறகு, 1979-லே பேசுகிறார், என்ன சொன்னார்? அது ஒரு பிரமாதமான கொள்கை.

“This Government, with its strong faith in the policy of Prohibition, has promulgated recently an Ordinance to intensify the implementation of its policy.”

இதற்காக என்ன செய்தார்கள்? ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். ‘குடித்தால் 6 மாதம் மறுபடியும் குடித்தால், 2 ஆண்டுகள், மறுபடியும் குடித்தால் நாடு கடத்தப்படுவார்கள்’ என்று சட்டம் கொண்டு வந்தார்கள். இப்படியெல்லாம் கொண்டு வந்த அந்தச் சட்டம், இப்போது எந்த அளவுக்கு ஆளும் கட்சிக்கு கோடிக்கணக்கில், லட்சக்கணக்கில், ஆயிரக்கணக்கில் கொள்ளையடிக்க உறுதுணையாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, அரசு பிறப்பித்திருக்கின்ற உத்தரவுகள் ஆதாரமாக இருக்கின்றன. அந்த உத்தரவுகள் பேசிக்கொண்டிருக்கின்றன, பல இடங்களிலே பேசிக்கொண்டிருக்கின்றன.



அந்த உத்தரவுகளை நான் படிக்கிறேன். என்ன செய்தார்கள்? மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறார்கள். மதுக் கடையைத் திறந்தார்கள். சாராயக் கடைகளைத் திறந்தார்கள். ஏலம் விட்டார்கள். பிராந்தி, விஸ்கி போன்ற மதுபானங்கள் விற்கப்படும் என்று அறிவிப்பு கொடுத்தார்கள். அந்த விற்பனைகளையெல்லாம் முறைப்படுத்துவதாகச் சொன்னார்கள். அவைகளை பாட்டில்களிலே விற்க வேண்டும் என்றார்கள். சாராய மொத்த வியாபாரம் என்று சொன்னார்கள். பிராந்தி, விஸ்கி மொத்த வியாபாரம் என்று சொன்னார்கள். அதற்கு என்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பிளன்டிங் பாட்டிலிங் என்பதைப் பொறுத்தவரையிலே, இரண்டு பேர்களுக்கு, அவர்களுடைய பினாமிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. எப்படிப்பட்ட உத்தரவுகள்? அந்த உத்தரவிலே பாரபட்சம் காட்டியதாக நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், நேரம் கிடைக்காது. அவற்றிலே சிலவற்றை மட்டும் சொல்கிறேன். பிராந்தி, விஸ்கி என்று எடுத்துக் கொண்டால், மாவட்டத்திற்கு ஒருவர்தான் உரிமைதாரர். என்ன காரணம் என்று நீதிபதி கேட்டார். அதற்கு அரசாங்க வக்கீல் சொல்கிறார். “ஒரு மாவட்டத்திலே 10 பேர்கள் இருந்தால் அது மோனோபலியாக இருக்கிறது. ஒருவருக்கு மாவட்டத்திலே கொடுத்துவிட்டால் அந்த மோனோபலி நீங்கிவிடும். ஆகவே தான் இப்படிக் கொண்டு வந்திருக்கிறார்கள்” என்று சொல்கிறார். அது சரியா தவறா என்பது பிறகு தெரியும். ஆனால், இப்படிச் சொல்லிவிட்டு. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உரிமம் கொடுத்தார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் அப்படிக் கொடுத்தார்களா? சேலத்திலே இல்லை. இதுவரையில் கொடுக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே, பெரியார் மாவட்டத்திலே அப்படி கொடுக்கப்படவில்லை. இப்போது நான் சொல்கிறேன். இந்த 3 மாவட்டங்களுக்கும் கொடுக்காததற்குக் காரணம், வரவேண்டியது வரவில்லை. மறுக்க முடியுமா? 6 மாதங்களுக்கு மற்ற மாவட்டங்களிலே இருப்பவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாவட்டங்களிலே இருப்பவர்கள் மட்டும் பிராந்தி, விஸ்கி குடிக்கலாம். குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களிலே இருப்பவர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? ஏன், இந்த அரசுக்கு நேரம் இல்லையா? ஏன் உத்தரவு போடவில்லையா? இந்த மூன்று மாவட்டங்களிலேயிருந்து யாரும் விண்ணப்பம் போடவில்லையா? விண்ணப்பம் கோரப்பட்டதா? விண்ணப்பம் கோரப்பட்டது. விண்ணப்பங்களும் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் நினைக்கின்ற யாரையோ எதிர்பார்க்கின்றார்கள். யாரை எதிர்பார்க்கின்றார்களோ அப்படிப்பட்டவர்கள் யாரும் வரவில்லை. ஆகவேதான் இதுவரையில் கொடுக்கவில்லை. அதைப்போலவே இராமநாதபுரம், நெல்லை மாவட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் சினிமாத் துறையிலேயிருந்தபோது அவர்களுக்கு நண்பர்

களாக இருந்த படக்கம்பெனி அல்லது அவர்களுடன் பழகியவர்களுக்கு
லைசென்ஸ் கொடுத்தார்கள். நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிபதியும்
அதை ஏற்று சரிதான் என்று 'ஸ்டே' கொடுத்து அதைத் தடுத்திருக்கிறார்
கள். பத்திரிகைகள், லைசென்ஸ் கிடைக்காதவர்கள் கோர்ட்டுக்குப் போனால்,
அங்கே இந்த காரணத்திற்காகக் கிடைத்தது என்று நீதிமன்றம் சொன்னால்,
ஒத்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட உத்தரவுகளை எல்லாம் போடுகிறார்
கள். இதுபோலவே புதுக்கோட்டையிலே 4, 4 தாலுக்காவாக இருக்கிறது.
லைசென்ஸ் அதற்குப் பெருந்தன்மையோடு கொடுத்தார்கள். நான் தைரிய
மாகச் சொல்கிறேன். இந்த ஆட்சியிலே உண்மையிலேயே அங்கே காசே
வாங்கவில்லை. ஏனென்றால் மற்ற இடங்களில் எல்லாம் வாங்கி விட்டார்கள்.
இங்கு இல்லை. ஏனென்றால் புதுக்கோட்டை மாவட்டம் மின்ன மாவட்டம்.
அதிலே பெருந்தன்மையைக் காட்டியிருக்கிறார்கள். அங்கே 'ஸ்கைலார்க்ஸ்
ஒயின்ஸ்' என்று நிறுவனம். ஒரு ஒயின்ஸ் கம்பெனி. நம்முடைய
*     *     * சம்பந்தப்பட்டு இருக்கின்ற அந்த கம்பெனிக்கு பெருந்தன்மை
யோடு தமிழகத்திலே லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சிபாரிசு
செய்தோம், அதனாலே லைசென்ஸ் கொடுத்தார்கள். ஒரு காலணா கூடப்
[illegible], அங்கே எவ்வளவு புனிதருடைய ஆட்சி நடக்கிறது
[illegible] மாநிலங்களிலே உள்ளவர்களுடைய சர்டிபிகேட் இந்த
[illegible] வேண்டும். அதனாலே அப்படிச் செய்திருக்கிறார்கள். அதற்குக்
கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்டு அந்த *     *     *

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, இங்கே உரிமங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்ற மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் *     *     * என்று குறிப்பிட்டுப் பேசுகிறார்
கள். அது சரியாக இருக்குமா? அது அவையின் மரபை ஒட்டி இருக்குமா
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்கள் வேண்டாமென்றால்
எடுத்துவிடலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தப் பகுதி நீக்கப்படுகிறது.
விவாதத்திற்குரியதாக இருந்தாலும், அது தவறாக இருக்கிறது. வெளி மாநில
முதல்வரைக் குறிப்பிட்டிருப்பதால் அதை நீக்கி விடலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இது ஊருக்குத் தெரியும். இங்கே
தெரியவில்லை என்றால் பரவாயில்லை. விட்டு விடுங்கள். இந்த ஒரு இடம்
தவிர மற்ற இடங்களிலெல்லாம் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதிலே

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



சட்டதிட்டங்கள் போட்டிருக்கிறார்கள். யார் யாருக்கு உரிமம் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி உத்தரவு போட்டிருக்கிறார்கள். புரோசிடிங்ஸ் ஆப் தி கமிஷனர் ஆப் புரொகிபிஷன் அண்டு எக்சைஸ், மெட்ராஸ் ஆர் ஓ சி பி 1. 15320/81, தேதி 3—8—1981-ல் விண்ணப்பங்கள் கோருகிறார்கள். 18—8—1981 விண்ணப்பித்தவர்கள் இண்டர்வியூவிற்கு வரவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். வந்தவர்கள் யார் யார் என்று கேட்டால், நான் இப்போது சொல்கிறேன்.

(முற்பகல் 11-20)

(1) ஜே. & டி. கம்பெனி, (2) திரு ஆர் டி அந்தோணிராஜ், (3) திரு. வி. டி. இராதாகிருஷ்ணன், (4) சரவணா ஏஜென்சீஸ், (5) திருவாளர்கள் உஸ்மான் அலி & கோபாலகிருஷ்ணன். இதில் ஐந்தாவது மனுவை இரண்டு பேர்கள் போட்டார்கள். பிறகு மனுக்களைப் பரிசீலனை செய்தார்கள். பரிசீலனை செய்யும்போது, என்ன செய்ய வேண்டும்? சாதாரணமாக பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு விண்ணப்பம் போட்டால்கூட, விண்ணப்பத்தில் கையெழுத்துப் போடவில்லை என்றால், அது 'இம்மீடியட்' அதிகாரியின் கவனத்திற்குக்கூட போகாது. கிளார்க்கே விண்ணப்பத்தில் கையெழுத்து போடாததால், அப்ளிகேஷனை ரிஜெக்ட் செய்கிறோமென்று தகவல் வரும். ஐந்து பேர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். யாரை? கையெழுத்துப் போடாதவரை தேர்ந்தெடுத்து, இவர்தான் பிராந்திக் கடை நடத்த தகுதி படைத்தவர், ஏனென்றால் விண்ணப்பம் போடும்போது கையெழுத்துப் போடாமல் அனுப்பியிருக்கிறார் என்று பாராட்டுவதுபோல, தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மீதி 4 பேர்களுக்கு என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் சொல்கிறேன். ஒருவருக்கு சால்வன்சி இவ்வளவு இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்து, இல்லை என்று செல்லியிருக்கிறார்கள். இன்னொருவருக்கு, No site sketch, ஆகவே ரிஜக்டட். இன்னொருவர் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யவில்லை, ஆகவே ரிஜக்டட். அப்படி விதிமுறைகளில் சொல்லப்பட்டிருக்கிறதா? ரிஜிஸ்டர் செய்திருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும், இவ்வளவு சால்வன்சி இருக்க வேண்டுமென்று கெசட் நோட்டிபிகேஷன் செய்து, சொல்லியிருந்தால், அவர்கள் அதன்படி விண்ணப்பம் போட்டிருப்பார்கள். ஆனால் என்ன செய்தார்கள்? யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவர்களுக்கு என்ன வசதிகள் இருக்கின்றனவோ, என்ன வாய்ப்புகள் இருக்கின்றனவோ அதை வரையறைப்படுத்தி, அதிகாரிகளிடத்தில் சொல்லி, இன்னின்ன தகுதிகள் இருந்தால் தேர்ந்தெடுங்கள், இல்லையென்றால் தேர்ந்தெடுக்காதீர்கள் என்று சொன்னதால், கையெழுத்துப் போடாதவர்

களுக்கு லைசன்ஸ் கொடுத்தார்கள். அதன் பிறகு நீதி மன்றத்துக்குப் போனார்கள். கையெழுத்துப் போடாதவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள், நியாயம்தானா என்று சொல்லி, அதற்கு 'ஸ்டே' கொடுத்தார்கள்.

இதைப் போன்று சென்னைக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. 29 பேர்கள் விண்ணப்பம் செய்தார்கள்.

Proceedings of the Commissioner of Prohibition and Excise No. ROC B1/15515/81, dated 29th August 1981.

இந்த உத்தரவை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 'ரோனியோ' செய்து அனுப்பலாமென்று நினைக்கிறேன். இதைப் படித்தால், ஒரு ஜனநாயக நாட்டில்தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் வரும். ஒன்றைச் சொல்கிறேன். சென்னைக்கு ஹோல்சேலில் மதுபானம் விற்க லைசன்ஸ் கொடுக்க வேண்டும். சென்னையிலுள்ள ஸ்பென்சர் கம்பெனியைத் தெரியாதவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். அவர்களைப்பற்றி அரசாங்கம் என்ன சொல்லுகிறது தெரியுமா ?

"Their application is in order. The applicant company is a firm having multifarious activities and manufacturing and dealing in Electrical goods, Pharmaceuticals, various consumer goods, soft drinks, running hotels, etc. As the applicant company is already engaged in business in various fields, I consider that the privilege of wholesale supply of IMFS in the Madras Corporation limits should not also be given to them . . . . ."

என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்காததற்குக் காரணம் சொல்லுகிறார்கள், பல வியாபாரம் செய்கிறார்கள், அதனால் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள்.

அதைப்போலவே இன்னொரு கம்பெனி, ஷா வாலஸ். 'அவர்கள் மதுபானம் தயாரிக்கிறார்கள், அதனால் கொடுக்க முடியாது'. அதைப்போலவே மெக்டவல்—அதற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்கள், அதற்குப் பிறகு ஒருவருக்குச் சொல்லுகிறார்கள்

"Thiruvalar Herbertsons Limited, Madras—for the wholesale liquor trade, the portion of the building may not be sufficient . . ."

அவர்கள் எடுத்துள்ள கட்டிடம் போதுமானதாக இல்லை என்று சொல்லி நிராகரிக்கப்பட்டது. இப்படிப் பல காரணங்களைச் சொல்லிவிட்டு, யாருக்குக் கொடுக்கிறார்கள் ? சுப்பராம ரெட்டி என்பவருக்குக் கொடுக்கிறார்கள். அவரிடம் இவர்கள் எதிர்பார்த்ததெல்லாம் இருக்கிறதா என்றால், அதையும் படிக்கிறேன்.





"His application is in order. The applicant has proposed to locate the wholesale depot in the building at No. 9-B, Village Road, Nungambakkam. The Collector has reported that this is a pucca building with two floors and vacant site and that there are several rooms with sufficient space available. The total plinth area of the building is about 3,000 square feet. The owner of the building has given his consent for the location of a wholesale depot in the building by the applicant. Vijaya Bank, Madras has given a certificate, that the applicant has got a balance of Rs. 15 lakhs in the bank. He has produced a solvency certificate for rupees one crore given by the Tahsildar, Nellore."

சுப்பராம ரெட்டிக்கு நெல்லூர் தாசில்தார் சால்வன்சி சர்ட்டிபிகேட் கொடுக்கிறார். நுங்கம்பாக்கம், வில்லேஜ் ரோட்டில் 9-பி எண் கொண்ட பெரிய பங்களா இருக்கிறது, ஆகவே லைசன்ஸ் கொடுக்கிறோமென்று சொன்னால், நான் ஒன்று கேட்கிறேன். ஸ்பென்சர் கம்பெனிக்கு ஒரு காரணம் சொன்னார்கள், அவர்கள் பல வியாபாரங்கள் செய்கிறார்கள் என்று. அதைப்போல சுப்பராம ரெட்டிக்கு வேறு ஒரு வேலையும் கிடையாதா? அவர் ஒரு தொழிலும் செய்வதில்லையா? ஒரு தொழிலும் செய்யாமல் 15 லட்சம் ரூபாய் பேங்கில் வைத்திருக்கிறாரா? அவர் ஒரு தொழிலும் செய்யாதவரா? ஆந்திராவிலே அவர்தான் ஹோல்சேல் டீலர். அவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதால், இவர்கள் மற்றவர்களின் விண்ணப்பங்களுக்கு ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி தள்ளுபடி செய்து, அவர்களிடத்தில் எதைப் பெற வேண்டுமோ அதைப் பெற்றுக்கொண்டு, உரிமம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி எத்தனை நீதி மன்றத் தீர்ப்புகள்! அதுமட்டுமல்ல, ஒவ்வொன்றாகச் சொல்லி, நீதி மன்றத் தீர்ப்பைச் சொன்னால், சரியாக இருக்கும். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒருவர் மனு போட்டார். தலைவரவர்களே, அவருக்குச் சொல்லியிருக்கிற காரணத்தைச் சொன்னால், சிரிப்பாக இருக்கும். "எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன, பிராந்தி, விஸ்கி கடையை நடத்த எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன, ஆனால் உங்களுக்கு 71 வயதாகிவிட்டது. அதுவே இந்த வியாபாரம் செய்யத் தகுதியற்றவர்" என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே 71 வயதாகியிருந்தால், பெரிய ஆபத்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 71 வயதானால் என்ன ஆபத்து? எனக்கு 76 வயது முடிந்ததால் கேட்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த நாட்டிலே பிரதமராக இருந்தாரே திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், இந்தியாவைக் கட்டி ஆண்டார். அவருக்கு வயது பார்க்கவில்லை. 1,400 கோடி ரூபாய் மூலதனம் போட்டு,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 பிப்ரவரி 9

இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் பல்வேறு பகுதிகளில் தொழிலைப் பெருக்கினாரே, அவருடைய வயதைப் பார்க்கவில்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் பிராந்தி விஸ்கியை ஹோல்சேல் வியாபாரம் செய்ய 71 வயதாகி விட்டது, ஆகவே வியாபாரம் செய்ய தகுதியில்லை என்று உத்தரவு போட்டால், அது எவ்வளவு பெரிய வேடிக்கையான உத்தரவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகளை நாங்கள் சொல்லும்போது, சில உறுப்பினர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அதைப்பற்றி தீர்ப்புகள் என்ன சொல்லு கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

The High Court, on Tuesday, passed strictures on the Tamil Nadu Government for not furnishing relevant notifications at the beginning of the hearing in an arrack licence case which "had resulted in considerable wastage of judicial time."

அரசாங்கம் வழக்கு குறித்து நீதிமன்றத்திற்குப் போகும்போது, நோட்டிபிகேஷனைக்கூடக் கொடுக்காததால், நீதி மன்றத்தினுடைய நேரம் விரயமாக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லவில்லை. நீதிபதி சொல்லுகிறார் :

Allowing a writ petition, Justice Satyadev said : "It is necessary to record the manner the State Government was producing before the court every adjourned date a different notification."

ஒரு நாள் போவார்கள், இதுதான் நோட்டிபிகேஷன் என்பார்கள். இன்னொரு நாள் 'இது புது நோட்டிபிகேஷன்' என்பார்கள். மறுநாள் இன்னொரு நோட்டிபிகேஷனைக் காண்பிப்பார்கள். இப்படிப் போகிற நேரத்திலேயெல்லாம் ஒவ்வொருவிதமான நோட்டிபிகேஷனைக் காண்பிப்பார்கள்.

The Advocate-General having not been furnished with all the notifications at the inception of the hearing, had to ask for time more than once for production of further notifications and for securing clarifications. This method adopted by the Commissioner and Special Secretary, Prohibition and Excise Department had resulted in considerable wastage of judicial time and even in formulating the points or in approaching the issue involved, the contesting parties had to take different positions and look for the necessary citations according to the clarifications forthcoming from time to time.

"More important is the loss of judicial time on the court being invited in the beginning of the case, to approach the points involved without all the relevant notifications, but later on further materials being produced the hearings got protracted" the Judge observed.



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

(முற்பகல் 11-30)

ஆக, இந்த அரசு எப்படி நீதிமன்றத்தினுடைய காலத்தையும் கூட விரயமாக்கிக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப நோட்டிபிகேஷன்ஸ்-ஐ மாற்றுவதன் மூலம் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தாங்கள் விரும்பியவர்களுக்காக உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இவ்வாறு நான் சொல்லவில்லை, நீதிமன்றம் சொல்லியிருக்கிறது—

The Judge allowed the Writ Petition filed by Mr. C. Vediappan of Erode with costs.

அவருக்குச் செலவான தொகையையும் அரசாங்கமே கட்ட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டு போய் அங்கே கட்டுகிறார்கள்.

"directing the Government to issue the arrack wholesale licence for Periyar District by January 30 and report to the High Court on February 1."

நீதிமன்றத்திற்கு 1 ஆம் தேதிக்குள்ளாக லைசன்ஸ் கொடுத்துவிட்டது குறித்து சொல்லியாக வேண்டுமென்றும் அதிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீதிக்கு தலை வணங்குவதாகச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் உள்ளபடியே நீதிக்குத் தலை வணங்கினார்களா? இல்லை. உடனே அப்பீலுக்குச் சென்று விட்டார்கள். இப்போது சுப்ரீம் கோர்ட்டுக்கும் ஹைக்கோர்ட்டுக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைந்துவிட்டது. இன்னொரு ஜட்ஜ்மெண்டையும் நான் சொல்லாமலிருக்க முடியாது. இதைவிட ஒரு சர்ட்டிபிகேட் அரசுக்குத் தேவையில்லை. நாங்கள் எல்லாம் மிக மிகச் சாதாரணமானவர்கள். இந்த அரசின் நடைமுறைபற்றி ஸ்பென்சர் கம்பெனி போன்றவற்றை நடத்துகின்றவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். நீதிபதிகள் விசாரித்தார்கள். ஸ்டே போட்டதற்குப் பிறகும், இந்த அரசு சுப்ரீம் கோர்ட்டைக்கூட மதிக்கவில்லை. எக்ஸ்போர்ட் பெர்மிட் வழங்கவில்லை என்று தெரிந்ததும், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஒரு வார்த்தையைச் சொல்கிறார். இதைவிட அவருக்கு வேறு வார்த்தை தெரியவில்லை—

Chief Justice of India, Y. V. Chandrachud, said today that some State Governments were 'hoodwinking' the people by declaring prohib'tion but granting liquor licences . . . He said it was shameful for the Governments to do so in the name of implementing the directive principles of State Policy. The Chief Justice made these remarks while hearing a hotly-contested dispute involving the distribution rights of a liquor company in Madras City. The Tamil Nadu Government had

appointed one wholesaler for each district and this company has come on appeal to the Supreme Court alleging that retailers were not given transport licences to lift stocks from the company godowns.

"நீங்கள் மோசடிக்காரர்கள், வெட்கப்பட வேண்டியவர்கள்" என்று சுப்ரீம் கோர்ட்டினுடைய நீதிபதி அவர்களே சொல்லிவிட்ட பிறகு எங்களைப் போன்ற சாதாரணமானவர்கள் இதிலே சொல்லுவதற்கு என்ன இருக்கிறது என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அடுத்து, மருத்துவக் கல்லூரி பற்றி இங்கே சொன்னார்கள். இந்த ஆட்சியில் ஊழல் நடப்பதேயில்லை என்றும், தகுதி, திறமை இவற்றைத் தவிர வேறு எதையும் பார்ப்பதில்லை என்றும் சொன்னார்கள். ஆனால் தகுதி இல்லாதவர்கள் எல்லாம் வந்து விடுகிறார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டிலே மட்டும்தான் தகுதி இருக்கிறது என்பதை நான் சொல்லவில்லை. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நான் இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எம்.பி, பி.எஸ். தேர்வின்போது சமீப காலத்திலே மாணவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள் பற்றி பத்திரிகையில் செய்தி வந்தது. * * * என்று மாணவன் திருப்பி கேட்டிருக்கிறான். அவன் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவனை எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கேள்வி கேட்டதாகவும், அதற்கு மாணவன் பதில் அளித்ததாகவும் இங்கே உறுப்பினர் குறிப்பிட்டார். அது பற்றிய விவரத்தை இங்கே யாரும் கொடுக்க முடியாது. அது டேப் ரெக்கார்டிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. "இப்படி கேட்டார்கள்" என்றும் "இப்படி பதில் சொன்னான்" என்றும் சொல்லி அநாவசியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரை இழுப்பது முறைதானா? இது அவை நடவடிக்கைக் குறிப்பேட்டில் இருக்கலாமா என்பது குறித்து மாண்புமிகு தலைவரவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, தாங்கள் இது குறித்து எது வேண்டுமானாலும் செய்யுங்கள். எப்படி நிரூபிப்பீர்கள் என்று சொன்னாலும் அல்லது மாணவனைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னாலும், அதற்கும் தயார். அப்படிக் கேள்வி கேட்டவர்களும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த நேரத்தில் உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தைகள் அவை நடவடிக்கைக் குறிப்பில் இருக்க வேண்டுமா?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வந்ததைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** யாரோ இப்படி கேள்வி கேட்டார்கள் என்றும் யாரோ இப்படி பதில் சொன்னார்கள் என்றும் சொல்வது எளிது. அப்படி கேட்டிருப்பார்களா? அப்படி யாராவது கேட்டிருப்பார்கள் என்றால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, நான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையில் வந்ததைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இப்படிக் கேட்டார்கள், இப்படிச் சொல்லிவிட்டான் என்றெல்லாம் சொல்வது எளிது. எதிலும் ஒரு பேசிஸ் இருந்து சொன்னால் தான், நல்லது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முதலமைச்சரைத் தொடர்புபடுத்தி உறுப்பினர் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 4 நாட்களுக்கு முன்பு வந்த ஒன்றைத்தான் அவையில் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

the Medical Board interview
the question asked of an applicant by

* * * * * * அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதாக இருந்தால்,
தலைவரவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதாக இருந்தால்,
எடுத்துவிடுவதிலே எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை. ஆனால் இந்த
அவையில் மானம் உள்ள ஒருவர் தான் இருக்கிறார். அவர்தான் நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** எல்லோரையும் சேர்த்து உறுப்பினர் அப்படிச் சொல்கிறாரா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உட்காருங்கள்.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** அவையிலே சொன்ன ஒரு சொல் அவையினுடைய சொல். அதை சொன்ன உறுப்பினரேகூட வாபஸ் பெற முடியாது. தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்பு கூறியிருக்கிறீர்கள். எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்பது அகில இந்திய அளவில் வந்து கொண்டிருக்கும் ஆங்கில நாளேடு. அதில் இது செய்தியாக வரவில்லை. எடிட்டோரியல் பகுதியில் இதை எழுதி

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(திரு. ம. சங்காலிங்கம்) [1982 பிப்ரவரி 9.

யிருக்கிறார்கள். செய்தியாக அதாவது நியூஸ் ஆக வருவது வேறு, எடிட்டோரியல் ஆக வருவது வேறு. தலைவரவர்கள், அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க உத்தரவு போடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பத்திரிகையில் வந்ததை வைத்து குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது என்று விதி இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நாங்கள் பத்திரிகைகளில் எழுதுகிறோம், பேசுகிறோம். அப்போதெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் ‘ தனக்கு மானம் போய்விட்டது’ என்று வழக்கு தொடர்வதால், நாங்கள் சொல்வதையே அவர் அக்கறையோடு, கூர்மையாக கவனிப்பதால்தான் இதை நான் சொல்கிறேன். அவருடைய இலாகாவில்தான் இப்படியெல்லாம் நடைபெறுகிறது. எம். எஸ் ஆர்தோ, ஜெனரல் சர்ஜரி, எம்.டி. இப்படி பல பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்டன. இப்படி விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்டதில், அவருடைய மகன் தகுதியுடையவர் தான்—அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதுபற்றி நான் கேள்வி கேட்கவில்லை. ஆனால் அவருடைய இலாகாவில் இப்படிச் செய்யலாமா என்று கேட்கவும் மாட்டேன். அதே டாக்டர் ஹண்டே அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எகிறி எகிறிப் பேசியதை, வாதிட்டதை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். முன்பு இருந்த நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய உறவினர்கூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எகிறி எகிறிக் குதித்ததாக இங்கே உறுப்பினர் சொன்னார். நான் எங்கேயாவது அப்படி நடந்திருக்கின்றேனா என்பதை உறுப்பினரின் மேலான பார்வைக்கே வைக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு உறுப்பினராக இருந்து அவையில் பேசிய முழு பேச்சையும் தேவை என்றால், இங்கே கொண்டு வந்து காட்டுகிறேன்.

அடுத்து, எம்.எஸ். ஆர்தோ என்ற ஒன்றை மட்டும் நான் எடுத்துப் பேசுகிறேன். அதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பங்கள் போட்டார்கள். எப்படிப்பட்டவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமோ அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். பணம் கொடுத்தவர்களைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். இதற்கு நான் பொறுப்பேற்கிறேன். யாரிடத்தில் கொடுத்தார்கள், எங்கே கொடுத்தார்கள் என்று சொல்ல வேண்டுமானால், விசாரணை நடத்தினால், நிரூபிக்கத் தயார். பார்த்தசாரதி என்பவன் விண்ணப்பித்திருந்தான். அவனுக்கு இடம் கொடுக்கப்படவில்லை நீதிமன்றத்திற்குப் போனான்.



1982 பிப்ரவரி 9] (திரு. ஆற்காடு வீராசாமி)

நீதிபதி திரு. பத்மநாபன் இதைப்பற்றிக் கேட்டார். இதைப்பற்றிக் கேட்ட அவர் ஒரு தீர்ப்பைக் கொடுத்தார். தலைவரவர்களே, தங்களின் அனுமதியோடு அதைப் படிக்கிறேன். 27 பக்கங்கள் இருக்கின்றன.

“ In the above circumstances, I feel that interests of justice would be served if, instead of allowing the law to take its own course and quashing the selection of all these four young students, a more practical approach is made. Certainly, the Court has jurisdiction in the exercise of its jurisdiction under Article 226 of the Constitution of India to give appropriate directions and mould the relief suitably.”

(முற்பகல் 11—40)

நீதிமன்றத்துக்குப் போனவுடனே இந்தத் தேர்வே செல்லாது என்று நீதிமன்றம் தடுக்க முடியும். இருந்தாலும் சூழ்நிலைகளுக்கேற்ப, யார் விண்ணப்பித்தானோ அந்த மாணவனுக்கு மட்டும் இடம் கொடுங்கள் என்று சொன்னார்கள். இந்த ஆட்சியை நடத்தும் புனிதர்கள் லஞ்சமே வாங்கவில்லையே அப்படியென்றால் கோர்ட் சொன்னபடி கொடுத்துவிடுவதுதானே! ஆனால் கொடுக்கவில்லையே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நீதிமன்றத்திற்குப் போய் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், இல்லை கொடுக்க மாட்டேன், நான் அப்பீல் செய்வேன், சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வேன் என்று போன வரலாறு உண்டா என்று கேட்டால், இல்லை. இன்றைய தினம் நான் சொல்கிறேன். இந்த ஆட்சியில் நீதிபதி அவர்களுடைய உத்தரவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட மாணவன் அதிகாரிகளைச் சந்திக்கின்றான். அவர்களைச் சந்தித்துக் கோர்ட் உத்தரவைப் பற்றிச் சொல்கிறான். “கோர்ட் உத்தரவு போட்டுவிட்டால் உடனே கொடுக்க வேண்டுமா?” என்று அதிகாரிகள் கேட்கிறார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் அப்பீல் செய்கிறது. ஜஸ்டிஸ் கோகுல கிருஷ்ணன், ஜஸ்டிஸ் இரத்தினம் என்ற இருவரும் ஒரு பெஞ்ச் மூலமாக விசாரிக்கிறார்கள். விசாரித்து அவர்களின் தீர்ப்பிலே சொல்கிறார்கள். “ஜஸ்டிஸ் திரு. பத்மநாபன் அவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்திருக்கிறார்கள், அவர்கள் என்ன முடிவு எடுத்தார்களோ அதுதான் எங்களுடைய முடிவும்; ஆகவே அந்த மாணவனுக்கு இடம் கொடுங்கள் ” என்று சொல்லி

“ We, are, therefore, satisfied that the learned Judge was quite correct in holding that the selection of respondents 2 to 4 and 6 to M.S. (Ortho) course is vitiated and at the same time directing the admission of the first respondent who was qualified for the course by creating an additional seat. We do not find any merit in this appeal. Accordingly the appeal is dismissed.”

என்று தீர்ப்பளித்தார்கள். இது பெஞ்ச் கொடுத்த தீர்ப்பு. அதற்குப் பிறகாவது கொடுத்தார்களா என்று கேட்டால், இல்லை. அரசாங்கப் பணம் இருக்கிறதே, இந்த நாட்டினுடைய ஏமாளிகள் வரி கட்டுகிறார்களே, அந்தப் பணத்தைத் திட்டங்களுக்கும், ஆக்கப்பணிகளுக்கும், செலவிடாவிட்டாலும், ஒரு தனிப்பட்ட மனிதரைத் துன்புறுத்த, பழிவாங்கவாவது பயன்படட்டும் என்றும், அதற்குத்தான் வரி போடுகிறோம் என்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம் என்றும் ஒரு பிரபல வழக்கறிஞரைச் சந்திக்கிறார்கள். அவரிடம் இந்த நிலைமைகளைச் சொல்கிறார்கள். உடனே அவர் சொல்கிறார். ‘ No case in this ’ என்று. உடனே அவரிடம், “ நீங்கள் எப்படியாவது இதை எடுக்க வேண்டும், இது ஒரு மானப் பிரச்சினை ” என்று சொல்கிறார்கள். பிறகு மேலிடத்திலேயிருந்து அவருக்கு ஒரு ப்ரஷர் வருகிறது. அதை ஏற்றுக் கொண்டு அந்த வழக்கறிஞர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். அங்கே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் ‘ மைலாட் ’ என்று சொல்வதற்கு முன்னாலே—என்னவாயிருந்தாலும் சுப்ரீம் கோர்ட் நியாயத்திற்குத்தான் இருக்கிறது என்பதை நிரூபிப்பதுபோல—அந்த வழக்கறிஞருடைய பெயரைச் சொல்லி சுப்ரீம் கோர்ட் நீதிபதி கேட்கிறார். “ மிஸ்டர் அட்வகேட் உங்களுடைய சன்-இன்-லா அவர்களுக்கு இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு அநீதியை இழைத்திருக்குமானால், நீங்கள் இங்கே ஓடி வந்திருக்க மாட்டீர்களா ?” என்று கேட்டவுடனே இந்த வழக்கறிஞர் வாதத்திற்குப் போகும்போது, ‘ நோ, நான் எல்லாவற்றையும் படித்துப் பார்த்தேன், முழு விவரங்களும் எனக்குத் தெரியும் ’ என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி அவர்கள் அரசு அப்பீலை ‘ டிஸ்மிஸ் ’ செய்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் எச்.வி.ஹண்டே:** இப்படிப்பட்ட ஒரு வழக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவருடைய பத்திரிக்கையிலே உடனடியாக நான் ராஜினாமா செய்ய வேண்டும் என்றெல்லாம் கூட எழுதினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பெரியகருப்பன் கேசைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. செலக்ஷனை ‘ க்வாஷ் ’ செய்துவிட்டு, 24 பேரை மீண்டும் செலக்ஷன் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டதின் அடிப்படையிலே, கேஸ் நம்பர் டபிள்யூ.பி. 623/70படி நடவடிக்கை எடுக்கவில்லையா ? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படிச் செய்யவேயில்லை என்று சொன்னதற்குச் சொல்கிறேன். (திரு. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்) :

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (திரு. வீராசாமி அவர்களைப் பார்த்து) குறுக்கிடுகிற நேரம் எல்லாம் தங்கள் கணக்கிலே சேர்க்கப்படமாட்டாது.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இப்படி நடந்திருக்கிறது என்ப
தற்கு ஒரு முன்மாதிரியான நிலை கூட இருக்கிறது. செலக்ஷனையே க்வாஷ்
செய்து விட்டு, 24 பேரையும் மீண்டும் செலக்ஷன் செய்ய வேண்டும் என்றும்,
அதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். நாங்கள்
இப்போது லஞ்சம் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னார்களே, அதற்குச்
சொல்கிறேன் லஞ்சம் வாங்க வேண்டுமென்ற எந்தத் தேவையும் இல்லை.
பார்த்தசாரதிக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையில், நாங்கள்
ஒரு கொள்கையிலே இருந்தோம். அதாவது டிப்ளமா இன் ஆர்த்தோ
என்பது மனு செய்யும்போது இருக்க வேண்டாம் என்றும், இண்டர்வியூ
செய்யும்போது இருந்தாலும் போதும் என்றும் நாங்கள் முடிவெடுத்தோம்.
ஆனால் ஹைக்கோர்ட் மனு செய்யும்போது இருக்க வேண்டும் என்று
சொன்னது. டிப்ளமா இருந்தால்தான் போட வேண்டும் என்று முதன்
முதலாகத் துணிச்சலாகக் கொண்டு வந்திருக்கும் உத்தரவு. இது கொள்கைப்
பிரச்சினை.

We are prepared for a whole enquiry, and we have stated like that.

எங்களுக்கு எந்தவிதமான கவலையும் இடையாது. மடியிலே கனமும்
இல்லை, மனதிலே பயமும் இல்லை. லஞ்சம் வாங்கியிருந்தால், ஒருவேளைச்
சரிக்கட்டிவிட்டுச் செய்திருக்க முடியும். இந்த மாநிலத்திலே உள்ள நிலை
வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலே டிப்ளமா பாஸ் செய்யாமலேயே யார் யாருக்கெல்லாம் கொடுக்கப்
பட்டிருக்கின்றன என்ற பட்டியல் இருக்கிறது. அந்த அளவுக்கு ஒரு
கொள்கை ரீதியாக நாங்கள் இதை அணுகினோம். ஹைகோர்ட் வேறொரு
கொள்கையைச் சொல்லியது. இந்த இரண்டில் எந்தக் கொள்கை சரியான
கொள்கை என்று சுப்ரீம் கோர்ட் ‘டிசைட்’ பண்ணட்டும். We are here to abide by the decision of the Supreme Court. We have no fear and our conscience is clear.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டு
மென்றே வேறொன்று சொல்லிக் குற்றம் சுமத்துகிறார்கள். நான் சொன்ன
தற்குப் பதில் சொல்ல வேண்டும். இங்கே கோர்ட் தீர்ப்பு பற்றிச் சொன்
னார்கள். அப்போது அரசாங்கம் அப்பீல் செய்ததா ? திராவிட
முன்னேற்றக் கழகக் காலத்திலே சுப்ரீம் கோர்ட்டுக்கு மாணவர்கள்
போனார்கள். ஆனால் இப்போது அரசாங்கம் போயிருக்கிறது.

**The Hon. Dr. H. V. HANDE:** The contention of the main petitioner Periya Karuppan is that the “ Government had contravened the directions of the Supreme Court.”

[1982 பிப்ரவரி 9

**திரு ஆற்காடு நா. வீராசாமி:** திருநெல்வேலியிலே ஒரு பெண்ணுக்கு இடம் கிடைக்கவில்லையென்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார். இந்த விவகாரத்திலே செலக்ஷன் விஷயத்திலே, டிப்ளமா என்று வைத்தோம், நாங்கள் தான் வைத்தோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் ஹெல்த் மினிஸ்டராக இருப்பதால், அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படியொரு உத்தரவு போடப்பட்டதா ? ஏன் போடவில்லையென்று சொன்னால் அப்போது "க்வாலிபைட் பர்சன்ஸ்" இல்லை. நாம் இப்போதுதான் மருத்துவத்துறையிலே முன்னேறுகிறோம். எம்.பி.பி.எஸ். படிப்பை எடுத்துக் கொண்டால், அப்போது பெரிது என்று நினைத்தார்கள். அதற்குப் பிறகு டிப்ளமா படித்தார்கள். பிறகு டிப்ளமா இல்லாமல் டிகிரிக்குப் போனார்கள். முன்பு இருந்த அமைச்சர் பேராசிரியர் அவர்கள்தான் இந்த முறையைப் புகுத்த வேண்டும் என்று சொன்னார்கள். டிப்ளமா இருந்தால் நான் செலக்ஷனுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதை ஸ்டேட்யூட்டிலே நாங்கள் தான் கொண்டு வந்தோம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 5-வது படித்தவனே இல்லாத ஊரிலே 8-வது படித்தவன் தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று சொன்னால், யார் விண்ணப்பிப்பார்கள்? அந்த மாதிரி சூழ்நிலை இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் டிப்ளமா படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை சட்டபூர்வமாக ஆக்குகிறோம் என்று சொல்கிறார்களே, "உங்களுடைய உத்தரவை நீங்கள் பின்பற்றினீர்களா ?" அதுதான் கேள்வி. சட்டம் மட்டும் போட்டுவிட்டால், என்ன பிரயோசனம் ? போட்டுவிட்ட அந்தச் சட்டத்திற்கு விரோதமாக அரசாங்கம் நடக்கும், அமைச்சர்கள் நடப்பார்கள் என்று சொன்னால், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் பேசமாட்டார்களா ? எதற்காகச் சட்டம் போடுகிறார்கள் ? போட்டால் அதன்படி நடக்க வேண்டும் இல்லை என்றால் அப்படிப் போடக்கூடாது. சட்டம் போட்டு விட்டு அதன்படி நடக்கவில்லை என்றால். என்ன அர்த்தம் ? டிப்ளமோ இருந்தால் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சட்டம் போட்டுவிட்டு, அதன்படி நடந்து கொண்டார்களா என்பதுதான் பிரச்சினை. எம்.எஸ். (ஆர்த்தோ)-வில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் டாக்டர் சுரேந்திர குமார். அவர் எம்.பி., பி.எஸ். படித்துள்ளார். அவருக்கு டிப்ளமோ இருக்கிறதா ? இருந்தாலும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது தான் உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு நான்



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கேட்க விரும்புகிறேன். சட்டம் போட்டுவிட்டேன் என்று சொல்லுவதால் பயன் இல்லை. அப்படிச் சட்டம் போட்டுவிட்டு அதன்படி நடந்ீர்களா என்பதுதான் என் கேள்வி. அது மட்டுமல்ல. தேர்வின்போது ஒருவர் அரசாங்க ஊழியத்திலோ, தனியாக மருத்துவராகப் பிராக்டீஸ் செய்தாலோ அவருக்கு 3 மார்க் போடலாம் என்று இருக்கிறது. லஞ்சமே விளையாடாத இந்த சுரேந்திரகுமார் விவகாரத்தில் என்ன நடந்தது ? டாக்டர் சுரேந்திர குமார் இண்டர்வியூவுக்குப் போகிறார். அவருக்கு அரசாங்கத்திலே வேலையில்லை, தனியாக அவர் பிராக்டிஸ் செய்யவும் இல்லை. அவரைப்பற்றி கமிட்டியிலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்

"Nil service. No records were produced to show that he is having private practice."

ஆனால் அப்படிப்பட்டவருக்கு இரண்டு மார்க் போடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, டாக்டர் சுரேந்திரகுமாருக்கு டிப்ளமோ இல்லை என்று சொல்லும் குற்றச் சாட்டை நான் ஆதாரத்தோடு மறுக்கிறேன.

I have got a photostat copy of Diploma in Ortho of Mr. Surendra Kumar, dated 19th May 1981. This was before the date of interview. This is my point. The hon. Member has stated that the candidate did not have a Diploma. It is after all a question of policy. Our policy was that he should possess a diploma 'at the time of admission'. It is a question of legal interpretation whether the Diploma should be possessed at the time of application or at the time of admission or at the time of interview. It is a question of interpretation.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் கேட்பதெல்லாம் அவர் விண்ணப்பம் போடும்போது, அவருக்கு டிப்ளமோ இருந்ததா இல்லையா என்பதுதான். இப்படி அரசாங்க வேலையும் இல்லாமல், தனியாகவும் பிராக்டிஸ் எதுவும் இல்லாத டாக்டர் சுரேந்திரகுமாருக்கு 2 மார்க் போடப்படுகிறது. அடுத்த கேண்டிடேட்டுக்கும் 3 மார்க். அவருக்கு அடுத்தவருக்கும் 3 மார்க். இப்படி அவர்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்க விரும்பினார்களோ அவர்கள் யாருக்குமே பிரைவேட் பிராக்டிசுமில்லை, கவர்மெண்ட் சர்விசுமில்லை. இப்படிப் பட்டவர்களுக்கு இண்டர்வியூ கமிட்டி எப்படி மார்க் போடுகிறது என்பது தான் என்னுடைய வாதம். அது மட்டுமல்ல. சர்வீசில் இல்லாதவர் களுக்கு 3 மார்க். ஆனால் 1 வருடம் 9 மாதம் சர்வீசிலிருந்த கேண்டிடேட்டுக்கு 1 மார்க் போடுகிறார்கள். காரணம் என்ன, இவர் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை.

அடுத்து, எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிட்டிஸைப் பொறுத்த வரையில், என்ன நிலைமை? டாக்டர் சுரேந்திரகுமார்பற்றி கமிட்டியில் என்ன எழுதியிருக்கிறார்கள் :

"No documents were produced before the Interview Committee."

ஆனால் அவருக்கு 3 மார்க்குகள் போடப்பட்டிருக்கிறது. டாக்டர் பார்த்தசாரதியின் நிலைமை என்ன? அவர் தகுதிகளையும் அந்தக் கமிட்டிமுன் எடுத்துச் சொல்லியிருக்கிறார் :

1. General Secretary in K.M.C. Hostel in the year 1972-73.

2. Editor and Publisher of College Magazine in K.M.C. in 1973-74.

3. President of Rotarct Club K.M.C. 1975-76.

4. Organised many Village Health Camps and Voluntary Blood Donation Week. (Testimonials Produced) (2 Marks.)

இவ்வளவு தகுதிகளைப்பெற்ற அந்த மாணவருக்கு இந்தக் கமிட்டி அளித்த மார்க்குகள் எவ்வளவு தெரியுமா? இரண்டு. ஆனால் எந்த ஆதாரத்தையும், சர்ட்டிபிகேட்டுகளையும் புரொடியூஸ் செய்யாத மாணவர்களுக்கு 3 என்று மார்க்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் பயித்தியக்காரத்தனமாக டாக்குமெண்டுகளைப் புரொடியூஸ் செய்த காரணத்தால், அவருக்குக் கிடைக்கும் மார்க் 2.

அதுமட்டுமல்ல. இண்டர்வியூவுக்கு மொத்தம் வைக்கப்பட்ட மார்க்குகள் ஆறு. டாக்டர் சுரேந்திரகுமார் இண்டர்வியூவில் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் 'பட்பட்' என்று பதில் சொல்லிவிட்ட காரணத்தால், அவருக்கு ஐந்து மார்க்குகள் போடப்பட்டிருக்கின்றன. டாக்டர் பார்த்தசாரதியின் நிலைமை என்ன? அவர் அரசாங்கம் கேட்கும் டிப்ளமோவைப் பெற்றிருக்கிறார். அவர்தான் காலேஜில் முதன்மையாக வந்திருக்கிறார். பல்கலைக் கழகத்திலேயே முதன்மையாக வந்திருக்கிறார். எம்.பி., பி.எஸ்., பரீட்சையை 3 ஆண்டுகள் தொடர்ந்து டிஸ்டிங்க்ஷனோடு பாஸ் செய்திருக்கிறார். பல பேப்பர்களைப் 'பிரசண்ட்' செய்திருக்கிறார்.

In Diploma—First in the College and first in the University.

In M.B.B.S. obtained 3 prizes and passed all the years with distiction.





Presented papers in Seminars and Conferences—

(a) Treatment of non-union of long bones by A.O. Techniques.

(b) Infection in implant surgery.

2. Doing research in 'Fracture healing in Brain Disfunction.

இவ்வளவு குவாலிபிகேஷன்கள் இருக்கிற அந்த மாணவருக்கு அந்த இன்டர்வியூ கமிட்டி மிகவும் பெருந்தன்மையோடு என்ன மார்க் போட்டிருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? குறைந்தது 6க்கு 5 மார்க்காவது போட்டிருக்கும் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அந்த மாணவருக்கு இண்டர்வியூ கமிட்டி போட்ட மார்க் எவ்வளவு தெரியுமா? "பூஜ்யம்".

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : எனக்கு விளக்கமாகச் சொல்லுவதற்கு உறுப்பினர் அவர்கள் வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில் ஒரு கருத்தைச் சொன்னார். அந்த மாணவருக்கு டிப்ளமோவே கிடையாது என்றார். டிப்ளமோ பெற்றவர்தான் அவர் என்று நான் இங்கே ஆதாரபூர்வமாகத் தெரிவித்துக்கொண்டேன். அதற்கான போட்டோஸ்டேட் காப்பியை நான் இங்கே வைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது புதிதாக, மார்க் போடவில்லை என்ற புதுப் பிரச்சினையை எழுப்பியுள்ளார். அவர் தி.மு.க. ஆட்சியின் பழைய ஹெல்த் மினிஸ்டரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். அவருக்கே நன்கு தெரியும். ஒரு கமிட்டி அமைக்கிறோம் என்றால், கமிட்டிதான் மாணவர்களைக் கேள்வி கேட்டு மார்க் போடுமே தவிர, அரசாங்கம் அல்ல. அதற்கு அரசாங்கத்திற்குப் பொறுப்புமில்லை. நானேகூட இதைப்பற்றி விசாரித்தேன். அவர் ஒரு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இதைப் பற்றி சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில்கூட சொல்லியிருக்கிறார். "ஹாங்காங் ஆப்பரேஷன்" பற்றிக் கேட்டார்கள். அதற்கு பதில் ஏதும் சொல்லவில்லை. அதைப்பற்றி ஜஸ்டிஸ் பத்மநாபன் அவர்களே எழுதியிருக்கிறார். "ஹாங்காங் ஆப்பரேஷன்" என்பது மிகச் சாதாரணமான ஒன்று. வைத்தியக் கல்லூரி மாணவர்கள் பொதுவாகத் தெரிந்திருக்கக்கூடியது. "பெய்லி அண்டு லவ்" என்ற மருத்துவப் புத்தகத்தில் அதைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறாரோ அந்த அளவுக்கு நாங்களும் இருக்கிறோம். கமிட்டி தவறு செய்தால் நடவடிக்கை எடுக்கத் தயார். அதற்கு அஞ்சமாட்டோம் என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே அந்த மாணவருக்கு டிப்ளமோ இல்லை என்று சொல்லியதை மாண்புமிகு உறுப்பினர் வாபஸ் வாங்குவார் என்று நம்புகிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 பிப்ரவரி 9·

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : எப்படி வாங்க முடியும்? எதற்காக வாங்க வேண்டும்? இன்டர்வியூவுக்குப் போகிறபோது எல்லோருக்கும் டிப்ளமோ இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, டிப்ளமோ இல்லாமலேயே செலக்ட் செய்திருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. விண்ணப்பம் போடும்போதும், இன்டர்வியூவுக்குப் போகும்போதும் டாக்டர் சுரேந்திர குமாரிடம் டிப்ளமோ இருந்ததா என்பதுதான் பிரச்சினை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : அப்ளிகேஷன் போடும்போது டிப்ளமோ இருக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. இதுபோல் மற்ற மாநிலங்களில் எங்குமே இல்லை. அதை நாம்தான் வைத்திருக்கிறோம். மகாராட்டிர மாநிலம் நம்மைவிட மிகவும் முன்னேறிய மாநிலம். ஆனால் அங்கேகூட இப்படிப்பட்ட முறையில்லை. நாம்தான் முதலில் இதைக் கொண்டு வந்தோம். ஆனால் அப்ளிகேஷன் போடும்போது டிப்ளமோ இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. காரணம் இதன் விளைவாக ஒரு ஆண்டு பாதிக்கப்படுகிறது என்பதுதான். இதன் காரணமாக மற்ற மாநிலங்கள் நம்மைவிட வேகமாக முன்னேறிக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இப்போது ஜட்ஜ்மெண்ட் இப்படி வந்துவிட்ட பிறகு, இதில் ஒரு கொள்கையாக முடிவெடுத்திருக்கிறோம். நம் மாநிலத்திற்குப் பாதகம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று இப்போது அந்த முடிவை எடுத்திருக்கிறோம். டாக்டர் சுரேந்திரநாத்துக்கு அந்த நேரத்தில் டிப்ளமோ இல்லை என்று சொன்னார்கள். இன்டர்வியூவின்போது இல்லை என்று சொன்னார்கள். அவர் அப்போது தேர்வு எழுதியிருந்தார். அதற்குப் பின்னர் டிப்ளமோ வந்தது. அதுதான் விஷயம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : இந்த அரசாங்கத்தின் போக்கே எனக்குப் புரியவில்லை.. ஒரு குறிப்பிட்ட தேதியைக் குறிப்பிடுகிறார்கள். அந்தத் தேதியில் ஒருவர் டிப்ளமோ பெற்றவராக இருக்க வேண்டும் என்று சொல்லு கிறார்கள். அவர்களைத் தேர்வு செய்வதற்கு என்று விதிமுறைகளை வகுக்கிறார்கள். அப்படியானால் அந்த விதிமுறைகளின்படிதானே நடந்து கொள்ள வேண்டும். இனி 1992 ஆம் ஆண்டில் அவர் பாஸ் செய்துவிடுவார் என்று 'ஆண்டிசிபேட்' செய்து கொண்டு மார்க் போட்டுவிடுவார்கள் போல் இருக்கிறதே. நான் சொல்வதெல்லாம் விதிமுறைகளைப் போட்டுவிட்டு அதை நீங்கள் பின்பற்றவில்லை என்பதுதான். அதைத்தான் எழுதியிருக் கிறார்கள். வேண்டுமானால் நான் முழுவதையும் படித்துக்காட்டுகிறேன்.

(நண்பகல் 12.00.)

டிப்ளமா இல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் டிப்ளமா வைத்திருந்த, யுனிவர்சிட்டியிலே முதலாவதாக வந்த, கல்லூரியிலும்

முதலாவதாக வந்து—இப்படி எல்லாத் தகுதிகள் இருந்தும் இன்டர்வியூவில் மார்க் கிடைக்கவில்லை. இண்டர்வியூவில் மார்க் போடுவதைப்பற்றி டாக்டர் ஹண்டே அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் அவர் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும்கூட, ஒரே ஒரு கேள்வி தானா கேட்டிருப்பார்கள். அந்த ஒரே ஒரு கேள்விக்காக பூச்சியமா போடுவது ? ஒரு மார்க் கூட போட வேண்டுமென்று தோன்ற வில்லையா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்டர்வியூ மார்க் 25-ல் 7 மார்க் என்று இருந்ததை நான் பொறுப்பேற்ற பிறகு 40 மார்க்கில் 6 மார்க் என்று குறைத்திருக்கிறேன். அதற்காக ஒரு போராட்டம் கூட நடத்தியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றம், உச்ச நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பின் அடிப்படையிலே, இன்டர்வியூ மார்க்கைக் குறைத்திருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இண்டர்வியூ மார்க்கை என் 6 ஆகக் குறைத்திருக்கிறார்கள் ? யாரை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத்தான் செய்திருக்கிறார்கள். யார், யாருக்கு என்னென்ன தகுதிகள் என்று பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் செய்கிறார்கள். ஒரு மாணவன் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் 20 பேப்பர்களை 'பிரசண்ட்' பண்ணார் என்றால், அதை நாடு நம்புகிறது என்று நினைக்கிறார்களா ? அவனுடைய பெற்றோர் டாக்டராக இருப்பார். அவர் பேப்பர்களையெல்லாம் தயார் செய்து கொடுப்பார். இந்த மாணவன் அதைத் தன்னுடைய பெயரிலே 'பிரசன்ட்' பண்ணுவான். அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 20 வருடம் டீச்சிங் அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய மகன் மக்காகவா இருப்பான் ? அப்படியே இருந்தாலும் ரிக்கார்ட் மக்காக இருக்காது. அவர் பிரிப்பேர் பண்ணுவார். இவர் பிரசன்ட் பண்ணுவார் Dr. So-and-so-presented this paper என்று சொல்வார்கள். இதெல்லாம் இருந்தால், 5 மார்க் என்று எதற்காக வைக்கிறார்கள் என்றால், அவர்கள் யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத்தான். இண்டர்வியூ மார்க்கைக் குறைத்ததை உண்மையிலே வரவேற்கிறேன். ஆனால் உண்மையான தகுதியிருப்பவனுக்குக் கொடுக்காமல் யார் யார் வரவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு மார்க் ஒதுக்குவதைத்தான் நான் குற்றச்சாட்டாகக் கூறுகிறேன். அந்தத் தவறை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பகிரங்கமாகக் குற்றச்சாட்டாகக் கூற விரும்புகிறேன். டாக்டர் பார்த்தசாரதியின் வழக்கிலும் இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட தவறுகளைப்

புரிந்திருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுகிற வகையில் தீர்ப்பு வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அந்தத் தீர்ப்பை இந்த அவையிலேயே படித்தேன். இப்படி எதிலே பார்த்தாலும் ஊழல் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எச்.வி.ஹண்டே:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், செலக்ஷனைப் பொறுத்த வகையில், சுப்ரீம் கோர்ட் ஒன்றும் சொல்லவில்லை என்று சொன்னார்களே, அதையாவது இப்போது வாபஸ் வாங்கிக்கொள்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆதாரத்தோடு சொன்ன பிறகும் . . .

**திரு ஆற்காடு நா. வீராசாமி:** நான் வாபஸ் வாங்குவதால் அவருக்குப் பெருமை என்றால், அது வேறு விஷயம். ஆனால் கூறிய மற்ற குற்றச்சாட்டுகளை அவர் ஏற்றுக் கொண்டால், அதை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். என்னுடைய குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது. அதைச் செய்தது செலக்ஷன் கமிட்டி என்றாலும்கூட, அதிலே உண்மையிருக்கிறது என்று ஒப்புக்கொண்டால் சரி. பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், "என்னுடைய ஆட்சியிலே அதிகாரிகள் தவறு செய்தாலும் அந்தத் தவறுக்கு நான் பொறுப்பேற்கிறேன்." என்று பெருமையோடு சொன்னார்கள். ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், உறுதி படைத்தவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். நீங்கள் அப்படிப் பேசுவீர்களா ? நீங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே:** உங்களுடைய ஆட்சிக்காலத்திலே அப்படி நடந்தீர்களா ?

**திரு ஆற்காடு நா. வீராசாமி:** ஓர் அமைச்சர் இப்படிக் கேட்க வெட்கப்படவேண்டும். நாங்கள் செய்யவில்லை என்றுதானே நீங்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் செய்யுங்கள். இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் வராது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கும் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சுப்ரீம் கோர்ட் 'ஸ்டே' செய்யவில்லையா ? அதற்காக "வெட்கப்பட வேண்டும்" என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் மீது எனக்கு சற்று பாசமும், அன்பும் இருப்பதால், அப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகள் என் வாயிலிருந்து வருவதில்லை.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** டாக்டர் ஹண்டே மீது எனக்கும் தனிப் பட்ட அன்பு இருக்கிறது. அவர் மீது தனி மரியாதையே வைத்திருக்கிறேன். ஆனால் அவர் இன்றைக்கு அண்ணா தி. மு. க. ஆட்சியில் அமைச்சராக இருக் கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவருடைய பேஷண்டாக இருந்திருக்கிறாரா ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நல்ல வேளையாக இல்லை. போயிருக் கிறேன் ஓட்டு கேட்க. போயிருக்கிறேன் தேர்தலில் அவர் வெற்றி பெற வேண்டுமென்று ஓட்டு கேட்க. ஆனால் எப்போதும் நோயாளியாகப் போன தில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால். . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மேலவைத் தலைவர் அவர்களே, "நல்ல வேளையாக நான் போகவில்லை" என்றால், it is an i s:nu ticn அ நத Ex)un;- பண்ண வேண்டும். நோயாளியாகப் போனால் ஆபத்து, ஆகவே போகவில்லை என்று சொல்வதைப்போல இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நல்ல வேளையாக நோயாளியாக ஆகவில்லை. ஆகவே போகவில்லை என்று சொல்லியிருக்கிறார் என்று நான் 'ருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் நலைவர்:** அதை நகைச்சுவையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நல்ல வேளையாக நோயாளியாக ஆகவில்லை என்ற கருத்தில்தான் சொன்னார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** டாக்டர் ஹண்டேவுக்காவது நான் பேசும் தமிழ் புரிகிறதே, பரவாயில்லை. நீதிமன்றங்களில் தீர்ப்புகளை எடுத்துச் சொல்வதற்குக் காரணம் இந்த நாட்டிலே நிர்வாகம் எப்படி நடக்கிறது, இந்த நாட்டிலே ஆட்சி எப்படி நடக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான் எங்களைப் போன்றவர்கள் எடுத்துச் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனாலேதான் நீதிமன்றத்தின் தீர்ப்புகளைச் சொல்லி யிருக்கிறேன்.

அடுத்து, இன்னும் ஒன்றைப் பற்றி மட்டும் சொல்கிறேன். 'ஹோல்சேல் லிக்கர்' பற்றிச் சொன்னேனே, அதிலே வேடிக்கை என்னவென்றால், "சிறிய இடம், ஆகவே லைசென்ஸ் கொடுக்க விரும்பவில்லை" என்று உத்தரவு போட் டிருக்கிறார்கள். "ஸ்கெட்ச்'இல்லையென்றும் காரணம் காட்டினார்கள்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 பிப்ரவரி 9

ஆனால் சுப்பராம ரெட்டிக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். 9-பி, நுங்கம்பாக்கம் ஹைரோடில் உள்ள இடத்தை இன்ஸ்பெக்ட் செய்தேன், என்று கூறி கமிஷனர் போட்டிருக்கிறார். இதிலே வேடிக்கை என்னவென்றால், சுப்பராம ரெட்டிக்கு அப்படிப்பட்ட விலாசத்தில் அப்படியொரு இடமே இல்லை. அந்த இடத்திலே போனால், மத்திய அரசின் ஐ.பி.எஸ். அதிகாரி திரு. மனோகரன் அங்கே உட்கார்ந்திருக்கிறார், சுப்பராமன் லைசென்ஸ் பெற்றுக்கொண்டு போகிறார் தனக்கு இடமே இல்லையென்று. பிறகு அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? "ஸ்கெட்ச்" அனுப்பவில்லையென்று ரிஜெக்ட் செய்த அரசாங்கம், நேர்மையாக நடக்கும் அரசாங்கமாக இருந்தால், இடமே இல்லாமல் அரசாங்கத்தை ஏமாற்றி லைசென்ஸ் பெற்றவரை "ஓடு ஆந்திராவுக்கு' என்று விரட்டியிருக்க வேண்டாமா? அப்படி செய்திருந்தால் இந்த அரசாங்கத்தை நான் நேர்மையான அரசாங்கம் என்று ஒத்துக்கொள்வேன். இந்த சுப்பராமனுக்காக இந்த அரசாங்கம் ஒரு ஜி.ஓ.வைப் போட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ. வுக்கு "சுப்பராமரெட்டி ஜி.ஓ." என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை பெயர் வைத்திருக்கிறது. பொதுக் காரியங்களுக்காகத்தான் அரசாணை பிறப்பிக்கப்படும். ஆனால் சுப்பராம ரெட்டியாருக்காக ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்தை அவர் தேர்ந்தெடுத்தாலும் அந்த இடத்தை அஃபீசியல் இடமாக ஏற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி அவர் "கிருஷ்ணவேணி என்டர்பிரைஸ்" (ஹோல்சேல் லிக்கர் லைசென்ஸ் நெம்பர் 12), எம். சுப்பராம ரெட்டி என்று போர்ட் மாட்டி அண்ணா சாலையில் ஓர் இடத்தில் கடை வைத்திருக்கிறார். இதன் படத்தை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் போட்டு, அதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அரசாங்கம் இதுவரையில் அவருக்கு லைசென்ஸ் கொடுக்கவில்லை. ஆனால் தனிப்பட்ட மனிதன் அரசாங்கத்தின் தயவு இல்லாமல், அமைச்சர்களுடைய ஆதரவு இல்லாமலா லைசென்ஸ் நெம்பரைப் போட்டிருப்பான்? அதை படம் எடுத்துப் போட்டிருக்கிறது பத்திரிகை. "9—பி நுங்கம்பாக்கம்' என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் மவுண்ட் ரோட்டிலே அலுவலகம் இருக்கிறது. இப்போதாவது உரிமையை ரத்து செய்வார்களா என்று கேட்டால் ரத்து செய்யவில்லை. இப்படி அண்ணா தி.மு.க. ஆட்சியில் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று, விண்ணப்பங்கள் கோரும்போது சொல்வது ஒன்று, தேர்வு நடத்தும்போது சொல்வது ஒன்று, சாராயம், கள், மொத்த வியாபாரம் என்ற பெயராலே கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடித்தது உண்டு என்று மக்கள் ஊரிலே பேசிக்கொள்கிறார்கள் என்பதற்காக அரசே அதை விசாரிக்க கமிஷன் போட முன் வந்திருக்கிறது. மத்திய அரசா[illegible] நியமித்த கமிஷனாக



1982 பிப்ரவரி 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இருந்தாலும் சரி, மாநில அரசு நியமித்த விசாரணைக் கமிஷனாக இருந் தாலும் சரி விசாரிக்கும் நேரத்தில் நாங்கள் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு ஜனநாயக நாடு என்றாலும், ஊராட்சி மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், அது தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு கானல் நீராக ஆகிவிட்டது. நிச்சயமாக தேர்தல் வரும் என்பதிலே நாட்டு மக்களுடைய நம்பிக்கை இல்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப் போவதில்லை என்பதுதான் இந்த நாட்டிற்கு இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிற "சாகா வரம்". வேலை செய்யாத கிராம அதிகாரிகள், கர்ணம் ஆகியவர்களுக்கு ஓராண்டுக்கும் அதிக மாக மக்களுடைய வரிப்பணத்திலிருந்து 7 கோடி ரூபாயைக் கொடுத்திருக் கிறார்கள். இது யார் விட்டுப் பணம்? எந்த அதிகாரத்திலே கொடுக் கிறார்கள்? கௌரவப் பிரச்சினையாக நினைத்துப் பார்க்கிறார்கள். புத்தி சாலிகளாக இருந்தால், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு முழு தீர்ப்பு வரும் வரையில் அவர்களை வேலை வாங்குகிறோம் என்று சொல்லி, வேலை வாங்கிக் கொண்டு, ஊதியத்தைக் கொடுத்திருக்கலாம்.

(பிற்பகல் 12:10)

ஆனால் என்ன சொன்னார்கள்? "அவர்கள் வேலையே செய்ய வேண்டாம். அப்படியிருந்தாலும், அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கப்படும்" என்றார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு முதல் தேதி சம்பளம் போவது தவறினாலும் தவறும், ஆனால் இப்படி வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கு மாதா மாதம் முதல் தேதியன்று சரியாகச் சம்பளம் அனுப்புகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இதுவரையில் சுமார் ஏழு கோடி ரூபாய் வரையில் செலவாகியிருக்கிறது. அந்த ஏழு கோடி ரூபாயில் எத்தனை தொழிற்சாலை களை ஆரம்பித்திருக்கலாம்? 4 ஆயிரம் 5 ஆயிரம் பேர்க்கு வேலை கொடுத் திருக்கலாம். இப்படி அரசாங்கப் பணத்தை விரயம் செய்கிறார்கள். நியாயம் வழங்கத் தெரியாதவர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே உள்ள சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்கூட இதைச் சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த ஆளுநர் அவர்கள் உரையின் மீது இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அங்கத்தினர் அவர்கள் பேசும்போது இடையிலே குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். முக்கியமாக அமைச் சர்கள், நக்சலைட்டுகள் என்ற கருத்துக்களை சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது ஒன்றும் இல்லை. அது முடிந்து போயிற்று.

## 3. (2) அரசின் தீர்மானம்.

*10—2—1982 ஆம் நாளுக்கான கேள்வி நேரம் கைவிடப்படுதல்.*

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

'மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு 10—2—1982 அன்று கேள்வி நேரம் கை விடப்படலாம்'

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை

'மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, 10—2—1982 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-11)

## இணைப்பு

ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

உணவு விடுதிகளில் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி அரசு பலமுறை ஆராய்ந்து வந்துள்ளது. உணவு விடுதி உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றுள்ளன.

தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான உணவு விடுதிகள் உள்ளன. இதில் நட்சத்திர ஓட்டல்கள் முதல் மிகச் சிறிய தேநீர் விடுதிகள் வரை அடங்கும். எல்லா உணவு விடுதிகளுக்கும் ஒரே மாதிரியான விலைவாசிகள் நிர்ணயிக்க ராவாாக. ஒவ்வொன்றிலும் இருக்கும் வசதிகள், செலவினங்கள் போன்ற



வற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் விலைகள் நிர்ணயிக்கின்றார்கள். இருந்தாலும் ஏழை, நடுத்தர வர்க்கத்தினர்கள் சிற்றுண்டி அருந்தும் விடுதி களிலாவது விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பது அரசின் நோக்கம்.

உணவு விடுதி உரிமையாளர்கள் சங்கம் எல்லாப் பொருட்களுக்கும் விலைகள் உயர்ந்து வருவதாலும், மற்ற பல செலவினங்கள் கூடிக்கொண்டே வருவதாலும் விலைகளை உயர்த்தாமல் இருக்க முடியவில்லை என்றும், அரசு அத்தியாவசியப் பொருட்களை குறிப்பிட்ட விலைக்குக் கொடுத்துக் கொண்டிருந்தால் இட்லி, காபி, தேநீர் போன்ற பொருட்களுக்கு மட்டும் விலைகளைக் குறைப்பதாகவும் கூறினார்கள். இந்த அடிப்படையில் 1980 செப்டம்பர் மாதம் 15-ம் நாள் முதல் கீழே கண்டவாறு விலைகளை நிர்ணயித்தார்கள் :

| வரிசை எண். | உணவுப்பண்டங்கள் | விலைகள் (பைசாவில்) 'ஏ' பிரிவு | 'பி' பிரிவு | 'சி' பிரிவு |
|---|---|---|---|---|
| 1 | இட்லி (2) | 35 | 30 | 30 |
| 2 | காபி (120 மி.லி.) | 50 | 45 | 40 |
| 3 | தேநீர் (12) மி.லி.) | 35 | 30 | 25 |

உணவு விடுதிகளை 'ஏ', 'பி', 'சி' என்று தரம் பிரிக்கும் பொறுப் பும் அவர்களிடமே விடப்பட்டது. அரசு அவர்களுக்கு வெளிச் சந்தை சர்க்கரை, மண்ணெண்ணெய், ரவை, மைதா, அரிசி போன்ற பொருட்களை குறைந்த விலையில் கொடுக்க முயன்றது. ஆனால் இந்தப் பொருட்களில் தட்டுப்பாடு வரும்பொழுது தொடர்ந்து ஓரே விலைக்குக் கொடுப்பது சிரமம். இதைக் காரணமாகக் கூறி உணவு விடுதி உரிமையாளர்கள் விலைகளை மறு படியும் உயர்த்தியுள்ளார்கள். விலைகளை உயர்த்தியுள்ளவர்களுக்கு அத்தியா வசியப் பொருட்கள் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக இன்றியமையாப் பொருட்களை மீண்டும் கொடுக்கத் தொடங்கினால் 1—1—1982 முதல் ஏற்றிய விலைகளை 5 காசு அளவில் குறைப்பதாகக் கூறியுள்ளார்கள். இது ஆராயப் பட்டு வருகிறது. அரசின் முடிவு விரைவில் எடுக்கப்படும்.

## இணைப்பு



விலைகளைக் கட்டுப்படுத்துவதுடன் பொருட்களின் தரமும், அளவும் சரியாக இருக்க வேண்டுமென்பதும் முக்கியம்.

தேவையென்றால் சட்டப்படி விலைகளை நிர்ணயிப்பதும் ஆராயப்படும். விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்தும், இடவசதியும், குறைந்த வட்டியில் கடன் கொடுத்தும் இட்லி, தயிர்சாதம், சாம்பார் சாதம் போன்ற உணவுப் பண்டங்களை மலிவு விலையில் விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

---

புதன்கிழமை, 1982 பிப்ரவரி 10

(தை 28, துன்மதி, திருவள்ளுவராண்டு-2013).

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 1. கவன ஈர்ப்பு.

#### கச்சாப்பட்டு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் கைத்தறித் தொழிலாளர்கள் படும் அவதிகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"கச்சாப்பட்டு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் தமிழ்நாட்டில் பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலாளர்கள் படும் அவதிகள் குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவரவர்களே, அறிக்கையில் தமிழ் நாட்டில் சுத்தப் பட்டு நூல் மொத்தத் தேவை ஆயிரம் டன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யும் சுத்தப் பட்டு நூல் 150 டன்தான் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், சீனாவிலிருந்து மைய அரசு மூலமாக இறக்குமதி செய்யப்பட இருக்கும் பட்டு நூலில் 89 டன் நமக்குக் கொடுப்பதாக இருக்கிறது. நம்முடைய உற்பத்தியையும், சீனாவிலிருந்து

---

@ 222-223 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கிடைக்கும் உதவியையும் சேர்த்துக் கணக்கிட்டால், 239 டன்தான் ஆகிறது. ஆகவே நமது மொத்தத் தேவையான 1000 டன்னில் நான்கில் ஒரு பங்குதான் கிடைக்கிறது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்த பிறகும், அந்தத் தொழிலில் நெருக்கடி தொடரும் நிலை இருக்கிறது. ஆகவே சுத்தப் பட்டு நூல் உற்பத்தியை தமிழ் நாட்டில் அதிகரிக்க அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பட்டு உற்பத்தி அமைச்சரவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சீனாவிலிருந்து வருவதில் 89 டன் நமக்குக் கிடைக்க இருக்கிறது. இருந்தாலும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால், மொத்தத் தேவைக்கு மிகக் குறைவாக மூலப்பொருள்கள் கிடைக்கும்போது, இடையில் இருக்கும் இடைத் தரகர்கள் அதிகமான விலைக்கு உயர்த்தி, அதன் காரணமாக பட்டுத் துணியின் விலையை அதிகமாக உயர்த்தும் நிலைமைகள் உண்டாகலாம். ஏற்கனவே 400 ரூபாய் என்பது 900 ரூபாய் என்று விற்கப்பட்டிருக்கிறது. அரசு இந்தச் சமயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருந்து செயலாற்ற வேண்டும். அதன் விலை கிலோ 450 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த விலை நிர்ணயித்திருக்கிறார்களோ, அதற்கு மிகாமல் இருக்க ஆவன செய்ய வேண்டும். இடைத்தரகர்கள் விலையை உயர்த்தி, தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் அவதியை உண்டாக்காத அளவிற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, பட்டு நூல் கிடைப்பதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு தட்டுப்பாட்டை மனதிலே கொண்டுதான் தமிழக அரசின் சார்பில் ஒரு தூதுக் குழு டெல்லி சென்று, இந்தப் பிரச்சினை குறித்து வலியுறுத்திய பிறகுதான், அவர்கள் வெளி நாட்டிலேயிருந்து கச்சாப் பட்டு நூலை வாங்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். வருகிற 250 டன்னில் 89 டன் கிடைக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் நூல் பஞ்சத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தனியார் கொள்ளை அடிக்காமல் இருக்க எச்சரிக்கையாகச் செய்ததனால்தான், இப்போது 89 டன் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து அத்தகைய நிலைமைகளைப் பரிசீலித்து, தேவையான நடவடிக்கைகளை அவ்வப்போது அரசு எடுக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## 2. தகவல் கோரல்

**கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்கள், கல்வி நிலையங்கள் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பாக நான் ஏறத்தாழ 10 ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். 28 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் தந்திருக்கிறேன். அவற்றிலே 8 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் திரும்ப வந்துவிட்டன. 16 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் திரும்ப வந்துவிட்டன. மற்றவை பற்றித் தெரியவில்லை. அந்த அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொருள் குறித்து நானும் ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அங்கே எடுத்துக்கொண்டு 2 நாட்கள் ஆகிவிட்டன. அது குறித்து துணைத் தலைவரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்று காலைதான் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது தலைவருக்குப் போயிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாங்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உறுப் இரண்டு நாட்களாகிறது. ஆனால் இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையிலே எடுத்துக்கொண்டுள்ளார்கள், அது போன்று இங்கும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தத் தேவையில்லை. இரண்டையும் ஒப்பிட்டுப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாங்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உறுப்பினர்கள். வாக்காளர்களின் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் இங்கே இருக்கிறோம். எங்கள் உரிமையைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பற்ற நிலையில் இங்கே இருந்து பயனில்லை என்பதையறிந்து, நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வெளிநடப்பு செய்தார்.)

[1982 பிப்ரவரி 10

### 3. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே சில கருத்துக்களை எடுத்து வைப்பதிலே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஆளுநர் அவர்கள் உரை, வருகின்ற ஆண்டிலே அரசு செய்ய இருக்கின்ற பல்வேறு காரியங்களைக் கோடிட்டுக் காட்டுகின்ற ஒன்றாக அமைவதுதான் மரபு, ஆனால் இந்த மரபு கொஞ்சம் பிறழ்ன்று, அதைத் தாண்டி நின்று, ஏற்கனவே நடந்திருக்கின்ற காரியங்களுக்கு ஒரு பரிசீலனையாக ஒரு ரெவ்யூவாக தனக்குத் தானே பாராட்டிக் கொள்கிற ஒன்றாக அமைந்திருக்கிறது. நல்லவைகள் நடைபெறுகிறபோது, அதிலும் ஒரு மாநில ஆட்சி அவற்றைச் செய்கின்றபோது, பாராட்ட மக்கள் முன்வருவார்கள். ஆனால் அப்படி ஒரு பாராட்டு இருக்குமோ, இருக்காதோ என்ற உரையிலே தாங்களாகவே பாராட்டுகளோடு வருவதென்பது கொஞ்சம் இயற்கைக்கு முரணானது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கடந்த காலத்திலே செய்திருக்கும் நல்ல காரியங்களை வரவேற்பதற்கு நான் எப்போதும் தயார், இந்திரா காங்கிரஸ் கட்சி வரவேற்றிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தவறுகள் என்று தெரிகிறபோது, அவற்றைச் சுட்டிக்காட்டுகிற பொறுப்பும், அவற்றைத் திருத்திக்கொள்ளாதபோது இடித்துச் சொல்லும் பொறுப்பும், அவற்றைத் தொடர்ந்து செய்யும்போது, கடுமையாகக் கண்டித்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிற பொறுப்பும் இந்த நாட்டிலே இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு நிச்சயமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்க்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசியது போல, ஆளுநர் அவர்கள் உரை ஒரு நல்ல துவக்கத்தோடு துவங்கியிருக்கிறது. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாருடைய நூற்றாண்டு விழா எடுக்கப்பட்டு, அதற்கான பாராட்டுரையோடு துவங்கியிருக்கிறது. தமிழர்கள் நிமிர்ந்து நிற்பதற்கு, இந்திய தேசியத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் அத்தனை பேரும் நிமிர்ந்து நிற்க, இந்திய விடுதலைப் போராட்டத்திலே மட்டுமல்ல, தேசியத்திலே தமிழர்களுக்குக் கொஞ்சமும் குறைவான பங்கு இருந்ததில்லை; இந்திய விடுதலைப்போரில் மற்றவர்களுக்குச் சமமாக நின்று போராடி, விடுதலைக்குத் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு எழுச்சிக் குரலாக அமைந்ததுதான் பாரதியாரின் குரல். அவர் வாழ்ந்த ஆண்டுகளிலே அல்லது மறைந்த சில ஆண்டுகளிலே அல்லது பல ஆண்டுகளிலே அவரை சாதிப் பெயர் வைத்து, பார்ப்பனக்கூலி என்று சிலர் சொல்லியிருந்தாலும், இன்றைக்கு



1982 பிப்ரவரி 10]

சாதி மற்றவை பற்றி மறந்து தமிழகத்தில் உள்ள அத்தனை பேரும் பாரதியின் பெயரைச் சொல்லி நிமிர வேண்டியிருக்கிறது. அதிலே மகிழ்ச்சியடைகிறேன் என்று சொல்லி அதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பாரதிபற்றி பேசுவதாலே குறுக்கிடுகிறேன். பார்ப்பனக் கவி என்று யாரும் சொல்லவில்லை. பாரதிதாசன்தான் அவர் பெருமையைச் சொன்னவன். மற்றவர்கள் மதிக்காதபோது, பாரதிதாசன் சொன்னான்.

(முற்பகல் 9-40)

திரு. க. இராமமூர்த்தி : பாரதிதாசன் சொன்னதற்காக நான் சொல்ல வில்லை. அந்தக் கருத்திலேயும் நான் சொல்லவில்லை. பாரதிதாசனிடம் மரியாதை வைத்திருப்பவன் நான். ஆனால் நான் சொன்னது கடந்த காலத் திலே இப்படி நடந்தது என்று கரும்புள்ளி வைப்பதற்காக நான் சொல்ல வில்லை. எப்படி எப்படி எல்லாம் தேசியக் கவி தேசிய நீரோட்டத்திற்குத் துணையாக இருந்திருக்கிறார் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவர் மறைந்து பல ஆண்டுகள் ஆன பிறகும் கூட, தேசிய நீரோட்டத்திற்கு இன்றைக்குக் கூட அவருடைய குரல் உறுதுணையாக இருந்துகொண்டிருக் கிறது. அவருக்கு விழா எடுத்ததை நான் பாராட்டுகிறேன். யாரை அதற்கு அழைத்தார்கள், யார், யார் எல்லாம் கலந்துகொண்டார்கள் என்பதல்ல பிரச்சினை. ஆனால் நூற்றாண்டு விழா நடைபெற்றதன் மூலம் இந்தியா முழுவதையும் அவரைப் பற்றியும் பேசவும், எழுதவும், அவருடைய பெயர் பெருமையடையவும் அதன் மூலம் தமிழர்கள் பெருமையடையவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நாங்கள் தானே "பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுத்தோம், வேறு யாரும் எடுக்கவில்லை" என்று பெருமை பேசும் போதுதான், எனக்குச் சங்கடம் வருகிறது. ஏனென்று சொன்னால், யார் அப்போது ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்கள்தான் விழாவை நடத்துவார் கள். இன்றைக்கு இந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது. ஆகவே இந்த ஆட்சி அவருக்கு விழா எடுத்திருக்கிறது. "நாங்கள் நடத்தினோம், நாங்கள் நடத்தி னோம்" என்று சொல்லும்போது, காங்கிரசாரா இப்போது ஆட்சியில் இருக்கி றார்கள் என்றுதான், எங்களைப் பொறுத்தவரையில், கேட்க வேண்டியவர் களாக இருக்கிறோம். பாரதிக்குப் பெருமை ஏற்படும் வகையில் நல்ல முறையில் விழா எடுத்ததற்காக நாம் எல்லோரும் பெருமைப்படுகிறோம். ஆனால் அதை யெல்லாம் தாண்டி பாரதியாரை வைத்து ஒரு சர்ச்சையை உருவாக்குவது பாரதிக்குச் செய்கின்ற நன்மையல்ல. தமிழுக்குச் செய்கின்ற நன்மையும் அல்ல. பாரதி பெயரால் விழா எடுத்து, பல கோடி ரூபாய் செலவிட்டு, அதை

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 10

அரசியல் ஆக்குவது தமிழுக்குப் பெருமையல்ல. நூற்றாண்டு விழா நடத்துகின்ற ஆட்சிக்கு, இந்த ஆண்டு முழுவதும் விழா நடத்துகின்ற இந்த ஆட்சிக்கு, நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு மேற்கொண்டுள்ள வறட்சிப் பணியைப் பொறுத்தவரையில், உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன். ஆரம்பத்திலேயே வறட்சியின் விளைவைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்தது குறித்து எனக்குப் பெருமையுண்டு. அதிகாரிகள் வேகமாகச் செயல்பட வேண்டுமென்ற உணர்வோடு செயல் போவதில்லை. ஆனால் வறட்சி நிவாரணப் பணிகள் என்று வந்தபோது, இரண்டு முறை அந்த மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்களுக்குச் சென்றிருந்தேன். வறட்சிப் பணி குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பொறுத்தவரையில், சங்கடம் ஒன்றுமில்லை. மாறாக எனக்கு பெருமையுண்டு. அதிகாரிகள் வேகமாக செயல்பட வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டார்கள். அதிகாரிகள் தவிர அதிகாரப் பற்றற்றவர்கள் அவர்களோடு இணைந்து செயல்படுகின்ற வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் உள்ளபடியே ஒரு குறையும் உண்டு. சாதாரணமாக இருந்தாலும், ஒப்பந்தங்கள் என்ற அளவிலே வரும்போது, எந்த ஆட்சியாக இருந்தாலும் நூற்றுக்கு 25 சதவிகித அளவுக்கு சிபாரிசு, அந்த அதிகாரி, இந்த அதிகாரி போன்றவர்களின் பங்குக்காக என்று போவது நடைமுறை வழக்கம். ஆனால் இப்போது என்ன நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், நியமனங்கள் என்ற பெயரால் அவசர அவசரமாக திட்டமே இல்லாமல் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை, அவசியம் ஏற்பட்டதால், பணத்தை எப்படியாவது செலவிட்டாக வேண்டும் என்கிற அளவில், மக்களுடைய கரங்களில் அது சென்று தவழ்வதன் மூலம் அவர்களுடைய வறட்சியை, சங்கடத்தைப் போக்க நடவடிக்கை எடுத்ததை நாம் கண்டோம். அதனால் 25 சதவிகித அளவுக்குப் பங்காகச் சென்று கொண்டிருந்தது 50 சதவிகித அளவுக்கு உயர்ந்திருப்பதாக, தோராயமாக எனக்குத் தோன்றுகிறது. இதிலே எந்தவிதமான கெடுபிடியும் காட்ட வேண்டாமென்று எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியிருந்தேன். அதாவது யாராவது சிபாரிசின் பேரில் வருகிறார்கள் என்றால், அவர்களைத் தவிர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். உள்ளபடியே வேலை நடக்குமென்று தெரிந்தால், விட்டுக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னேன். எங்களைப் பொறுத்தவரையில், எந்த சிபாரிசுக்கும் வரமாட்டோம். ஆனால் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சிக்காரர்கள் சிபாரிசுக்கு வருவார்கள். இப்போதும் அம்மாதிரி நானே வருவார்கள், அவ்வாறு வந்தால் தடுத்து நிறுத்த வேண்டாம் என்று சொன்னேன். இதன் விளைவு குறைந்த பட்சம் சில இடங்களில் 50 சதவிகித

வேலை நடைபெற்றிருக்கிறது. பல இடங்களில் அப்படி வேலை நடந்திருக்கலாம். ஆனால் சில இடங்களிலிருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. தண்ணீர் தொட்டிகளை கிராமங்களில் எவ்வளவு செலவு செய்து, லட்சக்கணக்கில் மதிப்பீடு போட்டு கட்டி முடிக்கிறார்கள். ஆளுநர் போய்த் திறக்கிறார். திறக்கும்போதே ஆளுநருடைய மனைவி மீதே தண்ணீர் கொட்டுகிறது. அதுபோல் செஞ்சியிலே கட்டி முடிக்கிறார்கள். அது இடிந்து விழுகிறது. எங்கள் பகுதியில் செஞ்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் வந்து பார்வையிடுகிறார். வேலைக்குப் பணம் கொடுத்தாகிவிட்டது. ஆனால் பாதை இன்னும் போடப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் கோபத்துடன் சத்தம் போடுகிறார். அவர் வாய்க்கு வந்தபடி திட்டி விட்டுச் செல்கிறார். பிறகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அது பற்றித் தெரிய வருகிறது. தொலைபேசியில் தாறுமாறாக இருவரும் ஒருவரையொருவர் திட்டித் தீர்க்கிறார்கள். அவரவர்களுக்குத் தெரிந்த அழகு மொழியில் திட்டித் தீர்க்கிறார்கள். அதற்குப் பிறகு பிரச்சினை மேலே வருகிறது. மேலே வந்த பிறகு அவர்களுக்குக் கொடுக்கிற புத்திமதி என்னவென்றால் எல்லாம் சரிதான் "என்னிடம் இதைப் பற்றி நேரில் சொல்லியிருக்கக் கூடாதா?" என்பதுதான். "போனில் பேசி திட்டினீர்களே, ஒருவேளை யாராவது ஒட்டுக் கேட்டிருந்தால் நிலைமை எவ்வளவு மோசமாக இருந்திருக்கும்" என்று புத்திமதி சொல்கிற நிலைமையைப் பார்க்கும்போதுதான் எனக்கு வேதனை ஏற்படுகிறது. வறட்சி என்கிற பெயரால், சிலர் தவறுகளைச் செய்யும்போது — உடந்தை என்று நான் சொல்ல மாட்டேன் — அந்தத் தவறுகள் ஆட்சியில் இருப்பவர்களின் கவனத்திற்கு வரும்போது அதைத் தட்டிக் கேட்க வேண்டாமா? சுட்டிக் காட்ட வேண்டாமா? தடுத்து நிறுத்தியிருக்க வேண்டாமா? இப்போதும் சொல்கிறேன். வறட்சிக்காக எத்தனை கோடிக்கணக்கில் செலவிட்டிருக்கிறோம். குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரியைப் போடவேண்டும். அதிகாரியுடன் அதிகாரப் பற்றற்ற சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர் இப்படி யாரையாவது போடவேண்டும். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகள் எல்லாம் சரிவர நடைபெற்றிருக்கின்றனவா என்று பார்க்கச் சொல்லுங்கள். எந்த அளவுக்குத் தவறு நடைபெற்றிருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். இனிமேல் இப்படித் தவறுகள் நடைபெறக் கூடாது என்கிற அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டாமா? எப்படியும் செய்யலாம், எதையும் செய்யலாம் என்கிற முறையிலே ஆணவத்துடன் ஆட்சியிலே இருப்பவர்கள் பணத்தை எப்படியும் கொள்ளையடிக்கலாம் என்று எண்ணத் [illegible]

இந்த அரசு அப்படிச் செய்வதில் ஈடுபட்டது என்று சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் வறட்சிப் பணி பெயரால் நடைபெற அனுமதிப்பது நல்லதல்ல என்பதை உணர்த்துவதற்காகத்தான் அதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** வறட்சி நிவாரணம் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். நான் அப்போதெல்லாம் குறுக்கிடு செய்யவில்லை என்பது உண்மை. ஆனால் இங்கே இப்போது பேசிக் கொண்டிருக்கும் மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குப் பதிலாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்வதன் மூலம் என்னுடைய நேரம் போகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இது சம்பந்தமான குழுக்களைப் போடும்போது, இந்த அவையிலேயும், அந்த அவையிலேயும் இதுபற்றித் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 11 தரம் மாவட்டக் குழுக் கூட்டம் நடந்திருக்கிறது. 11 முறை நடந்தும் மாண்புமிகு உறுப்பினர் 2 முறைதான் சென்று கலந்திருக்கிறார். அதுமட்டுமல்ல குழுக்களைப் போடும்போது தெளிவாகச் சொன்னேன். குழுக்களைப் போட்ட பிறகு 4—3—1981-ல் அதுபற்றி அறிவித்தேன். அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு கூட மீண்டும் இங்கே அதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். நான் பேசிய பேச்சு அப்படியே இருக்கிறது. "குழுக்களை நாங்கள் போட்டிருக்கிறோம். இங்கே இருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாவட்டங்களிலே எங்களைப் போடவில்லையென்று சொன்னால் என்னிடத்தில் சொல்லுங்கள், எங்கெங்கே பிரதிநிதிகள் இல்லையென்றாலும் கூட அதை இங்கே என்னிடத்தில் சொல்லுங்கள். உடனே உங்களைப் போடத் தயாராக இருக்கிறேன்" என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன்.

(முற்பகல் 9—50)

அதுமட்டுமல்ல நான் பேசுகின்றபோது "உங்களுக்கு ஓட்டுக்களைப் போடுவதன் நோக்கம் பேரவையிலும், மேலவையிலும் பேசுவதற்கு மட்டுமே என்பதல்ல, அங்கே என்ன நடக்கிறது என்பதை ஆராய வேண்டும், அதற்காகவும் போட்டிருக்கிறார்கள்" என்பதையும் தெரிவித்திருக்கிறேன். தவறு நடக்கிற





போது, தவறை நடக்க விட்டு அதற்குப் பிறகு இங்கே வந்து குறை கூறுவது என்பது ஒரு முறை. மற்றொரு முறை, தவறு நடக்கிறபோது தவறு நடக்காமல் பாதுகாத்துக் கொள்வது. இவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன மேற்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். "எங்கேயாவது தவறு நடந்திருந்தால், உடனே எங்களுக்கு நேரடியாகச் சொல்லுங்கள், தொலைபேசி மூலம் சொல்லுங்கள், கடிதம் மூலமாகச் சொல்லுங்கள். அதற்குப் பிறகும் அந்தக் காரியம் சீர்பெறாவிட்டால், மேடையிலே பேசுங்கள்" என்று நான் சொல்லியிருக்கிறேன். அப்படி நான் சொன்னதற்குப் பிறகு எங்கெங்கே தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று என்னிடத்திலே சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் குறைவு. இன்னமும் நான் இந்த மேலவையிலே உள்ள உறுப்பினர்களுக்கும், பேரவையிலே உள்ள உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தருகிறேன். எந்தெந்த இடங்களிலே தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று எழுத்து மூலமாகத் தகவல் கொடுத்தால் அதன்மீது விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. அப்போதே சொல்லியிருந்தால், இந்தக் குறைபாடுகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஏனோ சொல்வதற்கு நீங்கள் தயாராக இல்லை. நீங்கள் கொடுத்தால், அவற்றைக் கவனித்து சீர்திருத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். குழுக்கூட்டங்களைப் பார்க்கும்போது, முதல் கூட்டத்திலே பேசும்போது சொல்லியிருக்கிறார்கள் 'சரியாகச் நடக்கவில்லை' என்று. எங்களுடைய தொகுதியில் இன்னின்ன வேலைகள் நடக்க வேண்டும் என்று இரண்டாவது கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது கூட்டத்திலே வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்றும் இன்னும் வேகமாக நடைபெற வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ...தைச் சார்ந்த உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் பேசியதை எல்லாம் படித்துக்காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நெடிய விளக்கம் தந்திருக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் இப்போது குறைகளை மேலெழுந்தவாரியாக மட்டும்தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதால், எல்லாவற்றையும் சொல்கிறேன். என்ன நடந்ததென்றால், இந்த அபிவிருத்தி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை வளர்ந்தது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் யார்யாருக்குச் சிபாரிசு செய்கிறார்கள் என்ற போட்டிதான் அங்கே இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளே புகுந்து பார்த்தால் தெரியும். ஆளுங்கட்சிக்குள்

ளேயே போட்டி வந்ததால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லியதுபோல, காஞ்சிபுரத்திலே நடைபெற்ற வறட்சி நிவாரண ஊழல் வெளியே வந்தது. நாங்கள் அந்தக் கூட்டங்களுக்குப் போவது என்பது எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, நாங்கள் இருப்பதே அந்தக் கூட்டங்கள் நடைபெறத் தடையாக உள்ளது என்ற அளவுக்கு அங்கே நிலைமைகள் ஏற்பட்டன. குறைந்த பட்சம் அதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்றுதான் போகவில்லை. கலெக்டரிடம் " நாங்கள் வருவதே உங்களுக்குத் தடையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, வராமல் இருக்கிறேன் " என்று சொன்னேன். ஏனென்றால், நான் ஒன்றைச் சொன்னால், அது வேண்டாம் என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ரகசியமாகச் சென்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் மீண்டும் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். இதுவரையிலும் எந்த அமைச்சரும் இந்த அளவுக்கு மாவட்டக் கமிட்டியைக் கூட்டிப் பேசியதில்லை. நான் வருகின்றபோது, ' வருகின்றேன் ' என்று முன்னறிவிப்பு செய்து, அந்தக் குழுவிலே உள்ள அத்தனை பேருக்கும் தெரிவிக்கிறேன். வேலைகளைக் கொடுப்பதில் யார் சிபார்சு செய்தாலும் கொடுக்கக்கூடாது என்று முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். எல்லாக் கட்சி உறுப்பினர்களையும வைத்து இவ்வாறு சொல்லியிருக்கிறேன். அப்படியே சிபாரிசுக்குக் கொடுத்துவிட்டு வேலை நடக்காமல் போனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் அதற்குப் பூரண பொறுப்பு என்றும் சொல்லியிருக்கிறேன். இங்கே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய பொறுப்பும் இதில் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறேன். வேலை ஒழுங்காக நடக்காவிட்டாலும், தவறாக நடந்திருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளின் பொறுப்போடு இங்கே இருக்கும் உறுப்பினர்களின் பொறுப்பும் இருக்கிறது என்றும் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மேடையிலே பேசினால் கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கும். பேசியது தகுதியுள்ள மாவட்டக் கமிட்டியிலே. எல்லாக் கட்சி தலைவர்களையும் வைத்துப் பேசியிருக்கிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி :** நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறேன். மற்ற அமைச்சர்களிடமும் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறேன். அதிலே எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. அமைச்சர் அவர்களிடத்திலே தனிப்பட்ட முறையிலே மரியாதை வைத்திருக்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்தால்தான், அமைச்சர்கள் வருகிறபோது, அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலே, அது தலைநகரங்களிலேயாக இருந்தாலும் அல்லது மற்ற இடங்களிலேயாக இருந்தாலும், அந்தக் கூட்டங்களிலே கலந்துகொண்டால்தான், அல்லது அமைச்சர்கள் எந்தப் பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்குச் சென்றால்தான் நாம் சொல்லும் வேலைகள் நடக்கும் என்ற நிலையை ஏற்க முடியாது. எனக்கு ஒன்றும் சங்கடம் இல்லை. அமைச்சர்களோடு போவதிலே எந்தவிதமான அவமரியாதையும் இல்லை. அப்படிப் போவதிலே பெருமைப்படுகிறேன். போவதற்கு மகிழ்ச்சியடைவேன். ஆனால், அமைச்சர்கள் நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக்கொண்ட பிறகு, என்னோடு கூட்டங்களிலே கலந்துகொள்ள வேண்டாம் என்று தவிர்க்கும் நிலைமைகள் ஏற்பட்ட பிறகுதான், நான் அவர்களது நிகழ்ச்சிகளுக்குப் போகாமல் இருந்திருக்கிறேன். எங்களுடைய பகுதிகளிலே நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது, கண்டிப்பாக இராமமூர்த்தி பெயரைப் போடுங்கள், அவர் வராவிட்டாலும் நான் அவரை அழைத்து வருகின்றேன் என்று அமைச்சர் எஸ்.டி.எஸ். பல முறை சொல்லியிருக்கிறார்கள். அது வேறு. வறட்சி நிவாரணப் பணிகளிலே சிலவற்றை நான் சொல்கிறேன், அப்படிச் சொல்லும்போது அவைகள் மிகவும் அவசியமானவை, தேவைதான் என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு அது தேவையில்லை என்று விடுபட்டுப்போகிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் தலைமையை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நீங்கள் கொடுத்திருப்பதால், நாங்கள் அவர்களிடத்தில் கெஞ்ச வேண்டுமா? அதனால்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் மிகவும் தெளிவாகச் சொன்னேன், " இந்த வேலை, அந்த வேலை, நான் சொன்னது, சொல்லாதது என்பதல்ல எந்த வேலையையாவது செய்யுங்கள். எந்த வேலையைச் செய்தாலும் என்னுடைய பகுதியில்தான் செய்யப் போகின்றீர்கள். அந்த வேலையைப் பயனுள்ள வகையிலே செய்யுங்கள், அப்படிச் செய்தால் நான் தடையாக நிற்கவில்லை " என்று சொன்னேன். ஆனால், அந்தப் பணிகள் எப்படி நடைபெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி அதிலே மற்ற விவரங்களுக்கு நான் போக விரும்பவில்லை.

ஆளுநர் அவர்கள் உரையிலே பங்கீட்டு முறைபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விலைவாசி உயரும்போது, நியாய விலைக் கடைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன என்பதை நாம் கண்டிருக்கிறோம். இப்போது பங்கீட்டுக் கடைகள் எவ்வளவு நியாயமான பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன என்பதும் நமக்குத் தெரியும். சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், இங்கே நடக்கும் நிகழ்ச்சிகள் எப்படி அமைச்சர்களுக்குத் தெரியாமலிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. பாமாயில் கொடுப்பதைப் பொறுத்தவரையில், கடையிலே 'இன்றைக்குப் பாமாயில் கொடுக்கிறோம்' என்று அறிவித்தால், அன்றைக்கு அந்தக் கடையிலே வேறு யாராவது பில் போடுகிறார்களா என்று விசாரியுங்கள். எல்லா விற்பனையையும் நிறுத்திவிட்டு பாமாயில் மட்டும்தான் அன்று விற்பனை என்று சொன்னால், சென்னையிலே இருக்கும் நடுத்தர வர்க்கத்தினர், அதுவும் நடுத்தர வர்க்கத்தினரில் பெரும்பாலும் பெண்கள்தான், இந்தக் கடைகளுக்குச் சென்று சாமான்களை வாங்குகிறார்கள். அவர்கள் பாமாயில் வாங்குவதற்குத் தனியாக ஒருநாள், மற்ற பொருள்களை வாங்க தனியாக இன்னொருநாள் என்று வைத்தால் என்னவாகும்? இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? இல்லையா? அதைப் போலவே தான் கெரோசின். வாரத்திலே இரண்டு நாள் தான் போடுகிறார்கள். அது பலருக்குக் கிடைக்கவில்லை. 1 லிட்டர் 1-85 ரூபாய் என்று நினைக்கிறேன். கெரோசின் பலருக்குக் கிடைப்ப

(மு.பகல் 10.00)

தில்லை என்பது மட்டுமல்ல, இரண்டு நாட்களில் வழங்கப்படும் என்று சொல்லி விட்டு அந்த நாட்களில் கடைக்குப் போனால் இன்றில்லை நாளை வா, அப்புறம் வா என்று அலைக் கழிக்கிற நிலைதான் இருக்கிறது. ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு கெரோசின் என்றும் ஒவ்வொரு கடைக்கும் இவ்வளவு ரேஷன் அட்டைகள் என்றும் நிர்ணயித்த பிறகு, ரேஷன் வழங்கப்படாததற்கு என்ன காரணம்? ரேஷன் கடைகளில்தான் கெரோசின் கிடைக்கவில்லையே தவிர, வெளியே தெருக்களில் கை வண்டிகளில் லிட்டர் ரூ. 2.50-க்கு தாராளமாகக் கிடைக்கிறது என்றால், கடைகளுக்கு அனுப்பப்படும் கெரோசின் எங்கே போகிறது, எப்படிப் போகிறது என்று பார்க்க வேண்டாமா? இதனால் நடுத்தர வர்க்கம் பாதிக்கப்படவில்லையா? நியாய விலைக் கடைகள் அதிகமான அளவில் திறக்கப்பட்டுள்ளன என்றும், அவைகள் எல்லாம் சிறப்பாகப் பணியாற்றுகின்றன என்றும் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. பாதிக்கப்படுகிற நடுத்தர வர்க்கத்தினருக்கு என்ன வழி செய்திருக்கிறார்கள்? விலைவாசி உயர்வைத் தாங்க முடியாமல் தவிப்போருக்குத் துணை புரிவதற்



குத் தானே நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறீர்கள். அவைகள் இன்றையதினம் உண்மையிலேயே நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவியாக இருக்கின்றனவா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் ராமலிங்கம் அவர்கள் மத்திய அரசு நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டாமா? அவர்களுக்குத் துணை நிற்க வேண்டாமா, அவர்கள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டாமா என்றெல்லாம் கேட்டார்கள். அதன் விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் அதைக் குறித்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இங்கே உள்ள மாநில அரசு அவர்களுக்காக என்ன செய்திருக்கிறது? கூட்டுறவுத் துறையில் செயல்படும் நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல் முழுவதையும் கைத்தறி நெசவாளர்களுக்கே கொடுப்பதை எது தடை செய்கிறது? ஏன் அப்படிப்பட்ட நடவடிக்கையை மாநில அரசு எடுக்கவில்லை? அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், அது ஆயிரமாயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கும் பயன் தந்திருக்குமல்லவா? அப்படி நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும்போது, அதை நீங்கள் செய்யாமல் மத்திய அரசு இதைச் செய்யவில்லையே, அதைச் செய்யவில்லையே என்று வாய்க்கு வாய் பேசிக் கொண்டிருப்பதற்கு இது துணையாக அமைகிறதே தவிர, வேறொன்றுமில்லை. மத்திய அரசைக் குறைகூறுவதற்கு முன் நமது வாய்ப்புக்குள் செய்யக் கூடியவற்றில் நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அடுத்து, ஆளுநர் உரையில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "மத்திய அரசிடம் நாம் இவ்வளவு அரிசியைக் கேட்டோம். அவர்கள் குறைவாகத் தான் கொடுத்தார்கள், நாம் கேட்டதைக் கொடுக்கவில்லை, குறைத்தே கொடுத்திருக்கிறார்கள், என்றாலும் நாம் நிலைமையைச் சமாளித்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன் பொருள் என்ன? "கேட்ட அளவுக்கு மத்திய அரசு கொடுக்கவில்லை என்றாலும், நாங்கள் நிலைமையைச் சமாளித்தோம்" என்றால், அரிசி தேவைக்கு அதிகமாகக் கேட்டார்கள் என்றுதானே பொருள். அரிசி என்பது விளைகிற பொருளே அன்றி வெளியில் செய்யப்படும் பொருளல்லவே? கேட்டுக் கொடுக்கவில்லை என்று குறை சொல்லும்போது தேவைக்கு அதிகமாகக் கேட்டார்கள், அது கிடைக்கவில்லை என்றுதானே பொருள்? அதிகமான அளவுக்கு கையிருப்பில் வைத்துக் கொண்டு பேரம் பேசுவது என்பது சரியான நடவடிக்கையாக இருக்காதல்லவா, எதற்காக கிடைக்கும்போதெல்லாம் மத்திய அரசைக் குற்றஞ்சாட்டுவதற்கு பயன்படுத்த முனைவது நல்ல செயல் முறையாக இருக்காது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முறையாகச் செயல்படுத்தப் படும் நல்ல திட்டம், முன்னோடித் திட்டம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நல்ல திட்டம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் என்ன நிலைமை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? நான் ஏற்கெனவே வறட்சி நிவாரணத் திட்டங்களைக் குறித்து என்னென்ன சொன்னேனோ, அவை அனைத்தும் இந்தத் தன்னிறைவுத் திட்டங்களுக்கும் பொருந்தும். உள்ளே நுழைந்து குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்க வரவில்லை. ஆனால், நம்முடைய செயல்களையெல்லாம் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற உணர்வை ஏற்படுத்தினால்தான், இத்தகைய திட்டங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற முடியும் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நல்ல திட்டங்களை அறிவிப்பது மட்டும் போதாது. நல்ல திட்டங்கள் செம்மையான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டுமே தவிர, நல்ல திட்டங்கள் என்ற பெயரால் பலர் கொள்ளை அடிக்கக் காரணமாக அந்தத் திட்டங்கள் அமைந்துவிடுமானால், பொது வாழ்க்கையில் மக்களுக்கு நம்பிக்கையே இல்லாத சூழ்நிலையைத்தான் அது உருவாக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிக் குறைகளைச் சொன்னால் எதற்காக ஆட்சியில் இருப்பவர்களுக்கு 'அலர்ஜி' ஏற்பட வேண்டும்? ஒரு ரேவ்யூவுக்கே உங்களை ஆட்படுத்திக்கொள்ள விரும்பவில்லை என்றால், என்ன அர்த்தம்? உங்களை யாராவது விமர்சனம் செய்தாலே அது தவறு என்று கருதுகிறீர்கள். இந்த ஆட்சி எந்த வகையான விமர்சனத்திற்கும் உட்படாமல் இயங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவதால்தான் நாங்கள் எதைச் சொன்னாலும், உங்களுக்குக் கோபம் வருகிறது. அப்படிப்பட்ட கோபம் எங்கள் மீது அல்லது எங்கள் கட்சி மீது வந்தால்கூட, பரவாயில்லை. அதற்கு மாறாக எங்களுக்கு வேண்டியவர்கள் யார், எங்களுடைய உறவினர்கள் யார் என்று பார்த்து, அவர்கள்மீது நீங்கள் உங்கள் கோபத்தைக் காட்டி அவர்களுக்குத் தொல்லை தந்தால், உடனே இவர்கள் நம் வீட்டுக்கு முன்னே வந்து நிற்பார்கள் என்று செயல்படுவது ஜனநாயகத்திற்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இல்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் போவதாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிற இது போன்ற திட்டங்களை முறையாக அமுல்படுத்த, முறையாகச் செயல்படுத்த [illegible] என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குச் சாதக





மாக, அவர்களுக்கு நன்மை செய்வதற்காக என்று சொல்லித்தான் விவசாயப் பொருள் களுக்கான விற்பனைக் கூடங்கள் தொடங்கப்பட்டன. ஆனால், இன்றையதினம் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பிரதி நிதித்துவம் இல்லாமல் அதிகாரிகளே அத்தகைய விற்பனைக் கூடங் களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற நிலைமை அந்த அமைப்புகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்ற நிலைமையை இங்கேயும் கொண்டுவர வேண்டாம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசை இன்னொரு வகையிலும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதாவது கடந்த 19-1-1982 அன்று இந்த மாநிலத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் எதி ரொலியாக இம்மாநிலத்திலும் வேலை நிறுத்த நடவடிக்கைகள், தேசத்திற் கும், தேசியத்திற்கும், நாட்டு நலனுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டபோது, அதைத் தடுத்து இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும், அவை களுக்கு உற்ற துணையாக இருந்த காவல் துறையினரையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு இந்த ஆட்சி தைரிய மான நடவடிக்கைகளில் ஈடுபட்டதை நான் வரவேற்று பாராட்டு தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இருப்ப தால், ஒன்றைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இம்முறை ஆளுநர் உரையைக் கேட்டபோது, எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு கவர்னரும் தேவை தானா" என்று பலமுறை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அதே அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அதே ஆளுநரை வைத்து அவையில் உரையைப் படிக்க வேண்டிய நிலை வந்தது. அப்போது அண்ணா அவர்கள் பெருமிதத்தோடு இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் இன்றைய தினம் இந்த ஆளுநர் பதவி என்பது எதற்கும் லாயக்கற்ற ஒரு பதவி என்ற எண்ணத்தை நாட்டு மக்கள் மத்தியில் உருவாக்கவோ என்னவோ, இந்த அவையில் ஆளுநரை வைத்தே தவறான தகவல்கள் இந்த நாட்டு மக்களுக்கும் அவை உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய காட்சியை இந்த ஆட்சியில்தான் நான் பார்க்க முடிந்தது. ஆளுநர் உரையே ஒரு பொய்யை, மன்னிக்க வேண்டும் உண்மைக்கு முரணான, உண்மைக்குப் புறம்பான, உண்மையல்லாத ஒரு செய்தியைத் தாங்கி வந்திருக்கிறது., அதா வது நில உச்ச வரம்புச் சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது ஒரு கருத்தைக்

குறிப்பிட்டிருக்கிறார்கள். "... நமது எண்ணத்திற்கு மாறாக இச்சட்ட வரைவுக்கு குடியரசுத் தலைவரின் இசைவு தரப்படவில்லை. அதற்கான காரணங்கள் மாநில அரசிற்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆளுநரால் அறிவிக்கப்பட்ட தேதி 1—2—1982.

இந்த அவையின் மூலம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். "30 ஆம் தேதிதான் மத்திய அரசிடமிருந்து காரணங்களைத் தாங்கி வந்த கடிதம் வந்தது. தபாலைப் பிரிக்கவே நேரம் ஆயிற்று. 31 ஆம் தேதி விடுமுறையாகப் போய்விட்டது. 1 ஆம் தேதி ஆளுநர் நேரடியாக அவைக்கு வந்து உரையைப் படிக்கத் தொடங்கிவிட்டார். எனவே இதைப்பற்றி அவருக்குத் தெரிவிக்க நேரம் இல்லையே" என்று சொல்லுவார்களானால், நான் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னால் உரையில் அச்சடிக்கப்படாத விஷயங்களை ஆளுநரை விட்டுச் சேர்த்துப் படித்ததில்லையா? விடுமுறை நாட்களில் கூட துண்டுப் பகுதிகளாக அச்சடித்து சில வாக்கியங்களை உரையோடு ஒட்டியதில்லையா? அப்படி எல்லாம் நிலைமை இருக்கும்போது, ஆளுநர் அவர்களை வைத்தே இப்படி உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தன்னுடைய உரையின் மூலம் சொல்ல வைத்த பெருமை இந்த ஆட்சியைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் பேசும் போது உண்மைக்கு மாறான தகவல்களை ஆளுநர் உரையில் சொல்லியதாகச் சொல்கிறார்கள். குடியரசுத் தலைவர் அந்தச் சட்டத்திற்கு அனுமதி தரவில்லை என்று சொல்லியிருக்கிறோம். அப்படிச் சொல்லியதற்கு மாறாகக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தந்திருந்தால், அப்போதுதான் அது உண்மைக்கு மாறான தகவலாகச் சொல்ல முடியும். மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட முதல் கடிதத்தில் எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை. எனவே தான் காரணங்கள் சொல்லப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஒப்புதல் தரவில்லை என்பதுதான் உண்மை. முதல் கடிதத்திலும் சரி, இரண்டாவது கடிதத்திலும் சரி, காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை.

(முற்பகல் 10-10)

திரு. க. இராமமூர்த்தி: ஒப்புதல் தரவில்லை என்பதை இந்த நாட்டு மக்களும், நாட்டிலே இருக்கின்ற சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களும் ஆளுநர் சொல்லித்தான் அறிந்துகொள்ள வேண்டிய அளவிற்குக்





குழந்தைகளாக இருக்கிறார்கள் என்பதல்ல. அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். குடியரசுத் தலைவர் ஒப்புதல் தரவில்லை என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒன்றுதான். ஆகவே அதை ஆளுநர் சொல்லி நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அரசு மிகத் திறமையாகச் செய்ய முனைந்த பிரச்சாரம் என்னவென்றால், மத்திய அரசு அதற்கான காரணங்களை மாநில அரசுக்கு அறிவிக்கவில்லை என்பதுதான். இதன் மூலமாக வாக்கியங்களுக்கு இடையே தொக்கி நிற்கின்ற அர்த்தம் தெரிகிறது.

[reading in between the lines]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வாக்கியங்களுக்கு இடையே உள்ள இடத்தை உடனே பூர்த்தி செய்துவிட்டோமே?

திரு. க. இராமமூர்த்தி : அதற்கான காரணம் வரவில்லை என்பதை மிகத் திறமையாக பிப்ரவரி 1 ஆம் நாளே ஆளுநரைக் கொண்டு படிக்க வைத்து விட்டு, அந்த உரையை இந்தியா முழுவதும் உள்ள பத்திரிகைகளில் வெளியிடச் செய்து விட்டு, பிறகு இரண்டு நாள் அவகாசம் எடுத்துக் கொண்டு பிறகு பெருந்தன்மையோடு பதில் 30 ஆம் தேதி வந்தது என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி எங்களுக்கிருக்கின்ற திறமை வேறு யாருக்கு வரும் என்று திறமையைக் காட்டியிருக்கிறார்களேத் தவிர வேறு ஒன்றுமில்லை.

இந்த அவசரச் சட்டத்தைப் பொறுத்த வரையில், அவகாசம் வரும் போது பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நிலச் சீர்திருத்தச் சட்டம் என்ற பெயராலே வந்திருக்கிற இந்த அவசரச் சட்டம் தவறுகள் மலிந்த சட்டம் என்பதுதான் என்னுடைய தாப்பிலேயிருந்து சொல்லுகின்ற கருத்தாகும். அதிலே இன்னும் தெளிவாக இருக்கிறோம். நிலப்பிரபுக்கள், மிராசுதார்கள் என்று சொல்லி இடையிலே திரு. மூப்பனாரோடு இணைந்து அவருக்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது போலவும், அவர்தான் இன்றைக்குத் தமிழகத்திலேயே மிகப் பெரிய நிலச்சுவாந்தார் என்பதைப் போலவும், அதைத் தடுக்க இந்த ஆட்சி அரிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பதைப் போலவும் ஒரு பிரமையை அகில இந்திய அளவிலே உருவாக்குகிற விளையாட்டு இது. பெருந்தலைவர் காமராஜுக்குப் பிறகு, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து மத்தியிலே, டில்லியிலே வளர்ந்து வருகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட பிரச்சாரத்திற்கு வித்திடுவது இவர்களுக்கு நல்ல செயல்முறை என்று நினைத்துச் செயல்படுகிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. மூப்பனாரிடத்திலே அவர் கட்சியைச் சேர்ந்த திரு. இராம மூர்த்தி அவர்களுக்கு எவ்வளவு மதிப்பும், மரியாதையும் இருக்கிறதோ அதற்குக் குறையாமல் எனக்கும் அவர் மீது மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இன்னும் அதிகமாக வேண்டுமானால் இருக்கிறது, ஆனால் குறைய வில்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். அதை திரு. இராம மூர்த்தி அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். திரு. மூப்பனார் மட்டுமே இன்றைக்கு தமிழகத்திலே பெரிய பணக்காரர் என்று நாங்கள் சொல்லவில்லை. சட்டத்திலே கூட அதை நாங்கள் சொல்லவில்லை. தமிழகத்திலே பலர் ஏமாற்றியிருக்கிறார்கள். ஏமாற்றியிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, இந்த அவையிலும் சரி, சட்டமன்றப் பேரவையிலும் சரி யார் பெயரையும் நான் சொன்னதில்லை. வெளியே மேடைகளிலே கூட பெயரைச் சொன்னதில்லை. நிலச்சீர்திருத்தம்பற்றி பலமுறை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது கூட, யார் பெயரையும் குறிப்பிடவில்லை. தனிப்பட்ட முறையில் எல்லோரிடத்திலும் மரியாதையும், மதிப்பும் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் யாருக்காகவும் இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. பெருந்தலைவர் காமராஜ் அடிச்சுவட்டிலே திரு. மூப்பனார் வளர்ந்து வருகிறார் என்றால், எனக்கு இரட்டைச் சந்தோஷம். ஒன்று அவர் தமிழன் என்பதால், இரண்டு அவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால். அவர் எனக்கு நண்பரும் கூட.

திரு. க. இராமமூர்த்தி : பாசத்திலும், மரியாதையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு நான் போட்டியிடவில்லை. என்னைவிட அதிக மான மரியாதை அவருக்கு உண்டு. ஆனால் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் திரு. மூப்பனார் மீது என்னைவிட அதிகமான உரிமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறிக்கூட யார் பெயரையும் சொன்னதில்லை என்பதை ஏற்பது என்றாலும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொல்லுவதை அவரால் தடுக்க முடிந்ததா ? அவருக்குத் துணையாக இருக்கின்ற அமைச்சர்கள் வெளியேயும், மற்ற இடங்களிலேயும் பேசுவதைத் தடுக்க முடிந்ததா ? அவர் ஒழுங் கானவர் என்பதை அறிந்து பெருமைப்படுகிறேன். இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே திரு. மூப்பனாரிடம் நில உச்ச வரம்புக்கு அதிகமாக எவ்வளவு நிலம் இருக்கக் கூடும் என்று தெரிந்துகொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்கிறேன். இந்தச் சட்டத்தின் விளைவாக திரு. மூப்பனாரிடமிருந்து எவ்வளவு நிலத்தைக் கைப்பற்ற முடியும் என்று கணக்கு எடுத்ததுண்டா ? ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படை-





யிலே முடியவில்லை, ஆகவே புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று புள்ளி விவரங்களைத் தந்ததுண்டா ? குறைந்தபட்சம் 1961 ஆம் ஆண்டு திரு. காமராஜ் காலத்தில் கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தின் அடிப்படையில் மூப்பனார் மாற்றிய நிலங்கள் எவ்வளவு என்ற விவரங்களை இந்த அவைக்குத் தந்ததுண்டா ? இல்லையே.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : திரு. மூப்பனாரிடத்திலே எவ்வளவு நிலம் இருக்கிறதென்று நாங்கள் ஆராயவில்லை. அதை நாங்கள் செய்யவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதிலிருந்தே தனிப்பட்டவர்களுடைய நிலத்தைப்பற்றி ஆராயவில்லை என்பதையும், அவருக்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவரவில்லை என்பதையும் அவரே சொல்லிவிட்டார்.

திரு. க. இராமமூர்த்தி : திரு மூப்பனாரிடம் எவ்வளவு உபரி நிலம் இருக்கிறதென்று ஆராயவில்லை என்பதல்ல, ஆராய்வதற்கு ஒன்றுமே இல்லை என்பதை ஒப்புக்கொள்ளக் கூடிய தைரியம் அரசுக்கு இல்லை. அதனாலே தான் சொல்கிறேன் இந்தச் சட்ட முன்வடிவு தூரப் பார்வையற்ற சட்டமுன் வடிவு It is a short-sighted enactment விளம்பரத்திற்காகவே, பிரச்சாரத்திற்காகவே கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு இது. ஏற்கெனவே உள்ள 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்திலே உள்ள 86 முதல் 89 பிரிவுகளின்படி, உபரியாக இருக்கின்ற நிலத்தை மறைப்பவர்கள் மீது, அதைத் தவறாக மாற்றுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டப்படியான வழிவகை இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், அதற்குப் பிறகு வந்த தி. மு. க. ஆட்சியும் எடுக்கவில்லையென்றாலும், இந்த அரசு எடுத்ததுண்டா? நிலங்களை ஏழைகளுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி ஏழைப்பங்காளனாக, கறை படியாத கைகள் என்று சொல்லக் கூடிய நீங்கள், தனிப்பட்டவர்களின் வசதிக்காக ஆட்சியில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தமாட்டோம் என்று சொன்ன உத்தமர்களாகிய நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே எவ்வளவு நிலம் யார் யாரிடம் இருக்கிறது என்ற தகவலையாவது தந்ததுண்டா ? இல்லையே. உங்களை ஆதரிக்கின்ற பத்திரிகைகள் நேற்று கூட, "மூப்பனாரிடம் எவ்வளவு நிலம் ?—சட்டமன்றத்திலே விவாதம்" என்று எழுதிற்றே ! உங்களால் தடுக்க முடிந்ததா ? ஆகவே இந்தச் சட்ட முன்வடிவு குறைகள் மலிந்த சட்ட முன் வடிவு.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் வெளியே செல்ல எழுந்தபோது மாண்புமிகு துணைத் தலைவர் மணி அடித்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் வெளியே செல்ல இயற்கையாக எழுந்ததை, நில உச்சவரம்புச் சட்டம் பற்றிப் பேசுவதில் குறுக்கிடுவதற்கு நினைக்கிறார் என்று நான் நினைத்தேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சட்ட முன்வடிவு குறைகள் மலிந்த சட்ட முன்வடிவு. இதிலே காடுகள் என்ற பெயராலும், மேய்ப்பு நிலங்கள் என்ற பெயராலும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதே அதை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவைக் கொண்டுவரக்கூடாது என்றும், தகுதியான முறையில் கொண்டு வரப்படவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இது அவருடைய கருத்தா அல்லது அவருடைய கட்சியின் கருத்தா என்பதைத் தெரிவிக்க வேண்டும். பேரவையிலே காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் அப்படியே ஏகமனதாக in to ஆதரித்திருக்கிறார்கள். நேற்றுகூட திரு. இளையபெருமாள் அவர்கள் இதை ஆதரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது அவருடைய தனிப்பட்ட கருத்தா அல்லது காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. க. இராமமூர்த்தி :** நான் முன்பே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்த அவையிலே நான் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவன். இப்போது நீங்கள் நினைக்கும் பிரச்சினைக்கே இடமில்லை.

(மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் எழுந்தார்கள்)

நான் என் முழுக் கருத்தைச் சொன்ன பிறகு சொல்லலாம். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நில உச்சவரம்புக்கான கொள்கை என்பது வேறு நில உச்சவரம்பு பற்றிய சட்டம் வருகிறபோது, அது தொடர்பான கருத்துக்கள், அந்தச் சட்ட முன்வடிவினுடைய பிரிவுகளின் கருத்துக்களைப் பொறுத்து ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். திரு மூப்பனார் பற்றிய எண்ணம் இல்லாமல் சட்டம் கொண்டு வந்தோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது வேறு விஷயம். ஆனால் இப்படிப்பட்ட பேச்சுக்களைப் பேசிக்கொண்டு வருகிறீர்கள். இந்தச் சட்டத்தினுடைய பல்வேறு பிரிவுகளிலே குறைகள் இருக்கின்றன என்பது





தெரிகிறது என்னுடைய சட்டமன்ற அனுபவத்தையும் வைத்துச் சொல்கிறேன். நாம் பெற்றிருக்கின்ற இந்தச் சட்டம் சிக்கல்கள் நிறைந்த, தொல்லைகள் தருகின்ற ஒரு சட்டம், இதனாலே பலன் விளைவிக்க முடியாது என்று முன்பே நான் சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு என்ன கருத்து, அவர்களுக்கு என்ன கருத்து என்று இப்போது அமைச்சர் அவர்கள் பேசுவது, வேடிக்கையாக, கிண்டலாகப் பேசுகின்ற பேச்சாகப் பயன்படுமே தவிர, வேறு ஒரு பலனும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, இந்த விஷயத்தில் நான் வேடிக்கையாக, கிண்டலாகப் பேச மாட்டேன். நிலச் சீர்திருத்தம் என்பது முக்கியமான பாலிசி மேட்டர். கொள்கைப் பிரச்சினை. கொள்கைப் பிரச்சினை என்று வருகின்றபோது, சட்டத் துறையிலே அதிலுள்ள நுணுக்கங்களையெல்லாம் ஆராய்ந்து, இந்த அவையிலே வைத்து சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் வைத்துக் கூடிப் பேசுகிறோம். இதிலே ஒரு விதமான கருத்து தெரிவிக்கவில்லை. உறுப்பினர் அவர்களுக்கு இது ஒரு முக்கியமான சட்டம் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதைச் சொல்கின்றபோது, பேரவையிலே எல்லாக் கட்சிக்காரர்களும் ஏகமனதாக in to 'ஏற்றுக்கொள்கிறோம்' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் 'ஆமாம்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு எதிர்க்கிறார்களா என்று கூட கேட்டேன். அப்போதும் எல்லோரும் ஆதரிக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அது உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நில உச்சவரம்புக் கொள்கைக்கு மாறுபட்டு இருக்கிறதா என்று பார்க்கிறபோது, நான் பேசுகிறபோது சொன்னேன், இந்த எக்சம்ஷன் தொடர்பாக இன்னும் சட்டம் கடுமையானதாகக் கொண்டுவர வேண்டும் என்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நில உச்ச வரம்புச் சட்டத்தில் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதிலே குறைகளைத் தீர்ப்பதற்காக, சட்டம் கொண்டு வரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். தயவுசெய்து இன்னொரு கட்சியை எப்படி நடத்துவது என்று புத்தி சொல்லிக்கொடுக்க அமைச்சர் அவர்கள் வரவேண்டாம். அவருடைய கட்சியைப் புத்திசாலித்தனமாக நடத்திக் கொள்ளட்டும். நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். எங்களுடைய கட்சியைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால், உங்களுடைய கட்சியையே ஒழுங்காக நடத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நாங்கள் புத்தி சொல்லவில்லை. எங்களுக்கும் குழப்பமாக இருக்கிறது. ஒரு அவையிலே அப்படிச் சொல்கின்றார்கள். இந்த அவையிலே இப்படிச் சொல்கின்றார்கள் அதனால் குழப்பமாக இருக்கிறது என்று சொல்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : குழப்பம் எது என்று புரிந்து கொள்ள முடியாது இருக்கிறார்கள். அதனால்தான் குழப்பம் வந்துவிட்டது. சட்டத்தின் பார்வையிலே பார்க்கின்றபோது, ஒருவருக்கொருவர் கருத்து மாறுபடும். இதிலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பல்வேறு சட்ட முன்வடிவுகள் கொண்டு வந்தபோது, ஆளும் கட்சியிலே இருந்தவர்களே, அதற்கான திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றார்கள் இதனாலேயே ஆளும்கட்சியிலே பிளவு இருந்தது என்பதல்ல. எங்கள் கட்சி நடக்கிற விதம் வேறு. அவர்கள் கட்சி நடக்கிற விதம் வேறு. இன்று ஆளும் கட்சியினர் யாரும் திருத்தம் கொடுக்க மாட்டார்கள். கொடுத்தால் உங்கள் கட்சியில் இருக்க மாட்டார்கள். அது வேறு.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கட்சி நடைமுறையைப் பற்றி இங்கே விமர்சித்தார்கள். எங்கள் கட்சியில் நாங்கள் எல்லோரும் பேசி முடிவெடுத்து விடுகிறோம். இங்கே உறுப்பினர்கள் வந்து அவையிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்.

திரு. க. இராமமூர்த்தி: சட்ட முன்வடிவிலே இப்படிப் பேசித்தான் முடிவுக்கு வந்து விடுகிறார்கள். சட்ட முன்வடிவு ஆளும் கட்சியினருக்கு முன்னாலேயே கிடைத்து விடுகிறது. எங்களுக்கு சட்டமன்றத்திற்கு வருகிறபோது தான் கிடைக்கிறது. அதனாலே ஆட்சியையும் கட்சியையும் எப்படி நடத்துவது என்பது உங்களிடம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றுதான்.

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் அண்ணா தி.மு.க. வினர் திரு. எம். பி. சுப்ரமணியத்தை அணுகுகிறார்கள்; அவர்கள் மூப்பனாரை அணுகுகிறார்கள். இப்படி மாறி மாறி அணுகுகிறார்கள். நான்கூட நேற்றே சொன்னேன். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களைக் கேட்டு ஏன் செய்கிறீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: உறுப்பினர் அவர்களைப் பற்றியும் நான் பின்னர் சொல்கிறேன். யார் யார் எப்படி அணுகுகிறார்கள் என்பதைப் பின்னாலே சொல்கிறேன். அவர்களையும் விடப் போவதில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நானும் இதுவரையில் திரு. நல்லசிவன் அவர்கள் குறுக்கிடவே இல்லையே என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

திரு. க. இராமமூர்த்தி: அவரைக் குறுக்கிட வைக்கின்ற அளவுக்கு நான் இதுவரையில் பேசவில்லை. ஏதோ ஏழைகளுக்கு நிலத்தை எடுத்துக் கொடுத்ததற்குப் பிறகுதான் மறு வேலை என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நான் சொல்கிறேன். இவருடைய ஆட்சியிலேதான் அது நடந்திருக்கிறது. திண்டுக்கல்லில் நடந்திருக்கிறது. நிலப்பட்டா கொடுத்திருக்கிறார்கள் ஏழைகளுக்குப் போட்டிருக்கிறார்கள். அந்த நிலப்பட்டா பெற்றவர்களுடைய 'டாக்குமென்ட்ஸ்' "ஆதரைஸ்ட் ஆபீசர் ஃபார் லேண்ட் ரிபார்ம்ஸ்" அவர்களுடைய அலுவலகத்திலேயிருந்து விற்கப்பட்டு விட்டது என்று எனக்கு தகவல். விற்கப்பட்டதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. இன்றைக்கு அந்த அலுவலகத்திலே அந்த ரெக்கார்ட்ஸ் கிடையாது. அரசுக்குச் சொந்தமான நில உச்ச வரம்புக்கான ரெக்கார்ட்ஸ், கோப்புக்கள் அங்கே இல்லை. அது மட்டுமல்ல. உச்சவரம்பு தொடர்பான விவரம் அடங்கியிருந்தது அந்த ரெக்கார்ட்களில். நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட நிலங்களின் விவரங்கள் இருக்கின்றன. எத்தனையோ விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவையும் மற்றும் முக்கிய விவரங்களும் அடங்கிய ரெக்கார்ட்ஸ் ஏன் காணப்படவில்லை என்பதற்குக் காரணம் சொல்கிறேன். சில ஏழை விவசாயிகளுக்குப் பட்டா கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு அதே பட்டாக்களை, அந்த நிலத்தை வேறு பல வசதி படைத்தவர்கள், அதற்கான சௌகரியங்களையெல்லாம் செய்து கொடுத்து அந்த நிலங்களை வாங்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருப்பவர்கள் அந்த ரெக்கார்ட்களை, தஸ்தாவேஜுகளை அங்கேயிருந்து வெளியே கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனால் இப்போது அந்த ரெக்கார்ட்ஸ் ஆபீசில் இல்லை. அந்த பைல்ஸ் நெம்பர்களைக்கூட நான் சொல்கிறேன்.

(மாற்றுத் தலைவர் சி. இராமலிங்கம் தலைமை)

MRI/DGL/58/61 : MRI/P12/PLN/17/70

இதுபோல, ஏறத்தாழ எனக்குக் கிடைத்திருக்கிற தகவல், 36 ரெக்கார்டுகள். இன்னும் இதுபோன்று பல ரெக்கார்டுகள், நூற்றுக்கணக்கான ரெக்கார்டுகள், ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றிய முழுமையான ரெக்கார்டுகள் இன்றைக்கு திண்டுக்கல் அலுவலகத்திலே,

ஆதரைஸ்டு ஆபீசர்கள், அலுவலகங்களிலே இல்லை. இல்லை என்ற பிறகு, இனிமேல் வேறு யாருக்குப் பட்டா கொடுக்கப் போகின்றார்கள்? எந்த நில உச்ச வரம்புச் சட்டமும் ஏழைகளுக்குப் பலன் தரப்போவதில்லை நிலம் கொடுப்பது என்பது உங்களுடைய ஆட்சியிலே படுகின்ற பாடு இருக்கிறதே இதைத் தாங்கள் கொண்டு வரப்போவதாகச் சொல்கின்றார்களே இந்தச் சட்டத்தின் அடிப்படையில், இது போன்ற நடவடிக்கையைத்தான் செய்யப் போகிறீர்கள் என்று கருதுகிறேன். ஆகவே சொல்கிறேன். வேண்டுமென்றே உள்நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதை மறுக்க முடியாது. இதுமாதிரி திண்டுக்கல்லில் நடந்திருக்கிறது. தமிழகம் முழுவதும் பல 'ஆதரைஸ்ட் ஆபீசர்ஸ்' அலுவலகங்களிலே பல ரெக்கார்டுகள் இல்லாமல் இருக்கின்றனவே. இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? அதைத் தடுக்க முடியவில்லையே உங்கள் ஆட்சியிலே. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே பட்டா பெற்ற நிலத்தைக்கூட பணம் படைத்தவர்கள் தங்களுடைய வேறுபெயரிலே நிலப் பட்டா வாங்கிக்கொள்கின்ற நிலைமைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களா நிலத்தை எடுத்து நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் முழுமையாக நிறைவேற்றப்போகிறீர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, அந்த நடவடிக்கைகளை முறையாக எடுப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். சென்னை நகரத்திலே கட்டப்படுகின்ற பல மாடிக் கட்டிடங்கள்பற்றிச் சொல்கிறேன். இந்தக் கட்டிடங்களைக் கட்டுபவர்களால் சட்டம் எப்படி துச்சமாக மதிக்கப்படுகிறது என்பதை இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். பல மாடிக் கட்டிடங்கள் கட்டுகிறார்கள். பெசண்ட் நகரிலே ஒரு கட்டிடம். ஹவுசிங் போர்ட்டுக்கு, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் கட்டுகிறார்கள். அந்த நிலத்திலே அதுபோன்ற பல மாடிக் கட்டிடம் கட்டக்கூடாது என்பது சட்டம்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

ஆனால் அந்தக் குறிப்பிட்ட நிலத்திலே இப்படி ஒரு கட்டிடம் எழும்புகிறது. அது பற்றிய விவரங்கள்கூட பத்திரிகையிலே வந்திருக்கின்றன.

"The sale deed of the Board clearly states that the owner of the land should not build more than one dwelling house on the piece of land. But what is coming up is a three-storeyed building that will house twelve residential apartments."



ஒரு வீடு கட்டுவதற்காக மனை பெறுகிறார்கள்; 12 வீடுகளிலே குடியிருப்பதற்கு ஏற்ப பல மாடிக் கட்டிடங்கள் அங்கே கட்டப்படுகின்றன.

"The apartments are sure to look like pigeon-holes when completed for the simple reason that where there should have been one airy house, there are twelve cramped apartments."

(முற்பகல் 10-30)

பல மாடிக் கட்டிடம் எங்கே கட்டக்கூடாதோ அங்கே கட்டுகிறார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகள் சென்று பார்வையிடுகிறார்கள். அதற்குப் பிறகு இன்னும் வேகமாகக் கட்டி முடிக்கப்படுகிறது. கட்டி முடிக்கப்படும் கட்டிடங்களைப் பார்க்கப் போகிறார்கள். பக்கத்திலே இன்னொரு கட்டிடம் எழும்புகிறது. பல மாடிக் கட்டிடங்கள் நகர் முழுவதும் எழும்பி வருகிறதே, அதற்கான 'குடிநீர் வசதிகள், மற்ற வசதிகள் எங்கே இருக்கின்றன? எம்.எம்.டி.ஏ. (M.M.D.A.) சட்டம் என்ன? இவற்றையெல்லாம் துச்சமாக மதித்துக்கொண்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பல மாடிக் கட்டிடங்கள் எழும்புவதுபற்றி மக்களிடத்திலேயிருந்து வந்த கருத்துக்களை மனத்திலே வைத்து, அதைப்பற்றி அமைச்சரவை முடிவெடுக்க இருக்கிறது. அதற்காக அமைச்சரவையின் சப்-கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது. அதுவும் பரிசீலனை செய்ய இருக்கிறது. வீட்டு வசதி வாரியம் கட்டியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அண்மையிலே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை அதிகமாகச் சொல்கிறது என்ற எண்ணம் பரவுகிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர்களே பொறுப்பு ஏற்றுக்கொண்டு எழுதிக் கொடுத்தால், பரிசீலனை செய்ய ஆவன செய்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, நான் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையை quote பண்ணவில்லை. ஆனால் அமைச்சரவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் படித்திருப்பதால், அவர்களுக்கு அது புரிகிறது. பெசன்ட் நகரில் இல்லை என்று மறுப்பு சொல்ல வேண்டியதுதானே! ஹவுசிங் போர்ட் சின்ன விவகாரங்களுக்குப் பதில் சொல்லுகிறது. இந்தியன் எக்ஸ்பிரசில் எத்தனை முறை எழுதியிருக்கிறார்கள்? அப்படி வரும்போது, இது தவறு என்று மறுப்பு சொல்லியிருக்க வேண்டாமா? எவ்வளவு பெரிய சார்ஜ், எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு, அதைத் தவிர்த்திருக்க வேண்டாமா?

இன்னொன்று சொல்லுகிறேன். பல முறை பல மாடிக் கட்டிடங்களைக் கட்டலாமா, அனுமதிக்கலாமா . . .

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வருகிற செய்திகள் சமீபகாலத்திலே உண்மைக்குப் புறம்பாக வந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி இந்த ஆட்சிபற்றித் தவறான கருத்தை வெளியிட்டால், ஏன் அதுபற்றி நடவடிக்கை எடுக்கக்கூடாது, ஏன் அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவரத் தயங்குகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் மாறுபட்ட கருத்துக்கள் வந்துகொண்டிருக்கும். அரசு, எதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கருதுகிறதோ அதை அந்த இதழுக்கு அனுப்பும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். நேற்றுகூட, தலையங்கத்தில் எழுதியிருப்பதாகச சொன்னார்கள். சமீப காலங்களில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வருகிற செய்திகளை அவ்வளவு கவலையோடு பார்க்க வேண்டியதில்லை என்பதுதான் என் கருத்து.

It has lost its credibility according to us.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்த துர்பாக்கிய நிலையை உருவாக்கியது அரசு தான். எந்தத் தகவலையும் அரசு அதிகாரிகள் தரக்கூடாது என்று உத்தரவு போட்டதால் வந்த நிலைதான் இது. எப்படி தகவல்கள் கிடைக்கும் ? அதிகாரிகள் எந்தத் தகவலும் தரக்கூடாதென்று சொல்லும்போது, பத்திரிகை நிருபர்களே தகவலைச் சேகரித்துத் தருகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதிகாரிகள் எந்தத் தகவலும் கொடுக்கக்கூடாதென்று சொல்லவில்லை. சொல்லுகிற அதிகாரிகள், யார் சொல்லுகிறார்கள் என்பதையும் சேர்த்துச் சொல்ல வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். அவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான். தகவல் கொடுக்கிற அதிகாரி தன் பெயரையும் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுபற்றிய விவாதத்திற்குள் போகவில்லை. பொறுப்பு ஏற்றுக்கொள்வதென்பது அந்த அதிகாரிகளைப் பொறுத்தது. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்தபோது, அவருக்கு உடல்நிலை மோசமாகிவிட்டதென்ற நிலைமையிலே, அவர் எப்படி இருக்கிறார் என்று பத்திரிகை நிருபர்கள் தொலைபேசி மூலம் கேட்டபோது, தகவல் தர மறுத்துவிட்டார்கள். அவர்கள் சொன்ன பதில், " இதுபற்றி உங்களுக்குத் தகவல் தேவை என்றால், மருத்துவத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரிடம் கேளுங்கள், இல்லை



யென்றால் துறைச் செயலாளரிடம் கேளுங்கள், எங்களை வம்புக்கிழுக்காதீர்கள் " என்பதுதான். திரு. கக்கன் அவர்களின் உடல்நிலையைப் பற்றிச் சொல்லக்கூட அதிகாரிகள் பயப்படுகிறார்கள.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இது நடைமுறையிலே உள்ளது. மிகவும் முக்கியமானவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கும்போது, டாக்டர்கள் வெளியே சொல்லப் பயப்படுவார்கள். அண்ணா அவர்கள் உடல்நலமில்லாமல் இருந்தபோதுகூட, டாக்டர்கள் சொல்ல மறுத்துவிட்டார்கள். பெரியவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கும்போது சொல்ல மாட்டார்கள். இதை ஏன் நாம் சொல்ல வேண்டுமென்று நினைப்பார்கள். இது வாடிக்கை.

**திரு. க. இராமமூர்த்தி :** பத்திரிகையிலே செய்தி வெளியிடக் கொடுத்த இன்னொரு மிக முக்கிய அதிகாரி, எல்லாவற்றையும் போட்டுக்கொள்ளுங்கள், கடைசியில் ' கவர்ன்மென்ட் ஸ்போக்ஸ்மேன் ' என்று போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். எந்த அதிகாரியும் இந்த ஆட்சியில் பொறுப்பு ஏற்றுக்கொள்ள அஞ்சுகிறார்கள். இது ஜனநாயக வளர்ச்சிக்கு முன்மாதிரியல்ல. இந்தச் சூழ்நிலையிலே பத்திரிகைகளைப் படித்து குற்றம் சொல்லலாமா என்றால், என்ன செய்வது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மத்திய அரசில்கூட இப்படி இருக்கிறது. அண்மையிலே பத்திரிகையில் தாக்கீது வந்திருக்கிறது. அதிகாரிகள் தாங்களாகவே அறிக்கை கொடுக்கக்கூடாது என்று வந்திருக்கிறது. அதுமாதிரி மதிப்பிற்குரிய திரு. கக்கன் அவர்களைச் சம்பந்தப்படுத்திப் பேசினார்கள். அப்போதுகூட நான் சொன்னேன், அனாவசியமான அறிக்கை தேவையில்லை, அறிக்கை தேவை என்றால் அப்போது இரண்டு புல்லடின் வெளியிடலாமென்று சொல்லியிருந்தேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் முன்பே ஒரு முறை சொன்னேன். ஐ.ஜி. அவர்கள் ஒரு முறை, ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் " அரசியல்வாதிகள், நீதிபதிகள் யார் யாரோ இணைந்திருக்கிறார்கள் " என்று சொன்னபோது, இந்த அவையிலேயே சொன்னேன், கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே குற்றச்சாட்டுள்ள அறிக்கையை எப்படி பத்திரிகைகளுக்குக் கொடுக்கலாம், பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தது தவறு என்று சொன்னேன். ஆனால், இப்போது அரசு உத்தரவின் காரணமாக அதிகாரிகள் எல்லோரும் வாய் மூடி மௌனமாகி, எந்த விவரமும் தருவதில்லை. அப்போது எல்லாவற்றையும் பேசி வந்தார்கள். எனவே இந்த ஆட்சியிடம் இரண்டு எக்ஸ்டிரீம்களும் இருக்கின்றன. எதுவும் பேச விடுகிறார்கள் அல்லது வாயைத் தைத்து, கொஞ்சங் கூடத் திறக்காமல் செய்து விடுகிறார்கள். இது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 பிப்ரவரி 10

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வாய்ப் பூட்டு போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுவதுதான் அரசியல்வாதிகளின் வழக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி :** வாய்ப் பூட்டு என்றால்கூட கொஞ்சம் இடைவெளி இருக்கும். தைத்துவிட்டால், வாயைத் திறக்கவே முடியாது. (சிரிப்பு)

அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றிய விவரங்களுக்குச் செல்லவில்லை. என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு நாட்டிலே வரக்கூடாத வியாதிகள் வந்துகொண்டிருக்கின்றன. மலேரியா, அம்மை, காலரா போன்ற நோய்கள் கோடைக் காலத்தில், கடுங் கோடையில்தான் வருவதுண்டு. அந்த நோய்களைத் தடுத்துவிட்டோமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வியாதிகள் இப்போது மழைக்காலத்தில் மலிந்திருக்கக் காரணமென்ன ? இன்றைக்கு சுகாதாரம் சீர்கேடு அடைந் திருக்கிறது. நகரங்கள் சீர்கேடு அடைந்திருக்கின்றன. தண்ணீர் குடித்தால் மஞ்சள் காமாலை, அம்மை, மலேரியா நோய்கள் வருகின்றன. கொசுத் தொல்லைக்கு அளவே கிடையாது. எந்த வீட்டிலும் மின் விசிறி இல்லாமல் இருக்க முடியாது. வசதியுள்ள வீடாக இருந்தாலும், மின் விசிறி வேண்டும். உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்காததால்தான் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக் கின்றன. அந்த உள்ளாட்சி நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டாமா ? அதைச் சீர்படுத்தி சுகாதாரத்தை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே.** இங்கே மஞ்சள்காமாலை நோட் இல்லை. 'அவுட்பிரேக்' கிடையாது. இங்கொன்றும், அங்கொன்றுமாக இருக்கக்கூடும். இது முக்கியமான விஷயமாதலால் குறிப்பிட்டுச் சொல்லு கிறேன். தொற்றுநோய் மருத்துவமனை புள்ளிவிவரங்கள்படி இந்த நோய்கள் மிகக் குறைந்துள்ளன. அங்கே பல படுக்கைகள் காலியாக உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Thiru G. VASANTHA PAI :** Sir, I am referring to what the Hon. Minister said. There are a lot of mosquitoes and there is also filariasis.

(முற்பகல் 10-40)

**திரு. க. இராமமூர்த்தி :** நான் அதுபற்றி இன்னும் தொடர விரும்பவில்லை இது ஒன்றோடு போதும்.



1982 பிப்ரவரி 10]

அடுத்து, குடிநீர் பிரச்சினையைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றையும் காணோம். சென்னை நகருக்கு வேண்டிய தண்ணீர் சரியாக இல்லை. பற்றாக் குறை இருக்கிறது. இன்னும் வேகமாக, கடுமையாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், தண்ணீரை இன்னும் அதிகமான அளவுக்கு சென்னைக்குக் கொண்டு வந்து சேர்க்கவில்லையென்று சொன்னால், அடுத்து நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குள் சென்னை நகரிலுள்ளவர்கள் கட்டாய மாக சென்னை நகரை விட்டு காலி பண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதிலே அரசு மெத்தனமாக இருப்பது நியாயம்தானா ? அன்றைக்கு வீராணம் வேண்டாமென்று சொன்னார்கள். கிருஷ்ணா நீர் பற்றிய திட்டத்தை உரு வாக்கப் போவதாக பிரதமர் அறிவித்தார். அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப் பட்ட இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. பிரதமர் சொன்னதால்தானோ என்ன வோ அதையே மறந்து விட்டார்கள். அடுத்து, கட்டளைக் கால்வாய் திட்டம் வருகிறது, வருகிறது என்று சொன்னார்கள். அது நடக்காது, அது ஆகாத ஒரு திட்டம் என்று நாங்களெல்லாம் சொன்னபோது, உலகத்திலே இல்லாத திட்டம் அது, ஆகவே அதைக் கொண்டுவரப் போகிறோம் என்று சொன் னார்கள். அதோடு மட்டுமல்ல, திட்டக் கமிஷன் அனுமதி கொடுத்துள்ளது, அருமையான நல்ல திட்டம் என்றும் சொன்னார்கள். அது தொடர்பாக ஒரு தலைமைப் பொறியாளரைக்கூட நியமிக்கக் காணோம். இன்றைக்கு மீண்டும் கிருஷ்ணா தண்ணீரைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். குடிநீர் போன்ற மிகவும் அத்தியாவசியமான காரியங்களுக்கே காலத்தைத் தள்ளிக் கொண்டே போனால், அதன் விளைவு நாட்டுமக்களுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது குறித்த அச்சம் ஆட்சிக்கு இருக்க வேண்டாமா ? ஆகவே அது குறித்து இந்த அரசு வேகமாகச் செயல்பட வேண்டும். அதற்கான நடவடிக் கையில் உடனடியாக ஈடுபட வேண்டுமென்று நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றைப் பற்றியும் சொல்கிறேன். அது நிர்வாகம் பற்றியது. அது பற்றி நான் சொல்ல வேண்டிய நிலையில் நிர்வாகம் இன்றைக்கு இருக்கிறது. 'டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்" என்ற பதவி இருக்கிறது. அதைக் கொண்டுவரும்போது, அதைக் கொண்டு வருவதற்கான உடனடி தேவை, அவசி யங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. ஒருவரே தொடர்ந்து இரண்டு முறை பதவி நீட்டிப்பின் மூலம் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவர் சென்று இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும், அந்த இடம் காலியாகவே இருக்கிறது. அது போல் ஐ.ஜி. என்போர்ஸ்மெண்ட் போஸ்டும் காலியாகவே இருக்கிறது. அது போல் அடிஷனல் ஐ.ஜி. புட் செல் Food Cell பணியிடமும் காலியாக இருக்கிறது. டி.ஐ.ஜி. அட்மினிஸ்டிரேஷன் பணியிடம் காலியாக இருக்கிறது.

இப்படி காலி இடங்களையெல்லாம் வைத்துக்கொண்டு எப்படி நிர்வாகத்தை செம்மையாக, திறமையாக நடத்த முடியும்? 'சூப்பிரன்டென்டென்ட் ஆப் போலீஸ்' மூன்று பேர் சம்பளம் வாங்கிக் கொண்டு அதே நேரத்தில் வீட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான வேலையைக் கொடுத்து பணிக்கப்படவில்லை. இது அவசியம் தானா? நிர்வாகச் சீர்கேட்டுக்கு இவையெல்லாம் துணை போவதாக இல்லையா? இவற்றையெல்லாம் அரசு தவிர்க்கக் கூடாதா? இதைக்கூட தவிர்க்க முடியாமல் அமைச்சர்களுக்கு வேறு என்ன வேலையோ? உடனடி நடவடிக்கை எடுத்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டியது அரசின் கடமையல்லவா? அமைச்சர்களைப் பார்க்கவே முடியவில்லை. எங்கே போய் அமைச்சர்களைப் பார்ப்பது என்றே தெரியவில்லை. குறைந்தபட்சம் வீட்டிலிருந்தாவது பைல்களைப் பார்க்க வேண்டும். பைல்களை அப்போதைக்கப்போது பார்த்து நடவடிக்கை எடுத்து இம்மாதிரி சீர்கேடுகள் இல்லாமல் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும். இந்தப் பதவிகளுக்கான அதிகாரிகள் இல்லையா? இதனால் என்னென்ன விளைவுகள் உண்டாகும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, சம்பந்தப்பட்ட செய்தித் துறை அமைச்சர் அவர்களே இங்கே வந்துவிட்டதால், ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்ப் பண்பாட்டு மையம் பற்றி சென்ற ஆண்டு கூட பேசியிருக்கிறேன். தமிழ்ப் பண்பாட்டு மையம் போய் அது இன்றைக்கு தமிழ் வளர்ச்சி இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அதன் இயக்குநரோ கோர்ட்டுக்குப் போய் வழக்கு தொடர்ந்தார். இன்றைக்கு அந்த வழக்கும் முடிந்து விட்டது. அவருக்கு அரசு கொடுத்திருந்த காரை காவல் துறையின் உதவியோடு அரசு திரும்பப் பெற முடிந்திருக்கிறது. ஆனால் அவர் வைத்திருந்த ரெக்கார்டுகளை, அவர் பூட்டி வைத்திருந்த அரசுக்குச் சொந்தமான ரெக்கார்டுகளை அரசிடம் ஒப்படைக்கவில்லை. அந்தத் துறைக்கு என்று அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்து அதன்மூலம் வாங்கப்பட்ட பொருள்களை முறையாக அரசிடம் ஒப்படைக்கவில்லை. காவல் துறையின் உதவியோடு அவரிடமிருந்த அரசுக்குச் சொந்தமான காரை மட்டும்தான் பெற முடிந்தது. மற்றவைகளும் அதுபோல் அரசிடம் வர வேண்டாமா? ஏன் அதுகுறித்து இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை? அரசு மீதே அவர் வழக்கு தொடர்ந்தவர். அந்த நேரத்தில்தான் அவருக்கு வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் அந்த வீட்டுக்குப் போனார். அவருக்கு எப்படி வழக்கு தொடரப்பட்ட நேரத்திலேயே சலுகையில் வீடு கொடுக்கப்பட்டிருக்கிறது? அந்த வீட்டிற்குரிய வாடகையை யார் கொடுக்கிறார்கள் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சொல்லியாக வேண்டும். அதன் விளைவாக அவரிடம் பணியாற்றிக்



கொண்டிருந்த, லின் சர்வீஸ் ( Lien Service ) என்கிற அடிப்படையில் பணியாற்றிக்கொண்டிருந்த, அரசு அதிகாரிகள், அலுவலர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் தமிழ்ப் பண்பாட்டு மையத்திலிருந்து தாய்த் துறைக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட பணிப் பதிவேடுகள் இன்னும் தாய்த் துறைக்கு வந்து சேரவில்லை. அதன் காரணமாக அவர்களுக்கு வர வேண்டிய ஊதிய உயர்வு, விடுப்பு போன்றவைகளை அவர்கள் அனுபவிக்க முடியவில்லை. யாரோ ஒரு தனி நபர் அவர். இப்போது அவர் அதிகாரியாகக்கூட இல்லை. அரசுக்கு எதிராக வழக்கு மன்றத்திற்குச் சென்று, வழக்கு முடிந்த பிறகு கூட, அரசிடம் ரெக்கார்டுகளை ஒப்படைக்காததுடன, அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்ற வகையில் ஒரு தனி நபர் அரசைத் துச்சமாக மதிக்கிறார் என்றால், அவர்மீது இந்த அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இப்படி தனி நபர்கள் அரசை மதிக்காத அளவுக்கு நிலைமைகள் இருப்பது நல்லதா?

அடுத்து, தமிழிலே நீதிமன்றங்கள் இயங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டு முதன் முதலாக தமிழிலே ஒரு நீதிபதி தீர்ப்பளித்து அதன்மூலம் நம்மையெல்லாம் பெருமைப்பட வைத்தார். ஆனால் அதற்குப் பிறகு அது தொடரவில்லை. அதைத் தொடர வைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அப்படி நடவடிக்கை எடுக்கவில்லையே! ஒருவர் முதன்முதலாக தமிழில் தீர்ப்பு தந்திருக்கிறார் என்றால், அவருக்குத் துணைபுரிகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? அப்போதிருந்தே சட்டப் புத்தகங்களை தமிழில் வெளியிடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்க வேண்டாமா? எதுவுமே இல்லாமல் சட்டப் புத்தகங்களைக்கூட தமிழில் இதுவரை அச்சடிக்காமல்—அரசு அச்சகத்திலேதான் அவைகளை அச்சிட்டாக வேண்டும்—அதற்கு முன்னதாகவே இப்படிப்பட்டதோர் அறிவிப்பைச் செய்கிறது என்றால், ஏன் அரசு இவற்றையெல்லாம் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும்? எதுவும் இல்லாத நிலையில் திடீரென்று பிப்ரவரி 1 ஆம் தேதியிலிருந்து அனைத்து நீதிமன்றங்களிலும், ஒலில் நீதிமன்றங்களிலும் தமிழிலேதான் நீதிபதிகள் தீர்ப்பளிப்பர் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதை நான் குறை சொல்லவில்லை. அதை நான் வரவேற்கிறேன். அது அவசியமான ஒன்று. ஆனால் அதே நேரத்தில் வேகம் இருக்கின்ற அளவுக்கு, உணர்வு இருக்கின்ற அளவுக்கு, செயல் முறையைத் தாண்டி விடுகின்ற அளவுக்கு, வேகத்தைத் தட்டி விடுகின்ற அளவுக்கு, அரசு நிர்வாக இயந்திரத்தின் நடவடிக்கை வேகப்படவில்லை. அப்படி அதிலே வேகமாக நடவடிக்கை எடுக்காமல் எதிலும் ஏனோதானோ என்று அறிவிப்பதனால்

தான், நடைமுறையில் அது ஏனோதானோ என்று முடிகிறது. அதைப்போல இன்றைக்கு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அரசு ஏற்று நடத்துகின்ற பொது நிறுவனங்கள் முறையாகச் செயல்படவில்லையென்றால், அதுகுறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே அவைகள் முறையாகச் செயல்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டிருப்பதுடன் அப்படி முறையாகச் செயல்படாமல் இருக்கின்ற நிறுவனங்களில் உயர் பதவிகளில் இருக்கின்ற அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது அவர்கள் அங்கிருந்து மாற்றப்படுவார்கள் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாடு இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிற பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து நாட்டைக் காப்பாற்ற பாரதப் பிரதமர் அவர்கள் எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். இங்கே அது தொடர்பாக என்ன நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கிறது? இங்கே அதே நிலை பெரிய அளவில் நடந்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரத்துடன் தந்திருக்கிறார்கள். ஆடிட்டர் ஜெனரல் அவர்களுடைய ரிப்போர்ட் வந்திருக்கிறது. ஏறத்தாழ் 37 கோடியே 96 லட்சம் ரூபாய் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும், அவை லாபம் ஈட்ட வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. பாரதப் பிரதமர் அவர்களே கடந்த இரண்டு நாட்களாக டெல்லியிலே இருக்கும் செயலாளர்களை அழைத்துப்பேசி, அடுத்த மூன்று ஆண்டுகளிலே தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதையெல்லாம் இந்த அரசு வரவேற்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த ஆண்டுகளிலே, எந்த எந்த நிறுவனங்களிலே இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று விளக்கமாகச் சொல்வார்களேயானால் நடவடிக்கை எடுக்கவும், அந்த நிறுவனங்களை லாபகரமாக நடத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்ற அளவிலே, பொதுவாகச் சொல்லாமல், எந்த ஆண்டிலே எந்த நிறுவனத்திலே என்று குறிப்பாகச் சொன்னால் நல்லது.





திரு. க. இராமமூர்த்தி : ஆடிட்டர் ஜெனரல் அவர்களின் ரிப்போர்ட் ஒரு கன்சைஸ் வடிவிலே இப்போது 4 நாட்களுக்கு முன்னால் வந்ததைப் படிக்கிறேன்:

During 1979-80 alone, 16 companies (including subsidiaries) had incurred a total loss of Rs. 984.56 lakhs. The Tamil Nadu Cements Corporation and the Tamil Nadu Dairy Development Corporation together contributed a little above 50 per cent of the loss in 1979-80.

The working of some of the companies/corporations analysed came in for sharp criticism by the Comptroller. The Tamil Nadu Harijan Housing and Development Corporation, for instance, was rapped for not finalising its accounts from 1975-76 onwards. The audited accounts for 1975-76 which incidentally disclosed a loss of Rs. 201.22 lakhs had not yet been approved by the Board.

இந்தப் பொது நிறுவனங்கள் நட்டத்திலே நடந்துகொண்டிருப்பதற்கு நான் இந்த ஆட்சியைக் காரணம் சொல்லவில்லை. ஆனால் பொது நிறுவனங்களை முறையாக இலாபத்திலே நடக்கச் செய்யும் அளவுக்கு இயக்க வைக்க வேண்டிய பொறுப்பு அவற்றின் தலைமைப் பொறுப்பிலே இருக்கும் அதிகாரிகளைச் சார்ந்தது. அந்த நிறுவனங்களை அந்த அதிகாரிகள் சரிவர கவனிக்கவில்லையென்றால், நட்டம் வருகிறது. இப்போது அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடத்துவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. காரணம் பொது நிறுவனங்கள் என்ற பெயரிலே அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் சலுகைகள் எவ்வளவோ இருக்கின்றன. தங்குவது கூட கெஸ்ட் ஹவுசிலே. அங்கே தங்கினால் அது சிறப்பு என்ற அளவிலே அமைச்சர்கள்கூட அரசாங்கச் செலவிலே மாளிகைகளைக் கட்டிவைத்துக் கொண்டு அவற்றிலே தங்குகிறார்கள். இப்படிப்பட்ட பொதுநிறுவனங்கள் முறையாகச் செயல்படுவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைப்போலவேதான், அரசு அதிகாரிகள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதற்கு இன்னொரு உதாரணத்தையும் சொல்கிறேன். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே கடந்த முறை இங்கே சொன்னார்கள். சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் ஒரு கட்டி தங்கம் கிடைத்தது என்ற தகவல் வந்தது. அது பற்றி கலெக்டர் அவர்களுடைய ரிப்போர்ட் என்ன வாயிற்று? அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை என்ன? இவைகளோடு மட்டுமல்ல, எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் வேறுவிதமாக இருக்கிறது.

கலெக்டர் அவர்களின் ரிப்போர்ட்டில் அங்கே ஒன்றும் நடைபெறவில்லை என்றுதான் இருப்பதாகத் தெரிகிறது. அது சரியா, தவறா என்பதல்ல. நீங்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலே தொடர் நடவடிக்கை எடுக்க முடிந்ததா ? பெண்ணாடம் சர்க்கரை ஆலையிலே திடீரென்று ஸ்பிரிட் ஸ்கேண்டல் (Spirit Scandal) குற்றச்சாட்டு வந்தபோது அங்கே சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷனுக்குப் போய் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். இதெல்லாம் பெரிய அளவிலே பத்திரிகைகளிலே விளம்பரமாக வந்தது. ஆனால் கடைசியில் அது வெறும் தண்ணீர் என்று சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சில நடவடிக்கைகள் எங்கே என்ன காரணத்திற்காக, என்ன நோக்கத்திற்காக எடுக்கப்படுகின்றன என்று அஞ்ச வேண்டிய சஞ்சலப்பட வேண்டிய அளவுக்குத் தான் நிலைமைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, சிதம்பரம் கோவிலைப் பற்றி ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கோவிலைப் பற்றிய சில விவரங்கள் பொதுமக்கள் சிலராலே அரசுக்கு அனுப்பப்பட்டன. அந்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு தக்க அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து, நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக்கொண்டதையொட்டி, அதிகாரிகள் அங்கே சென்று பரிசீலித்ததில் சில விவரங்கள் அவர்களுக்குக் கிடைத்ததைத் தெரிவித்தார்கள். சிதம்பரம் ஆலயத்தைப் பொறுத்தவரையில், எந்தவிதமான நடவடிக்கையையும் அறநிலையத் துறை மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையிலே அங்கே இருப்பவர்கள் தடுத்துக்கொண்டிருக்கும் நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, ஏதோ தகவல் கிடைத்தது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சென்றார்கள், அங்கே ஒன்றுமே கிடைக்கவில்லை என்ற தகவலை வைத்துக் கொண்டு சொல்வது சரியல்ல. எங்களுக்கு வந்த தகவலை வைத்துத்தான் நடவடிக்கை எடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் வேறு தகவல் இருந்தால், அதைத் தந்தால் அதையும் பரிசீலிக்கலாம். தகவல் என்ன என்று தெரிந்து கொள்ளாமல் எடுத்த நடவடிக்கையை விமர்சிப்பது நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு வழிகோலாது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளகிறேன். எனக்குத் தெரிந்ததெல்லாம் அரசுக்குக் கிடைத்த தகவலைக் கூட அவைக்குச் சொல்லவில்லை என்பதுதான். சிதம்பரம் ஆலய நிர்வாகம்பற்றி, மானியக் கோரிக்கை வரும்போது, நான்





தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேகமாக இதுகுறித்து இங்கே சொன்னார்கள். அவர்கள் இங்கே சொல்லியிருப்பதால், இந்த அவைக்கு உரிமையிருக்கிறது, எனக்கும் உரிமையிருக்கிறது.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கிடைத்த தகவலை உடனடியாகச் சொல்லிவிட்டார்கள் என்று கூறுவது சரியல்ல. சில குறிப்பிட்ட ஆதாரங்களோடு அந்த ஆலயம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அதுபற்றித் தெரிவித்து, அந்த அடிப்படையிலே சோதனைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த ஆதாரங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு சட்டபூர்வமாகத் தடுக்கப்படுகின்றன என்பதுதான் பிரச்சினை.

திரு. க. இராமமூர்த்தி : இதற்கு மேலே அந்த விவாதத்திற்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. அரசாங்கம் சட்டம் கொண்டு வருகிறது. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்கூட அதைச் சுட்டிக்காட்டினார்கள். கிராம அதிகாரிகளையெல்லாம் ஒழித்தார்கள். என்னவாயிற்று ? இப்போது அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து ஓராண்டு காலமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற நிலைபற்றி நீதிபதிகளின் முன்பு விவாதத்திற்கு வந்தபோது, அப்போது எதிர்த் தரப்பு வழக்கறிஞர், "இவர்களுக்கு எல்லாம் சம்பளம் கொடுப்பது என்ற முடிவினை எடுக்கிறார்கள் என்று அறிகிறேன், அதனாலே கேட்கிறேன், சம்பளம் கொடுக்கும்போது அதை வாங்கி வைத்துக்கொண்டு அவர்கள் எதற்கு வீட்டிலே உட்கார வேண்டும், அவர்களிடம் ஏதாவது வேலை வாங்கலாமே" என்று கேட்கிறார். எனக்குக் கிடைத்த தகவல், அதன் அடிப்படையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்றைக்கு ஏழு கோடியோ, எட்டு கோடியா, 11 கோடியா எவ்வளவு ரூபாய் செலவாயிற்று என்று தெரியவில்லை. ஆக இப்போது, அரசிடம் பணம் வாங்கிக்கொண்டு வேலை செய்யாத ஊழியர்கள் இருக்கிறார்கள். மின்சாரத் துறையிலே இப்போது ஸ்பாட் பில்லிங் (Spot-Billing) என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். அதற்குள்ளே இப்போது நான் போகவில்லை. பணியாற்றாமலே ஊதியம் பெறுகின்ற அரசு அலுவலர்கள் சங்கம் என்ற அளவிலே ஒரு சங்கம் தனியாக வைக்கும் அளவுக்கு இப்போது நிலைமை இருக்கிறது. என்ன நடவடிக்கை எப்படி எடுத்தீர்கள், யார் உங்களுடைய அட்வைசர்கள் ? Who are your advisers ? Who are your officers ? ஒரு நடவடிக்கை எடுக்கும்போது, எச்சரிக்கையோடு செயல்பட வேண்டாமா ? அப்படி எடுத்ததன் விளைவு இது. ஆட்சியினுடைய

நிதி நிலைமையை இது பாதிக்கும் என்ற தகவலைத் தெரிவிக்க வேண்டாமா? அதுகூட இல்லாமல் அவசரமாக நடவடிக்கை எடுத்து, அதன் விளைவாக பலர் இன்றையதினம் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு சம்பளம் வாங்கும் நிலை இருக்கிறது. ரெவின்யூ துறையிலே இருந்த இந்த நிலை இப்போது மின்சாரத் துறைக்கும் வந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை இப்படிப் போக்க முடியும் என்று சொன்னால், சந்தோஷம்தான். அரசாங்கப் பணத்தைச் செலவிடுவதற்கு ஒரு முறை வேண்டாமா? அதைப் போலவே அன்னை

(முற்பகல் 11-30)

இந்திரா காந்தி அவர்கள் தமது 20 அம்சத் திட்டத்தில் குறிப்பிட்டது ஆல் இன்டியா பெர்மிட் பற்றியது . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** ஸ்பாட் பில்லிங்-கைப் பொறுத்தவரையில், மிச்சப் படுகிற தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். எனவே வேலையில்லாதோர் என்ற காரணத்திற்காக அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நல்ல வேளை இடதுசாரி கம்யூனிஸ்ட் ஆட்சியில்லை. நான் அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ஒரு நடவடிக்கை எடுக்கும் போது, அதன் பின்விளைவுகளைப் பார்க்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டேன். அதிகமாக இருப்பவர்களையெல்லாம் உடனே வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. அந்த விவாதத்திற்குள் நான் போகவும் விரும்பவில்லை. அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்தால், அதன் பின்விளைவுகளை முன்கூட்டியே எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** வேலையில்லாமல் சம்பளம் வாங்குவோர் சங்கம் என்று அமைக்க வேண்டியிருக்கும் என்று உறுப்பினர் குறிப்பிட்டார். அப்படிப் பட்டவர்கள் மின்சார வாரியத்திலும் இருக்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி உறுப்பினர் அவர்களுடைய அபிப்பிராயத்தைத்தான் அவர் அறிய விரும்புகிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** கடந்த ஓராண்டுக் காலமாக 95 லாரிகளுக்கு ஆல் இந்தியா பர்மிட் வழங்கப்படவில்லை. எவ்வளவு பேர் எவ்வளவு சம்பாதித்திருக்க முடியும்? அந்தப் பேப்பர்கள் என்னவாயின? எதனால் இவைகள்





தடைப்பட்டன? மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா, இவையெல்லாம் எந்தக் காரணத்தால் எந்த மட்டத்திலே நிற்கின்றன, இப்படிச் செயல்படுவதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்ல வேண்டாமா?

சினிமா கொட்டகைகளில் வரி ஏய்ப்பு செய்வதைக் கண்டுபிடித்துச் சொல் டவர்களுக்கு 10,000 ரூபாய் பரிசளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரையரங்குகளுக்குக் கம்பவுண்டிங் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அது வேறு. ஆனால் நான் கேட்க விரும்புவதெல்லாம் இதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில் நல்ல அனுபவம் உள்ளவர். அதிகாரிகள் தொடர்பு இல்லாமல் இப்படிப்பட்ட காரியங்களை நடத்த முடியுமா என்றுதான் அவரை நான் கேட்க விரும்புகிறேன். வரி ஏய்ப்பைக் கண்டு பிடித்துச் சொல்பவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு என்றால், அது எங்கே போய் முடியும்? அதிகாரிகளே யாரையாவது விட்டு இந்தப் பரிசுத் தொகையைக் கேட்டு வாங்கிக்கொள் என்றுதான் சொல்லுவார்கள். அந்த அளவுக்குத் தான் இது வந்து சேரும். எனவே இதைப்பற்றி இன்னும் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமும் கட்டாயமும் இந்த அரசுக்கு இருக்கிறது.

சினிமா தியேட்டர்களைப்பற்றிக் குறிப்பிட்டதையொட்டி இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாநிலத்தில் ஒரு திரைப்படத்தைப் பற்றி ஒரு கூரல் எழுப்பப்பட்டது. "தண்ணீர் தண்ணீர்" என்ற திரைப் படத்தை எப்படி அனுமதித்தீர்கள், அதைப் பின்வலிக்க வேண்டும். சென்சார் அதை எப்படி அனுமதித்தார்கள்?" என்றெல்லாம் வினாக்கள் எழுப்பப் பட்டன. மாண்புமிகு முதலமைச்சரே முதலில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். பிறகு இல்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சாத்தே (Sathe) அவர்கள், "என்னிடம் மாநில முதலமைச்சர் பேசும் போது அனுமதித்தது தவறு என்று சொன்னார்" என்று பத்திரிகை நிருபர் களிடம் சொல்லியிருக்கிறார். இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் அந்தப் படம் இரண்டொரு நாட்கள் திரைப்படக் கொட்டகைகளி லிருந்து மாயமாக மறைந்ததே, அதற்கு என்ன காரணம்? அன்னை இந்திரா வின் ஆட்சியைப்பற்றி "முகம்மது பின் துக்ளக்" என்ற சினிமா மோசமானது என்று கிண்டலாகவும் வேகமாகவும் விமர்சித்த படம் அனுமதிக்கப் பட்டது. காரணம் அதை ஒரு "சடையர்" என்ற அளவில் மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லும்போது, இவைகளைத் தடுக்கக் கூடாது என்ற அளவில் அனுமதிக்கப்பட்டது. "தண்ணீர் தண்ணீர்" படத்தில் என்ன காட்டுகிறார்கள்? இந்த ஆட்சியில் மட்டும்தான் என்றில்லை. எந்த ஆட்சியிலும் அரசாங்க நிருவாக இயந்திரம் என்பது எப்படியெல்லாம் வளைந்து

தெளிந்து கொடுக்கக்கூடியது என்பதைத்தான் காட்டினார்கள். அதற்கு இவ்வளவு அலர்ஜியா? அது மட்டுமல்ல, அதைப்பற்றி எனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் பஞ்சாயத்துத் தேர்தலை அறிவித்திருக்கிற இந்த நிலையில்தானா இந்தப் படத்தை வெளியிடுவது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு வெளியான வேறு ஒரு படம் சரியாக ஓடவில்லை என்பதற்காக இந்தப் படத்தின்மீது கோபம் திரும்பியது என்றும் சொல்லப்படுகிறது. நான் அந்த விவாதத்திற்குள் எல்லாம் போக விரும்பவில்லை. அதில் அரசாங்கம் நடந்துகொண்ட முறை சரிதானா என்றுதான் கேட்க விரும்புகிறேன். சினிமா படம் எடுப்பதையும் வெளியிடுவதையும் அதிகாரத்தின் மூலம் தடுப்பது என்று வந்துவிட்டால், அது எங்கே கொண்டு போகும்? ஆட்சியில் இருப்பவர்கள் எல்லோருக்கும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்றுதான் நம்புகிறோம். ஆனால் நீங்களோ உங்களோடு தொடர்பு கொண்டவர்களுக்கு மட்டும்தான் பாதுகாப்பு என்று நடப்பீர்களானால், அது நன்றாக இருக்காது என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக, காவல் துறையைப்பற்றி ஒன்றிரண்டு மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்கிறேன். காவல் துறையைப் பொறுத்தவரை, அது மிகுந்த ஜாக்கிரதையோடு செயல்பட வேண்டும். அப்படியில்லாமல் தறிகெட்டுப் போக அனுமதித்தால், அது எங்கேயும் போகும், எப்படி வேண்டுமானாலும் போகும் என்ற நிலைதான் உருவாகும்.

ஓமலூர் வட்ட காவல் துறையைப்பற்றி ஓமலூர் வட்ட சாராயக் கடை வியாபாரிகள் சங்கம் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். நாங்கள் மாமூல் கொடுத்தால்தான், அரசாங்கக் கடைகள் நன்றாக நடக்கும். காவல் துறைக்கு மாமூல் கொடுக்கவில்லை என்றால், அரசாங்கக் கடைகள் அல்லாதவைகள்தான் சரியாக நடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய பகுதியில் நடைபெற்ற இரண்டொரு சம்பவங்களை மட்டும் நான் இங்கே குறிப்பிடுகிறேன். என்னுடைய திண்டிவனம் பகுதியில் சில கொலைகள் பெண்கள் தொடர்பாக ஏற்பட்டன. இது தமிழ் நாடு முழுவதற்கும் தெரியும். சம்பவம் நடந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு அது தொடர்பான பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். காவல் துறையினரின் அந்தத் திறமை குற்றவாளிகளை நமது போலீஸ் துறையினர் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று யைப் பாராட்டுகிறேன். ஆனால் இடையே என்ன நடந்தது என்பதுதான் முக்கியம். யார் காவல் துறையினரிடம் போவதற்கே அஞ்சுவார்களோ, மிரளுவார்களோ அந்த எளியவர்களைக் காவல் துறையினர் அழைத்துப் போய்க்





கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். வானூர் பகுதியில் சண்டை என்றால், உடனே இன்னின்னார்தான் இதற்குக் காரணம் என்று சிலர் காவல் துறையினருக்குச் சொல்வதும், காவல் துறையினர் அவர்களின் வீட்டிற்குப் போய் பெண்களை அவமானப்படுத்தி கேவலப்படுத்தி அடிப்பதும் எந்த வகையிலே நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. ஒருவர், தன் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு போலீசுக்குப் போன் பண்ணுகிறார். இன்னாரை விசாரியுங்கள் என்று சொன்ன உடனே, டி.எஸ்.பி. யிடமிருந்தும், எஸ்.பி. யிடமிருந்தும் தகவல் வருகிறது. உடனே காவல் துறையினர் அவர்களை அழைத்து வந்து கொடுமைப்படுத்தி பொய் வழக்குகளைப் போடுகிறார்கள். இப்படி தனிப்பட்டவர்களின் விரோதங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பாகப் போலீஸ் துறையினரைப் பயன்படுத்துவது என்று வந்துவிட்டால், நாட்டிலே ஜனநாயகம் இருக்காது. காவல் துறையை வாங்க முடிந்தவர்களும் அவர்களோடு நட்பு கொண்டவர்களும் எதையும் சாதித்துக்கொள்ள முடியும் என்ற நிலை உருவாவது யாருக்கும் நல்லதல்ல.

இப்போது திருச்செந்தூரில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அந்தத் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கேசவ ஆதித்தன் உட்பட எல்லோரும் எடுத்துச் சொல்லி, இப்படிப்பட்ட கொடுமை நடக்கலாமா என்று கேட்டதன் அடிப்படையில், இன்றையதினம் மூன்று போலீஸ் அதிகாரிகளை மாறுதல் செய்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். ஆனால் அடிமட்டத்தில் இருக்கும் காவல் துறையினர் எந்த தைரியத்தில் இதையெல்லாம் செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாங்கள் எதையும் செய்ய முடியும், பொதுமக்களை எப்படியும் அடிக்க முடியும், அடக்க முடியும் என்ற எண்ணம் எப்படி இந்த அதிகாரிகளுக்கு ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் உருவானதன் காரணமாகத்தான் காவல் நிலையங்களிலும் சிறைச்சாலைகளிலும் சாவுகள் சாதாரணமாக ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சாவுகள் ஏற்படுவது என்பதே இன்றைக்குச் சாதாரண நிகழ்ச்சிகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மறைந்த எங்கள் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் அன்றைக்கு ஒரு கருத்தைச் சொன்னார். "அரசியல் வாதிகள் கெட்டுப் போகிறார்கள். Politicians are being corrupted. இப்படிப்பட்ட காலம் வந்துகொண்டிருக்கிறதே என்று வருத்தப்பட்டார்கள். ஆனால் இன்றையதினம் அந்த நிலை மாறி 'The masses are being corrupted என்ற நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்களே கெடுகிற நிலை வந்துவிட்டது. அதன் காரணமாகத்தான் நம்மால் ஒரு வேலை ஆகும் என்று நம்பி, நம்மிடம் வருகிறவர்கூட

நம்மைப் பார்த்து, ‘ இதற்கு ஏதாவது செலவாகும் என்றாலும் பரவாயில்லை, கொடுத்துவிடுகிறேன் ’ என்று சொல்லுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்மோடு பல ஆண்டுகள் பழகித் தெரிந்தவர்களேகூட இப்படிச் சொல்லுகிற நிலை ஏற்பட்டுள்ளது என்றால், அந்த அளவுக்கு இந்தப் பழக்கம் சாதாரணமாகப் போய்விட்டது. இது நல்லதல்ல.

(முற்பகல் 11-10)

இதில் ஆளும் கட்சியை மட்டும் நான் குறை சொல்லவில்லை. இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது. ஆட்சியில் இருப்பதால் அரசு கட்சிக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள். அந்த நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். சட்டம் இருக்கிறது, கைது செய்கிறார்கள். வழக்கு போடுகிறார்கள். ஆனால் அதற்காக காலையிலே மூன்று மணிக்கே வீட்டில் தட்டி எழுப்ப வேண்டுமா ? வீட்டிலுள்ள பெண்களை மிரட்டுவதெல்லாம் எதற்காக ? விமான நிலையத்திலே வைத்து அடி, ஆளைத் தூக்கி வேனிலே ஏற்று என்பதெல்லாம் எதற்காக? சட்டப்படி நடவடிக்கை எடுத்தால், அதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் இப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்கிறார்களே, அது என் ? நீங்கள் சொல்லியா இவை நடக்கின்றன ? இப்படியெல்லாம் செய்தால், அமைச்சர்கள் மகிழ்வார்கள் என்ற உணர்வால், இப்படிச் செய்வதால் தங்களுக்கு ஏதாவது தனி ஆதாயம் கிடைக்கும் என்று கருதுவதால், இப்படித் தவறாக அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டாமா ? அதிகாரி தவறு செய்துவிட்ட காரணத்தாலே, அதன் விளைவு இந்த ஆட்சியின் மீது வந்துவிடக் கூடாது என்பதற்காக அதிகாரிகளைப் பாதுகாக்க அவசர அவசரமாக “இல்லை”, “அப்படி நடக்கவில்லை” என்று அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிலையில் எங்களுக்கு எங்கே பாதுகாப்பு? நாங்கள் உங்களிடம்தானே சொல்ல முடியும். உங்களைப் பார்க்க முடியவில்லையென்றால், பத்திரிகையிலே வெளியிடுகிறோம். பத்திரிகையிலே வெளியிட்ட உடனே, நம்முடைய ஆட்சியின் மீது சொல்லிவிட்டார்கள், ஆகவே அதை மறுத்துவிட வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள். இப்படி நீங்கள் மறுத்துவிட வேண்டுமென்று கருதுவதால் தான் மறுப்பதற்கென்றே அமைச்சர்கள் இருக்கிறார்கள், எதை வேண்டுமானாலும் நாம் செய்யலாம், செய்துவிட்டு அமைச்சர்களிடம் மறுக்கச் சொல்லிவிடலாம் என்று அதிகாரிகள் கருதும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருப்பதன் காரணமாகத்தான் இன்றைக்கு குற்றங்கள் மலிந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.



ஊரிலே பஸ் கொள்ளை நடக்கிறது. இப்படிச் சொல்லும்போது, மற்ற மாநிலங்களிலே நடக்கவில்லையா என்று கேட்பதில் பலன் இல்லை. நம் மாநிலத்தில் இது வரை இல்லாத நிகழ்ச்சிகள் இப்போது துணிச்சலாக நடைபெறுகின்றன என்றால், அதற்குக் காரணம் காவல் துறை வேகமாகச் செயல்படவில்லை என்பதுதான். காவல் துறையினர் “லெத்தார்ஜியாக” (Let argy) இருக்கிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் தான் குற்றங்கள் இன்றைக்கு மலிந்து வருகின்றன. ஆகவே காவல் துறையைச் சீர்படுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கடைசி என்று சொன்னீர்களே ?

**திரு. க. இராமமூர்த்தி :** போலீஸ் பற்றி மட்டும் கூறிவிட்டு முடித்துக்கொள்கிறேன். ஒரு செய்தியைக் கேட்டபோது மகிழ்ச்சியாக இருந்தது. நண்பருடைய பத்திரிகையாக இருந்தாலும் கூட, தப்பு பண்ணினால் கண்டிக்க வேண்டியதுதானே. சென்னை நகர போலீஸ் கமிஷனர் நோட்டீஸ் கொடுத்திருந்தார், தவறான தகவலைத் தருகிறார்கள் என்று. ஒரு அம்மாவுக்குக் காவல் போட்டார்கள் என்று எழுதியது தப்பு. உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். தனிப்பட்டவர்களைப் பற்றி எழுதுவது நல்லதல்ல. ஆனால் போலீஸ் துறையைப் பார்த்து ஒன்று கேட்கிறேன். கிரிக்கெட் மைதானத்தில் அமைச்சர்களுக்கு இல்லாத மரியாதை ஓர் அம்மாவுக்குக் கொடுத்தார்கள் என்றால், யார் அந்த அம்மா ? அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் என்ன சம்பந்தம் ? அப்படிப்பட்ட மரியாதை செய்த காவல் துறை மூலம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காரணத்தாலே ஒன்றைச் சொல்லுகிறேன். போலீஸ் கமிஷனர் தன்னுடைய அறிக்கையில் ஒரு தனிப்பட்ட நடிகைக்குக் காவல் போடவில்லை என்று எச்சரித்திருந்தார். ஆனால் நடிகை தான் கொடுத்த வக்கீல் நோட்டீஸில், “போலீஸ் காவல் கொடுக்கப்பட்டிருந்தது, அது என்னுடைய உரிமை, நான் கேட்டேன், கொடுத்தார்கள்” என்று குறிப்பிட்டிருந்தார் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்த அம்மாவை ஒரு நிகழ்ச்சியில் டி வி யில் காட்டாததால், மற்ற நிகழ்ச்சிகளுக்கு டி.வி.காரர்கள் வரக்கூடாது என்று தடுத்தார்கள். டி.வி. காரர்கள் கருணை கொண்டு இந்த அம்மா நிகழ்ச்சியையும்

டி.வி. யில் காண்பித்திருந்தால், என்ன கதியாகியிருக்கும்? நான் கூட நேரில் போய்ப் பார்க்கவில்லை. டி.வி. யில்தான் பார்த்தேன். அமைச்சராக இல்லாதவர்களுக்குக் கூட நமது போலீஸ் பாதுகாப்பு கொடுப்பார்கள் என்று நாம் பெருமைப்படலாம். ஆனால் மற்றவர்கள் பெருமைப்படுவார்கள் என்று நாம் எண்ண முடியாது. காக்கி சட்டை போட்டால், யாருக்கு வேண்டுமானாலும் காவல் கொடுக்கலாமா? இதைப்பற்றி எழுதினால், திரு. வீராசாமி மீது காவல் துறைக் கமிஷனருக்குக் கோபம் வருகிறது, அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிகிறது. ஆனால் கமிஷனர் செய்த தவறுக்கு நீங்கள் தானே நடவடிக்கை எடுக்க வேண்டும். என்ன நடவடிக்கையை எடுத்தீர்கள்? இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்த காரணத்தால்தான் திருப்பத்தூரில் செத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 15-க்கும் அதிகமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நக்சலைட்டுகளுக்காக நான் வக்காலத்து வாங்க வரவில்லை. அதைப்பற்றி முதன் முதலில் எடுத்துச் சொன்னவன் நான்தான் என்ற பெருமை எனக்கு உண்டு. அப்போது பல பேர் அதை ஏன் என்று கேட்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள்கூட அதைப்பற்றி வேகமாகப் பேசுகிறார்கள். நான் அன்றைக்குப் பேசியபோது, "நக்சலைட்டுகள் பற்றி அதிகமாகப் பேசி பிரச்சினைகளைப் பெருக்க வேண்டாம்" என்று அரசுத் தரப்பிலே கேட்டுக் கொண்டார்கள். அப்போது ஓர் உறுதியைக் கூட தந்தார்கள். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஏழை மக்களுடைய வாழ்க்கை மற்றப் பகுதிகளில் உள்ளவர்களை விடக் கொடுமை மிகுந்ததாக இருக்கிறது, ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். 15 பேர் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் செத்தவர்கள் 19 பேர். அதிலே அரிசனங்கள் இருக்கிறார்கள். இன்னுமொரு சாதியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அந்தச் சாதியைக் குறிப்பிட விரும்பவில்லை. அவர்கள் மிக மிக பின்தங்கிய வகுப்பினர். இவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு பொருளாதார ரீதியாக அந்த ஏழைகளின் வாழ்க்கையை வளப்படுத்த, அன்றாடம் சாப்பாடு கிடைக்கக் கூடிய அளவிற்கு நிலைமையை உயர்த்தியிருக்கிறார்களா? அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்க ஏதாவது சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களா? அவர்களைச் சுடச் சொல்ல அதிகாரம் இருக்கின்றபோது, அவர்களைக் கட்டி அணைக்க மனம் இருக்க வேண்டாமா? அப்படி இல்லாமல் இவ்வளவு பெரிய கொடுமையைச் செய்யும் நிலையை வளர்த்துக்கொள்வது



நல்லதா? இத்தகைய பிரச்சினைகளையெல்லாம் ஆளுநர் உரையிலே முறையாகச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருந்தால், பரவாயில்லை. ஆனால் ஒரு பக்கத்திலே சிற்சில காரியங்களை உண்மையான நல்ல நோக்கத்தோடு சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், அந்த நோக்கங்கள் நிறைவேறுகிற அளவிற்கு நிர்வாக இயந்திரத்தைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு மணி நேரம் 35 நிமிடங்கள் மனத் துயரம் தீரப் பேசியிருக்கிறார். இதையே முன்மாதிரியாகக் கொள்ள வேண்டாம். இன்றோடு முடிவதாக இருந்ததால் அனுமதித்தேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாளை தொடரும். இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மேலவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(முற்பகல் 11-17 மணி)

## 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

Nil

### B. *Reports, Notifications and Other Papers.*

22. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations contained in the Report on Public Libraries—Ninth Report (Tamil).

23. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations contained in the Report on Guest Houses Maintained by the Public Department Tenth Report (Tamil).

## இணைப்பு

(1 ஆம் பக்கத்தில் இனம் 1 க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், தஞ்சாவூர், ராசிபுரம் போன்ற பகுதிகளில் சுத்தப்பட்டு நூலைக்கொண்டு சுமார் 40,000 கைத் தறிகள் பட்டுத்துணி நெசவில் ஈடுபட்டுள்ளன. இவற்றிற்கு ஆண் டொன்றுக்கு சுமார் 10 இலட்சம் கிலோ (1000 டன்) சுத்தப்பட்டு நூல் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சுத்தப்பட்டின் அளவு ஆண்டொன்றுக்கு சுமார் 150 டன் மட்டுமேயாகும். பொதுவாக தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் சுத்தப்பட்டு நூல் தவிர, இந்நூலை நெசவாளர்கள் கர்நாடக மாநிலத்திலிருந்தும் பெருமளவில் பெற்று வருகின்றனர். ஆனால், இவ்வாண்டு கர்நாடகத்தில் பட்டுப்புழுக்களுக்கு ஏற்பட்ட நோயின் காரண மாக பட்டு நூல் உற்பத்தி குறைந்ததன் விளைவாக அதன் விலை டிசம்பர் 80-ல் கிலோ ஒன்று ரூ. 250 ஆக இருந்தது. டிசம்பர் 81-ல் ரூ. 600 முதல் 650 வரை உயர்ந்துவிட்டது. இதனால் பட்டுத்துணி உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் இத்தொழிலைத் தொடர்ந்து நடத்துவதில், சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமையைச் சமாளிக்க, வெளி நாட்டி லிருந்து கச்சாப் பட்டு இறக்குமதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு இந்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையரையும் மற்றும் மத்திய பட்டு வாரியத்தையும் (சென்ட்ரல் சில்க் போர்டு) வலியுறுத்தியது. இதற்காக தமிழ் நாட்டில் இருந்து ஒரு தூதுக் குழுவும் டெல்லி சென்று மத்திய அரசிடம் இது குறித்து வலியுறுத்தியது.

மத்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையர் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவற்றுடன் மேற்படி தூதுக்குழு பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இவ்வாறு, எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக மத்திய அரசு தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம் மற்றும் மாநிலங்களின் தேவைக்காக 250 டன் கச்சாப்பட்டு நூலை சீனாவிலிருந்து மத்திய பட்டு வாரியம் மூலமாக இறக்குமதி செய்ய முடிவெடுத்து இதற்காக ஒரு குழுவினை சீன நாட்டிற்கு அனுப்பி வைத்தது. மேற்படி 250 டன் சீன நாட்டு பட்டு நூல் இறக்குமதி தொடர்பான ஒப்பந்த பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து, அதன் அடிப் படையில் சீன நாட்டில் இருந்து கச்சாப்பட்டு இறக்குமதி ஆரம்பித்து விட்டது. இறக்குமதி நாலைந்து தவணைகளில் (இம்மாதம் முதல் மே மாதம் வரை) பூர்த்தி செய்யப்படும். இறக்குமதியாகும் 250 டன் கச்சாப் பட்டில் சுமார் 89 டன் கச்சாப்பட்டு தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படும்



எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பட்டு நூல் கிலோ ரூ. 450 என்ற கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்படும். முதல் தவணையில் வர இருக்கும் 9 டன் கச்சாப்பட்டு கூட்டுறவு சங்கங் களுக்கு கோவாப்டெக்ஸ் மூலம் விநியோகம் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் இயங்கும் பட்டுத் தறிகளுக்கும் இறக்குமதி செய்யப்படும் சுத்தப்பட்டை சீராக விநியோகம் செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிடையில் கர்நாடக மாநிலத்திலிருந்து கிடைக்கும் உள்நாட்டு கோராப்பட்டின் உற்பத்தி சீரடைந்து சற்று விலை குறைவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் இறக்குமதியில் இருந்து ஒதுக்கப்படும் சீன கச்சாப்பட்டு தமிழ்நாட்டு நெசவாளர்களின் நெருக்கடியைத் தீர்க்கத் துணை செய்யும். இதன் மூலம் பட்டு நெசவாளர் களின் தற்போதைய சிரமங்கள் விரைவிலேயே விலகுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வியாழக்கிழமை, 1982 பிப்ரவரி 11.

தை 29, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### உணவுப்பொருள் பங்கீட்டுக் கடைகளுக்கு பறக்கும் படை.

† * 51. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளைக் கண்காணிக்க, பறக்கும் படை போன்ற ஒரு தனிப் பிரிவினை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளில் நடைபெறும் சில தவறுகளை, ஒழுங்கீனங்களை அல்லது முறைகேடுகளைக் கண்காணிக்க என்று ஒரு பறக்கும் படை அமைக்கும் கருத்து அரசிடம் இல்லாவிட்டால்கூட, காவல் துறையில் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தியாவது இந்தக் கடைகளைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

---

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது.

[1982 பிப்ரவரி 11

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகளைக் கண்காணிக்கும் வகையிலே தனிப் படை அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்த நியாய விலைக் கடைகளைக் கண்காணிக்க நுகர் பொருள் வாணிபக் கழகத்தில், கூட்டுறவுத் துறையின் மூலமாக மேற்பார்வை யாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த மேற்பார்வையாளர்களைக் கவனிக்க உணவுப் பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறையிலே மேல் அதிகாரிகளும் இருக்கிறார்கள். அத்துடன் மண்டல மேல் அதிகாரி, கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர்கள் போன்றவர்கள் அதைக் கண் காணித்து வருகிறார்கள். இது தவிர கடைகளிலே உள்ள தவறுகளைப்பற்றிப் புகார்கள் வருமானால், அந்தக் கடை எல்லைக்குள் உள்ள அதிகாரிகள் விரைந்து போய் ஆராய முடியும். பொது மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு என்று தனி வருவாய் அதிகாரிகள், கோட்ட மாவட்ட வருவாய் அலுவலர்கள், வட்ட மாவட்ட விநியோக அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்காணிக்கவும் செய்கிறார்கள். அந்த உரிமைகள் அவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. அந்த அதிகாரம் வழங்கப்பட்டு அந்த முறைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபோன்று, உணவுப் பொருள் வழங்கு துறையில் ஒரு குற்றப் புலன் ஆய்வுத் துறை, காவல் துறை கூட்டுத் தலைமை அதிகாரிகள் அலுவலகத்தில் ஒரு சிறு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அப்படி ஒரு 'செல்' இருக்கிறது. குற்ற முறையீட்டுக் குழு என்று ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் திடீரென்று சோதனை செய்து இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று இருக்கிறது. இந்தக் குழு 1980-லே அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய தொலைபேசி எண் 74316. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், உள்ள இந்தத் துறை 24 மணி நேரமும் வேலை செய்வது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த நேரத்தில் எந்தக் குறைபாடு என்று வந்தாலும், உடனே போய் ஆய்வு செய்ய வேண்டுமென்பதுதான் அதன் வேலை. 1980-81 ஆம் ஆண்டில் 67 நியாய விலைக் கடைகளில் திடீரென்று சோதனை செய்தார்கள். அப்படிச் செய்யப்பட்டு, 10 கடைகள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 11]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன இந்த அத்தனை ஏற்பாடும் செய்யப்பட்ட பிறகும் இப்போது இந்த நியாய விலைக் கடைகளில் காணப்படும் புகார்கள், ஒழுங்கீனங்கள் குறைந்து வருகின்றனவா? இது குறித்து அரசினுடைய கருத்து என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவ்வப்போது புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. புகார்கள் எக்காரணத்தைக் கொண்டும் வராத அளவுக்கு பொதுமக்களுக்கு நியாயம் வழங்குகின்ற முறையில் கண்காணிக்க வேண்டும் என்று அவ்வப்போது அறிவுறுத்திக்கொண்டே வருகிறோம். எங்கெங்கே புகார்கள் வருகின்றனவோ, ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகளை அனுப்பி உடனே கண்காணிக்க வேண்டும் என்று நாம் சொல்கிறோம். இருந்தாலும் மேற்பார்வையாளர்கள், கண்காணிப்பாளர்கள் இவர்களுக்கும் கடைக்காரர்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்பட்டு ஒன்று சேர்ந்துவிட்டால், அப்போது சில சிக்கல்கள் ஏற்பட்டு இக்கட்டான நிலை ஏற்பட்டு விடுகிறது. அதைத் தடுத்து நிறுத்துகின்ற முயற்சியிலே இருக்கிறோம். அதற்கு என்ன முறைகள் வகுக்கலாம் என்று பார்க்கிறோம். அதற்கு புதிய கார்டுகள் வழங்குகின்ற போது, அதை 'புக்' வடிவத்திலே போட்டு, முழு விவரங்களும் அதில் போட்டிருக்க வேண்டும். அதிலே குறித்து வைத்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி குறித்து வைத்திருக்காவிட்டால், அதற்கான பொருள்கள் என்ன ஆயிற்று என்று மறுபடியும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். வெறும் கார்டைக் காண்பிப்பதன் மூலமாக அந்தக் கார்டுதாரர்கள் வாங்காவிட்டால், அவைகளையெல்லாம் சேர்த்து தனியாக விற்கக்கூடிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஒரு பாஸ்போர்ட் மாதிரி கொடுக்க இந்தத் துறையிலே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 2, 3 மாதங்களில் தரப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அப்படிச் செய்வதால் இந்தக் குறைபாடுகளை ஓரளவுக்குக் குறைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** பெரும்பாலும் உணவுப் பொருள்கள் பங்கீட்டுக் கடைகளிலே 5 வகை அல்லது 5 வகைக்கு அதிகமான உணவுப் பொருள்கள், பாமாயில் எண்ணெய், மண்ணெண்ணெய், அரிசி, சர்க்கரை போன்ற பொருள்கள் தரப்படுகின்றன. இந்த 5 பொருள்களையும் ஒரே நாளில் இந்தக் கடைகளிலே விநியோகம் செய்வதில்லை. நடுத்தர வர்க்கத்தினர், சென்னை போன்ற பெரிய நகரங்களிலே ஒரு நாளிலேயே பணம் கொடுத்து எல்லாவற்றையும் வாங்க இயலாதவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளைக்கு ஒரு பொருள் என்று பணம் கொடுத்து

வாங்குவதற்கும் வசதி இல்லை. இதனால் ஏழை நடுத்தர வர்க்கத்தினர் பெரும்பாலும் அதிக சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள். அதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதை ஒழுங்குபடுத்தும் வகையிலே ஓரளவுக்கு முழு அளவிலே வாங்க முடியாதபோது, பாதி அளவுக்கு வாங்க வசதி செய்யுமா? இந்தப் பங்கீட்டுப் பொருள்களை விற்பதிலே ஏற்கெனவே தவறு செய்யாத தனி வியாபாரிகளுக்கு, இந்தப் பொறுப்பினைப் பகிர்ந்து அளிப்பது பற்றி அரசு சிந்திக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியார் துறையிலே வியாபாரம் செய்பவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்துப் பார்த்து, அவர்களும் சிலபல தவறுகளைச் செய்ததால் நாம் அவற்றைக் கட்டுப்படுத்த வழியில்லை என்ற காரணத்தால், இந்த 16,300 நியாய விலைக் கடைகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபோன்று, ஒரு இரண்டாயிரம் ஒரு ஆயிரம் அல்லது ஒரு ஆயிரத்தி ஐநூறு கார்டுதாரர்களுக்கு இந்த நியாய விலைக் கடைகளில் எடுத்த எடுப்பிலேயே ஒரு மாதத்திற்குத் தேவையான பொருள்களை வாங்க வேண்டுமென்று வந்தால், அந்த 1,500 பேர்களுக்கும் ஒரே நாளில், ஒரே சமயத்தில் விற்கின்றபோது, வாங்க வருபவர்களுக்கும் நேரமாகும் என்பது மட்டுமல்ல, அங்கே வேலை பார்க்கின்றவர்களுக்கும் அவ்வளவு பேர்களுக்கும் இரண்டு பேர் விநியோகம் செய்வது கடினமாக இருக்கும். ஆகவே இப்போது ஒரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில், திங்கட்கிழமை, வியாழக்கிழமை என்று குறிப்பிட்டு அந்த நாட்களில் கார்டுதாரர்களை வாங்கச் செய்ய வேண்டும். ஆகவே ஸ்டேக்கரிங் பண்ணி வரையறுக்க வேண்டும். யார் யாருக்கு எந்த எந்தக் கிழமை என்று வரையறை செய்தால் வசதியாக, வாய்ப்பாக இருக்கும். அதை வாங்குகின்றவர்களுக்குத் தெரிந்தே கடைக்காரர்கள் செய்யலாம் என்று சொல்லி, மதுரையிலே அது நடைமுறைப்படுத்தப்பட்டு, அது ஓரளவுக்கு வெற்றிகரமாக இருக்கிறது. அந்த முறை சென்னையிலே சில பல இடங்களிலே கடைப் பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விருப்பம் அறிந்து அந்தக் குறிப்பிட்ட நாளில் கொடுக்கலாம். அந்த நாளை அவர்கள் ஒதுக்கிக்கொள்ளலாம். அப்படி அவர்கள் வருகின்றபோது, காரண்ட்டியாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்த அளவுக்குச் செய்யலாம். முதல் நாள் வந்தவர்களுக்குக் கிடைத்தது; நாலாம் நாள் வந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமைகள் ஏற்படக்கூடாது. கூடுமானவரை ஒவ்வொரு கார்டுதாரருக்கும் ஒரு குறிப்பிட்ட நாளில் நேரத்தில் கொடுப்பது பற்றி ஆராய்ந்து அதற்கான முறைகளை வகுப்பது பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மற்றொன்று,



ஒவ்வொரு சமயத்திலே பொருள்கள் கிடைக்காமல் போகிறது. காரணம், பாமாலின் எண்ணெய் போன்ற சில பொருள்கள் அவ்வப்போது வருகின்ற போது ஒதுக்கப்படுகின்றது. அப்போதுதான் சரிவர விநியோகிக்கப்படுகிறது. அதுமாதிரி சர்க்கரையும் வருகிறது. அதையும்கூட நாம் நம்முடைய கிட்டங்கியிலே சேகரித்து வைத்துக் கொண்டு, அந்த மாதம் 1 ஆம் தேதி யிலிருந்தே கிடைக்கின்ற அளவுக்குச் செய்தால் கார்டுதாரர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வாங்கிக் கொள்ள முடியும். கூடுமானவரையில் ஒரே சமயத்தில் நான்கைந்து பண்டங்கள் கொடுப்பதுபற்றி ஆராய்ந்து அந்த வகையிலே கொடுக்க முறைகளை வகுக்கும்படியும் கேட்டிருக்கிறோம். அதற்கு சில சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது வெற்றிகரமாக இருக்கிறது. ஒரு சில இடங்களிலே இந்த முயற்சிகள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களுக்காக வீட்டுப் பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வெய்யில் காலம். அவர்கள் வாடுகின்ற நிலையில்லாமல் அவர்களுக்குக் கீற்றுப் பந்தல் போட்டு, அதில் அவர்கள் நின்று இருந்து வாங்கிச் செல்ல அரசு ஏற்பாடுகள் செய்யுமா? பறக்கும்படை என்று சொல்கின்றார்களே, அது ஹெலிக்காப்டரில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பறக்கின்ற படையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பறக்கும் படைபற்றி எந்தக் குறிப்பும் இல்லை என்று சொல்லிவிட்டேன். இன்னமும் சொல்லப் போனால், மேல் நாடுகளிலே இருப்பது போன்று ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 9 மணி முதல் 10 மணி வரை, 10 மணி முதல் 11 மணி வரை, 11 மணி முதல் 12 மணி வரை என்று கூட வைத்துக்கொள்ளலாம். அப்படிச் செய்துவிட்டால், இன்னும் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட மணியில் கொடுப்பது என்று வந்துவிட்டால், வசதியாக இருக்கும். கூடுமானவரையில் அவர்களைக் காக்க வைக்காமல் இருக்க என்ன செய்வது என்பதைப்பற்றி இந்தத் துறையினர் ஆராய்ந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, உணவு விநியோகக் கடைகளில் ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்களுக்குப், பெறவேண்டிய குறிப்பிட்ட அளவுக்கு உணவுப் பொருள்களைப் பெற வேண்டுமென்று விதி

இருக்கிறது. அந்த நிலைமையில், வறுமைக் கோட்டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் அவ்வளவு தொகையை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு போய் பொருள்களை அந்த நாளுக்குள் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் கடைகளில் போய் பாதி அளவுக்காவது வாங்கிக் கொள்ள வசதி செய்ய வேண்டும். முழுமையாக வாங்க முடியாத அளவில் அவர்கள் பாதி கேட்கும்போது, கடைக்காரர்கள் பாதிக்குக் கொடுத்து விட்டு, முழுவதற்கும் கையெழுத்துப் போட்டுவிடும்படியும், அதற்குக் கூடுதலாக ஒரு ரூபாய் கொடுப்பதாகவும் சொல்லி, கடைக்காரர்கள் அவர்களுக்குக் கொடுத்துவிடுகின்றார்கள். இது நம்முடைய உணவுப் பங்கீட்டுக் கடைகளிலே நடக்கக்கூடிய நடைமுறை. ஒரு கார்டிலே 5 யூனிட்டு வாங்க வேண்டுமென்று இருந்தால், இந்தக் குறையைத் தவிர்க்க, கேரளாவிலே ஒரு வசதி செய்து தந்திருக்கிறார்கள். ஒரு கார்டிலே 5 யூனிட்டு பொருள் வாங்க வேண்டுமென்று இருந்தால், அந்த மாதத்திற்குள் என்றைக்காவது ஒரு நாள் போய் வாங்கலாம். முதலாவது ஒரு நாள் ஒரு யூனிட்டு, இன்னொரு நாள் இன்னொரு யூனிட்டு, இப்படி இரண்டாவது, மூன்றாவது நாள் என்று போய் ஒவ்வொரு யூனிட்டாக வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. 5 கிலோவை 1 தடவையாக வாங்கிக்கொள்கின்றார்கள். அப்படி இருந்தால் ஒரு கார்டை கூடுதலான விலைக்கு விற்காது குறைந்த பொருள்களை அவர்கள் வாங்கிக் கொண்டு, மீதத்திற்கு முழுமையாகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டு வரமுடியாத நிலைமைகள் ஏற்படும். கடைக்காரர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் அதில் கஷ்டம் வராது. ஆகவே இந்த நிலைமைகளை அரசு பரிசீலனை செய்து, தேவையான பொருள்களை பணம் வைத்திருப்பதற்கு ஏற்ப வாங்கிக்கொள்கின்ற வசதி வாய்ப்புக்களை அரசு உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். மேலும் கொடுக்கின்ற பொருள்களின் அளவு குறைகிறதாகச் சொல்கின்றார்கள். 2 கிலோ என்று சொல்லிக்கொடுக்கிறார்கள் அது ஒன்றே முக்கால் கிலோ இருக்கிறது. இதை எதிர்த்துக்கொண்டு சொல்ல முடியாத நிலைமைகளும் இருக்கின்றன. அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(முற்பகல் 9.40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அளவு குறைந்திருக்குமானால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க சட்ட திட்டங்களில் விதிமுறை இருக்கிறது. ஆனால் அளவைப் பிரித்து கொடுக்கலாமா என்பதைப்பற்றிச்



சொல்கிறார்கள். மாத அளவிலே கொடுக்கிறார்களா என்பது தெரியவில்லை. இப்போது வாரத்திற்கு ஒரு கிலோ என்று முதியவர்களுக்கும், வாரத்திற்கு அரை கிலோ சிறுவர்களுக்கும் என்று வைத்திருக்கிறோம். ஒரே சமயத்தில் ஒரு மாதத்திற்குத் தேவையானதை வாங்காமலிருக்கும்போது, அதைப் பிரித்துக்கொடுக்கலாமென்று இங்கே உறுப்பினர் சொல்லியிருக்கிறார். சாத்தியப்படுமானால் அதுபற்றி ஆராயலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தற்போது பொதுமக்களுக்கு உணவுப் பங்கீட்டுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிகளிலே மதிய உணவுத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. மாணவர்களுக்குத் தேவையான அரிசி போன்றவைகளை வெளியிலே அதிக விலை கொடுத்து அவர்கள் வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. மாணவர்களுக்கு வழங்குவதற்கு எவ்வளவு தேவையோ அதை உணவுப் பங்கீட்டுக் கடைகளின் மூலம் வழங்கவும் அதற்கான அட்டைகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுமா? அதன் மூலம் அவர்கள் குறைந்த விலையில், நியாய விலையில் அரிசி போன்றவைகளைப் பெற வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விளக்கக் குறிப்புகள் விவரமாக இல்லை. சாதாரணமாக சென்ட்ரல் கிச்சன் என்று வரும்போது, நாம் அவ்வாறு வழங்குகிறோம். ஆனால் அம்மாதிரி வசதி இல்லாத இடங்களில் உள்ள நிலைமைபற்றித் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், அவர்களுடைய செலவினத்தைக் குறைக்க இப்படி கொடுக்கலாமா என்பதுபற்றி ஆராயலாம். இதுகுறித்து தனிக் கேள்வி கேட்டால், பரிசீலித்துச் சொல்லலாம். ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** பொதுவாக ரெயில்வே, அஞ்சல் நிலையம் ஆகியவற்றில் புகார் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ளவர்கள் வேறு எதற்கும் பயப்படுவதில்லை. ஆனால் புகார் புத்தகத்துக்கு மட்டும் பயப்படுகிறார்கள். அதுபோல் அந்தந்த ரேஷன் கடைகளில் புகார் புத்தகம் வைக்கப்படுமா ? அப்படி வைத்தால் பொது மக்கள் தங்களுக்கு ஏற்படும் குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும். மேலும் அவற்றைக் கண்காணிக்கின்ற அதிகாரிகளுக்கும் உதவும் அல்லவா ? அது பற்றிப் பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது அந்த முறை இருக்கிறதா இல்லையா என்கிற விவரம் தெரியவில்லை. நல்ல யோசனை. அதுபற்றி ஆராயலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** கன்னியாகுமரி மாவட்டம் ஒரு எல்லை மாவட்டம். அதற்கு மற்ற இடங்களை விட அதிக அளவு உணவுப் பங்கீடு தேவை. இடைக்காலத்திலே அங்கு அதிகமாக அரிசி கொடுத்தார்கள். பிறகு தமிழ் நாடு பூராவும் சிக்கலான நிலை இருந்தபோது, குறைத்ததால் அங்கே இப்போது அதிக அளவில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பழைய அளவில் அங்குள்ளவர்களுக்கு அரிசி போன்றவை ரேஷனில் கொடுக்கப்படுமா ? குறைந்தபட்சம் கல்குளம், விளவங்கோடு போன்ற பகுதிகளுக்காவது கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பிட்ட காலத்திலே அங்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அதாவது 1980-க்கு முன்பு இருந்தவர் அவ்வாறு கொடுத்து விட்டார். பிறகு தட்டுப்பாடு வந்தபோது 30 கிலோ என்று இருந்ததை 24 கிலோ ஆக்கி, இப்போது 20 கிலோ என்று ஆக்கியிருக்கிறோம். எல்லா மாவட்டங்களையும் பொதுவாக ஒரே நிலைமையில் கவனிக்க வேண்டுமென்ற ரீதியில் அதையும் கவனிக்கிறோம். ஒரு கார்டுக்கு வாரத்திற்கு 5 கிலோ அரிசி என்பது மாறி பெரிய ஆளுக்கு 1 கிலோ என்றும், சிறுவர்களுக்கு அரை கிலோ என்றும் நடைமுறைப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் நாம் எல்லா இடங்களிலும் ஒரே அளவை கடைப்பிடித்து வருகிறோம்.

### *City Compensatory Allowance and House Rent Allowance for areas around Madurai Corporation.*

† * 52. THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) Whether it is a fact that as per the reference of District Collector, Madurai, No. K. 2/73217/79, dated 12th November 1979 places such as Koodakovil, Chinna Ulagani, Periya Ulagani, Mela Upplikundu, Kallanai, Palava Nandunkulam and Puthiya Nedunkulam come under the 16 K.M. range around Madurai Corporation: and

(b) if so, the action taken for sanction of House Rent Allowance and City Compensatory Allowance to the Teachers and other Government employees residing in the above places?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம், ஐயா.

(இ) மதுரை மாவட்ட ஆட்சியாளர் கடிதத்தில் (கே. 2/73217/79) நாள். 12—11—1979) குறிப்பிடப்பட்ட இடங்களில் பணியாற்றும் அரசுப் பணி

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.





யாளர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கு 1—4—1981 முதல் மதுரை நகருக்கு ஈடான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்க நிதித்துறை 2—5—1981 நாளிட்ட அரசாணை எண் 301-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு ஆணைகள் இருந்தாலும்கூட வீட்டு வாடகைப்படி போன்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை சில அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு வழங்குவதில்லை. அதுபோல் அரசுப் பள்ளிகளில் வழங்குகின்ற சலுகைகளை தனியார் பள்ளிகளில் வழங்குவ தில்லை. அதுபோல் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு வழங்கு கின்ற சலுகையை அங்குள்ள தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கு வழங்குவதில்லை. அதுபற்றிய விவரம் மாண்புமிகு அமைச்சரிடம் இருக்கிறதா ? இதைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விடுபட்ட இடங்களைப் பற்றிய விவரத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டோம். அதன் அடிப்படையில் ஆணையில் உள்ளவாறு இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுமாதிரி, ஒரு சாராருக்குக் கொடுக்கப்படாமல் இருந்தால், அதுபற்றிய குறைபாட்டைத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப் படும்.

### *Exemption of Books from Sales tax*

† * 53. Q—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that Books and Note-books are exempted from multi-point levy of Sales Tax; and

(b) if so, whether there is any proposal to extend this benefit to Sports goods also?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ், விற்பனை வரியிலிருந்து பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட படிக்கும் புத்தகங்கள் மற்றும் மாணவர் குறிப் பேடுகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.

(இ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

**திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் :** பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு இந்த விளையாட்டுப் பொருள்கள் எந்த அளவுக்கு அத்தியாவசியமானவை என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு சிறந்த விளையாட்டு வீரர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியா ? (சிரிப்பு).

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தவிரவும் இந்த விளையாட்டு என்பது கல்வியின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "எப்படி புத்தகங்களையும் குறிப்புகளையும் கல்வியின் இன்றியமையாத அத்தியாவசியப் பொருள்களாகக் கருதி சலுகை அறிவித்திருக்கிறார்களோ அதுமாதிரி விளையாட்டு சாமான்களையும் இன்றியமையாத பொருள்களாகக் கருதி கூட்டுறவு மூலம் வழங்கப்படுகின்ற பொருள்களுக்காவது" இந்த வரி விலக்கு அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்

## வேர்க்காடு அருகே தீ விபத்து.

† * 54 வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981-ம் ஆண்டு மே மாதம் இராமேசுவரத்தைச் சேர்ந்த வேர்க்காடு அருகே தீ விபத்து ஏற்பட்டதால் வீடு இழந்த குடும்பங்கள் எத்தனை ?

(இ) தீ விபத்தில் காயமுற்றவர்கள் எத்தனை பேர் ?

(உ) பொருட் சேதத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

(எ) தீ விபத்துக்குக் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) தீ விபத்தில் 66 குடும்பங்கள் வீடிழந்தன.

(இ) ஒருவரும் காயமுறவில்லை.

(உ) பொருட்சேதத்தின் மொத்த மதிப்பு ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம்.

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.





(எ) சில வயதான பெண்கள் மண்ணெண்ணெய் விளக்குகளைக் கவனக் குறைவாகக் கையாண்டதால் தீ விபத்து ஏற்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 66 வீடுகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 66 வீடுகளையும் திருப்பிக் கட்ட ஒவ்வொரு வீட்டுக்கும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ? அந்தத் தொகையைக் கூடுதலாகத் தர வேண்டுமென்ற முறையீடு அவர்களிடமிருந்து வந்துள்ளதா ? அதுபற்றி அரசு பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இன்றைக்கு இருக்கிற இந்த அரசு ஒரு உத்தரவு போட்டு தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற குடிசைகள் ஒவ்வொன்றுக்கும் 200 ரூபாய் வீதம் வழங்குகிறது. முன்பு 100 ரூபாய் என்று இருந்ததை இப்போது தான் 200 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தீ விபத்தால் ஒரு குடிசை அல்லது வீடு அழிந்துவிட்டால், அதைத் திருப்பிக் கட்ட, கொடுக்கப்படும் 200 ரூபாய் போதுமானதா ? 100 ரூபாயை 200 ரூபாயாக ஆக்கினாலும் கூட, இப்போது விலைவாசிகள் மேலும் ஏறியிருப்பதை முன்னிட்டு குறைந்த அளவு அதை 500 ரூபாயாக ஆக்குவது தான் முறை. அதுபற்றி பரிசீலிக்கப்படுமா ? அடுத்து, 4 லட்சம் ரூபாய்க்கு மேல் பொருட்சேதம் அல்லது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 200 ரூபாய்க்கு அவர்கள் ஓலை வாங்கக் கூட முடியாது. வீட்டு தட்டுமுட்டுப் பொருள்கள் எல்லாம் இழக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி உதவினால் தான் அவர்கள் அவற்றைத் திரும்பவும் வாங்க முடியும். அதற்கு எந்த விதத்தில் அரசு உதவி செய்து வருகிறது ?

(முற்பகல் 9-50).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதற்காகத்தான் அரசு அவர்களுக்கு 2,000 ரூபாய் கடனாகக் கொடுக்கிறது. ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வட்டியில்லாத கடனும், மற்றவர்களுக்குக் குறைந்த வட்டி வீதத்திலும் கொடுக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்தத் தீ விபத்து சென்ற ஆண்டு மாவட்டவாரியாக எவ்வளவு ஏற்பட்டது, இந்த ஆண்டு மாவட்ட வாரியாக எவ்வளவு ஏற்பட்டது ? இப்போது குறைந்திருக்கிறதா அல்லது கூடியிருக்கிறதா ?

[1982 பிப்ரவரி 11

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** துணைக் கேள்வியை இவ்வளவு விரிவாக்கக்கூடாது. அசல் கேள்வியை ஒட்டி, ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றித்தான் கேட்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** 1978-79-லே 1,350 தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1979-80-லே 1,537 தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1,350-க்கும் 1,537-க்கும் வித்தியாசம் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இவ்வாறு தீ விபத்துக்களிலே வீடிழப்பவர்களுக்கு 200 ரூபாய் தருவது 2,000 ரூபாய் கடன் கொடுக்கும் நடைமுறைகளுக்கு மேலாக வீடிழந்திருப்பவர்களுக்கு பிரச்சினைகள் எழுந்து, இப்படிக் கொடுக்கும் பணத்திற்கும் மேலாக அவர்கள் ஊரிலே கடன் வாங்குவதும் உண்டு. இம்மாதிரி சந்தர்ப்பங்களிலே, அப்படியும் கடன் வாங்க முடியாமல் இருப்பவர்களுக்கு, ஆர்.டி.ஓ. அல்லது சப்-கலெக்டர் அவர்களின் எல்லையிலே இருக்கும் பனை மரங்கள் மற்றும் தென்னங்கீற்று போன்றவைகள் அரசுக்குச் சொந்தமாக இருக்கும் மரங்களிலேயிருந்து எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அரசு அதிகாரிகளுக்கு ஆலோசனை தருமா ? இராமேசுவரத்திலே இது போன்ற நிலைமை ஏற்பட்ட போது இவ்வாறு பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இப்போது இருக்கிற அரசு உத்தரவிட்டிருப்பது போன்று, இலவசமாக ரூ. 200-ம், கடனாக ரூ. 2,000-ம் கொடுப்பதைவிட வேறொன்றும் இப்போது செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம்.**

† * 55 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

மற்றும் செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் அல்லாத தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் தரப்படுகிறதா ?

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



1982 பிப்ரவரி 11]

(இ) இப் பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. தலைமை ஆசிரியர்களுக்கும் சிறப்பூதியம் தரப்படவேண்டும் என்று நடுநிலைப்பள்ளி பி.டி. தலைமை ஆசிரியர் சங்கத்திடமிருந்து, 11—1—1979 நாளளவில் அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ 15 சிறப்பூதியமாக அளிக்கப்படுகிறது.

(இ) ஆம்.

(உ) இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நடுநிலைப் பள்ளி பி.டி. தலைமையாசிரியர்களுக்கு தனிப்படி வழங்குதல்.**

† * 58 வினா—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. தலைமையாசிரியர்களுக்கு எந்தவிதமான படியும் வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர்களது பணிப் பொறுப்பினைக் கருதி, தனிப்படி அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பி. டி. தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப்படியோ அல்லது சிறப்பூதியமோ வழங்கப்படுவது இல்லை.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது நீண்டகாலமாக பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. காரணம் இது 1979-லே முறையிடப்பட்டது. இந்தக் கோரிக்கை நியாயமானது என்று அரசுத் தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே, அரசின் பரிசீலனையில் உள்ள இந்தக் கருத்தை விரைவுபடுத்தி அரசு நடவடிக்கை எடுக்குமா?

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

[1982 பிப்ரவரி 11

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மூன்றாவது ஊதியக் குழு இக் கோரிக்கையை ஆராய்ந்து நடுநிலைப் பள்ளி பி.டி. தலைமையாசிரியர்களுக்கு, உயர்நிலைப் பள்ளி பி.டி. ஆசிரியர்களுக்குரிய ஊதியம் அளித்தால் போது மானது என்று பரிந்துரைத்ததோடு சிறப்பூதியம் பற்றி எந்தவிதமான பரிந்துரையும் செய்யவில்லை. இப்போது மறுபடியும் கேட்டிருப்பதால், மறு படியும் இதைப் பரிசிலிக்கலாம்.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாதம் 15 ரூபாய் இப்போது அளிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர் களுக்குச் சம்பளம் வாங்கி வருவதற்குக் கூட அந்தப் பள்ளிகளிலே பியூன் கூட இல்லை. தலைமையாசிரியர் தான் எல்லாவற்றிற்கும் செல்ல வேண்டும். இப்போது பேருந்துகளிலே டிக்கெட் விலை மிகவும் அதிகமாகிவிட்டதாலும். மற்றும் செலவினங்கள் பெருகியிருப்பதாலும், இந்த 15 ரூபாய் கொடுப்பது அதிகரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட உத்தேசம் இப் போது இல்லை

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நடுநிலைப் பள்ளிகளிலே பணிபுரியும் இடை நிலை ஆசிரியர்கள் அவர்களுக்கு உரிய ஊதியத்தைத் தவிர 15 ரூபாய் சிறப் பூதியம் பெறுகிறார்கள். அவர்கள் கூடுதல் பணிகளையும் பார்க்க வேண்டி யிருக்கிறது. " நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களுக்குரிய ஊதியத்தைப் பெறுவதோடு கூடுதல் பணியாற்றும் இந்தப் பணிக்காக சிறப்பூதியம் கேட்கப்படுகிறது. இதையும், அதையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களுக்கு அடிப்படை ஊதியம் தரப்பட்டிருக்கிறது, ஆகவே தரமுடியாது என்று மூன்றாவது ஊதியக்குழுவிலே சொல்லப்பட்டிருக்கிறது " என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஏற்புடையதாக இருக்காது. அவர்களுக்கும் சிறப்பூதியம் வழங்க வேண்டும். இந்த சிறப் பூதியத்தை வழங்குவதற்கு பரிசிலனை செய்யும்போது இதுநாள் வரையில் பணியாற்றிய காலத்திற்கும் முன்னுரிமை தரும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நடுநிலைப் பள்ளித் தலைமை யாசிரியர்களாக இன்றைக்கு இடைநிலை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படி பட்ட பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களைப் போடலாம் என்று போட் டிருக்கிறோம். இடைநிலை ஆசிரியர்களுக்குச் சிறப்பூதியம் தருகிறோம்.



1982 பிப்ரவரி 11]

ஆனால் இடைநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் புரியும் பணியில் அதிகப் படியாகச் சம்பளம் வாங்கும் பி.டி. ஆசிரியர்களைப் போடும்போது சிறப்பூதி யம் தேவையில்லை என்று வைத்திருக்கிறோம். இப்போது மற்ற மாநிலங் களிலே 8-வது வகுப்பு உயர்நிலைப் பள்ளியோடு சேர்த்து வைக்கப்பட்டிருக் கிறது. நாம் மட்டும்தான் நடுநிலைப் பள்ளியிலேயே வைத்திருக்கிறோம். இதிலே இடைநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பணிபுரியும் முறையை வைத்திருக்கிறோம். நம்முடைய கல்வி அமைப்பில் இது ஒரு மிகவும் பலஹீனமான இணைப்பாக இருக்கிறது. ஒரு வீக்கஸ்ட் லிங்க். ஆகவே, இதுகுறித்து நாம் அடிப்படையிலேயே பரிசீலனை செய்யவேண்டும். அப்படி வேறு சில கருத்துக்களையும் பரிசீலிக்க வேண்டியது நியாயம். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, இதை அதோடு சேர்த்துக் கவனிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இப்போது சிறப்பூதியம் தா பரிசீலிக்க லாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் தரலாம் என பரிசீலனையில் இருக்கிறது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பரிசீலனை என்பதே கொடுக்க லாமா, வேண்டாமா, எவ்வளவு தரலாம், எப்படித் தரலாம் என்பதுதான். அதுதான் பரிசீலனை.

### இடைநிலை ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு

†* 56 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம், தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் நடைபெற்று வருவதால், இடைநிலை ஆசிரியர் களாகப் பணி புரிபவர்களில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதி உள்ளவர்கள், பதவி உயர்வு கிடைக்காமல் பாதிக்கப்பட்டு இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு எந்த வகையில் பதவி உயர்வு அளிக்க, அரசு செயற்குறிப்பு வைத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) பட்டதாரி ஆசிரியர் பணி யிடங்கள் தேர்வாணைக் குழுவின் மூலமாக நேரிடையாக நியமனம் மூலமாக வும் தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் இதர ஆசிரியர்களுக்கு

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

பதவி உயர்வு கொடுத்தும், நிரப்பப்படுகிறது. நிரந்தர பட்டதாரி பணியிடங்களில் 50 விழுக்காடு பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுகிறது.

(இ) இடைநிலை ஆசிரியர்கள் அனேகமாக வரலாற்றில் தான் பட்டம் பெற்று இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பாடங்களில் ஆசிரியர் தேவை அதிகம் இல்லை. இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் தகுதிகளை விஞ்ஞானப் பாடங்களில் அதிகம் பெற்றிருந்தால் வாய்ப்புகள் அதிகம் ஏற்படலாம். ஆனால் அவர்கள் வரலாறு ஒன்றிலேயே அதிகம் இருக்கின்றனர்.

திரு. ம. சங்கரலிங்கம்: இடைநிலைப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர்களைப் போடும்போது, அவர் விஞ்ஞானப் படிப்பைப் பெற்றிருந்தாலும், வரலாற்றுப் படிப்பைப் பெற்றிருந்தாலும், அதனால் அதிக அளவுக்கு பாதிப்பு ஏற்படாது. இப்போது பட்டதாரி ஆசிரியர்களைத்தான் போடுகிறோம். பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வாணைக் குழு மூலம் வருகிறார்கள். ப்ரமோஷனிலே வந்தாலும், ரெகுலரைஸ் ஆகவேண்டும். அல்லது நேரடியாக தேர்வாணைக்குழுவின் மூலமாக வர வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் பதவிக்கு வரும்போது அவர் வரலாறு படித்திருந்தாலும் பாதிப்பு ஒன்றுமில்லை. நடுநிலைப் பள்ளிகளிலே பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய எல்லாக் கல்வித் தகுதியும் பெற்றவர்களை உடனடியாகத் தலைமையாசிரியர்களாக நியமிக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தகுதியை உயர்த்திக்கொண்ட பட்டதாரி ஆசிரியர்களான இடைநிலை ஆசிரியர்களுக்கு அவர்கள் வரலாற்றைத் தவிர வேறு பாடத்திலே தேர்ந்திருந்தால், அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு அளிக்கப்படும்போது, அவர்களும் தேர்வாணைக் குழுவின் மூலமாக ஒப்புதல் பெறவேண்டுமா அல்லது அவர்களை நியமித்தது செல்லுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பதவி உயர்வு என்று வரும்போது அது தேவையில்லை என்று கருதுகிறேன்.



## செந்துறை மேல்நிலைப்பள்ளி

† * 57 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் செந்துறை மேல்நிலைப்பள்ளியில் இருக்கவேண்டிய 27 வகுப்பறைகளுக்குப் பதில், 12 வகுப்பறைகளே உள்ளதால், தாழ்வாரங்களிலும் மரத்தடிகளிலும் வகுப்புகள் நடைபெற்று வருவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், போதிய வகுப்பறைகளை கட்டுவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சில பள்ளிகளில் இட நெருக்கடி உள்ளது. அவைகளில் இப்பள்ளியும் ஒன்று. கூடுதல் கட்டடங்கள் கட்டி இட நெருக்கடியைப் போக்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

(இ) மேல்நிலைப் பள்ளித் திட்டத்தில் இப்பள்ளிக்கென ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக் கூடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று வகுப்பறைகள் கொண்ட நிரந்தரக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம் செந்துறை மேல்நிலைப் பள்ளியிலே வேண்டிய வகுப்பறைகள் இல்லாமல் கூடுதல் வகுப்பறையில் படிக்கவேண்டிய பிள்ளைகள் மரத்தடியிலே இருந்து படிக்கிறார்கள். மொத்தம் அங்கே 27 வகுப்பறைகள் வேண்டும். அந்த ஊரிலே இருப்பவர்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள், மற்றும் அனைத்துக் கட்சிப் பெருமக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு குழு அமைத்து அதற்காக நிதி வசூலித்து வேலைகளை ஆரம்பித்து, நான்கைந்து வகுப்பறைகள் கட்டும் பணி இப்போது பாதியிலே நிற்கிறது. அதற்குக் காரணம் ஏதோ ஒருசில கட்சிகளுடைய குறுக்கீடு என்று சொல்லப்படுகிறது. அந்தக் குறுக்கீட்டின் காரணமாகத் தான் அந்தப் பணிகள் அப்படியே இருக்கின்றன. அந்தத் தகவலைச் சேகரித்து, ஊர் மக்களால் கட்டி முடிக்க ஆயத்தம் செய்யப்பட்ட அந்தப் பணியை விரைவிலே முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

[1982 பிப்ரவரி 11

## தஞ்சாவூர் நகருக்குத் தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர்.

† * 59 **வினா.**—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் நகரின் குடிநீரைத் தூய்மைப்படுத்தப் பயன்படும் குளோரின் இயந்திரம், 7 ஆண்டுகளுக்கும் மேலாக பழுதாகி சீர் செய்யப் படாமையால், மக்கள் சுத்திகரிக்கப்படாத நீரையே பயன்படுத்தி நோய் களுக்கு இலக்காகி அல்லல்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (இ) தஞ்சா வூரில் தானியங்கி குளோரின் சாதனம் பழுதடைந்து செயல்படாமல் போன தால், பிளிச்சிங் பவுடர் கலந்த தண்ணீரை தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளில் தகுதியான அளவிற்கு குடிதண்ணீரில் சேர்க்கப்பட்டு வருகிறது. மேலும் கிண்டி தண்ணீர் பரிசோதனை நிறுவனம் மூலம், தண்ணீர் பரிசோதிக்கப்பட்டு, குடிப்பதற்குத் தகுதியானது என்று அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. குடிதண்ணீரால் பாதிக்கப்பட்டதாக எந்த விதமான அறிக்கையுமில்லை. புதிய குளோரின் சாதனம் பொருத்துவதற்கு டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. டெண்டர் மீது முடிவு எடுத்த பின் இச் சாதனம் பொருத்தப்படும்.

(முற்பகல் 10-00)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தஞ்சை நகரில் தானியங்கி குளோரின் சாதனம் கடந்த 7 ஆண்டுகளாகப் பழுதுபட்டு சீர் செய்யப்படாமல் இருக் கிறது. அதைப் பழுது பார்ப்பதற்கு அங்கே நடவடிக்கை எதுவும் எடுக்கப் படாததால், தஞ்சை நகரில் குடிநீர் பாதிக்கப்பட்டது. இதைக் குறித்து அரசுக்குப் புகார் ஏதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப் பிடுகிறார்கள். நாங்கள் பொதுமக்கள் மத்தியில் இருப்பதால் இப் பிரச்சினை குறித்து புகார் கொடுத்திருப்பது எங்களுக்குத் தெரியும் தெரிவித்துக் கொள்கிறேன். பழுதுபட்ட இயந்திரத்தைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு புதிதாக இயந்திரம் வாங்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் பழைய இயந்திரத்தின் நிலை என்ன ? இனியாவது பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

---

9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



1982 பிப்ரவரி 11]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஏழு ஆண்டுகளாகப் பழுது பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது சரியில்லை. 27—6—1978 அன்றுதான் அந்த இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்துதான் நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. புதிய தானியங்கி குளோரின் சாதனம் வாங்க தஞ்சாவூர் நகரமன்றம் கோரியுள்ளது. டெண்டர்கள் முடிவு செய்யப் பட்டவுடன் அந்தச் சாதனத்தைப் பொருத்துவதற்கான மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, தாம் மக்கள் மத்தியில் இருப்ப தாகக் குறிப்பிட்டார். நானும் மக்கள் மத்தியில்தான் இருக்கிறேன். தஞ்சை என்னுடைய சொந்த ஊர். அடிக்கடி நான் அங்கே போகிறேன். அங்கே உள்ள பத்திரிகை நிருபர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். நான் அதே ஊரில் படித்தவன். அவர்கள் வரும்போதெல்லாம் என்னிடம் விளாங்குடி நீர்த்திட்டம் பற்றித்தான் கேள்வி கேட்கிறார்களே தவிர, ஒரு முறைகூட தஞ்சையில் வழங்கப்படும் குடிநீர் சுத்தமாக இல்லை என்று சொன்னதில்லை. மேலும்

Periodical check at various places in the Town by the Chief Water Analyst, Guindy is being done and it is reported that the water is of satisfactory quality. No reports have been received regarding water-borne diseases in the Municipality.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் ஏழு ஆண்டுகளாகப் பழுது பட்டிருப்ப தாகக் குறிப்பிடுகிறேன். ஆனால், அதிகாரிகள் அதில் இரண்டாண்டுகளை விழுங்கிவிட்டு 1978 முதல் அந்தச் சாதனம் பழுது பட்டிருப்பதாகக் குறிப் பிட்டிருக்கிறார்கள். இடையில் 2 ஆண்டுகளை அவர்கள் விழுங்கிவிட் டார்கள். எனவே குறைபாடு இருந்திருக்கிறது என்பது உண்மை. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பத்திரிகை நிருபர்கள்கூட இதைப்பற்றி தன்னிடம் கேட்டதேயில்லை என்று சொன்னார். ஆனால் "ஆசிரியருக்கான கடிதங்கள்" என்ற தலைப்பில் இந்தப் பிரச்சினை வந்திருப்பதால் நிருபர்கள் இதைப்பற்றிக் கேட்கவில்லை என்று கருதுகிறேன். அதுமட்டுமல்லாமல், அமைச்சர்கள் தஞ்சைக்கு எப்போதாவது தான் செல்வார்கள். நாங்கள் அங்கேயே இருப்பவர்கள். அந்தத் தொகுதியைச் சார்ந்தவர்கள். எனவே பழுதுபட்ட இயந்திரத்தை வீணாக்காமல் அதைச் சீர் செய்ய அரசு நடவ டிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** என்னிடமிருக்கிற தகவல் அடிப்படையில் சொல்வதென்றால், புதிதாக ஒரு தானியங்கி குளோரின் சாதனம் வாங்க டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. பழையதைச்

செய்வதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. புதிய இயந்திரமே வாங்குவதால் கஷ்டமில்லை என்று நினைக்கிறேன். அதோடு நான் அங்கே போகும் போதெல்லாம் பொதுமக்களை அழைத்துப் பேசிவிட்டு பின்னர்தான் நான் காப்பி கூட சாப்பிடுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister kindly clarify whether there are some viruses which are immune to chlorine and are less immune to bleaching powder and, in such circumstances, will the Government consider introducing purification more by bleaching poweder than by chlorine?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** முதல் துணைக் கேள்வியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டும். அதுபற்றி எனக்கு "நாலெட்ஜ்" இல்லை.

அடுத்த வினாவைப் பொறுத்தவரை 'பீரியாடிகலாக' தண்ணீர் கிண்டிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பீரியாடிக்கல் என்றால் அடிக்கடி என்ற அர்த்தம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். அதில் "வாட்டர்-போர்ன் டிசீசஸ்" எதுவுமில்லை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் நிலைமை.

### குடிசைமாற்று வாரியத்தினால் கட்டப்பட்ட வீடுகளுக்கு குடிதண்ணீர் வசதிகள்.

† *60 வினா.—**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிசைமாற்றுத் துறையினால் கட்டப்பட்டுள்ள பெரும் பான்மையான வீடுகளில் குடிதண்ணீர் வசதிகள் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) தாங்களே விரும்பி குடிதண்ணீர் வசதி செய்து கொள்ள விரும்பும் குடியிருப்பாளர்களுக்கு, குடிசை மாற்று வாரியம் இவ்வீடுகளுக்கான வரி செலுத்தவில்லை என்று காரணம் காட்டி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் (Madras Metropolitan Development Authority) அனுமதி மறுக்கப்படுவதும் அரசுக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், இதனை எப்போது எப்படி நிவர்த்தி செய்ய அரசு உத்தேசித்துள்ளது ?

† 9—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் ஒவ்வொரு குடியிருப்புக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்று வாரியத்தால் குடிநீர் வழங்க தேவையான பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர மற்ற தேவைகளுக்காக நில நீரும் குடிசை மாற்று வாரியத்தின் அமைப்பின்படி மேல்நிலைத் தொட்டிகள் மூலம் வீடுகளுக்குள்ளும் வழங்கபபடுகிறது. தண்ணீர் பற்றாக் குறையுள்ள ஒரு சில பகுதிகளில் லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.

(இ) ஆம்.

(உ) பல வீடுகளடங்கிய மாடிக் கட்டிடத்தில் கீழே உள்ள வீடுகளுக்கு மட்டுமே இணைப்புகள் வழங்கமுடியும். மேல் மாடிகளில் உள்ள வீடுகளுக்கு இணைப்புகள் கொடுத்தாலும் தண்ணீர் மேலே ஏறாது. ஆகவே இது சிலருக்கு மாத்திரம் அதிக வசதி செய்து கொடுத்ததாக ஆகிவிடும்.

குடிசைமாற்று வாரியத்தின் வீடுகளுக்கு சொத்துவரி (வீட்டுவரி) கிடையாது. ஆகவே, அவை தனிப்பட்ட குடிநீர் இணைப்பு பெறுவதற்கு தகுதியில்லை. (சட்டப்படி ஆண்டுக்கு ரூ. 300க்கு மேல் மதிப்புள்ள வீடுகளுக்கே தனி இணைப்பு வழங்க முடியும்).

இப்பொழுது சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவைக் கருதினால், குடிசைமாற்று வாரிய வீடுகளுக்கு எல்லாம் தனித்தனி தண்ணீர் இணைப்பு வழங்க வேண்டிய அளவு குடிதண்ணீர் கிடையாது. ஆகவேதான், இப்பொழுது குடிதண்ணீர் மட்டுமே சென்னைப் பெருநகர் வாரியத்தின் குழாய்களிலிருந்து வழங்கப்படுகிறது. மற்ற தேவைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கப்படுகிறது.

**செல்வி ஆ. லீலாவதி :** குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அநேக வீடுகளுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படாததால், அங்குள்ள மக்கள் அவதிப் படுகிறார்கள். அங்கே ஒன்றிரண்டு பைப்புகளைப் போட்டாலும், அதை உடைத்துவிடுவதன் காரணமாக மக்கள் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். எனவே அவர்களின் உபயோகத்திற்கு அமைச்சர் அவர்கள் கிணறுகளை அமைத்து குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கிணறுகளில் சுத்தமான தண்ணீர் கிடைப்பதில்லை. அதற்கு மிக ஆழமாகப் போக வேண்டியிருக்கிறது. எனவேதான் பொதுக் குழாய்களை அமைத்து அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், அங்கெல்லாம்

குழாய்களையும் உடைத்துவிடுகிறார்கள். உடைத்துவிடாமல் பார்த்துக் கொள்ள பொதுச் சேவையில் உள்ளவர்களின் உதவியும் இருந்தால், நன்றாக இருக்கும். குடிசைமாற்று வாரியத்தில் வீடுகட்டி வழங்கும்போது, அவற்றைப் பெறுகிறவர்கள் அங்கே குடியிராமல் தங்களுக்குக் கிடைத்த குடியிருப்புகளை மற்றவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் குடிசைகளைப் போட்டு வாழ்ந்து கொண்டு அங்கே குடிதண்ணீர் வசதியில்லை என்று கேட்கிறார்கள். இதையெல்லாம் அரசு பரிசீலித்து அவர்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறது. எனவே, அவர்கள் போட்டுள்ள குடிசைகளைப் பிரிப்பதற்கு ஆட்கள் போகும்போது, அவர்களை வெளியேற்றக் கூடாது என்று புரட்சி, போராட்டம் என்று ஆரம்பித்து விடுகிறார்கள். எனவே, இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசோடு மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அவர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை.

**செல்வி ஆ. லீலாவதி :** குடிசைகளைப் பிரிக்கும்போது நடக்கும் போராட்டத்திற்கு ஆசிரியர்கள் யாரும் செல்வதில்லை. ஆசிரியர்களின் போராட்டத்தின்போது மட்டும்தான் நாங்கள் போகிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்ற காரியங்களில் நடவடிக்கை மேற்கொள்ளும்போது ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 5—2—1982 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினா 30 தற்போது எடுத்துக் கொள்ளப்படும்.

### *Kallar Reclamation Schools.*

* 30. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that, teachers serving in Kallar Reclamation Schools in Madurai District, have made a representation for the continuance of the posts of supervisors; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மேற்பார்வையாளர்கள் பணியிடங்கள் தொடர்ந்திருக்க, மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் முறையீடு செய்யவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

† 5—2—1982 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



**திரு சி. ஆர். லட்சுமிகாந்தன் :** முறையீடு எதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இக்கேள்வியையே முறையீடாகக் கருதி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 26—8—1976-க்கு முன்னால் ஆறு மேற்பார்வையாளர்கள் இந்தக் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை மேற்பார்வை செய்து வந்தனர். பல்வேறு வகைகளில் மொத்தம் 247 குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மதுரை மாவட்டத்தில் மட்டும் நடத்தப்படுகின்றன. ஆனால் 26—8—1976 தேதியிட்ட ஆணைப்படி, அவர்களுக்குப் பதிலாக, அவர்களிடத்தில், கள்ளர்கள் பள்ளிகளைச் சீரிய முறையில் நடத்தவும் கண்காணிக்கவும் கல்வி சம்பந்தமான அனைத்துப் பணிகளையும் கவனிக்க மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவரும் நான்கு துணை ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர். இந்த மூன்று நடைமுறையில் சரியாக வரவில்லை என்ற காரணத்தாலும், அதன் காரணமாகப் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டதாலும், இம்முறை கைவிடப்பட்டு பழைய முறையே மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

## 2. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, ஆளுநர் உரையின் மீதான விவாதம் 15—2—1982 அன்று காலை தொடர்ந்து நடைபெறும். இன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிவுற்ற பின் அவை ஒத்தி வைக்கப்படும். மற்ற நிகழ்ச்சிகள் ஏற்கெனவே அறிவித்தவாறு அவையில் எடுத்துக் கொள்ளப்படும்.

### 3. கவன ஈர்ப்பு

**கடந்த சில மாதங்களாக சிமெண்ட் தட்டுப்பாட்டினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை குறித்தும், சிமெண்ட் பர்மிட் முறையை ரத்து செய்யக் கோரி கட்டிடத் தொழிலாளர்கள் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டங்கள் குறித்தும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ம. சங்கரலிங்கம், க. மீனாட்சிசுந்தரம் மற்றும் ஆ. நல்லசிவன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

* **திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கடந்த சில மாதங்களாக சிமெண்ட் தட்டுப்பாட்டினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை குறித்தும், சிமெண்ட் பர்மிட் முறையை ரத்து செய்யக் கோரி கட்டிடத் தொழிலாளர்கள் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டங்கள் குறித்தும்."

* **மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, விவர அறிக்கையிலே, மத்திய அரசு ஒதுக்கீடு செய்கின்ற சிமெண்ட் அளவு குறைந்திருப்பதால், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய சிமெண்ட் பற்றாக்குறைக்குக் காரணம் சிமெண்ட் விநியோகிப்பதில் உள்ள பெரும் கோளாறுகள்தான் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசின் சிமெண்ட் ஒதுக்கீடு குறைந்திருப்பது ஒரு காரணமாக இருந்தாலும், விநியோகத்தில் ஏற்பட்டிருக்கிற பெரும் குறையாலும் சிமெண்ட் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. உண்மையிலேயே பற்றாக்குறை இருக்குமானால், எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும், சிமெண்ட் கிடைக்காமல் இருக்க வேண்டும். இன்றைக்கு 70 ரூபாய் கொடுத்தால் சிமெண்ட் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஆகவே தேவை இல்லாதவர்களிடம் சிமெண்ட் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

@ [illegible]







**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் முதல் பகுதியில் இப்போது இருக்கின்ற பெர்மிட் முறையை இரத்து செய்யக் கோரியிருப்பதால், மைய அரசு நமக்கு ஒதுக்குகின்ற அளவைக் குறைத்து வருவதால் அப்படி ஒதுக்கீடு குறைந்து வருகிறவரை பெர்மிட் முறையை இரத்து செய்ய முடியாது என்று சொல்லப்பட்டது.

அடுத்து, விநியோக முறையிலே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்காகத்தான், வட்டார வளர்ச்சி அலுவலர், தாசில்தார் ஆகியோர் மட்டத்திலே இருந்ததை ஆர்.டி.ஓ. மட்டத்திலே கொண்டுவர வேண்டுமென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைப்போலவே மாவட்ட அளவிலும் அவ்வப்போது ஏற்படுகின்ற குறைபாடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு வசதியாக குழுக்களை அமைத்து அவற்றைக் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கவும், நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விநியோகத்திலே உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக ஆர்.டி.ஓ. மட்டத்திலே சிமெண்ட் வழங்குகின்ற அதிகாரத்தை அளிக்கலாமா என்று அரசு பரிசீலித்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிமெண்டுக்காக விண்ணப்பம் அனுப்புவதைப் பொறுத்தவரையில், சிமெண்ட் வழங்குகின்ற அதிகாரிகள் பினாமியாக விண்ணப்பங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டு, அந்த பினாமி விண்ணப்பங்களுக்கு முதலிலே வழங்கிவிட்டு அவர்கள் மூலமாக வெளிச் சந்தையிலே அதிக விலைக்கு விற்பதாக புகார்கள் அரசுக்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன். அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, சிமெண்ட் பெர்மிட் முறையை ரத்து செய்யக் கோரி கட்டிடத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி, மூன்னூறுக்கும் மேற்பட்டவர்கள் சிறையிலே இருப்பதால், அவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, அவர்களை வெளியே அனுப்பி, போராட்டத்தை [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சி அலுவலர், தாசில்தார் மட்டத்தில் இப்படிப் [illegible] நடக்கின்றன என்று பரவலாக பலரும் சொல்லுவதைவிட [illegible]

[திரு. சு. திருநாவுக்கரசு] [1982 பிப்ரவரி 11

குறிப்பிட்டு இதைப் போன்று நடக்கிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. இருப்பினும் பரவலாகச் சொல்லப்படுகிறது என்ற இந்தக் குற்றச்சாட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துச் சொல்லி, அவரே நேரிடையாகப் போகிறபோது, ஆய்வு செய்ய வேண்டுமென்றும், சரி பார்க்க வேண்டுமென்றும், தவறுகள் இருந்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, கட்டிடத் தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டது. மைய அரசு இதற்காக ஒரு சட்டம் கொண்டு வரவிருக்கிறது. மைய அரசு மாநில அரசின் கருத்துக்களைக் கேட்டிருக்கிறது. மாநில அரசும் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. இதற்கான சட்டம் போட தாமதம் ஆவதால், மாநில அரசே இந்த விதிமுறைகளை ஒழுங்குபடுத்த ஒரு சட்டம் கொண்டுவர ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தின் ஓராண்டு சிமெண்ட் தேவை 24 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்று விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் சிமெண்ட்டின் அளவு ஏறக்குறைய 38 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். ஆகவே உற்பத்தியில் பாதியளவை வழங்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? ஏனென்றால் சிமெண்ட் கிடைக்காததால்தான் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே உற்பத்தியில் பாதியளவை நமது மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான சிமெண்டில் பாதியளவுதான் நமக்குக் கிடைக்கிறது. நமக்கு இப்போது கேட்டிருப்பதைப்போல, இன்னும் [illegible] அதிகமாக நமக்குத் தேவைப்படுகிறது. இவையெல்லாம் மத்திய அரசின் கவனத்திற்குக் [illegible] மூலம் கொண்டு வந்திருக்கிறோம். நானும் டில்லிக்குப் போகும்



1982 பிப்ரவரி 11] [திரு. சு. திருநாவுக்கரசு]

போது, மத்திய தொழில் அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களும் மத்திய அரசுக்கும், பிரதமருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நமக்கு 3.70 இலட்சம் டன்தான் ஒதுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் கிராமப்புறங்களுக்கென்று தன்னிறைவுத் திட்டம் பெருமளவில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. நமக்குக் கிடைக்கும் சிமெண்டில் 50,000 டன் சிமெண்ட் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே கிராமப்புறங்களுக்காக என்று பிரத்தியேகமாக நிறைவேற்றப்படும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்காக தனியாக சிமெண்ட் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கும் எழுதியிருக்கிறோம். இதையெல்லாம் கருத்திற் கொண்டு மைய அரசு கவனிக்குமென்று நம்புகிறோம். நாங்களும் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை திங்கட்கிழமை 15—2—1982 அன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 10-18)

## இணைப்பு.

(24 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான் அடிக்குறிப்பைக் காண்க.)

பொதுவாக தமிழ்நாட்டில் சிமெண்ட் தேவை காலாண்டிற்கு 6 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். 1981 மற்றும் 1982-ல் மைய அரசு நமக்களித்த ஒதுக்கீடு விபரம் பின்வருமாறு :—

| துறை | டன்கள். |
|---|---|
| முதல் காலாண்டு | 4,32,400 |
| இரண்டாம் காலாண்டு | 4,30,400 |
| மூன்றாம் காலாண்டு | 3,69,400 |
| நான்காம் காலாண்டு | 3,71,400 |
| **1982.** | |
| முதல் காலாண்டு | 3,71,400 |

2. இம்மாநிலத்தில் மொத்த சிமெண்ட் தேவையில் ஏறத்தாழ பாதி அளவிற்குத்தான் சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் வெவ்வேறு துறைகளின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன. இதில் தன்னிறைவுத் திட்டங்களுக்கு சிமெண்ட் தேவை அதிகமாக உள்ளது. சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதனால், கிடைக்கும் சிமெண்ட்டை தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கும் பொருட்டு தொழில்துறை செயலாளர் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்ப கட்டத்தில் பல்வேறு துறைகளின் அதிகாரிகளை வரவழைத்து கூட்டம் நடத்தி முடிவு எடுக்கிறார். நாம் ஒவ்வொரு காலாண்டும் நமது தேவையை பூர்த்தி செய்ய கூடுதல் ஒதுக்கீட்டிற்காகவும் மைய அரசை வற்புறுத்திக்கொண்டே வருகிறோம். மைய அரசும் பொதுவாக உற்பத்தியையும் தேவைகளையும் கருத்தில்கொண்டு சிற்சில சமயங்களில் சிறிதளவு கூடுதல் ஒதுக்கீடு செய்துள்ளது.

3. நமது மாநிலத்திலுள்ள அரசு துறையில் இரண்டும், தனியார் துறையில் ஆறும், ஆக எட்டு சிமெண்ட் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி ஆண்டுக்கு சுமார் 38.72 லட்சம் மெட்ரிக் டன்களாகும். இந்த உற்பத்தித் திறன் குறைவதற்கான காரணங்கள், அப்போதைக்கப்போது ஏற்படும் மின்சார வெட்டு, நிலக்கரிப் பற்றாக்குறை, இயந்திர கோளாறுகள் போன்றவை. பொதுவாக சிமெண்ட் உற்பத்தியில் மிகவும் பற்றாக்குறையாக உள்ள நமது இந்திய நாட்டில் நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் சிமெண்ட் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பியாக வேண்டும்.







4. நடப்பு காலாண்டிற்கு மைய அரசு மாநில அரசுக்கு 3,71,400 டன்கள் சிமெண்ட் ஒதுக்கீடு செய்துள்ளது. இது கீழே கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது.

| இனம். | ஒதுக்கப்பட்ட அளவு (டன்களில்) |
|---|---|
| மின்சாரம் மற்றும் நீர்ப்பாசனத்துறை | 80,900 |
| சிறு தொழில்கள், மற்ற ஒதுக்கப்பட்ட இனங்கள். | 32,340 |
| ஒதுக்கப்பட்ட இனம் (அரசுத்துறைகள் நிறுவனங்கள், நகராட்சிகள் போன்றவை). | 1,08,160 |
| பொது விநியோகம் | 1,50,000 |

பொது விநியோகத்தையும் மற்ற ஒதுக்கப்பட்ட இனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 1,82,340 டன்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த சிமெண்டின் அளவில் பாதிக்கு மேலேயே வரும்.

5. மைய அரசிடமிருந்து கிடைக்கப்படும் சிமெண்ட்டைக் கொண்டு எல்லா இனங்களின் தேவையை முடிந்த அளவில் நிறைவு செய்து வருகிறோம். மைய அரசு கூடுதல் ஒதுக்கீடு செய்தாலன்றி, மேலும் பல இனங்களுக்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க இயலாது.

6. நாட்டில் சிமெண்ட் கட்டுப்பாடு இருப்பதால் மைய அரசின் அறிவுரைக்கேற்ப 1979 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில், தமிழ்நாடு சிமெண்ட் விநியோகம் கட்டுப்பாடு ஆணையின் கீழ் சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தேவைக்கு அதிகமாக சிமெண்ட் ஒதுக்கப்பட்டாலன்றி சிமெண்ட்டின் அனுமதிச் சீட்டு வழங்கும் முறையை ரத்து செய்ய முடியாது.

7. சிமெண்ட் விநியோகத்தை, ஒரு சீரான முறையில் விநியோகம் செய்வதற்காக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஒரு ஆலோசனைக்குழு அமைப்பது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

---

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*8th to 11th February 1982.*

---

VOLUME CLXXXIII (Nos. 1 to 4).

---

A


PAGES.

ACCIDENTS—

Question *re*—

Number of—involving Pallavan and Thiruvalluvar Transport Corporation buses in 1978, 1979 and 1980 ... ... ... ... ... 2—8

Reduction in occurrence of—because of concrete slabs in middle of road in Anna Salai .. ... 14—16

AGRICULTURE—

Question *re* High Speed Diesel Oil for agricultural tractors in Madurantakam taluk, fixation of weekly quota .. .. .. .. .. .. 8—9

ANANDAM, THIRU V. V. V.—

Governor's Address, discussion on ... ... ... 113—118

ARANGANAYAGAM, THE HON THIRU C.—

Inducted teachers in Higher Secondary Schools, statement *re* non-grant of increased special pay to—as in the case of Graduate teachers ... ... ... 23

Raw silk, statement *re* hardship caused to weavers in silk due to scarcity of 179, 180

PAGES

A—*cont.*

ARUMUGAM, THIRU S.—

Governor's Address, discussion on .. .. .. 24—35, 54, 204

Walk-out by—protesting against refusal to give more time to speak during discussion on Governor's Address .. .. .. .. .. .. 35

B

BOOKS AND PUBLICATIONS—

Question *re* exemption of books and note-books from sales tax and extension of concession to sports goods ... ... ... ... ... ... 233—23

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees.

C

CEMENT—

Scarcity of—and agitation of construction workers to scrap permit system of distribution of cement, Minister's attention called to ... ... ... 248—251

CHAIRMAN, MR.—

Announcement *re* decision of Business Advisory Committee ... .. ... ... ... ... 247

Governor's Address, discussion on .. .. .. 26, 29, 33, 35, 36, 122, 129, 206, 214, 221

CITY COMPENSATORY ALLOWANCE—

Question *re* grant of— and House Rent Allowance to teachers and other Government employees in areas around Madurai Corporation ... ... ... 232—233



Pages

C—*cont.*

CIVIL SUPPLIES CORPORATION—

Question *re* Flying Squads to inspect—Depots, establishment of ... ... ... ... ... 225—232

COLLEGES—

Question *re*—

Medical—offering Diploma Course in Physiotherapy—, number of—and number of annual admissinos .. .. .. 2

Medical—, reservation of seats in—for Arts Graduates during 1981-82 .. .. .. .. 1

COMMITTEES—

Business Advisory Committee, decision of .. .. 247

Estimates Committee—

Report on action taken by Government on the recommendations contained in Report (Ninth) on Public Libraries, laid on the table .. .. 221

Report on action taken by Government on the recommendations contained in Report (Tenth) on Guest Houses, laid on the table .. .. 221

D

DEPUTY CHAIRMAN, MR.—

Governor's Address, discussion on .. .. .. 45, 54, 55, 56, 57, 58, 59, 61, 62, 64, 76, 87, 91, 94, 95, 98, 102, 105, 183, 198, 201

Information *re* Call Attention Notices and Adjournment motions given notice of .. .. 181

## E

PAGES.

ERADHA, Thiru S.R.—

Governor's Address, discussion on .. .. .. 82—105, 161

## F

FIRE ACCIDENT—

Question *re* number of houses, persons affected in—near Verkadu, Rameswaram in May 1981 .. 234—236

FLYING SQUADS—

Question *re* establishment of—to inspect Civil Supplies Corporation depots .. .. .. 225—232

FOOD—

Rise in prices of food articles in Madras, Minister's attention called to .. .. .. ..109—112

## G

GOVERNOR'S ADDRESS—

Discussion on .. .. .. .. 24—105, 113—176, 182—221

GRADUATES—

Question *re* reservation of seats for Arts—in Medical Colleges during 1981—82 .. .. .. 1

GUEST HOUSES—

Estimates Committee's Report on action taken by the Government on the recommendations contained in the Report on—maintained by the Public Department Tenth Report, laid on the table .. .. 221



Pages.

## H

HANDE, the Hon. Dr. H. V.—

Governor's Address, discussion on .. .. .. 42, 43, 160, 161, 162, 165, 166, 167, 169, 170 171, 172, 173, 205, 206

HIGH-SPEED DIESEL—

Question *re* fixation of weekly quota for—oil for agricultural tractors in Madurantakam taluk .. 8—9

HOTELS—

Rise in prices of food articles in—, Minister's attention called to .. .. .. .. 109—112

HOUSE RENT ALLOWANCE—

Question *re* grant of City Compensatory Allowance and —to teachers and other Government employees in areas around Madurai Corporation .. .. .. 232—233

HOUSE TAX—

Question *re* assessment of new buildings for—in Tindivanam Municipality during four years from March 1977 .. .. .. .. 21—22

INFORMATION re—

Call Attention Notice and Adjournment motions given notice of .. .. .. .. .. .. 181

Pages.

J

JANARTHANAM, Dr. T. R.—
Governor's Address, discussion on .. .. .. 53, 130—140, 143, 147, 150, 175, 200

L

LAKSHMIKANDHAN, Thiru C. R.—
Governor's Address, discussion on .. .. .. 59—77
Hotels in Madras, calling Minister's attention to rise in price of food articles in .. .. .. .. 109—112
Inducted teachers in Higher Secondary Schools, calling Minister's attention to non-grant of increased special pay to—as in the case of Graduate teachers .. 23
Raw silk, calling Minister's attention to hardship caused to weavers in silk due to scarcity of .. .. .. 179, 180

M

MANICKAM, Thiru P.—
Governor's Address, discussion on .. .. .. 105, 118—130

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Cement, calling Minister's attention to scarcity of cement and agitation of construction workers to scrap permit system of distribution of cement .. 248—251
Hotels in Madras, calling attention to rise in price of food articles in .. .. .. .. .. 109—112
Inducted Teachers in Higher Secondary Schools, calling attention to non-grant of increased special pay to—as in the case of Graduate teachers .. .. 23
Raw silk, calling attention to hardship caused to the weavers in silk due to scarcity of 179—180



Pages.

M—cont.

MEENAKSHISUNDARAM, Thiru K.—
Cement, calling Minister's attention to scarcity of—and agitation of construction workers to scrap permit system of distribution .. .. .. .. 248, 249
Information re Call Attention Notices and adjournment motions given notice of .. .. .. .. 181
Walk out by—protesting against non-taking up of Call Attention Notices and Adjournment Motions given notice of .. .. .. .. 181

MUNICIPALITIES—
Question re Tindivanam Municipality, assessment of new buildings for house tax in—during 4 years from March 1977 .. .. .. .. .. .. 21—22

MUNUSAMY, Thiru P.—
Governor's Address, discussion on .. .. .. 77—82

MUTHIAH CHETTIAR, Dr. M. A.—
Governor's Address, discussion on .. .. .. 63

MUTHUSWAMY, Thiru S.—
Governor's Address, discussion on .. .. .. 45—59

N

NALLASIVAN, Thiru A.—
Cement, calling Minister's attention to scarcity of—and agitation of construction workers to scrap permit system of distribution .. .. .. 248, 250
Governor's Address, discussion on .. .. .. 85—86, 89, 101, 134, 200, 214

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—
Hotels in Madras, statement re rise in price of food articles .. .. .. .. 109—112

NEELANARAYANAN, THIRU—
Governo's Address, discussion on .. .. .. 133

Pages.

P

PALLAVAN TRANSPORT CORPORATION—
*See* Accidents.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Committees—
Estimates Committee, Report on action taken by Government on the recommendations contained in Report on Public Libraries (Ninth) .. .. 221
Estimate Committee's Report on action taken by Government on the recommendations contained in the Tenth Report on Guest Houses .. .. 221

PHYSIOTHERAPY—
Question *re* Diploma Courses in—, number of Medical Colleges offering and number of annual admissions .. .. .. .. .. .. 2

PUBLIC LIBRARIES—
Estimates Committee's Report on action taken by Government on the recommendations contained in the Ninth Report on—, laid on the table .. .. 221

PUBLIC WORKS DEPARTMENT—
Question *re*—
Assistant Engineers recruited by—under Rule 10 (*a*) (i) from 1977 directly, number of—and ratio on community basis .. .. .. .. 9—11
Engineers of—on deputation to other States, Centre and other countries, number of .. .. 12—14

Q

QUESTION HOUR—
Dispensation with—on 9th February 1982 . 109
Dispensation with—on 10th February 1982 176



Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—
Damodaran, Thiru A. R.—
Question *re*—
Diploma Course in Physoherapy, number of Medical Colleges offering and number of annual admissions .. .. .. 2
High Speed Disel Oil for Agricultural tractors in Madurantakam Taluk, fixation of weekly quota .. .. 8—9
Medical Colleges reservation of seats in—for Arts Graduates during 1981-82 .. .. 1

L

Lakshmikandhan, Thiru C. R.—
Question *re*—
City Compensatory Allowance and House Rent Allowance to teachers and other Government employees in areas around Madurai Corporation, grant of .. .. .. .. .. 232—233
Concrete slabs in middle of road in Anna Salai causing reduction in occurrence of accidents 14—16
Flying Squads to inspect Civil Supplies Corporation depots, establishment of .. .. 225—232
Headmasters of Higher Elementary (Middle) Schools, grant of special pay to .. .. 236—237

Leelavathi, Selvi A.—
Question *re*—
Headmasters of Higher Secondary (Middle) Schools, grant of special pay .. .. 237—239
Higher Secondary Schools in Corporation of Madras, number of posts sanctioned and surrendered during 1980—81 .. .. 16—20

Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Leelavathi, Selvi A.—*cont.*

Question *re*—*cont.*

Higher Secondary Schools in Corporation of Madras sanction and filling up of posts in—during 1979-80 .. .. .. .. .. 16—20

Tenements of Slum Clearance Board, provision of water-supply in .. .. .. .. 244—246

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Higher Secondary School, Sendurai, Tiruchirappalli district, construction of sufficient number of class rooms in .. .. .. 241

Thanjavur Town, non-supply of purified drinking water in .. .. .. .. .. .. 242—244

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Accidents involving Pallavan and Thiruvalluvar Transport Corporation buses in 1978, 1979 and 1980, number of .. .. .. 2—8

Assistant Engineers recruited under Rule 10 (a) (i) by Public Works Department from 1977 directly, number of—and ratio on community basis .. 9—11

Engineers of Public Works Department on deputation to other States, Centre and other countries, number of .. .. .. .. .. 12—14

Tindivanam Municipality, assessment of new buildings for house-tax in—during 4 years from March 1977 .. .. .. .. 21—22



Pages.

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Fire Accident near Verkadu, Rameswaram in May 1981, number of houses, persons affected in .. 234—236

Secondary Grade Teachers with B.T. qualifications, lack of promotion opportunities due to recruitment of B.T. Assistants by Public Service Commission .. .. .. .. .. 239—240

Swaminathan, Thiru G.—

Question re B.T. Headmasters of Higher Elementary (Middle) Schools, grant of special allowance to .. .. .. .. 237—239

Thomas, Thiru P. R.—

Question *re*—

Sales Tax, exemption of books and note-books from—and extension of concession to sports goods .. .. .. .. .. .. 233—234

Teachers in Kallar Reclamation Schools of Madurai district, representation *re* continuance of post of Supervisor .. .. .. .. 246—247

R

RAGHAVANANDAM, THE HON THIRU S.—

Governor's Address, discussion on .. .. .. 126, 127, 128, 173, 203

RAJA MOHAMED, THE HON. THIRU K.—

Governor's Address, discussion on 60, 69—70, 85, 97, 98, 104, 134—137, 210

Pages.

R—*cont.*

RAJA MOHAMED, THE HON. THIRU K.—*cont.*

Question Hour, dispensation with—on 9th February 1982 .. .. .. .. .. .. 109

Question Hour, dispensation with—on 10th February 1982 .. .. .. .. .. 176

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Governor's Address, discussion on .. .. .. 29, 30, 31, 32

RAMAMOORTHY, Thiru K.—

Governor's Address, discussion on .. .. .. 60, 61, 62, 63, 64, 85, 91, 92, 93, 94, 96, 97, 98, 182—221

RAW SILK—

Minister's attention called to hardship caused to weavers in silk due to scarcity of .. .. .. .. 179—180

S

SALES TAX—

Question *re* exemption of books and note-books from—and extension of concession to Sport goods .. 233—234

SANKARALINGAM, Thiru M.—

Cement, calling Minister's attention to scarcity of—and agitation of construction workers to scrap permit system of distribution .. .. .. .. 248

Governor's Address, discussion on .. .. .. 100, 161—162



Pages.

S—*cont.*

HOOLS—

Question *re*—

B.T. Headmasters of Higher Elementary (Middle) Schools, grant of Special Allowance to .. .. 237—239

Headmasters of Higher Elementary (Middle) Schools, grant of Special Pay to .. .. .. 237—239

Higher Secondary—in Corporation of Madras, number of posts sanctioned and surrendered during 1980-81 .. .. .. .. .. .. 16—20

Higher Secondary—in Corporation of Madras, sanction and filling up of posts in—during 1979-80 .. 16—20

Higher Secondary School, Sendurai, Tiruchirappalli district, construction of sufficient number of class rooms in .. .. .. .. .. .. 241

Kallar Reclamation—in Madurai district, representation by teachers in—for continuance of posts of Supervisor .. .. .. .. 246—247

SLUM CLEARANCE BOARD—

Question *re* tenements of—, provision of water-supply in .. .. .. .. .. .. .. 244—246

SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—

Governor's Address, discussion on .. .. .. 186—187, 194, 195, 196, 197, 198, 199, 204, 205

SPORTS GOODS—

Question *re* exemption of Books and note-books from sales tax and extension of concession to .. .. 233—234

Pages.

T

TARA CHERIAN, Thirumathi—
Governor's Address, discussion on .. .. .. 35, 36—44, 123

TEACHERS—
Inducted—in Higher Secondary Schools, Minister's attention called to non-grant of increased Special Pay to—as in the case of graduate teachers .. .. 23

Question *re*—
Headmasters of Higher Elementary (Middle) Schools, grant of special pay to .. .. 236—237

Headmasters of Higher Secondary (Middle) Schools, grant of special pay to .. .. 237—239

Representation from—of Kallar Reclamation Schools in Madurai district for continuance of post of Supervisor .. .. .. .. .. 246—247

Secondary Grade Teachers with B.T. qualifications, lack of promotion opportunities due to recruitment of B.T. Assistants by Public Service Commission .. .. .. .. .. .. 239—240

THIRUNAVUKKARASU, THE HON. THIRU S.—
Cement, statement *re* scarcity of—and agitation of Construction Workers to scrap permit system of distribution .. .. .. .. .. 248—249, 251

THIRUVALLUVAR TRANSPORT CORPORATION—
*See* Accidents.

V

VASANTHA PAI, THIRU G.—
Governor's Address, discussion on .. .. .. 206

VEERAPPAN, THE HON. THIRU R. M.—
Governor's Address, discussion on .. .. .. 70, 150, 212, 213



Pages.

V—*cont.*

VEERASWAMY, Thiru Arcot N.—
Governor's Address, discussion on .. .. .. 62, 84, 86, 103, 133, 140—175, 219

VICE-CHAIRMAN (Thiru C. Ramalingam)—
Governor's Address, discussion on .. .. .. 71, 72

V211, 32 (N62
N83.183

W

WALK-OUT—
By Thiru S. Arumugm protesting against refusal to give more time to speak during discussion on Governor's Address .. .. .. 35

Protesting against non-taking up of Call Attention notices and adjournment motions given notice of 181

WATER-SUPPLY—
Question *re*—
Non-supply of purified drinking water in Thanjavur town .. .. .. .. .. .. 242—244

Provision of—in tenements of Slum Clearance Board 244—246

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.
IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book F... e, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., ... ras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. TheSouth India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

*In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban & Co., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. Palaniappa Bros., Tiruchirappalli-2.
6. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers. No. 9/31. Cross Cut Road. Coimbatore-12.
10. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
11. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
12. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
13. Ganesh Stores, South Car Street, Sivakasi.
14. Mary Martin, Book Sellers, Kotagiri (The Nilgiris).
15. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
16. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
17. Meenakshi Pathippagam, Pudukkottai.
18. K. V. Narayana Iyer Sons, Dindigul (Madurai District).
19. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
20. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
21. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
22. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
23. Kumaran Book Depot., Book Sellers, Erode-1.
24. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
25. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
26. Ajantha Book Centre, Salem.
27. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

*In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. K. P. Bagchi & Company, No. 285, B. B. Ganguli Street, Calcutta-12
7. Puthaghalayam, Pondicherry.

R. 3075

3573

7t/P.F.

---

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN

122051